


http://www.magudammichael.blogspot.com

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

ஆசிரியர் : வி. மைக்கல் கொலின்

இதழ் - 09 | விலை ரூ.100 | ஜனவரி - செப்டம்பர் 2015



ஈழுத்தின் முதல்

## பிரமிள் சிறப்பிதழ்

சிறகிலிருந்து
பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின்
வாழ்வை
எழுதிச் செல்கிறது

- பிரமிள்

03வது ஆண்டு மலர்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்

"பிரமிளின் படிமவியல் 2000ம் வருட தமிழ்க்கவிதைச் சரித்திரத்தில் புதுமையானது" என்கிறார். எழுத்து சி.சு.செல்லப்பா. பிரமிளை 'நவீன தமிழ் இலக்கியத்தின் மாமேதையாக' கணித்திருக்கிறார். தி.ஜானகிராமன். விமர்சனத்தை ஒரு கலை வடிவமாகவே அமைத்தவர் பிரமிள். அவரது படைப்புலகம் விரிந்தது. அதீத ஆங்கில மொழிப்புலமை கொண்ட அவர் ஆங்கில இலக்கியத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். பல கவிதைகளையும், கட்டுரைகளையும் மொழிபெயர்த்துள்ளார். அவரது படைப்புக்களைப்போலவே அவரது மொழி பெயர்ப்பும் அலாதியான ரசனையுடையவை. "சூரியன் தகித்த நிறம்" என்ற பெயரில் அவரது தமிழாக்கக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அவர் மொழி பெயர்த்த கவிதைகள் சில.

(ஆசிரியர்)

**ஜே.கிருஷ்ணமூர்த்தி கவிதைகள்**

There is — This is a Statement
இருக்கிறது — இது முடிவுசார்ந்த கூற்று
There is — This is my first Statement
இருக்கிறது — இது எனது முதலாவது முடிவு சார்ந்த கூற்று
There is — a grain of sand,
And the mystery of that is
Beyond all power of understanding
இருக்கிறது — ஒரு மணல் துகள் இருக்கிறது:
அதன் மர்மமோ, கற்பனையின்
முழுச்சக்திக்கும் அப்பாற்பட்டு இருக்கிறது.

## ஆனந்த போதை

மூழ்கிக்கிடக்கும் கடல்மீது
கிழக்கே உதிக்கிறான் சிவந்த சந்திரன்
சப்தம் செய்யாமல் வரும் இரவினுள்
கரிய பனை ஒன்று பெருமூச்சு விடுகிறது

தூரத்தே கூட்டுக்குத்திரும்பும்
ஒரு தனிப்பறவையின் குரல்
கதகதப்பு மறையாத கரையை
குளிர்ந்த சிற்றலைகள் வந்து தொடுகின்றன.

இதயத்தில் வேதனைபோல்
உன்மத்தம் கொண்ட ஆனந்த போதை
என் தேவை எதையும் புரிந்து கொள்ளும் இதயம்

ஆழ்ந்துறங்கும் நிழல்களிலிருந்து
புலம்பி எழுகிறது ஓர் இனிய பறவைக்குரல்
ஒலியற்ற இரவின் காற்று கனன்று கனக்கிறது

ஆனால் என் இதயத்தில் வேதனைபோல்
உன்மத்தம் கொண்ட ஆனந்த போதை

ஜே.கிருஷ்ணமூர்த்தி – தமிழில் – பிரமிள்.

## நினைவுச் சின்னம்

தற்பெருமையின் அங்கியணிந்து
நடமாடுகிறவன் நானென்கிறாய்
ஆனால், ஒருசில வருஷங்களில்
இந்தச் சில்லறை டம்பங்கள்
மறக்கப்பட்டுவிடும்.
இந்தக் கோணங்கி விபரம் ஏதும்
நாளைக்கு இராது.
உன் கதையோ வேறு -
நீ பூமிக்கடியில் அழுகுவாய்.
உன் பிணக்குழி மீது முளைக்கும்
புல்லுக்கு உயிர்தரும் சத்து
உன் எருவில் இருக்குமா? -
சந்தேகம்தான்!

**எஸ்ரா பவுண்ட்**
தமிழில் – பிரமிள்




## கம்யூனிசத்திற்கு வாழ்த்து

அது கடினமானதல்ல,
சட்டெனப் புரிந்துகொள்ளக் கூடிய
எளிமை உள்ளது அது

நீ சுரண்டல்வாதியல்லன்
எனவே அதை நீ எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

அது உன் நன்மைக்கு வழி,
எனவே அதைப் பற்றி அறிந்துகொள்.

அதனை மடமை என்போர் மடையர்
அது மோசம் என்போர் மோசடிக்காரர்
மோசடிகளுக்கு எதிரானது அது.
சுரண்டல்வாதிகள் அதனைக் கிரிமினல் ஆனது என்பர்:
ஆனால் உண்மை விஷயம் நமக்குத் தெரியும்.
கிரிமினல் ஆன யாவற்றையும் அது முடிவுகட்டும்
அது கிறுக்குத்தனமானதல்ல
கிறுக்குத்தனங்கள்
முழுவதுக்கும் முடிவுகட்டுவது அது.

அது குழப்பமல்ல, ஒழுங்கு.

எளிமையான விஷயம்தான்
செய்யக் கடினமானது.

**பெர்டோல்ட் பிரெக்ட்**
தமிழில் – பிரமிள்

பிரமிள் - சுயமுக ஓவியம்



# தருமு சிவராமு!

தருமு சிவராமுவே, தரமான பிரமிளே, தகுந்த லிங்கா!
திருமலையின் தருமராஜ் - சீர் அன்னலட்சுமியின் சிறந்த சேயே!
அறுபதுகள் தமிழகமாய் ஆம் பல பேர் - பல இடமாய் அறிந்து வாழ்ந்தே
பெறுமதியாம் 'எழுத்' தாய்ந்து பெரும்புற்று நோய் கண்டோ பிரிந்து போனாய்!

கவியாளா, ஆய்வாளா, கதையாளா, கூத்தாளா கலை ஓவியங்கள்,
புவிச் சிற்பம், தொகுப்பென்று..... போனாயே, விருதேற்றாய் புதுமைப்பித்தன்!
குவிந்துளதே ஈராறு குறைவற்ற தொகுதிகளாய் கூறும் நூல்கள்!
தவி தவிக்க விட்டெங்கே தலைமறைவாய்ப் போனாயோ, தகுதி பெற்றோய்!

ஐம்பத்தெட் டாண்டிருந்தாய்! ஆம், கிருஷ்ணமூர்த்தியிலும் அதிக பற்றே!
எம்புவியில் இன்றிருப்பின் எழுபத்தாறாவது பிறந்தநாள் இணைந்திருக்கும்!
பைந்தமிழின் பெரும்புலவா, பதினெட்டாம் நினைவுதனைப் பாரில் இன்று
உம் பற்றார் கொண்டாடி உவக்கின்றோம், தமிழ் இன்னும் உள்ளதாலே!

புதிய கவிக் கொருதூணாய் பொழுதுள்ளவரைதீட்டிப் புகழ்படைத்தாய்!
விதி என்பார் - அதுதானோ, விளையாடி உனைக்கொண்டு விட்டதங்கே?
பதிலாக யாமெழுதப் 'பயங்கர' மாய் இருக்கிறதே, பறந்தே போய் உன்
பதியான வேலூரின் பக்கத்தை நாடுவம்! நீ, பன்னாள் வாழ்க!

**தாமரைத்தீவான்**

கவிதை ✓
கட்டுரை
சிறுகதை
கடிதம்
ஓவியம்

# பெருங்கூத்து




வானப் பேரண்டப்
பெருவெளியி லேகிரகக்
கூட்டங்க ளெல்லாம்
குமைந்தெழுந்து சேர்ந்து
பிரளயமாய்,
ஊழியாய்க் காலத்தின்
எல்லையாய்,
மோனத்தே, முடிவற்ற
ஒற்றைச் சரடாய்
உருமாறிப் புகுந்தபின்,
எல்லையற்ற வெறும் பாழ்
வெளியில்,
கூனப்பிறையோன்
உதரத் தேமறைந்த
உயிர்க்குலத்தின்,
உருண்டுருண்டு வான-வி-
-தானத்தே மிதந்த
சுடர்க்கோள் குலத்தின்
பிணக்காடாம் -ம-
-சானப் பெருவெளியில்
மெல்லெனவே,
தளிர்விரலால் மீட்டி
நாதப்பிரவாகத்
திவலையை ஊட்டி,
இரணிய கர்ப்பத்(து)
ஒடுங்கி முகிழ்த்தபுவி
மலர -
புவனத்துக்
கோளமுருண்டு
பிரசவிக்க -
- சொல்லினணங்கே,
சோதியே பேரறிவின்
எல்லொளி யேஉயிரே,
கள்ளமிலா உள்ளத்து
வெள்ளைக் கமலமிசை
வீற்றிருந்து -

- பிரசவித்த மூவுலகும்
மோதிச் சிதறிவெளி
வானத்தே தறிகெட்டு
ஓடிப்பிறழாது,
காலத்தைக் கயிறாய்த்
திரித்(து)ஈர்ப்பைச் சக்கரமாய்
வரித்து.
அசையும் சலனத்தை
அசையாச் சிவத்தினிலே
அறைந்து,
புரியும் பெருங் கூத்து! என்னே நீ
புரியும் பெருங்கூத்து!
பிறழாத பேரறிவே
சரஸ்வதி யேஅறிவின்
பெருங்கடலே நீவெளியே
புரியும் பெருங்கூத்து!

**பூம்பொற்கொடி இளங்கோ**

(இது 1957ல் திருகோணமலையில் இருந்து வெளிவந்த "யாழ்" கையெழுத்து பத்திரிகையில் 'பூம்பொற்கொடி இளங்கோ' என்றபெயரில் பிரமிள் எழுதிய கவிதை)

ISSN - 2279-1906

http://www.magudammichael.blogspot.com

மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்

இதழ் - 09 ஜனவரி - செப்டம்பர் - 2015

**ஆசிரியர் : வி.மைக்கல் கொலின்.**

**E-mail:**
**w.michaelcollin@gmail.com**

**Web:**
**www.magudammichael.blogspot.com**

**Layout by : Michael**

கணனி வடிவமைப்பு : ஜோசப் மிர்னாளினி (வணசிங்கா பிரிண்டர்ஸ்)

முன் அட்டை : இரா. குணசீலன் (கனடா)

உள் ஓவியங்கள் : உள் ஓவியங்கள் அனைத்தும் பிரமிளின் ஓவியங்கள்.

முன்அட்டை அனுசரனை : திரு.பாலசுகுமார் - லண்டன்

பின் உள் அட்டை அனுசரனை : திரு. பாபு வசந்தகுமார் - கனடா

முன் உள் அட்டை அனுசரனை :- கவிஞர். வ.க.பரமநாதன் (டென்மார்க்)

'மகுடம் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்காக மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் ஹஜேந்தினி மைக்கல் கொலின்

**சகல விதமான தொடர்புகளுக்கும்**

**ஆசிரியர்**
**'மகுடம்'**
**இல.90, பார்வீதி,**
**மட்டக்களப்பு 30000**
**இலங்கை**

**Tel : 0774338878**


**Contact :**

**EDITOR**
**MAGUDAM**
**90, Bar Road,**
**Batticaloa - Sri Lanka.**

படைப்புக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆக்கங்களை திருத்தவும்,
கடிதங்களை சுருக்கவும்,
ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு.

# நவீன தமிழ் இலக்கியத்தின் பிதாமகர்



லஷ்மி ஜோதி,
இலக்குமி இளங்கோ,
கௌரி,
பூம்பொழில் வேலவன்,
பூம் பொற்குடி இளங்கோ,
குகேந்திர அமுதன்
டி.சி. ராமலிங்கம்,
பிருமிள்,
பிரமிள்,
பிரமீள்,
பிரேமிள்,
பிரமிள் பானு,
ஜீவராம் அருப்பிருமிள்
அஜித்ராம் பிரேமிள்,
பிரமிள் பானுச்சந்திரன்,
பானு அரூப் சிவராம்,
விக்ரம் குப்தன் பிரமிள்,
ராம் தியவ் விபூதி பிரமிள்
தியவ் விஷ்னுவ் அக்னி ராம்பிரமிள்,
தீர்த் விபூதிபிரமிள் கோஷ்,
ராம் திரிகோஷ் அரூப் பிரமிள்
தியோப் தேஷசிங் அஜித்ராம் பிரேமிள்,
அரூப் சிவராமு,
ஔரூப் சிவராம்,
தர்மு சிவராம்,
தருமு சிவராமு
இவை எல்லாம் இந்த பிரபஞ்ச வெளியில் தனக்கான ஒரு இடம் தேடி அலைந்த சிவராமலிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட ஒரு மனிதன் தனக்குத் தானே சூடிக்கொண்ட பெயர்கள்.

பாடசாலைக் காலத்திலேயே நுண்ணறிவிலும், (Intelligent) புத்தாக்க சிந்தனையிலும், (Innovative) பரிசோதனை முயற்சியிலும் (Experiment) அதிக திறன் கொண்ட அந்த மனிதன் தனது பெயரை மட்டுமல்ல. தனது வாழ்க்கை முறையைக் கூட ஒரு பரிசோதனை முயற்சியாகவே வாழ்ந்து சென்றிருக்கிறான்.

அவன் தரித்த நாமங்களைப் போலவே அவன் ஈடுபட்ட துறைகளும் அதிகம். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், எண்கணித சோதிடம், ஓவியம், தொலைக்காட்சி நாடகம், ஆன்மீகம், சினிமா, மொழிபெயர்ப்பு, சிற்பம், டாரட் வாசிப்பு என பல்துறையிலும் முத்திரைப் பதித்தவராக மட்டுமல்ல, **நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதி - புதுமைப்பித்தனுக்குப் பிறகு தோன்றிய ஒரு மகத்தான ஆளுமையாக, அவர்களை மேவிநிற்கும் ஆளுமையாக திகழ்கிறார்.**

திருகோணமலையில் கணபதிப்பிள்ளை விருட்சலிங்கம் (தர்மராஜன்) அன்னலட்சுமி ஆகியோருக்கு மகனாக 20.04.1939ல் பிறந்த பிரமிளின் இயற்பெயர் சிவராமலிங்கம் ஆனால் பாடசாலையில் இவரது பெயர் தவறுதலாக ஷிவராமலிங்கம் என்றே வழங்கப்பட்டு வந்தது. திருகோணமலையில் இராம கிருஷ்ணமிஷன் பள்ளியில் (தற்போதைய இந்துக்கல்லூரி) தம் தொடக்கக் கல்வியை கற்றார்.

1960களின் பிற்பகுதியில் தனது பிரான்ஸ் கனவில் இந்தியா சென்ற அவர் தமிழ்நாட்டில் தனது கனவுகளைத் தொலைத்தவராக வாழ்ந்தாலும் நவீன தமிழ் இலக்கியத்தின் பிதாமகராக திகழும் அளவிற்கு தனது எழுத்து வன்மையால் சிறப்புப் பெற்றார்.

பார்ப்பனிய சமூகத்தின் உச்சகட்ட பிடியில் இருந்த தமிழ் நாட்டு

தமிழ் இலக்கியத்தில் அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த பிரமிள் தனி மனிதனாக நின்று போரிட்டு வெற்றி பெற்றவர். அவரது எழுத்துக்கு முன்னால் தமிழ்நாட்டு மேதாவிகள் எவரும் எதிர்த்து நிற்க முடியவில்லை. **பல்கலைகளும் வாய்க்கப் பெற்ற அவர் ஒரு பல்கலைக் கழகமாகவே வாழ்ந்தார். அவரது எழுத்துக்கள் இன்னமும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. நவீன கவிதையிலும், விமர்சனத்திலும். அவர் அடையாளப் படுத்தப்பட்ட அளவிற்கு ஏனைய துறைகளில் அவர் வாசிக்கப்படவில்லை. சிறுகதைகளில் அவரது வெளிப்பாடு, அக்காலத்திலேயே பின்நவீனத்துவ உத்திகளோடு எழுதிய எழுத்துக்கள் என இனிவரும் காலங்களிலாவது அவரது படைப்புக்கள் குறிப்பாக ஈழத்து பல்கலைக்கழகங்களில் ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். அதன் மூலமாக நவீன தமிழ் இலக்கியம் மேலும் செழுமை பெற வாய்ப்புண்டு.**

பிரமிள் திருகோணமலையில் இருந்து புலம் பெயர்ந்து தமிழ்நாடு சென்றிருந்தாலும் அவரது படைப்புக்கள் ஈழத்தின் தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் தொடர்பாக எழுதத் தயங்கவில்லை. அறிவு ஜீவிதத்தின் உச்சகட்ட சாத்திய படைப்புக்களை, கலாபூர்வமாக தந்தாலும், ஈழவிடுதலைப்போராட்டம் தொடர்பாக அவருக்குரிய புரிதல் காரணமாக அவரது பல சிறுகதைகள் ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக நேரிடையாகவும், மறைமுகமாகவும், பேசியுள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞர், அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் இணைந்து அவர் எழுதிய "ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை" என்ற நூல் அதற்கு சாட்சி. அவர் தமிழகத்தில் இருந்தகாலங்களில் விடுதலைப்போராட்டம் மேல் கொண்ட பற்றுதலால் விடுதலைப் புலிகளின் வெளியீட்டு பிரிவில் சில காலம் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. விடுதலைப்புலிகளின் வேண்டுதலின் பேரில் தமிழீழத்திற்கான தேசிய கீதத்தினையும் அவர் இயற்றியிருந்தார். ஆனால் அது பயன்படுத்த கூடிய சாத்தியமிருக்கவில்லை. தனது நெருங்கிய நண்பரும், லங்காபுரி ராஜா கதையின் நாயகனுமான கோபால கிருஷ்ணனின் அகால மரணத்திற்கு புலிகளே காரணம் என்ற தப்பபிப்பிராயம் காரணமாக சில காலம் அவர்களுடன் முரண்பட்டு நின்றாலும் பின்னர் உண்மை தெரிந்தபின் தனது வெளியீட்டில் அதனைக்குறிப்பிட்டு எழுதியுமுள்ளார்.

ஒரு மேதமையின் ஆளுமையை கொண்டிருப்பினும் சில நேரங்களில் சராசரி மனித உணர்வுகளுக்கு அடிமையாகி தன் சக எழுத்தாளர்களுடன் முரண்பட்டு கொண்டு அவர்கள் தொடர்பில் எழுதத்தொடங்கியதன் காரணமாக பிரமிள் தொடர்பாக சிலகுற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அவரது பார்வையில் இருந்த நியாயம் திட்டமிட்டு மறைக்கப்பட்டது. பார்ப்பனியத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரமிள் பின்நாட்களில் தனது நண்பர்களாலேயே ஏமாற்றப்பட்ட நிலையில் அத்தகைய படைப்பாளிகள் மீது அவர் அதிரடி தாக்குதல் நடாத்த பின்னிற்கவில்லை. தன் இருப்பு தொடர்பாக அவர் என்றும் கவலைப்பட்டவரல்ல. அதனாலேயே அவரை எவராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவரது அறிவுலகம் ஒற்றைத்தனி உலகம். அதில் அவர்மட்டுமே என்றும் முடிசூடா மன்னராக திகழ்ந்தார். ஒவ்வொருவர் இடமும் நிரப்பப்படலாம். ஆனால் பிரமிளின் இடம் என்றுமே வெற்றிடமே.

இலக்கிய ஈடுபாடுகளைத் தாண்டிய ஒரு தாகம் பிரமிளை எப்போதுமே பீடித்திருந்திருக்கிறது. திமிறி வெளியேறும் அலைகளை மீண்டும் மீண்டும் உள்ளிழுக்கும் கடலைப்போல அவரது ஆன்மீக செயற்பாடு திருகோணமலையில் மிக இளவயதிலேயே ஆரம்பமாகி விட்டது. அவரது ஆன்மீக குருவான சாது அப்பாத் துரையுடனான தொடர்பு அவரை ஆன்மீக வாழ்வில் நாட்டம் கொள்ள அழைத்தது. பிரமிளிற்கு இரண்டுவித வாழ்க்கை இருந்தது. தொடர்ச்சியாக உணவே இல்லாமல் கூட சிலநாட்கள் இருந்து இலக்கியம் படைப்பது, அதே அளவிற்கு தன்னை மறந்த நிலையில் ஆன்மீக தேடல். அவரது ஆன்மீக தேடலின் பலமே அவரை வெறும் சோறுவடித்த தண்ணீருடன் மட்டும் சிலநாட்கள் உயிர் வாழவைத்திருக்கிறது. ஒவ்வொரு மணித்துளியையும் உண்மையாக அனுபவித்து வாழ்ந்த பிரமிள் தனது இறுதிக்காலங்களில் ஏற்பட்ட நோய் காரணமாக ஆறுமா தங்கள்வரை மருத்துவ மனையில் இருந்து இறுதியாக வேலூர் அருகில் உள்ள கரடிக்குடி என்ற இடத்தில் 06.01.1997ல் அடக்கம் பெற்றார். இன்றும் கூட அப்பகுதி மக்கள் பிரமிளின் கல்லறையை ஒரு யோகியின் கல்லறை யாகவே நினைத்து வழிபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு மேதமையின் ஆளுமையை ஒரு சிறப்பிதழால் மட்டுமே வெளிக் கொணர முடியாது என்பது எமக்குத் தெரியும். இது அவரது சம காலத்தவர்களின் நினைவுகளின் பதிவுகள் மட்டுமே, அவரது படைப்புக்கள் குறித்த ஆய்வுகள் இனிவரும் காலங்களில் மகுடத்தில் தொடராக வெளிவரும். ஈழத்து தமிழ் இலக்கிய உலகிற்கு மகுடம் ஆற்றிவரும் சிறிய பங்களிப்பின் அடுத்த கட்ட நகர்வாக இந்த பிரமிள் சிறப்பிதழ் சிறப்புச் சேர்க்கும் என்பது எமது நம்பிக்கை.

**ஆசிரியர்.**



மகுடம் பிரமிள் சிறப்பிதழிற்காக பிரமிளின் பாடசாலை கால நண்பர்களும், அவருடன் இறுதிக் காலம் வரை தொடர்பில் இருந்தவர்களுமான வைத்திய கலாநிதிகளான S.P. ராமச்சந்திரா, இராஜதர்மராஜா ஆகிய இருவரையும் திருகோணமலையில் டாக்டர் S.P. ராமச்சந்திரா அவர்களின் இல்லத்தில் சந்தித்து உரையாடினேன். பிரமிள் தொடர்பான தகவல்களையும், கடிதங்களையும், கட்டுரைகளையும், தந்த இருவருக்கும், பிரமிளின் பள்ளித்தோழரும் தற்போது தமிழ் நாட்டில் வசிப்பவருமான திரு.S.சங்கரலிங்கம் அவர்களின் கட்டுரையை பெற்றுத்தந்த ராஜதர்மராஜா அவர்களுக்கும். பிரமிள் தொடர்பான நூல்களை தந்து உதவிய ஆசிரியர் திரு.இரா.சிவலிங்கம், (மட்டக்களப்பு) அட்டைப்படம் வரைந்து உதவிய இரா.குணசீலன் (கனடா) முன்அட்டை, பின்அட்டை என்பவற்றுக்கான அனுசரனை வழங்கிய திரு.பாலசுகுமார், (லண்டன்) திரு.பாபுவசந்தகுமார் (கனடா) முன்உள் அட்டை அனுசரனை வழங்கிய கவிஞர். வ.க.பரமநாதன் (டென்மார்க்) மற்றும் இவ்விதழ் வெளிவர உதவிய அனைவருக்கும் நன்றிகள். **(ஆசிரியர்)**

மகுடம்
கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்
இதழ் - 09
ஜனவரி - செப் 2015
பிரமிள் சிறப்பிதழ்



நேர்காணல்
**6** கணத்தின் மொக்கவிழ்ந்தால் காலாதீதம்
பேரா. காலசுப்பிரமணியம்



நேர்காணல்
எனது படைப்புக்களை யாரும் அங்கீகரிக்கதேவையில்லை
பிரமிள்
**79**

## கட்டுரைகள்

**12** நினைவிடை தோய்தல்
Dr.S.P.ராமச்சந்திரா

**15** தர்மோ ஜீவராம் பிரமிள் ஒரு படைப்பாளுமை
க.சட்டநாதன்

**28** கனவுலகில் வாழும் நனவுலக கவிஞன்...
எஸ்.வீ.சங்கரலிங்கம்

**42** ஒரு சுதந்திரக் கலைஞனின் ஏழ்மையும்...
இராஜ. தர்மராஜா

**54** பிரமிளின் ஆரம்பகாலப் படைப்புகள்
கால சுப்பிரமணியம்

**63** தமிழ் புனைகதை வரலாற்றில் பிரமிள்
பேரா. செ.யோகராசா

## சிறுகதைகள்

**34** குதிரை இல்லாத ராஜகுமாரன் – ராஜாஜி ராஜகோபாலன்
**68** கலங்கல் – க.சட்டநாதன்
**73** கூடுவிட்டுக்கூடு பாய்தல் – மு.பொ.

## பிரமிளின் படைப்புலகம்

கவிதை **02**
கட்டுரை **20**
சிறுகதை **57**
கடிதம் **66**
ஓவியம் **83**

## கவிதைகள்

பேரா.சி.மௌனகுரு **11**
மு.பொ **26**
வ.க.பரமநாதன் **14**
வே.ஜ.வரதராஜன் **14**
களப்பூரான் கனடா **41**

# ‘கணத்தின் மொக்கவிழ்ந்தால் காலாதீதம்’

## பேராசிரியர் கால சுப்ரமணியம்

தமிழ் இலக்கிய உலகிலே பல பிரபலங்களின் வெளிப்பாடு, குறித்த சில தனிநபர்களின் முயற்சியினால் சாத்தியமாகியுள்ளது.

ஒரு சிதம்பரரகுநாதன் இல்லா விட்டால் நாம் புதுமைப்பித்தனை அடையாளம் கண்டிருக்கமுடியாது. எம்.ஏ.நு.ஃமான் இல்லாவிட்டால் நாம் மஹாகவியை கொண்டாடியிருக்க முடியாது. அமரர். சாரல் நாடனின் தேடல்தான் கோ. நடேசய்யரை வெளிச்சம் காட்டியது.

அந்த வரிசையில் தனது கலாநிதிபட்ட ஆய்வு களுக்காக பிரமிளின் கவிதைகளை ஆய்வுசெய்து அவரது எழுத்துக்களுடன் இணைந்து, இறுதிவரை அவருடன் இருந்து, அவரது படைப்புக்களை வெளிக் கொணர்வதில் அதிதீவீர பங்காற்றிய கால சுப்ரமணியம் அவர்கள் இல்லாவிட்டால் பிரமிள் இன்று இந்தளவுக்கு வெளியுலகிற்கு தெரியாமலேயே இருந்திருப்பார். அந்த வகையில் நவீன தமிழ் இலக்கிய உலகிற்கு பிரமிளின் படைப்புக்களை வெளிக் கொணரும் முயற்சியில் முக்கிய பங்காற்றிய, பங்காற்றிக் கொண்டிருக்கும் பேராசிரியர் காலசுப்ரமணியம் அவர்களுடன் முகநூல் உள் பெட்டி (InBox) வழியாக மேற்கொண்ட இந்நேர்காணலை பிரமிள் சிறப்பிதழின் சிறப்புப்படையலாக தருகிறோம்

\- ஆசிரியர்.



**நாளாந்த வாழ்க்கைச் சிக்கல்களுக் கிடையேயும் பல்துறைசார் விடயங்களில் ஓய்வின்றி இயங்குவதற்கான கால அவகாசமும், உள அமைதியும், மனத்திடமும் பிரமிளுக்கு எவ்வாறு வாய்த்தது?**

ஒவ்வொரு கணத்தையும் விழிப்போடும் கவனத்தோடும் வாழ்ந்துவந்தவர் பிரமிள். ஒவ்வொரு நொடியையும் அவர் வாழ்ந்து தீர்த்தவர். அவரிடம் சோம்பலோ சாம்புதலோ இருந்ததில்லை. பிளட் பிரஷர் உள்ளவராக கோபத்தில் கொதித்தெழுந்து கத்துபவர் என்று சிலர் எண்ணியதற்கு மாறாக, இறக்கும் தறுவாயில் மருத்துவமனைப் பரிசோதனைகளில் அவரது இரத்த அழுத்தம் நார்மலாக இருந்தது கண்டு வியப்பே எழுந்தது. இலக்கியவாதி என்பதற்கும் மேலான ஆன்மீகவாதி அவர். அவரது கோபக்கணங்களில் அவரது சொற்கள் இன்னும் கூர்மைபெற்று முன்தீர்மானம் கொண்டது போலவே பன்முகத்தாக்குதல் நடத்துவது ஆச்சரியமளிக்கும். எந்தச் சமயத்திலும் அவர் நிலையளிந்ததில்லை. எந்தக்கணத்திலும் அவர் இயக்கத்தோடும் நிதானத் தோடும் உறுதியோடும்தான் இருந்தார். லௌகிக வாழ்க்கையை அவர் துச்சமாகவே மதித்தார். எழுபதுகளின் இடையில் அவர் பசிக்கொடுமையால் துடித்ததுண்டு. ஆனால் நான் பழகிய காலத்தில் அவரது அத்யாவசியச் செலவுகளுக்கு பணம் நண்பர்களிடமிருந்து வந்தபடிதான் இருந்தது. கடைசிகாலத்தில் இலக்கியம் சாராது அவரது ஆன்மீகவாழ்வில் ஆட்பட்ட சில வசதியான அன்பர்கள் எந்த அளவு உதவியும் செய்வதற்குத் தயாராயிருந்தார்கள் ஆனால் அநாவசியமாக அவர் எதையும் பெற முன்வந்ததில்லை. அவரது ‘கண்ணாடியுள்ளிருந்து’ என்ற குறுங்காவியம் ‘இக்கணம்’ என்பதில் நிறைகிறது. அவர் சிறகு பெற்ற மனிதராகவே இருந்தார். அவரது ‘மேல்நோக்கிய பயணம்’ காவியம் இப்படி முடிகிறது: ‘கணத்தின் மொக்கவிழ்ந்தால் காலாதீதம்’.

**தமிழ்நாட்டு சூழலில் பிரமிள் போன்ற பன்முக ஆற்றலும் ஆளுமையும் உள்ள வேறு யாராவது இருந்திருக்கிறார்களா? வேறொருவருடன் அவரை ஒப்பிடலாமா?**

இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பாரதியும் புதுமைப்பித்தனும் இவருக்கு முன்னோடி இலக்கிய மேதைகள். பாரதி கவிதையிலும் பத்திரிகைக் கட்டுரைகளிலும் சாதனை செய்தவர். சிறுகதைகளில் புதுமைப்பித்தனின் சாதனை மகத்தானது. அவரது கவிதையும் விமர்சனமும் குறைவானவை என்றாலும் கூர்மையானவை. பிரமிளின் கவிதையும் விமர்சனமும் தமிழ் இலக்கியம் இதுவரை கண்டிராதது.நவீன கவிதையை உருவாக்கியதில் அவரது முதன்மைப் பங்கைப்போலவே தமிழின் நவீன உரைநடையை உருவாக்கியதிலும் பிரமிளுக்குப் பெரும் பங்கு உண்டு. அவரது கதைகளில் சில தமிழின் உச்சத்தைத் தொட்டவை. நாடகம் என்று தமிழில் வெளியான பிரதிகளில் அவரது நட்ஷத்ரவாஸி நாடகப்பிரதியே நாடகம் என்பதற்கான முழு நியாயத்தையும் பெற்றது. அவரது ஆன்மீகப் பரிமாணம் புத்தருக்கும் ஜே.கிருஷ்ணமுர்த்திக்கும் பிறகு உலக அளவில் குறிப்பிடத்தகுந்தது. (அவருக்கு முன்பு மு.தளையசிங்கத்தின் ஆன்மீகம் சிறுபிள்ளை விளையாட்டு). மேலும் மொழிபெயர்ப்பு, ஓவியம், சிற்பம், விஞ்ஞானம், நியூமராலஜி, டாரட் வாசிப்பு போன்ற மறைமுகஞான ஈடுபாடுகள் என்று பல பரிமாணங்கள் பிரமிளிடம் உள்ளன. எனவே ஒப்பிடுவது சாத்தியமானதுதானா?

**பிரமிளின் புலமைத்திறனின் பன்முக பரிமாணங்கள் தமிழகத்தில் எந்தளவிற்கு அறியப்பட்டுள்ளன? எந்தளவிற்கு ஏற்கப்பட்டுள்ளன? அல்லது முழுமையாக அறியப்படும்போது எந்தளவிற்கு ஏற்கப்படும்?**

1959இல் வெளிவரத்தொடங்கிய தமிழின் முதல் சிறுபத்திரிகையான 'எழுத்து'வில் அதன் ஆசிரியரான சி.சு.செல்லப்பாவும் வெங்கட்சாமி நாதனும் தருமுசிவராம் என்று பெயர்விளங்கிய பிரமிளும்தான் ஸ்டார் எழுத்தாளர்கள். இவர்களில் 1960இல் இருந்து அதில் கவிதையும் பின்பு விமர்சனமும் எழுதிவந்த பிரமிள், தமிழின் மிக முக்கியமான கவியாகவும் முதன்மையான விமர்சகராகவும் அதில் உருப்பெற்றுவந்தார். இரண்டாயிரம் வருட தமிழ்க் கவிதையுலகம் இதுவரை காணாத படிமப்பாங்குடைய கவிக்குரல் என்றும், அவரது இருபது வயதளவில் எழுதிய முதல் கட்டுரையே தாம் எதற்காகப் பத்திரிகையை ஆரம்பித்தாரோ அந்த விமர்சனப் போக்கின் ஆழ்ந்த வெளிப்பாடு கொண்ட விமர்சனக்குரல் என்றும் செல்லப்பாவே கூறியுள்ளர். புதுக்விதையை மலரவைத்த முதல் படைப்பாளியும் அதன் முதல் வாசகரும் புதுக்கவிதை பற்றி விரிவான அத்திவாரமான விமர்சனங்களை முதலில் செய்தவரும் அவர்தான்.இதையும் செல்லப்பா சொல்லியுள்ளார். சுந்தரராமசாமி கூட, வெசா, பிரமிள் ஆகிய இருவரது தனித்தன்மைவாய்ந்த எழுத்து காலகட்டத்து முக்கிய விமர்சனங்களில் பிரமிளின் ஆழ்ந்ததொனியே தனக்கு முக்கியமாகப்பட்டதாகக் கூறியிருக்கிறார். "இன்பாந்த் டெரிபிள்" என்ற வகையில் அப்போது பிரமிள் விளங்கியிருக்கிறார். பிறகு அவரது கவிக்குரல் இன்னும் முதிர்ச்சி பெற்றது. விமர்சனம் ரசனையிலிருந்து மேலெழுந்து அத்யாத்மிக ஆர்கிடைப்பில் சமுதாய விமர்சனமாகப் பன்முகம் கொண்டது. எழுபதுகளின் இறுதியில் நடந்த இலக்கிய சர்ச்சையில் பிரமிளின் குரலே முத்தாய்ப்பாக வீரியம் கொண்டு எழுந்து நின்றது. முற்போக்கின் இன்றைய வளர்ச்சியினரும் மறைமுக இனவாதம் செய்த இலக்கியவாதிகளும் அவரை ஒதுக்க முயன்றாலும், அவரது சண்டைக்குணம், உலுக்கியெடுக்கும் அதிரடித் தாக்குதல், இனம்புரியாத பன்முகப்பரிமாணமும் மிக ஆழமும் வீச்சும் சுமுகமற்ற அனுசரித்துப்போகாத தன்மையும் என்றபோக்குகளால் தனிப்படுத்தப்பட்டாலும் சீரிய வாசகர் வட்டம் எப்போதும் அவருக்கு இருந்து வந்திருக்கிறது. இன்றும் புதியவர்கள் புதிது புதிதாக அவரைக் கண்டடைகிறார்கள், காண முயன்று வருகிறார்கள். இன்றைய இணைய யுகத்திலும் அவரது முழுப்பரிமாணமும் கிட்டாத போதும் ஒரு கவனிப்பு தொடர்ந்து நிகழ்ந்தவாறேதான் இருக்கிறது. எத்தனை நந்திகள் மறைத்தாலும் சந்றே விலகியிரும் பிள்ளாய் என்று அவரது புதுமை விகசித்துக்கொண்டேதான் இருக்கிறது.

**ஜனரஞ்சக கதைகளை எழுதவேண்டிய நிர்ப்பந்தம் பிரமிளுக்கு ஏன் ஏற்பட்டது?**

பிழைப்பிற்காக பத்திரிகை எழுத்துக்களை அவர் மேற்கொள்ளத் தயாராயில்லை. ஆனால் இதை அலட்சியமாக நிறைவேற்றக்கூடிய ஆற்றல் அவரிடமிருந்தது. விஷ்ணு நாகராஜன் என்ற நண்பரின் "பசுமை" என்ற விவசாய இதழுக்காக சில ஜனரஞ்சகக் கதைகளையும் விஞ்ஞானக் கட்டுரைகளையும் மாதந் தோறும் ராசிபலனையும் சித்திரங்களையும் துணுக்குகளையும் எழுதினார். ஆ.அமிர்தராஜ் என்ற கிறிஸ்தவத்துறவியும் கவிஞருமான நண்பருக்காக 'அரும்பு' என்ற இளையோர் பத்திரிகையில் விஞ்ஞானக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், சித்திரங்கள், ஜனரஞ்சகத் தொடர்கதை என்று எழுதினார். கணையாழியின் ஆசிரியரும் எழுத்துகாலக் கவிஞருமான கி.கஸ்தூரிரங்கன் தினமணிக்கதிர் பொறுப்பிலிருந்ததால் அதில் வாரம் ஒரு கதையாகச் சில எழுதினார். அவற்றில் இரண்டுதான் ஜனரஞ்சகமானவை. மீதி அவரது அபாரமான படைப்புகளான லங்காபுரிராஜாவும், கருடனூர் ரிப்போர்ட்டும் தாம் அதில் வந்தவை. அவர் எழுதிய விமர்சனக் கவிதைகளும் நியாயம் உண்டு. மேலும் அவர் ஆங்கிலத்தின் ஜனரஞ்சகமான கிளாசிக்குகளிலும் திரில்லர்களிலும் சயன்ஸ்ஃபிக்சனிலும் ஹாலிவூட்டின் தரமான ஜனரஞ்சகப் படங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். ஜனரஞ்சகமான தமிழப்படங்கள் எடுப்பது பற்றியும் அவர் ஆவலாதி கொண்டிருந்தார்.

**உங்களுக்கு பிரமிள் மீது அபார மதிப்பு ஏற்பட்டதற்கான காரணம் அல்லது எத்தகையது என்று அறியலாமா?**

நான் 1974-75 வாக்கில் சிறுபத்திரிகைகளைப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது நான் கோயம்புத்தூரிலுள்ள இராமகிருஷ்ண வித்யாலய கலைக்கல்லூரியில் பி.ஏ. படித்துவந்தேன். வானம்பாடிகள் கலைந்து கொண்டிருந்த நேரம். தீபம், கணையாழி என்று ஆரம்பித்து சதங்கை, பிரக்ஞை, கடைசிகால கசடதபறவும் அ்.்க்கும், வைகை, கொல்லிப்பாவை, படிகள், இலக்கிய வெளிவட்டம், பின்பு யாத்ரா என்று எனது வாசிப்பு தொடர்ந்தது. அதற்கு முன்பே, எனது ஊராகிய நகலூருக்கு அருகிலிருந்த அந்தியூர் உயர்நிலைப்பள்ளியில் படித்தகாலத்தில் அங்கிருந்த பொதுநூலகத்தில் இருந்த எல்லாவித முக்கிய புத்தகங்களையும் படித்து எனது வாசிப்பு விசாலம்கொண்டிருந்தது. ஆசிரியர்களின் பாதிப்போ, நண்பர்களின் துணையோ, எழுத்தாளர்களின் அணுக்கமோ எனது வாசிப்பை உருவாக்கியதில்லை. நானே தட்டுத்தடுமாறி மேலே மேலே சென்றுகொண்டிருந்தேன். சுமார் 1979இல், படிகள் முதன்முதலில் ஒருங்கிணைத்த (பின்பு நவீன சிறுபத்திரிகை சார்ந்த இலக்கு என்ற கூட்டமைப்பாகசிலகாலம் இயங்கிய) கூட்டத்தில்தான் (நாமக்கல்லுக்கும் சேலத்துக்கும் இடையில் உள்ள சேந்தமங்கலத்தருகில் காந்திகிராமத்தில்), நான் முதன்முதலாக ஒரு இலக்கியக்கூட்டத்தையும் எழுத்தாளர்கள், சிறுபத்திரிகையாளர்கள் என்ற பிரகிருதிகளையும் சந்தித்தேன். இதற்குமுன்பு எல்லாம் புத்தகங்கள், சிறுபத்திரிகைகளைப் படித்து மட்டுமே ஒருவிதமாக எனது ரசனையை உருப்படுத்தி வந்திருக்கிறேன். அந்தக் கூட்டத்தில் எழுத்தாளர்களைப் பற்றி இருந்த சில பிரமைகள் கலைந்தன. எதார்த்தம் புலரத்தொடங்கியது.

நான் எழுபதுகளின் ஆரம்பத்திலேயே எழுதத் தொடங்கியிருந்தும் எதையும் பிரசுரத்திற்கென்று அனுப்பியதில்லை. கிராமீயம் சார்ந்த, அதிகம் படிப்பறிவற்ற, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்ற பட்டியலில் அடங்கிய, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். பட்டப்படிப்பு முடித்துவிட்டு வசதிக் குறைவால் வீட்டிலிருந்தே அஞ்சல் வழியில் எம்.ஏ. தமிழ் பயின்றுமுடித்து வேலையற்று இருந்து கொண்டிருந்த நேரம். முதன்முதலில் 1978 அக்டோபர் "தீபம்" பத்திரிகையில் எனது ஒரு வாசகர் கடிதம் பிரசுரமானதுதான் எனது எழுத்தின் ஆரம்பம் எனலாம். ஜனவரி 1979 கணையாழியில் எனது (சாதாரணமான) கவிதை ஒன்று பிரசுரமானது.எம்.பில் ஆய்வுப்படிப்புக்காக திருப்பதி வெங்க டேஸ்வரா பல்கலைக்கழகத்துக்குச் செல்ல இருந்தேன்.

எல்லாச் சிறுபத்திரிகைகளையும் அவை சார்ந்த புத்தகப் பிரசுரங்களையும் ஒன்றுவிடாமல் படித்து வந்தாலும் எனது சார்பு மார்க்சீய, திராவிட, தமிழிய கோட்பாடுகள் போன்றவற்றிலிருந்து விலகி, அழகியல், ரசனை சார்ந்த புத்தக பத்திரிகை ஈடுபாடாகவே இருந்திருக்கிறது. ஆங்கிலத்திலும் பலவேறு வி'யங்களைப் பற்றிப் படிக்க ஆரம்பித்திருந்தேன்.பாரதி, புதுமைப்பித்தன், மௌனி, குபரா, கநாசு, சி.சு.செல்லப்பா. வெங்கட்சாமிநாதன், சுந்தரராமசாமி, பிரமிள் என்ற வகையிலேயே எனது ஆர்வம் வளர்ந்தது. எனவே பிற சிறுபத்திரிகைகளை விட, அ்.்க், கசடதபற, பிரக்ஞை போன்றவற்றையும் விட கொல்லிப்பாவை, யாத்ரா போன்றவையே எனது விருப்புக்கு உகந்தவைகளாக விளங்கின. அப்போது ஒரு பெரிய இலக்கியச் சர்ச்சை நடைபெற்று வந்தது. இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், ஞானக்கூத்தன், சா.கந்தசாமி, ந.முத்துசாமி, கிரியா ராமகிருஷ்ணன் ஆகியோருடன்சர்ச்சித்த வெங்கட்சாமிநாதனும் பிரமிளும் ஓரளவிற்கு சுராவும் என்று... பின்பு இவர்கள் எல்லோருக்கும் எதிராகத் தனித்து சர்ச்சித்த பிரமிளும் என்று... அதன் தீவிரமான பின்பகுதியிலேயே அதைக் கவனிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஏறக்குறைய நவீன இலக்கியம் என தமிழில் வந்துள்ள பெரும்பாலானவற்றை வாசித்த, ஆங்கிலத்திலும் ஓரளவு பரிச்சயம் பெற்றிருந்த நிலையில், இந்த விவாதங்களின் போக்கை மதிப்பிட முடிந்தது. முற்போக்கு அணியிலிருந்து வந்த ரகுநாதன், கைலாசபதி, சிவத்தம்பி, ஞானி, தமிழவன், எஸ். வி.ராஜதுரை, ராஜ்கௌதமன், இராஜேந்திரசோழன், மற்றும் படிகள்காரர்கள், பிரக்ஞைகாரர்கள் (பின்பு அ.மார்க்ஸ், நாகார்ஜுனன், பூர்ணசந்திரன், எம்.டி.எம், பிரேம்) போன்றவர்களின் எழுத்தில் எவ்வளவு புதுமையும் கோட்பாட்டு ரீதியான பின்புலமும் கொண்டவையாக இருந்தாலும் கற்றுச்சொல்லிகளாக, ஆழமற்றவையாகவே தோன்றின. கநாசு, செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், சுந்தரராமசாமி போன்றோரிடம் கோட்பாட்டு பின்புலம் இல்லாமலிருந்தாலும் அல்லது போதாமலிருந்தாலும் ஒரு நியாய வலிமை இருந்தது. நகுலன், கி.ராஜநாராயணன், எஸ்.பொ., மு.தளையசிங்கம், அசோகமித்திரன், சா.கந்தசாமி, ஞானக்கூத்தன், ந.முத்துசாமி, க்ரியா ராமகிருஷ்ணன், கி.அ.சச்சிதானந்தம், ஆத்மாநாம், தேவதச்சன் இன்னும் இதுபோன்ற நடுத்தரத்தினர்,போதுமானவர்களாக இல்லை.வெங்கட்சாமிநாதனின் வாதத்திறமை அப்போது கவனிக்கவேண்டிய ஒன்றாக இருந்தது. ஆனால் அதன் இயலாமையையும் வக்கிரமும் எளிமையையும் பிரமிளின் விமர்சனத்தாலேயே பகிரங்கப்பட்டது.மேற்கூறிய மூன்று வகையினரிலிருந்தும் வேறுபட்டவராக, திறனாளியாக, மேதமைநிறைந்தவராகபிரமிள் எனக்குத் தோன்றினார். எழுத்தாளர்களிடம் நேரிடைத்தொடர்பு கொள்வதில் ஈடுபாடற்று இருந்த எனக்கு, அவரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு கிடைத்தது.வெ.சா., சு.ரா.ஆகியோரின் ('இரண்டுதலைமுறைகளுக்கு இடையில்' என்ற) கட்டுரைகளை விமர்சித்து எழுதிய 'வெகுஜனரசனையும்

மதமரபும்' (1979) என்ற விமர்சனக்கட்டுரை என்னை வெகுவாகக் கவர்ந்தது. இவற்றை வெளியிட்ட 'கொல்லிப்பாவை', அடுத்து 'ருசிகரம்' (இதற்கு முன்பே எழுதியது என்றாலும் பிந்திப் பிரசுரமானது, 1979) என்ற பிரமிளின் கட்டுரையை வெளியிட்டது. அக்கட்டுரை என்னை முற்றிலும் ஆகர்ஷித்துவிட்டது. எனவே அது பற்றி கொல்லிப்பாவைக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தேன். இதை அப்பத்திரிகையின் ஆசிரியர் ராஜமார்த்தாண்டன் பிரமிளுக்கே அனுப்பியிருக்கிறார். பிரமிள் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார். 'எழுதுவதில் நம்பிக்கை இழந்திருந்த நான் இனி உங்களுக்காகவே எழுதலாம்போலிருக்கிறது' என்பதுபோல் அதில் சொல்லியிருந்தார். அவருக்கு பதிலெழுதிய நான், அவரைச் சந்திக்க விரும்பியதைத் தெரிவித்தேன்.கூடிய விரைவிலேயே, அதுவரை சென்னை சென்றிராத நான் தனியாகச் சென்று அவரைச் சந்தித்தேன். ராயப்பேட்டை பைலட் தியேட்டருக்கு அருகிலிருந்த க்ரியா புத்தகக் கடைக்கு எதிரிலிருந்த காளிங்கராயன் சந்தில் ஒரு வாடகை அறையில் தெருவைப்பார்த்த முதல் மாடி அறையொன்றில் அவர் இருந்தார். அப்போது டேவிட் சந்திரசேகர் அவருக்கு ஓரளவு உதவிசெய்துவந்தார். சில நாட்கள் அங்கேயே தங்கினேன்.பின்பு சில மாதங்களில் மீண்டும் சென்று பார்த்தேன்.ஏதும் வேலையில்லாமல் அதிக வசதியுமில்லாமல் இருந்த நான் அப்போது அவருக்கு கொஞ்சமே உதவமுடிந்தது. அதுவரை ஏராளமாகப் பத்திரிகைகளில் அவர் எழுதியிருந்தும், அ∴க் வெளியிட்ட 'கண்ணாடியுள்ளிருந்து' (1973) என்ற சிறிய ஒரு கவிதைத்தொகுப்பும் யாத்ராவினர் வெளியிட்ட 'கைப்பிடியளவு கடல்' (1976) என்ற அதுவரையிலான கவிதைகள் ஒருசேர விளங்கிய தொகுப்பும் கொல்லிப்பாவை வெளியிட்ட 'விமர்சன ஊழல்கள்' என்ற பேட்டிரீதியிலான இலக்கிய அரசியல் பற்றிய சிறிய நூலும் தாம் பிரசுரம் பெற்றிருந்தன. பிரமிள் ஆசிரியராகவும் நான் பதிப்பாளராகவும் இருந்து, 'படிமம்' என்ற பத்திரிகையைக் கொண்டுவர முயன்று ஒரு இதழ் மட்டும் (1981) வெளிவந்து நின்றது. அவரது மூன்றாவது கவிதைத்தொகுதியான 'மேல்நோக்கிய பயணம்' (1980) வெளிவர உதவினேன். திருப்பதியில் எனது எம்.பில். படிப்பை முடிக்கவேண்டி வந்தது. பின்பு அங்கேயே 1982இல் டாக்டர் (பி.எச்,டி) பட்டப்படிப்பும் தொடர்ந்தது. அப்போதுதான் அதற்காக பிரமிள் கவிதைகளில் ஆய்வை மேற்கொண்டு 1989இல் டாக்டர் பட்டம் பெற்றேன். 1985இல் முதன்மையாகப் பிரமிளின் படைப்புகளை வெளியிடுவதற்காகவே 'லயம்' காலாண்டு பத்திரிகையை ஆரம்பித்தேன்.அது பிரமிளின் மறைவு (1997) வரை விட்டுவிட்டு வந்தது. 'தமிழின் நவீனத்துவம்' (1986)என்ற எழுத்து பத்திரிகைக் கட்டுரைகளின் தேர்ந்தெடுத்த தொகுப்பு, 'லங்காபுரிராஜா' (1988)கதைத்தொகுதி, 'ஆயி' குறுநாவல் (1990), 'சாது அப்பாதுரையின் தியானதாரா' (1989), 'ஆயி' குறுநாவல் (1990), 'விமர்சனாஸ்ரமம்' (1995) சிறுநூல், 'விமர்சன மீட்சிகள்' (1996) சிறுநூல் ஆகியவற்றை லயம் வெளியீடு என்ற பதிப்பகத்தின் மூலம் கொண்டுவந்தேன். இடையிடையே மற்றவர்கள் மூலம் 'ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை' (1985), 'நட்ஷத்ரவாஸி' (1993) நாடகம், 'மீறல் சிறப்பிதழ்' (1993) ஆகியன வெளிவந்தன. லயத்தில் பிரமிளின் கவிதைகளையும் கதைகளையும் விமர்சனக்கட்டுரைகளையும் பிரசுரித்ததோடு, மீறல் சிறப்பிதழில் 100 பக்கமுள்ள பேட்டியையும் வெளியிட்டேன். அப்பேட்டியின் மேலும் 100 பக்கத் தொடர்ச்சி லயம் இழ்களில் தொடர்ந்துவந்தது. பிரமிளை ஆரம்பத்தில் எழுத்து, இடையில் கொல்லிப்பாவை இறுதியில் லயம் (பிரத்யேகமாக) பிரசுரித்துள்ளன. பிற்காலத்தில் அவர் தாம் எழுதியவை லயத்தில் மட்டுமே வரட்டும் என்ற மனநிலையில் இருந்தார். எழுதியவற்றை உடனே என்வசம் அனுப்பிவிடுவார். எனவே லயம் இடையிடையே நின்ற நேரங்களில் அவரது படைப்புகளை, கல்குதிரை, கனவு, நிகழ், முன்றில், மீறல் போன்ற பிற பத்திரிகைகளுக்கு நான்தான் கொடுத்து வெளியிட வைத்தேன்.

1996இன் இறுதியில் அவர் உதரவிதான (அட்டமன்) புற்றுநோயால் கோமோநிலைக்குச் சென்று பின் பக்கவாதம் பீடிக்கப்பட்டு பேச்சிழந்து, படிப்பிழந்து, ஆறுமாதங்கள்போல் மருத்துவமனையில் இருந்து, வேலூர் அருகிலுள்ள கரடிக்குடி என்ற கிராமத்தில் அடக்கம்பெற்றார். அவரது மறைவுக்குப்பின், 'பிரமிள் கவிதைகள்' (1998)என்ற முழுக்கவிதைத் தொகுப்பைக் கொண்டுவந்தேன். பின்புதான் எனக்கு அரசு கலைக்கல்லூரியில் அக்டோபர் 1998இல் வேலைகிடைத்தது. (ஜூன் 2012இல் பணி ஓய்வு.)

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுக்காக அவர் மொழிபெயர்த்த பல நூல்களும் பிரதியற்று மறைந்த நிலையில், எஞ்சிய 'மார்க்ஸீஸம் மார்க்ஸீயமும்' (1999) என்ற பீட்டர் வோர்ஸ்லியின் சமூகவியல் நூலை மட்டும் வெளியிட முடிந்தது.பிரமிளின் அனைத்து எழுத்துகளையும் தொகுத்தேன்.எல்லாவற்றையும் டைப் செய்து எடிட்செய்து தொகுதிகளாகத் தயார் செய்வதில் பல ஆண்டுகள் கடுமையாக உழைக்க நேர்ந்தது. அடையாளம் பதிப்பகம் 1. பிரமிள் படைப்புகள் – கதைகளும் நாடகங்களும் (2003), 2. வானமற்றவெளி – கவிதை பற்றிய கட்டுரைகள் (2004), 3.பிரமிளின் தேர்ந்தெடுத்த கவிதைகள் (2007)ஆகிய நூல்களையும் வம்ஸி பதிப்பகம் 1.தியானதாரா (1999) 2. பாதையில்லாப்பயணம் – ஆன்மீகப் படைப்புகள் (2007) 3. வெயிலும் நிழலும் – இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் (2008) 4. வரலாற்றுச் சலனங்கள் – சமூகவியல் கட்டுரைகள்(2008) ஆகியவற்றையும் கொண்டுவந்தன. விருட்சம் வெளியீடு 'விடுதலையும் கலாச்சாரமும்' (2009)



காலசுப்ரமணியம் - பிரமிள்
இளமைத்தோற்றம்

என்ற மொழிபெயர்ப்புக் கதை கட்டுரைத் தொகுதியை வெளியிட்டது. தமிழோசை பதிப்பகம் 'சிறீலங்காவின் தேசியத் தற்கொலை' (2009) என்ற நூலையும் நற்றிணை பதிப்பகம் 1.சூரியன் தகித்த நிறம் - மொழிபெயர்ப்புக் கவிதைகள் (2011), 2.தமிழின் நவீனத்துவம் (2011 திருத்திய இரண்டாம் பதிப்பு) ஆகியவற்றையும் மறுபதிப்புகளாகக் கொண்டுவந்தன. தியானதாரா ஐந்து பதிப்புகளுக்குமேல் (கவிதா பப்ளிகேஷன் 3 பதிப்புகள்) கண்டிருக்கிறது. லயம் வெளியீட்டின் வழி நானே 1. காலவெளிக் கதை - அறிவியல் கட்டுரைகள் (2008) 2. யாழ் கதைகள் (சிறுவர் கதைகள் 2009) என்ற சிறு தொகுப்புகளைக் கொண்டுவந்தேன். பிரமிளின் திருக்கோணமலைப் பள்ளித்தோழர் அமரசிங்கம், தமது கையெழுத்துப் பத்திரிகையில் வெளியான பிரமிளின் கதைகளைத் தொகுத்து ஒரு நண்பர் வழியாக என்னிடம் அனுப்பியிருந்தார். அடுத்த ஆண்டு அமரசிங்கம் மறைந்தார் எனக் கேள்விப்பட்டு, அவரது நினைவாக யாழ்கதைகள் கொண்டுவரப்பட்டன. தற்போது சுமார் 3500 பக்கங்களில் ஆறு தொகுதிகளாக அடையாளம் பதிப்பகம் பிரமிளின் 'கலெக்டட் ஒர்க்ஸ்' கொண்டுவர உள்ளது. இதில் இதுவரை புத்தகவடிவம் பெறாத 'எதிர்ப்புச்சுவடுகள் - பேட்டிகள்', 'அறைகூவல் - இலக்கிய அரசியல் கட்டுரைகள்' என்ற சுமார் 1000 பக்கமுள்ள படைப்புகளும் அடங்கியுள்ளன.

1.6.2015

• • • • • • • • • • •

## வன்முறையும் - கலாச்சாரமும்

வன்முறை என்ற பதத்துக்கு 'வலிமையையே முறையாகக் கொள்ளல்' என்று பொருள் காணலாம். பொதுவாக இது சீர வலிமையைச் சுட்டுகிறது. சீர்ம் சார்ந்த ஆயுதபலத்தையும்கூட. ஆனால், அபிப்ராயங்களை ஆதாரமில்லாமல், சூழ்ச்சிகளின்மூலம் உருவாக்கும் முறைகூட வன்முறைதான். இந்தச் சூழ்ச்சிகள், கலாச்சாரமாகவும், மதம்சார்ந்த விஷயங்களாகவும் காட்டப்பட்டு விட்டால் இவை சூழ்ச்சிகளே என்பது பெருவாரி மக்களுக்குத் தெரியாமல் போய்விடும். மக்களை மந்தைகளாக்கவென்றே செய்யப்பட்ட சூழ்ச்சிகள்கூட இந்த கலாச்சார, மதானுஷ்டான முறை மூலம் இதே மக்களுடைய பார்வையில் சூழ்ச்சிகள் என்று புலனாகிவிடாமல் பண்ணப்பட்டிருக்கிறது. காலம் காலமாக. எல்லா நாடுகளிலும் எல்லாக்காலங்களிலும் புதுப்புது விதங்களில் இது செய்யப்பட்டுள்ளது. பழைய கலாச்சார அமைப்புக்களையும் மதங்களையும் 'ஒழித்துக்கட்டும்' புதிய கலாச்சாரங்களும், புதுவித அரசியல் கோட்பாடுகளும்கூட இதையே செய்கின்றன.

- பிரமிள் -

## உரிய சிம்மாசனம்

தமிழில் புதுக்கவிதை வழக்காறு தோன்றி இதுநாள்வரை எழுதப்பட்டதுகளில் சிறந்ததுகளாக ஒவ்வொரு கவிஞரிடம் இருந்தும் ஒரு பத்துக் கவிதைகள் வீதம் பொறுக்கி, அதுகளை எல்லாம் ஒரு கூடையிலிட்டுக் குலுக்கி, மீண்டும் பிரித்துக்காட்டச் சொன்னால், பிரமிளோட கவிதைகளைத் தவிர, பிறரோட கவிதைகளை அடையாளம் காணுகிற அலுவலில் ஒரு தேர்ந்த வாசகன் கூடத் திண்டாடிப்போவான்.

நகுலனைப்போல, ந.பிச்சமூர்த்தியைப்போல எழுதுகிறதுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் பிரமிளைப்போல எழுதித்தேற ஒருவருக்கும் ஏலவில்லை. நக்கிக் கக்கிய கக்கல்களாகி நாறுகிறது பிரேதாவோட பெரிதுபடுத்தல்களும்.

- ராஜசுந்தரராஜன்

## பிரமிள்

"நான் என் கவிதையின் மூலம் ஒரு 'பிரைவேட் மெட்டா'. பிஸிக்ஸை' உருவகப்படுத்துகிறேன். உண்மையிலேயே என்னுள் தமிழ்மொழியின் பாரம்பரியம், ஐரோப்பியன் பாரம்பரியம் இரண்டும் இணைகின்றன. என்றாலும் தமிழ்மொழியின் பாரம் பரியத்திலும் சாதனைகளிலும் எனக்கு நம்பிக்கையுண்டு, எந்தவொரு உலக மொழிப் படைப்பையும் தமிழுக்குள் கொண்டுவர முடியும். ஹோமர் முதல் போர்ஹாஸ் வரை உள்ளவர்களுக்குத் தமிழிற்குள் புகுந்து வர எந்தவொரு தடங்கலும் இல்லை, என்கிறார் பிரேமிள்."

ஸ்ரீதரன்

பேராசிரியர். சி. மௌனகுரு



# அகத்துள் எழும் பெரு நெருப்பு

கோபம் பிறக்கிறது
சுட்டெரிக்கும் கோபம்
தெறிக்கிறது
நெற்றிக் கண் எனக்கிருப்பின்
நீறாகிப் போயிருப்பார்

சிங்கங்கள் அமர்ந்திருந்து
கர்ஜித்த சிம்மாசனத்தில்
கழுதைகள் அமர்ந்திருந்து
கர்ஜித்து பழுகுதுகள்
கத்தல்தான் கேட்கிறது

குயில்கள் எல்லாம் கூடிநின்று
கூவிநின்ற மாந்தோப்பில்
காகங்கள் வாய்திறந்து
கூவ முயலுதுகள்
கரைதல் தான் கேட்கிறது

அழகான தோகை விரித்து
ஆடி நின்ற மயிற் காட்டில்
வான் கோழி தோகை விரித்து
வடிவிது வென்று ஆடுது
குதிப்புத்தான் தெரிகிறது


அறிஞர் குழாம் அமர்ந்திருந்து
ஆராய்ந்த பலகையிலே
பேதைகள் மேதைகளாய்ப்
பேய்க்காட்டப் பார்க்கின்றார்
பேதமைதான் தெரிகிறது

வானொலி தொலைக்காட்சி
வாகான பத்திரிகை
எங்கும் இடம் பிடித்து
இவர்கள் வலம் வருகின்றார்
எங்கு உலகு போகிறது?

கத்துங்கள் கரையுங்கள்
குதியுங்கள் கூடுங்கள்
பொய்யுரைத்து வாழுங்கள்
இக்காலம் எங்களது
என மகிழ்ந்து ஆடுங்கள்
ஆடுங்கள் ஆடுங்கள்
கைகோர்த்து ஆடுங்கள்


அருவருப்பாய் உமை உணர்வர்
ஒரு சிலபேர்
பெரு வெறுப்போடுமைப்பார்ப்பார்
மிகச் சிலபேர்
அருவருப்பும் பெருவெறுப்பும்
உம் மீது கொண்டவர்கள்
சிறு தொகைதான் ஆனாலும்
பெரும் தொகையாய்ப்
பின் எழுவார்

அக்கினிக் குஞ்சைப்போல்
அகத்துள் எழும் பெரு நெருப்பு
பெருங்காட்டை அழித்து விடும்
பிரளயமாய் பீறி எழும்
பேதமையைச் சுட்டெரிக்கும்




தர்முசிவராமு

# நினைவிடை தோய்தல்



THE CAUCAUSIAN TEA - WINE

AJIT FREMELL

Sometime in 'the 1980's a Japanese lady doctor touring in the environs of Russia found in the Cacucausus an ageless people. These are the legendary 'Cossacks'. They never seem to grow old or become sick. Cancer and diabetes are unknown among them. The Japanese visitor even came across an hundred-year-old man whose marriage with an eighty year old lady had brought forth a child. The caucausian women have no menopause or signs of ageing.

The secret of this, the caucausians told the Japanese, was in a wine brewed out of tea with a 'yeast'. Subsequently this 'yeast' has been classed variously as 'cell-wall' and 'green micro-algae', not to [illegible] the commercial name of its 'broken cell-wall' [illegible] called 'Chlorella'. Let us call it simply [illegible] the 'yeast'.

The 'yeast' takes the shape of the vassel in which it grows. It lives and multiplies in sweetened-plain-tea. And while it multiplies, it converts its medium through the process of fermentation into wine.

பால்ய நண்பர் தர்முசிவராமுவுடனான 43 வருட அனுபவத்தில் அவரது பல பரிமாணங்களில் சிலவற்றை என்னால் எட்ட முடியவில்லை. 1955களில் படித்த போது இராமகிருஷ்ணமிசன் இந்துக்கல்லூரி அதிபர் அம்பலவாணரால் சிரேஷ்ட வகுப்பு மாணவர்களுக்கு பௌதீக பரிசோதனைகள் செய்துகாட்டும்படி பணிக்கப் பட்டேன். அதன்மூலம் எனக்கு சிவராமலிங்கத்தின் தொடர்பு அவரது சகமாணவர்கள் மூலம் ஏற்பட்டது. மாலை வேளைகளில் திருமலைக் கடற்கரையில் விளையாடுவோம். கோட்டைச் சுவரில் வளர்ந்திருக்கும் மரவேர்களைப் பிடித்து கோட்டை மதிலில் ஏறுவோம். பதினான்கு, பதினைந்து அடி உயர சுவர் கட்டுகளில், ஓடி வந்து கடற்கரை மணலில் பாய்ந்து விளையாடுவோம். இவற்றைக் கவனித்த எமது உபஅதிபர் சிவபால் மாஸ்டர் எங்களை "நண்டு அட்வெஞ்சர் காங்" என்று கிண்டலாக அழைப்பார்.

அறுபதுகளின் பிற்பகுதியில் இந்தியா சென்ற நண்பர் சிவராமுடனான தொடர்பு அவர் இறப்பதற்கு பத்து பன்னிரண்டு நாட்கள் முன் வரை நீடித்தது. 25.12.1997ல் வேலூரை அண்டிய கரடிக்குடி மருத்துவமனையில் அவரை எனது நண்பர் கந்தசுவாமியுடன் நான் பார்த்து வந்தேன். சென்னை மருத்துவர்களால் கைவிட்ட நிலையிலேயே அவர் வேலூருக்கருகிலுள்ள கரடிக்குடிக்கு மாற்றப்பட்டார்.

1996ல் அவரும் நானும் இயற்கை வைத்திய வகுப்பில் சேர்ந்து படித்தோம் அப்போது கம்புச்சா என்னும் தேயிலை வைன் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் பரிசோதனை நடத்துவதாகச் சொல்லி அந்த yeast அப்பத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி உண்டார். அவருக்கு ஏற்பட்ட கண்டுபிடிக்க முடியாத வருத்தம் சிலசமயம் இதனால் கூட ஏற்பட்டிருக்கலாம்.

பரிசோதனை செய்வது அவரது ரத்தத்தில் ஊறி இருந்தது. 1951 - 52 களில் பிரபல்யமான அதிர்ஷ்ட விஞ்ஞானம் எனும் நூலை எழுதிய பண்டிட்சேதுராமன் இலங்கை வந்திருந்த போது, எண்சாஸ்திரம் பற்றிய கூட்டங்களில் பேசினார். பத்திரிகைகளிலும் எழுதினார். அப்படி எழுதிய கட்டுரைகளை கத்தரித்து நோட்டு புத்தகத்தில் ஒட்டி அதைக்கவனமாகப் படித்து கிரகித்துக் கொண்டு பல நண்பர்களுக்கும் சாத்திரம் சொன்னார். தனது பெயரையும் பலதடவைகள் மாற்றி மாற்றி பரிசோதனை செய்தார். அதுதான் அவர் ஏகப்பட்ட பெயர்களால் குறிக்கப்படுவதன் காரணம்.

சிலசமயங்களில் பக்கம் பக்கமாக எழுதி முடித்திருந்த கட்டுரைகளை கிழித்துவிட்டு, மீண்டும் மீண்டும் புதிதாகப் புதிய பாணியில் எழுத்திலும் பரிசோதனைகள் செய்வார். மேசையில் வைத்துதான் எழுதவேண்டுமென்பது அவருக்கு அவசியமில்லை. குந்தி இருந்தபடி முளங்காலில் வைத்தே சில சமயம் அவர் தூங்காமல் எழுதுவதை பல சமயம் கண்டிருக்கிறேன்.

படிக்கும்போது WASHINGTON SCHOOL OF ARTS எனும் தபால் மூலம் போதிக்கும் சித்திரக் கலாசாலையில் சேர்ந்து சித்திரம் கற்க ஆரம்பித்தார். அதிலும் பல பரிசோதனைகள் நிகழ்த்தினார். தனது படைப்புகளை தனி நபர் கண் காட்சியாக கண்டியில் பிரஞ்சுசாதகக்கலை



1967 - 70களில் திருகோணமலையில் பிரமிளின் வீட்டுக்கு முன்னால் பிரமின் நண்பருடன்

பிரிவினர் அனுசரணையுடன்நடத்தியுள்ளார்.

கிளி மூக்கும், தீட்சண்யப் பார்வையும், ஒல்லியான தோற்றமும் உடைய சிவராமலிங்கம் (அதுதான் அவர் இயற்பெயர்) பாடசாலைக்காலத்திலும் பார்ப்பவர் எவரையும் இவர் "ஒரு வித்தியாசமானவர்" என்ற உணர்வை ஏற்படுத்தக்கூடியவராக இருந்தார். தீட்சண்யம் பார்வையில் மட்டுமல்ல அவர்புரியும் எல்லா செயல்களிலும் இருக்கும். சுருட்டுச் சுற்றும் தொழில் புரிந்த அவரது தந்தையால் அவரது அறிவாற்றலுக்கு உதவியாக எதுவும் வழங்கப்படாவிட்டாலும் தீட்சண்யமும், பிடிவாதமும் அவரைப்போன்றதே தாயாரின் அன்பும், கனிவும், கவித்துவமும் தான் அவரிடம் அதிகம் அமைந்திருந்தன

அப்போது இப்போதைய சாதாரணப் பொதுத் தராதரப் பரீட்சைக்குப் பதிலாக S. S. C. என்ற சிரேஷ்ட பாடசாலை பரீட்சை நடந்த காலம்.

பரீட்சைகளினால் உண்மையான கல்வித் தராதரத்தையும், திறமையையும் அளவிட முடியாதெனக் கருதிய அவர் தனது இரண்டாவது பரீட்சை (கணிதப்) பாடத்திற்கு செல்லாமல் இருப்பதற்காக தான் அணிந்திருந்த கண்ணாடியை கல்லால் குத்தி உடைத்து விட்டுத் தாயாரிடம் கண்ணாடி விழுந்து உடைந்து விட்டதால் பரீட்சைக்குப் போகவில்லை எனச் சமாதானம் கூறினார். பின்னர் ஒருமுறை இந்தியாவில் (எழுத்து ஆசிரியர்) சி. சு. செல்லப்பாவிடம் தான் பட்டப்படிப்பு படிக்க விரும்புவதாக தெரிவித்தார். **"உனது எழுத்துக்களை வாசித்து விளங்க இங்கே M. A க்களும் திணறுகிறார்களே"** என்று சமாதானம் சொல்லி அவரது ஆசையை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார். சி.சு.செ.

பாடசாலையில் சக மாணவர்கள் கால்பந்து விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் சிலப்பதிகாரப் புத்தகமும் கையுமாக மைதானத்தில் வாசித்துக் கொண்டிருப்பார். வகுப்பில் நண்பர்களிடையே அதன் நயம் பற்றியும் விபரிப்பார்.

எண் சோதிடத்திலும், சோதிடத்திலும் பரீட்சயம் உள்ள அவர் தனது சாதகக் குறிப்புப்படி (20 - 04 - 1939 ல் பிறந்தவர்) தனக்கு நிரந்தரமான தொழில் எதுவும் இல்லை எனக் குறிப்பிடுவார். அவர் இந்தியாவில் இருந்த சமயம் அவரது பால்ய இலக்கிய நண்பராக இருந்த சுவாமி தனது ஜவுளிக்கடையில் வேலை பார்க்கச் சொல்லி வற்புறுத்தியும் மேற்சொன்ன காரணத்தைக் காட்டி வேலையை விட்டுவிட்டார்.

நான் பாடசாலையில் படித்த சமயம் நண்பர்கள் கூட்டமாகச் சென்று கடல் குளிப்பது வழக்கம். ஒல்லியான அழகான உடலோடு சிறுகுன்றுகள் மேல் நின்று கடலுக்குள் 'டைவ்' பண்ணுவார். கூட்டமாக மட்டுமே நாம் கடல் குளிப்போம். அவர் தன்னந்தனியாகச் சென்று நீந்தவும் 'டைவ்' செய்யவும் செய்வார். நண்பர்களுடன் கடல் குளித்த "சமயம் ஒரு முறை அவரது கைக் கடிகாரம் காணாமல் போய் விட்டது. அதைக் கண்டு பிடிப்பதற்காக அவரது தாயாருடன் நினைத்த காரியம் கூறும் அப்பாத்துரைச் செட்டியார் என்ற பெரியாரைச் சந்தித்தார். அதில் ஏற்பட்ட அறிமுகம் அவரிடம் அடிக்கடி சென்று அளவளாவ சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியது. அவரது இந்த உறவு அவர் எழுதின 'தியானதாரா' என்ற அப்பாத்துரைச் செட்டியாரின் ஆத்மீக சரிதையாக மலர்ந்தது.

இலங்கையில் இருந்த காலத்தில் அவரது நண்பர் நில அளவையாளர் கோபால கிருஷ்ணனுடன்தான் அதிககாலம் தங்கியிருந்துள்ளார். கோபாலகிருஷ்ணன் முகாமிட்டு இருந்த அநேகமான இடங்களுக்கு அவரும் கூடவே செல்வார். ஊரை விட்டு கானக பகுதிகளில் கூடுதலாக இருக்கும் போது அங்கு போய் அவருடன் தங்குவதில் அவருக்கும் பெருமகிழ்ச்சி. லங்காபுரிராஜா தினமணிக்கதிர் சஞ்சிகை 1985 ஜூன் 9, 16, 23 திகதி இதழ்களில் வெளிவந்த கதை தனது நண்பர்



பிரமிளின் தந்தை

கோபாலக்கிருஷ்ணனின் முகாம் வாழ்க்கையை பின்புலமாக வைத்து எழுதப்பட்ட கதை.

இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் அவரது வாழ்க்கை ஒரு துறவு நிலையில் வாழப்பட்டது என்று சொன்னால் மிகையாகாது. அவரது சொத்துக்கள் எனச் சொல்லப் போனால் புத்தகங்கள் மட்டுமே. நண்பர்கள் பலரும் அவருக்கு உதவி செய்தனர். 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் தன் குடும்பத்தை இந்தியாவிற்குக் கொண்டு போய் விட்டு விட்டுவந்த நண்பர் கந்தசாமியின் வீட்டிற்கு கந்தசாமி இந்தியா சென்ற போதெல்லாம் போய் வருவார். சிலகாலம் சிவராமுவின் வீட்டு வாடகையை அவரே கொடுத்து வந்தார். அவரைக் கடைசியாக உயிருடன் கண்ட இலங்கை நண்பர்களில் நானும் அவரும் அடங்குவோம். இறந்தபின் கரடிக்குடியில் அவர் புதைத்த இடத்தில் பெயர் பொறித்த பளிங்குக்கல்லை இலங்கையிலிருந்து எடுத்துச் சென்று நட்டார் கந்தசாமி.

பாடசாலை நாட்களில் எமது நண்பர்களில் பலரும் காதலித்தனர். ஓரிருவரைத்தவிர எல்லோருடைய காதலும் தோல்வியிலேயே முடிந்தது. சிவராமுவும் ஒரு மாணவியைக் காதலித்தார். அந்த நாட்களிலேயே அவரது காதல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று ஒரு நாள் இரவு வீதியால் வரும்போது வாய்விட்டுக் கதறி அழுதார். அவர் அப்படி அழுது கண்டது அதுவே முதல் முறை. எனக்கு துக்கம் ஒரு புறம் புதுமையாக இருந்த நிகழ்வில் அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்ற சங்கட நிலை ஏற்பட்டது. தர்முசிவராமுவின் பன்முக ஆற்றல்களில் உன்னதமானது ஆன்மீகமே. சாது அப்பாதுரையின் "தியானதாரா." என்ற நூல் லயம் வெளியீடாக பிந்திய என்பதுகளில் வெளிவந்தது. அந்நூலினை தனது நினைக்கமுடியாத நண்பர்கள் (To the Eight Impossible Friends) எண்மருக்கு அர்ப்பணித்துள்ளார். சாது அப்பாத்துரை, யோகர் சுவாமி, தங்கப்பொன்னு, ஜே. கிருஷ்ணமுர்த்தி, மாயம்மா, நயினார் சுவாமி, யோகிராம் சுரத்குமார், மாதாஜி கிருஷ்ணாபாய் என்பவர்களே அவரது வாழ்வில் மலர்ந்த ஆன்மீக ஆசான்கள் எனலாம்.

...

# தம்பர் பறக்கிறார்

மாட்டு வண்டி போகும் சத்தம்
கேட்டுக் காலை எழுந்து நித்தம்
வீட்டுப் படலை தன்னைத் தம்பர் வேக மாகத் திறக்கிறார்
வாட்டும் தாகம் போக்கக் கள்ளை மண்டத் தானே பறக்கிறார்.

தண்ணி யிலே போற தம்பர்
எண்ண மெல்லாம் கவிதைக் கம்பர்
கண்டபடி வார்த்தை கட்டிக் கவிதை சொல்கிறார்
பெண்டில் பிள்ளை மானம்தன்னை வீதிதன்னில் கொல்கிறார்.

குமராய் வீட்டில் இருக்க இரண்டு
இவரோ வீதியில் கிடந்து புரண்டு
தவறு தவறாய் வார்த்தை சேர்த்துத் தத்துவங்கள் பேசுறார்
இவரின் நிலமை கண்டு சிறுவர் கல்லை எடுத்து வீசுறார்.

கட்டும் வேட்டி முழுதும் அழுக்கு
எட்டோ பத்தோ கள்ளில் முழுக்கு
கெட்டு அழிந்து போகும் வழியில் காலம் பூரா நடக்கிறார்
வட்டி வளரும் கடனை அடைக்க வக்கில்லாமல் கிடக்கிறார்.

கவிஞர். வ.க.பரமநாதன்.
டென்மார்க்

# நகர்வு


ஓவியம் - பிரமில்

கடக்க முடியாதவாறு
உறைந்து கிடக்கிறது
வாழ்வு

ஒவ்வொரு படியிலும்
ஏதோவொரு தடைக்கல்
நகர்வைத் தடுக்கிறது.
சிறிய நீக்கல்
கிடைக்காதா என
முயற்சிக்கின்றேன்.

மனம் உந்தினாலும்
கால் கிட்டித்தபடி
முடங்கி நிற்கின்றன

உருவற்ற தொன்று
உடனிருந்து தடுக்க
எதுவுமே செய்யத்
தோன்றாத இருப்புடனான
வாழ்வு.

வே.ஐ.வரதராஜன்

க.சட்டநாதன்

# தர்மோ ஜீவராம் பிரமிள்

## ஒரு படைப்பாளுமை

மகா கவி பாரதிக்குப் பின்னர் தோன்றிய ஆளுமைகளுள், கவிஞர் தரும சிவராமுக்கு முதன்மையான இடம் உண்டு. இது ஓரளவு பலராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட விஷயமாகும். இவர், கவிஞராக மட்டுமல்ல, நவீனத்துவ வீச்சும், புலமைச் செறிவும் மிக்க விமர் சகருமாவார். அத்துடன், இவர் ஒருபுனைகதையாளரும் கூட. இவரது படைப்புகள் - சிறுகதைகள், குறுநாவல்கள், நாடகங்கள் திரைப்பிரதி என வெளிவந்துள்ளன. இவரது ஆளுமை வீரியத்தை இப்படைப்புகளிலும் நம்மால் தரிசிக்க முடியும்.

த. சிவராமலிங்கம் எனும் இயற்பெயரைக் கொண்ட தருமு, திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தாயாரும், தாய் வழி உறவினர்களும் யாழ் மாவட்டத்தில் உள்ள வேலணை வாசிகள்.

மிக இளமையிலேயே படைப்பாற்றல் மிக்கவராக விளங்கிய இவர், தனது கல்லூரிப் படிப்பு முடிந்த கையோடு, சென்னை மாநகரத்துக்கு இடம் பெயர்ந்தார். அன்று தொட்டு அவர் தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் மாறி மாறி இருந்து வந்தார். அவரது இறு திக்காலம் தமிழகத்தில்தான் கழிந்தது.

சென்னையில், இலக்கிய வல்லாளரான சி. சு. செல்லப்பாவின் - நவீன இலக்கியம் சம்பந்தப்பட்ட அளவில் - சுவீகார புத்திரர் போல வாழ்ந்தார். சி.சு. செயின் புகழ் பூத்த சிற்றிலக்கிய ஏடான 'எழுத்து' சஞ்சிகையில் இவரது ஆக்கங்கள்



கோயம்புத்தூர் மாவட்ட திருமூர்த்தி நகர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் 1994 ஒக்டோபர் இறுதிப்பகுதியில் பள்ளி மாணவர்களுடன் பிரமிள் கலந்துரையாடிய போது செய்துகாட்டியது.
உடனிருந்தவர்கள் காலசுப்பிரமணியம். பொள்ளாச்சி நசன். பிரமிளின் இக்களிமண் சிற்பம் பொள்ளாச்சி நசனின் சிற்றிதழ் காப்பகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

வெளிவரத் தொடங்கின. பெரும் பாலும் கவிதைகளும், விமர்சனக் கட்டுரைகளும், சில சிறுகதைகளும் 'எழுத்து' வில்வெளிவந்தன. அவரது எழுத்தாற்றல் பல தமிழ்ப் படைப் பாளிகளைத் திரும்பிப் பார்க்க வைத்தது. ஆரம்பத்தில் க. நா. சு. போன்ற விமர்சகர்கள் அவரைக் கண்டு கொள்ளாத போதும், பின்னர் அவரை அங்கீகரிக்கவே செய்தார்கள். காலக்கிரமத்தில் இவரது படைப் பாற்றல் தமிழ் நாட்டு விமர்சகர் களாலும், படைப்பாளிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இவரைப் பற்றி இவரது படைப்புச் செழுமை பற்றி நல்லதும் அல்லாததுமான கருத்துக்கள் ஆரம்பத்தில் வெளிவந்த போதும், அவரது ஆற்றல் பற்றிய விமர்சனக் குறிப்புகளை பின்னர் தமிழக முன்வரிசைப் படைப்பாளிகளும், விமர்சகர்களும் முன்வைக்கத் தவறவில்லை.

பழகுவதற்கு இனிய வராகவும், நல்ல மனிதராகவும் இவர் இருந்த போதும், பல அகமுரண்களால் அலைக்கழிக் கப்பட்டார். இந் நடத்தையால் இவர் பெற்றதும், இழந்ததும் அதிகமாகும். தனது இலக்கிய வாழ்க்கையை ஒரு விட்டேத்தியாக, ஒட்டும், உறவும் அதிகம் இல்லாத மனிதராக, பிற்காலத்தில் வாழ்ந்தார் என்பதை அவரது வாழ்க்கைக் குறிப்பு களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

அவர் நெருக்கமான தொடர்பையும், உறவையும் சுந்தர ராமசாமி, கிருஷ்ணன் நம்பி, க.நா.சு, சி.சு.செ, வெங்கட் சாமிநாதன், கிரியா ராமகிருஷ்ணன், சா. கந்தசாமி, ராஜமார்த்தாண்டன், சி. மோகன், பாவண்ணன், அழகிய சிங்கர், வெளிரெங்கராஜன், ராஜ கோபால், கோவை ஞானி ஆகியோருடன் கொண்டிருந்தார். இவருடனான அவர்களது உறவு ஒரு வகையில் Love and hate relationship ஆகத்தான் இருந்தது. இருப்பினும் அவர்கள் அனைவரும் அவரிடம் மதிப் புடனேயே நடந்து கொண்டார்கள். அத்துடன் பிரமிளிடம் அதிக விருப்பம் அவரது எழுத்தில் அதிக ஈர்ப்புமுடையவர்களாக இருந்தார்கள்.

**இவரது கல்விப் புலமை பற்றி இனிப்பார்ப்போம்.**

தமிழ்க் கவிதை மரபின் உள்ளூறிஞ்சல்களுடன்- குறிப்பாகச் சங்கத் தமிழ் பாடல்களின் உட்பொலிவையும், சாரத்தையும் மணங்கொண்ட பண்பு இவரது கவிதைகளில் விரவிவருவதை அறியக் கூடியதாக உள்ளது. இவரது மெய்யியல் ஈடுபாடும், ஆன்மீகத் தேடலும் ஜே. கிருஷ்ண மூர்த்தியின் ஊறலிப்பான கருத்துக்களால் கவரப்பட்ட - சுயத்தைத்தேடித் தவிக்கும் பண்பைக் கொண்டவையாக இருக்கின்றன.

இவர் முதல்தரமான படிமக்கவிஞர் என்பதில் இவரது சக பாடிகள் மத்தியில் இரு வேறு கருத்துக்கள் இல்லை. அற்புதமான படிமங்களை தனது கவிதைகளில் இவர் பெய்துள்ளார். இவரை அடியொற்றி எழுதும் போக்கு தமிழகத்தில் உண்டு. இவரது ஆளுமை விகாசம் பல கவிஞர்களை இவர்பால் ஈர்த்ததில் வியப்பு ஏதுமில்லைதான்.

'உணர்ச்சி ஒரு அடிமன ஓட்டத்தின் வீச்சினால் உந்தப்பட்டு வார்த்தையில் பாயும்போது ஜனிப்பதுதான் கவிதை...' எனும் கருத்துடையவர் தருமு. இதற் அப்பால் சென்றும் அவர் கவிதையின் இயல்பு பற்றி நிறையவே பேசியுள்ளார்.

சிறப்பாக, அவரது கவிதைகள் மன உள் அடுக்குகளின் ஓரம் சார்ந்த உணர்வுகளையும், பொருளம்சத்தின் தர்க்க ரீதியான விரிவையும், வீச்சையும் புலப்படுத்துபவையாகவே இலங்குகின்றன.

இவரது கவி சொல்லும் ஆற்றல் பற்றிய பல இலக்கியப் பிரபலங்களின் கருத்துக்களை இனிப்பதிவு செய்யலாம் என நினைக்கிறேன்.

*முதலில் சி.சு.செல்லப்பாவின் கருத்துக்கள்:- தருமுவின் 'விடிவு' கவிதை பற்றி அவர் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.*

**விடிவு**

**பூமித்தோலில்**
**அழகுத் தேமல்**
**பரிதி புணர்ந்து**
**படரும் விந்து**
**கதிர்கள் கமழ்ந்து**
**விரியும் பூ**
**இருளின் சிறகைத்**
**தின்னும் கிருமி**
**வெளிச்சச் சிறகில்**
**மிதக்கும் குருவி**

'இந்தக்கவிதையின் தனிச்சிறப்பு நூற்றுக்கு நூறு படிமங்களாலேயே ஆனது. உதய காலவர்ணனை, தலைப்பைத் தவிர வேறு எதுவித ஆசிரியர் நேரடிக் குறித்தலும் கிடையாது. முதலில் பூமியைத் தோலாக உருவகப்படுத்தி அதன் மீது தேமல் படரவிட்டு, அதுவும் அழகானதாக குணம் ஏற்றி, ஒரு மங்கிய நிறத்தைச்சுட்டி, அது மறையும் கடலைக் கருக்கிருட்டு மங்கி வந்து வளரும். ஆரம்ப ஒளியின் மங்கிய தோற்றமும் வளர்ந்து, இரண்டும் கலைவையான வெளிறின ஒளியைச்சுட்டிக் காட்டுவது இந்த முதல் படிமம். ஒரு வேளை இந்தப்படிம வலுவும் அழுத்தமும் போதாதோ என்ற சம்சயத்தாலோ, ஒரு ஆணிக்கு இரண்டு ஆணியடியாக அடுத்த படிமம். கதிரோனும் மதியும் புணர்ந்து வெளிவந்த விந்து படர்வதாக, அந்த விந்தின் நிறத்தைக் கொண்டு உஷைக்கால வெளிறிய சாம்பல் நிற மங்கலொளியை உருவகப்படுத்துவது. இதுவும் (முந்தின கவிதையில் உள்ளது போல்) பாலியல் படிமம். மரபான படிமங்களை ரசித்துப் பழக்கமான வாசகனுக்கு இந்த விபரீதக் கற்பனைப் படிமம் அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடியது. ஆனால் மூன்றாவது ஆண் அடி உருவமான சூரிய கிரகணங்கள் மணம் வீசி மலரும் புஷ்பம் உவமை, முந்தின படிமத்துக்கு பரிகாரம் செய்வது போல் 'ரொமான்டிக்' என்கிற அதிசயோக்தி பாவ உருவமாக அமைந்திருக்கிறது. நான்காவது படிமமான இறந்து கொண்டிருக்கும் இருள் பறவையின் சிறகை அரித்து உட்கொள்ளும் கிருமியாக (ரியலிஸ்டிக்) என்கிற யதார்த்த தோரணை உருவமாக ஆக்கப் பட்டிருக்கிறது. கடைசிப்படிமமான வெளிச்சம் என்ற சிறகின் மீது மிதப்பதுபோல் (அதாவது எந்த சமயத்திலும் மூழ்கியோ இறந்தோ போய்விடக் கூடும் என்பது போல) அழுத்தம் இல்லாது உட்கார்ந்திருக்கும். ஒரு கரு நிற இருள் குருவியாக உருவகம் உருவாக் கப்பட்டிருக்கிறது. கடைசி இரண்டு படிமங்களிடையே ஒத்த பார்வை இருந்தாலும், ஒரு தோற்ற முரண் காட்டப்பட்டிருக்கிறது, அதாவது இரண்டும் விடிவு, ஒளி பற்றியதாக இருந்தாலும் முன்னதில் இருளைச்சிறகாக உருவகப் படுத்தி ஒளிக்கிருமியால் பாதிக்கப்படுவதாகவும், பின்னதில் ஒளியைச் சிறகாக உருவகப்படுத்தி இருள் குருவியை பாதிப்பதாகவும் காட்டி, இரண்டும் விடிவுக் காட்சிக்கு உதவப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த ஐந்து படிமங்களும் சேர்ந்து உதய கால கணப் பொழுதின் நிறத்தைச் சுட்டி வண்ண ஓவியமாக சிறந்த காட்சிச் சித்தரிப்பு சாத்தியமாகி இருக்கிறது. இது தற்காலத் தமிழ் புதுக்கவிதைத் துறையில் முதலில் வந்த சிறந்த படிமக்கவிதை. புதுக்கவிதைத் துறையில் பின்னால் இத்தகைய படிமங்கள் கணக்கற்றுத் தோன்றுவதற்கு இதுதான் முன் உதாரணம். அடுத்து வந்த சிவராமுவின் கவிதைகளில் இந்தவிதப்படிமப்பாங்கு செழிப்பேறுவதைக் காண்கிறோம்.

*அடுத்து சி. மோகன் அவர்கள் கூறுவதைப் பார்க்கலாம்.*

தமிழ்ச் சமூகம் கொண்டாடிப் பெருமிதம் கொள்ளவேண்டிய நவீன தமிழ்கவி தருமு சிவராம், 2000 ஆண்டு வளமான தமிழ்க் கவிதை மரபில் செறிவும்

- குறிப்பாக சங்கக் கவிதை மரபு - தனதான கவித்துவ மேதமையும் முயங்கியதில் வெளிப்பட்டகவி. நவீன தமிழ்க் கவிதை இத்தகையதோர் படைப்பு ஆளுமையைக் கொண்டிருந்தும் அறிந்து கொண்டாட முடியாத நம் பேதமை இன்றைய சமூக அவலங்களில் ஒன்று' என்பார். அத்துடன் 'கண்ணாடியுள்ளிருந்து, $E= Mc^2$ என்ற நெடுங்கவிதைதான்...' நவீன தமிழ்க் கவிதையின் சிகர வெளிப்பாடுகள்' எனவும் காண்கிறார்.

**அடுத்து கோவைஞானி அவர்கள்**

'தற்காலத் தமிழ்க் கவிதையில், படைப்பாற்றலில், முன்னணியில் உள்ளவர் சிவராம் என்பதில் ஐயமில்லை. இவரது படிமங்கள், வைரப்படிமங்கள் தமிழ்க் கவிதைக்கு இது ஒரு சொத்து. இவரது கவிதைக்குள் மெய்யியல் பெற்றிருக்கும் ஆற்றலில்தான் இவரது உயர் நெறி தென்படுகிறது.....'

என்று கூறும் ஞானி அத்தோடு அமையாது ' சிவராமிடம் மெய்யியல் சில அம்சங்களில் புடைத்துக் கொண்டிருக்கிறது. வானியல், பௌதீகம், அணுக்கரு பௌதீகம் - பொதுவாகப் பௌதீகத்தில் - இவரது முனைப்பு மிகுதி. அத்துடன் ஜே.கே வின் வழியில் ஒரு சுய தரிசனத்தில் ஈடுபாடு, இவ்விருமுனைப்புகளில் சிவராம் மெய்யியலை அணுகுகிறார்...' என்று புளக முறுகிறார்.

**வெங்கட் சாமிநாதன் அவர்கள் தருமு பற்றி என்ன கூறுகிறார் என்பதை இனி பார்ப்போம்.**

அஃக்சஞ்சிகையில் தர்முவின் "கண்ணாடி யுள்ளிருந்து கவிதைகள் முப்பத்தெட்டு" தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரையில் இருந்து.

'இக்கணத்திய நிகழ்வில், இக்கணத்திய நடப்புப்பிரக்ஞை மாத்திரம் இல்லை. சரித்திரம், புராணக் கற்பனை, சிந்தனை, வரலாறு ஆகிய எல்லாம் சங்கமித்து அலைமோதுகின்றன. இவை எல்லாவற்றின் நீட்சியிலும், இக்கணத்தின் பிரக்ஞை உக்கிரஹிக்கிறது. நிழலாடுகிறது. இப்பண்பு மிகச் சிறப்பாக 'குருசேத்திரம்', $E= Mc^2$ கண்ணாடியுள்ளிருந்து கவிதைகளில் பளிச்சிடுகிறது.

பரந்த வெளியின் பின்னணி, பிரபஞ்சபிரக்ஞை, பானுச்சந்திரனின் இயல்பானது. அவர் உள்வளர்ந்த உலகின் குணத்திலிருந்து பெறப்பட்டது. அவர் உள்நோக்கிய பார்வை செலுத்தும்போது உள்வெளியைத் தன்னிலிருந்து பரந்து விரியும் பிரபஞ்சமாகத்தான் பார்க்கிறார். அங்கும் இப்பரந்த வெளியின், பிரபஞ்ச படிமங்கள்தான் வந்து குவிகின்றன. உ-ம் 'தாசி'

**சுந்தரராமசாமி அவர்கள் பிரமிள் பற்றி எழுதிய நினைவோடை நூலில் இருந்த ஒரு பகுதி.**

'சிவராமுவின் எழுத்துத்திறனை ஆரம்பகாலத்தி லேயே கண்டு கொண்டிருந்ததில் எனக்கு உள்ளூரப் பெருமை இருந்தது. பாதி புரிந்தது, பாதி புரியாமலும் நானும் நம்பியும் (கிருஷ்ணன்நம்பி) அவரைப் படிப்போம்....'

**இன்னும் சொல்லுவார்...**

'பல வருஷங்களுக்குப் பின்னால் - 1972 வாக்கில் 'கசடதபற' நண்பர்களுடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்ட காலத்தில் வெங்கட்சாமிநாதன், ஞானக்கூத்தன், அசோகமித்திரன், ந.முத்துசாமி போன்ற பலரும் அவரது எழுத்துத் திறன் மீது பாராட்டுணர்வு கொண்டிருந்தார்கள். வெ. சா.வுக்குத்தான் மிகக் கூடுதலான அபிப்பிராயம் இருந்தது, மனதில் அவரைப்பற்றி ஒரு கொண்டாட்டமும் இருந்தது சிவராமுவுடன் நெருங்கிப்பழக ஆரம்பித்த பின்பு வெ.சா. அளவுக்கு அவர்மீது தூக்கலான அபிப்பிராயம் எனக்கும் ஏற்பட்டது.'

**இவ்வாறு கூறும் சு.ரா. சற்று வித்தியாசமான பதிவைப் பின்னர் தருகிறார்.**

'தமிழகத்தில் எத்தனையோ பேர் வசைகளைப் பொழிவதில் கெட்டிக்காரர்கள்தான். அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதில், வம்புச் சண்டைக்கு இழுப்பதில் திறமை சாலிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் சிவராமுவுக்கு ஈடாகவேமாட்டார்கள். எவ்வளவு நிதானமான போக்கு உடையவர்களையும் அவர் புண்படுத்திவிடுவார். நம்மீது குறைகளே இல்லை, அவர்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நான் சொல்லவரவில்லை. நம்மிடம் இருக்கும் பலவீனங்களை, குறைகளை அவர் நம்முடன் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளும் படியாகத்தான் நமது நட்பு இருக்கிறது. அவர் ஒரு சின்ன விடயத்தைச் சொன்னாலும் நான் என்னைச் சரி செய்து கொள்ளத் தயாராகத்தான் இருந்திருக்கிறேன். அதையும் மீறி என் இயல்பு சார்ந்து நான் ஏதாவது குறையை அவர் தொடர்பாக வெளிப்படுத்தியதற்கும், அவர் வெளிப்படுத் தியதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அவரது செயல்கள் ஒருவித வன்முறை சார்ந்த வெளிப்பாடாகவே இருந்திருக்கின்றன.

**அடுத்து கவிஞர் சி.சிவசேகரம் அவர்களது 'விமர்சனங்கள்' எனும் நூலில் இருந்து தருமு பற்றி அவர் எழுதிய குறிப்புகளின் ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.**

'புதுக்கவிதை எனப்படுகிற படைப்புகளில் பெருவாரியானவற்றுள் கவித்துவம் சாராத அம்சங்களில் புதிர்போடுவதும் வரட்டுத் தத்துவம் பேசுவதும் உள்ளடங்கும். தருமு சிவராமுவிடம் இவ்விரண்டையும் காணலாம். அவரது குத்தலான நகைச்சுவை உணர்வு காரணமாக அவரது கவிதைகள் சிலவற்றை ரசிக்க முடிகிறது. அவரது கவிதையில் வலிமையான அம்சமே, என்னளவில் அவரது சாதுரியமான குத்தல்தான்.'

**இன்னும்....**

'மாக்ஸியத்தை அறியாமல் மாக்ஸியம் பற்றித் தன்மனதில் ஏற்படுத்திக் கொண்ட ஒரு படிமத்தை

மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அதைத் தாக்கி அழிப்பது என்று கங்கணங்கட்டி நின்றவர்கள் வரிசையில் இன்னொருவர் என்பதைவிட தர்மு சிவராமுவின் சமுதாயப் பார்வைக்கு அதிக முக்கியத்துவம் வழங்க என்னால் இயலவில்லை.'

**அடுத்து அவர் கூறுவது....**

'தர்முசிவராமுவைத் திறமையற்றவர் என்று ஒதுக்க நான் முயலவில்லை. ஆனால் அவரது சமுதாய உணர்வின் போதாமை, பல விஷயங்களை ஆழமாக அணுக முடியாமல் அவரை மறித்து விட்டது' என்பது என் கருத்து'.

**இவரது கட்டுரைகள், விமர்சனங்கள் பற்றி மீளவும் சி. மோகன் அவர்களை அடியொற்றிச் சில கருத்துக்களை அடுத்து கூறலாம் என நினைக்கிறேன்.**

'தமிழ்விமர்சனப்போக்கிலிருந்து தனித்தொலித்த குரல் இவருடையது' வெவ்வேறு வகைப்பட்ட விமர்சனப் போக்குடைய க. நா. சு. போலவோ, சி. சு. செல்லப்பா போலவோ இல்லாமல் 'இலக்கியக் கருத்தாக்க அடிப்படையில் படைப்பினை அணுகித் தரநிர்ணயம் செய்தவர் தருமு சிவராம். இவருடைய வருகைக்குப் பின், நவீன தமிழ்ப் படைப்புகள் பற்றிய மதிப்பீடுகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன.'

**சி. மோகனது கருத்துக்களுடன் பெரிய அளவில் என்னால் ஒத்துப்போக முடிகிறது.**

அழகிரிசாமி போன்றவர்கள் பிரமிளின் எழுத்து நடையைக்கிண்டல் செய்ததாக சு. ரா.'நினைவோடை'யில் பதிவு செய்துள்ளார். 'முதலில் அந்த ஆளைத் தமிழ் படிக்கச் சொல்லும் அதறகப்புறம் சிந்தனை, மயிர் எல்லாம் பார்க்கலாம்.' இது அழகிரிசாமி.

அழகிரிசாமியின் கூற்று கொச்சையானதென்பதில் இரண்டு கருத்து இருக்கமுடியாது. தருமு தேர்ந்த சொற்களில், புத்தம்புதிதாக மனதைத் தைக்கும் அளவிற்கு தமது விமர்சனக் கருத்துக்களைத் தந்துள்ளார் என்பது எனது முடிவு. பல படைப்பாளிகள் இது விஷயத்தில் என்னுடன் அதிக அளவு விலகலில்லாமல் நடந்து கொள்வதாகவே எனக்குப் படுகிறது.

பிற்காலத்தில் தருமு பல படைப்பாளிகளைப் பற்றிக் கூர்மையான கண்டன விமர்சனங்களைத் தந்துள்ளார். நான் அவற்றை அதிக அளவில் படிக்க வில்லை. அந்தக் கட்டுரைகள் 'விமர்சன ஊழல்கள், விமர்சனாஸ்ரமம், விமர்சன மீட்சிகள்' எனும் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இத்தொகுதிகளில் அடங்கியுள்ள கட்டுரைகள் தேய்ந்து நேர்கோட்டுத் தர்க்கமாகக் குறுகியிருக்கிறது..' அத்துடன் 'இக்காலத்தில் இவருடைய உக்கிரமான படைப்பாற்றலை உள்வாங்கிய படைப்பேதும் வெளிவராமல் போனது துரதிஷ்டம்தான்...'

**அடுத்து அவரது படைப்பு இலக்கியங்களான புனைக் கதைகள் பற்றிப் பார்ப்போம்.**

செட்டாகவும் இறுக்கம் குலையாமலும் புதிய தமிழ்ச் சொற்களை பெய்து கதை சொல்வதில் சிவராம் வல்லவராகவே இருக்கிறார். இவரது கதைகள் தமிழகத்தைப் பகைப்புலமாகக் கொண்டு படைக்கப் பட்டவை. இவரது எழுத்தில் - நடையில் தமிழகத்து மண்தான் மணக்கிறது. அத்துடன் வடசொல்லின் ஆதிக்கமும் உண்டு.

**இவரைப் பற்றி, இவரது நண்பரும் இவரது படைப்புகளின் தொகுப்பாசிரியருமான கால. சுப்பிரமணியம் கூறுவது போல**

தமிழ்ச்சிறுகதை வரலாற்றில், பிரமிள் கதைகள் தவிர்க்கமுடியாத தனியிடம்வகிப்பவை. புதுமைப் பித்தனுக்கு பிறகு அவரைப் போன்ற ஒரு படைப்பாளுமை பிரமிள், சமூகவிமர்சனமும், அங்கதக்கூர்மையும் கொண்ட கதைகளை, ருசிகரமும் ஆனந்தமும் கொண்ட கதைகளை எழுதியவர் பிரமிள். கூடுதலாக இவரிடம் ஆன்மீக ஆழமும் இணைந்து விடுகிறது.'

'கவிதையிலும், விமர்சனத்திலும் தமிழின் முதன்மைத் திறனாளியாக மதிக்கப்படுகிறவர் அவர். அவருடைய கதைப்பிரபஞ்சம், அவருடைய வாழ்நாளில் முழுமையாகப் புத்தக ரூபத்தில் வாசகர் களுக்குக் கிடைக்காதது பெரும் குறையே. அப்படி வெளிவந் திருந்தால் சிறுகதையில் பிரமிளின் சாதனை முன்பே நிறுவப்பட்டிருக்கும்...

**காலசுப்பிரமணியத்தின் ஆதங்கக்குரல் நம்மால் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான்.**

பல சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதிய பிரமிள் 'நக்ஷத்ரவாசி' எனும் நாடகத்தையும் எழுதியுள்ளார். இந்நாடகம் இலங்கையிலும், லண்டனிலும் அரங்கேற்றப்பட்டது. லண்டனில் திரு. க.பாலேந்திரா இதனைச் சாதனையாக்கி உள்ளார்.

'கருடனூர்ரிப்போட்' என்றகதையை அவர் தொலைக்காட்சித் தொடர் நாடகமாக்கியுள்ளார்.

இவரது கதைகள் பல்வகைப்பட்டவை. அச்சல் அசலான குறியீட்டுக் கதைகளையும் முதல் தரமான சயன்ஸ் ஃபிக்சனையும் (அசரீரி) விஞ்ஞான ஃபான்ரஸிக் (குதிரைமலை நிகழ்ச்சி) எழுதியுள்ளார். ஜனரசனைக்குரிய கதைகளை இவர் எழுதியிருந்த போதும் (நடிகை மகள், மெஹரா, தீப்பந்தம்) அவை கூட இறுக்கம் குலையாத உருவ அமைதி கொண்ட வையாக உள்ளன.

இவரது கதைகளின் சிகரங்கள் எனச் சந்திப்பு, லங்காபுரி ராஜா, காடன்கண்டது, சாமுண்டி, அங்குலிமாலா ஆகியவற்றைக் கூறலாம்.

'பிரமிளின் எந்தவொரு கதையிலும் ஓர் அவதானத்தின், ஓர் அனுபவத்தின் கூறு கலந்திருக்கும்,

மாற்றம் பெற்றிருக்கும். எதனுடனும் ஒட்டாத ஒன்றைக் கூட மற்றொன்றுடன் பொருத்தமாக இணைக்கும் திறமை அவருக்குண்டு. தனித்தனியானவற்றில் ஓர் ஒருங் கிணைப்பை அவர் ஆச்சரியமூட்டும் வகையில் செய்து விடுவார்...'

கோடரி, லங்காபுரி ராஜா, ஆயி, பிரசன்னம் ஆகிய கதைகளை இணைத்து ஒரு நாவல் எழுதும் திட்டம் அவரிடம் இருந்தது.

தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் சில கவிதைகளைத் தந்துள்ள பிரமிள், இரண்டு ஆங்கில நாவல்களையும் எழுதியுள்ளார். இந்நாவல்கள் பிரசுரமாகவில்லை. இந்நாவல்கள் 'இரண்டும் பின்பு அவராலேயே அழிக்கப்பட்டு விட்டன. திருத்தப்பட வேண்டும் அல்லது நிறைவு தராமை என்பன இதற்குக் காரணங்களாக இருக்கலாம்..'

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பிரமிளின் கவிதைகளும், கதைகளும் நூலுருப்பெற்றபோதும் - அவரது படைப்புகள் அனைத்தையும் தொகுத்து பிரமிள் கவிதைகள், பிரமிள் படைப்புகள், தமிழின் நவீனத்துவம், வானமற்ற வெளித் தொகுதிகளாக அவரது நண்பர் கால சுப்பிரமணியம் தந்துள்ளார். இது அவர் நவீன தமிழுக்குச் செய்த அரிய தொண்டாகும்.

தருமுக்கும் எனக்குமான உறவு பற்றியும், தொடர்பு பற்றியும் கூறாவிடின் இக்கட்டுரை முழுமை பெறாது என நினைக்கிறேன்.

நான் சென்ற நூற்றாண்டின் அறுபதுகளின் ஆரம்ப தசையில் சென்னைப்பல்கலைக்கழகத்தில் (விவேகானந்தாக் கல்லூரி) படித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் தருமுவை முதன்முதலாகச் சந்தித்தேன். திருமலையில் இருந்த எனது மாமனாரின் விருப்பத்திற்கு இசைவாக என்னைப் பார்ப்பதற்கு அவர் வந்தார்.

இருபத்தியொரு வயது இளைஞரான அவர், வதவத என்று வளர்ந்திருந்தார். ஒரு நெடுவல் தனம் அவரில் இழைந்தது. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த அவரது கூர்மையான பார்வையும், இனிமையான குரலும் என்னை வசீகரித்தன. முன்பின் அறிமுகமில்லாத போதும் நூறுவருஷம் பழகியவர் போல அவர் நடந்து கொண்டார். என்னை அறியாமலேயே ஒரு பரிவும், லயிப்பும் அவரில் விழுந்தது. அவர் கூறிய விபரங்களிலிருந்து, ஒருவகையில் நான் அவருக்கு மிகவும் நெருங்கிய ரத்த பந்தம் உடையவன் என்பதை அறிந்து கொண்டேன். முன்பின் பார்த்திராத ரத்த பந்தம்! எனக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. உலகின் ஏதாவதொரு மூலையில் உறவு சொல்ல எப்பொழுதும் ஒருவர் இருந்து கொண்டேதான் இருப்பார் போலும்!

மௌனித்த என்னை உசுப்பியவர், தன்னைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

"I am a freelance writer.... பொதுவாக கலை, கலாசாரம் பற்றியதே எனது எழுத்துக்கள்... கவிதைகளும், கட்டுரைகளும், சில கதைகளும் எழுதியிருக்கிறன். ஓவியம் போடுவன், என்ரை கேலிச்சித்திரங்களை இலங்கையில, தினகரனில் பார்த்திருப்பியள்..."

இலக்கியம் பற்றி நிறையவே பேசினார். சினிமா, ஓவியம் என்று அவரது பேச்சு விரிவு கொண்டது. திடீரெனத் தனது தோளில் தொங்கிய ஜோல்னாப் பையில் இருந்து ஒரு நூலை எடுத்து - 'தமிழிலை, புதுமைப் பித்தனைப் போல, இவரும் முக்கியமானவர்..' எனக் கூறி - எனது கையில் வைத்தார்.

'அழியாச்சுடர்' - ஸ்டார் பிரசுரம் தொகுதியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், "சிறுகதைகளா...?" என்று கேட்டு வைத்தேன். ஓரளவு க. நா. சு. வையும், ஜெயகாந்தனையும், ஜானகிராமனையும் தெரிந்திருந்த எனக்கு மௌனி புதியவர்.

படிக்க வேண்டியவர்களென ஒரு நீண்ட பட்டியலையே அவர் ஆலாபனை செய்தார். புதிய வர்களாக, நான் பரிச்சயம் கொள்ளாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் 'டி.எச்.லொறன்ஸா' என நான் விழிப்பதைப் பார்த்து.

"டி.எச்.எல்லைப் படிக்கவே இல்லையா...?" என்று ஆச்சரியப் பட்டுக் கொண்டார்.

திடீரென எழுந்து கொண்டவர், "எழுத்து ஆசிரியர் சி.சு. செல்லப்பாவைப் பார்க்கப்போறன் வாருங்கள்" என்றார். எனக்குச் செல்லப்பாவும் புதியவர், சஞ்சிகையும் புதியது, முன்பின் கேள்விப் படாதது.

அன்று சி. சு. செயை மட்டுமல்ல, க.நா.சுவையும் சந்திக்கும் வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திதந்தவர் சிவராம்தான். அவர் செல்லப்பாவின் சஞ்சிகையில் மட்டுமல்ல தொடர்ந்து அவரது இறுதி மூச்சு இருக்கும் வரை, கொல்லிப்பாவை, லயம், அ்ஃக், சதங்கை, யாத்ரா, படிமம், கற்குதிரை, திசை நான்கு, கனவு, அரும்பு, நவீன விருட்சம் ஆகிய சஞ்சிகைகளிலும் எழுதினார்.

தமிழ் நாட்டில் தீவிர எழுத்தாளர் நடுவே பெயர் சொல்ல வாழ்ந்த ஒரு கிறுக்கன் அவர். கலைகள் என்று வரும்போது ஒரு Bohemian. இன்னும் சிவராம், தரும சிவராமு, பிரமிள், தர்மோ ஜீவராம் பிருமிள், தர்மூசிவராம், தர்மு அரூப் சிவராம், பிரமிள் பானுச்சந்திரென், ஔரூப் சிவராம்... என்று விசித்திரமான பலவேறு பெயர்களுள் அவரால் நுழைந்து வரமுடிந்திருக்கிறது....

இந்த மனிதர் என்னுடன் உறவு கொண்டது மட்டுமல்ல, திருமலையில் இருந்து எங்களது ஊர் வந்து, எனது உறவினர்களுடன் உசாவியதும் குசலம் கொண்டதும் எனது நினைவில் என்றும் பசுமையாக இருக்கும்.

சென்ற நூற்றாண்டின் பிற் கூற்றில் (06.01.1997), தனது ஐம்பெத்தெட்டாவது வயதில், தனித்து விடப்பட்ட நிலையில் ஒரு சில நண்பர்கள் உடனிருக்க, கரடிக்குடி என்ற கிராமத்தில் அவரது அருமந்த உயிர் பிரிந்தது. செய்தி கேட்டு நான் மிகுந்த துயருற்றேன். ஆனாலும் தமிழ் உள்ளவரை அவருக்குச் சாவில்லை எனவும் நினைத்துக் கொண்டேன்.


— • • —

| | |
|---|---|
| கவிதை | |
| கட்டுரை | ✓ |
| சிறுகதை | |
| கடிதம் | |
| ஓவியம் | |

# மௌனி கதைகள் முன்னுரை

“சிறுகதையின் திருமூலர் என அழைக்கப்படும் மௌனியின் சிறுகதைகளுக்கு பிரமிள் தனது 28வது வயதில் எழுதிய முன்னுரை இது. மௌனியின் கதைகளைப் போலவே அதிகம் பேசப்பட்ட இம்முன்னுரை பின்னர் வந்த மௌனியின் இரண்டாவது, மூன்றாவது பதிப்புகளில் திட்டமிட்டு நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஆசிரியர்)”




தற்செயலாக நேர்ந்த ஒரு நிகழ்ச்சி போன்றது தான், மௌனி எழுத்துத்துறையில் நுழைந்தது. 37 ஆண்டுகளுக்கு முன், படித்து விட்டு வேலைக்கென்று ஒன்றும் போகாமல், கும்பகோணத்தில் தம் மனப்போக்கிற்கிசைந்த ஒரு சிலரின் கோஷ்டியில் சேர்ந்து, தெளிவுகாண அநேக விஷயங்களைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்த நாட்கள் அவை. 1933ல் மகாமகம் வந்தது. அதற்காக ஒரு கண்காட்சி நடந்தபோது, கதர் ஸ்டாலுக்கு வந்திருந்த பி.எஸ்.ராமையாவைச் சந்தித்தார். விவாதத்தில் பிரீதி உள்ளமௌனியிடம், பி.எஸ்.ஆர். எதையேனும் கண்டிருக்கலாம்: மௌனியே எதிர்பாராதபடி, “நீங்கள் சிறுகதைகள் நன்றாக எழுத முடியுமென்று நினைக்கிறேன், “மணிக்கொடி” பத்திரிகைக்கு எழுதுங்கள்” என்றார். மௌனி, இதற்கு அந்த வேளையில் என்ன சொன்னாரோ, எப்படி இதை எடுத்துக்கொண்டாரோ தெரியவில்லை. ஆனால் 1934க்கும் 35க்கும் இடையில், இப்போதும் அவர் வசமுள்ள குறிப்புப்புத்தகங்களில், அவ்வப்போது பளீரெனத் தோன்றிய வற்றுடன் சிறுகதைகளுக்கான குறிப்புகளையும் எழுத ஆரம்பித்தார். தொடர்ச்சியாக, 1934ஆம் வருஷ இறுதியில் ஆறேழு சிறு கதைகளையும் ஒரு குறுநாவலையும் ஏதோ வேகத்தில் எழுதினார். இதுதான் ஆரம்பம்.


மௌனியைப் புதுமைப்பித்தன், “சிறு கதையின் திருமூலர்” என்று குறிப்பிட்டது. திருமூலரைப்பற்றி ஐதீகமாகச் சொல்லப்படுவதுபோல், மௌனியும் ஆண்டுக்கு ஒரு கதை எழுதியவர் என்பதற்காக அல்ல என்று, அவ்வொற்றுமை இல்லாததால், இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது. திருமூலர், மிக எளிய பதங்களையும் பதச்சேர்க்கைகளையும் கொண்டு உயர்ந்த தத்துவங்களைச் செய்யுளில் வடித்தாற்போல, மௌனியும், “கனமான விஷயங்களை ஏற்க மறுக்கிற மெலிந்த சொற்களில்”, உந்நத அநுபவங்களை எழுப்பியிருக்கிறார் என்ற ஒற்றுமைக்காகவே, பு.பி. அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால், தமது எழுத்தின் இந்தத் தரத்தைப் பற்றி, மௌனிக்கே ஆரம்பத்தில் ஒரு நிர்ணயம் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. “இலக்கியத்தைச் சாதிக்கும்” நோக்கம், அந்தவரையில் அவருக்குத் தோன்றவும் இல்லை. அவரே சொல்வதுபோல், “பிரசுரிக்கும் நோக்க(மு)ம்... இல்லை. எழுத முடிகிறதா என்று பார்க்கும் நோக்கம் போலும்.” இலக்கிய ரஸனை மிக்க நண்பர் ஒருவர் அக்கதைகள் பற்றிச் சொன்ன உயர்ந்த அபிப்ராயமோ, மௌனி எதிர்பார்த்ததை விடக் “கொஞ்சம் திடுக்கிட இருந்தது”. அவர் ஆலோசனைப்படி, பி.எஸ்.ஆரைத் தமக்கு அறிமுகப்படுத்திய வக்கீல் நண்பரிடம் கதைகளை அனுப்பி, சென்னையில் “எந்தப் பத்திரிகை ஆசிரியரிடமாவது காட்டி”, போடத்தகுதியுள்ள தாயின் போடும்படி எழுதினார். வக்கீல் நண்பர், மணிக்கொடியுடன் தொடர்புள்ள பி.எஸ்.ஆரிடம் கதைகளைத்தந்தார். இதிலிருந்து, மௌனிக்கும் மணிக்கொடிக்கும் இருந்த “தொடர்பை”யும் நாம் நிதானிக்கலாம். 1936, பெப்ரவரி தொடக்கம், மௌனி கதைகள் அவ்வப்போது

வெளியாகின. அவரது பெரும்பாலான கதைகளைத் தாங்கிவந்த சிறப்பு மணிக்கொடிக்கு உரியது. மௌனி, இதரகதைகளுடன் அனுப்பிய குறுநாவல் பிரசுரிக்கப் படவில்லை: அதன் பிரதியும் காணாமற் போயிருக்கிறது. மௌனி அது பற்றிச் சொன்னதைக் கொண்டு பார்த்தால், அது அவரது தரமான கதைகளின் வரிசையில் வராதது என்று தெரிகிறது.

சிறுகதைத் துறையில், அதுவும் முதல் சந்திப்பில் பி.எஸ்.ஆர் சொன்னதை மனதில் வைத்துத்தானோ என்னவோ, "எழுதிப்பார்த்து" எழுத்தாளரான மௌனி, தமது ஆரம்ப நாட்கள் தொட்டுச் சங்கீதத்திலும் ரஸிகராக ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில், பிடில் வித்வானான ஒரு நண்பரோடு மௌனியின் நெருங்கிய ஈடுபாடும் ரசனையும் சர்ச்சைகளும் தான், அவர் கதைகளில் சங்கீதம் வகிக்கும் இடத்திற்கு ஒரு அந்தரார்த்தம் கொடுப்பதற்கு காரணமானது போலும் அவர் எழுத்து சொல் ஜாலத்தை நிராகரித்துப் பிறந்தது.

பிடில் சங்கீதமும் எழுத்தும் தற்செயலான விளைவுகளுக்கு இடம் தருவன. இதனால், கலைஞனின் உண்மையான மனநிலைகள், உணர்வுகள் போன்ற வற்றுக்குக் கட்டுப்படாமல், தற்செயலான திஸ்வர வளைவிலோ, படிமங்களிலோ தடுமாறி, பிடில் வாசிப்பும் எழுத்துக்கலையும் செயல்படமுடியும். இந்தத் தற்செயல் விளைவுவேறு, தன்னை மறந்த வேகத்தில் பிறக்கும் படைப்பு வேறு என்பதை பெரும்பாலான கலைஞர்கள் மறந்து விடுகிறார்கள். முதிர்ந்த சில கலைஞர்கூட, இவ்விருதுறைகளிலுமே, தற்செயல்விளைவுகளை விஸ்தரித்துக் கைதட்டலையும் வாசகரஸனையையும் பெற்று விடுகிறார்கள்.

இவ்விபத்துக்களையே அநுசரித்துப் பிறக்கும் கலை, கைதட்டலையும் ஆரவாரிப்பையும் தான் பெறமுடியும். ஆனால், "கைதட்ட வைப்பதோ, "பேஷ், பேஷ்" என்று ஆரவாரிக்க வைப்பதோ அல்ல - நீண்ட பெருமூச்சுக்களை உண்டாக்குவதுதான் உயர்ந்த சங்கீதம்" என்று, மௌனி ஒருதடவை சம்பாஷணையில் குறிப்பிட்டிருக்கிறார். பிடில் போன்ற ஒரு வாத்யத்தில், சாஸ்திரக் கட்டு மானங்களின் முடுக்கப்பட்ட ஓட்டத்தில் சில தற்செயல் விளைவுகள், கலைஞனின் உண்மையான உணர்ச்சிகள் போன்றவற்றுக்குக் கட்டுப்படாமல் பிறப்பதுண்டு. இது ஓரளவு எழுத்துத் துறைக்கும் பொருந்தும். இந்த தற்செயல் விளைவு, கலைஞனின் மனநிலையிலிருந்து வேறுபட்டதாக இருக்க, அந்த மனநிலையாலேயே ஆளப்பட்டு, பளீரெனப் பிறக்கும் சங்கீதமும் எழுத்தும் உண்டு. இப்படித் தன்னை மறந்த வேகத்தில் பிறப்பதற்கும் தற்செயல் விளைவுகளுக்கும் இடையே உள்ள வேறு பாட்டை, தமிழில் சில பழம் பெரும் எழுத்தாளர்கள் கூட உணரவில்லை: இன்றும், கைதட்டலையும் ஆரவாரிப்பையும் பெறும் அவர்கள்,



பிரமிள் - மௌனி

அந்தத் தற்செயல் விளைவுகளை விஸ்தரித்து எழுதுபவர்கள்தான் என்பதை, அவர்களது எழுத்துக்கள் கைதட்டலையும் ஆரவாரிப்பையும் மட்டுமே பெறுகின்றன என்ற ஒன்றின் மூலமே நிரூபிக்கலாம். மௌனியோ, நீண்ட பெருமூச்சுகளை எழுப்புபவர்.

சாஸ்திரப் பயிற்சி, மனநிலைகளை வெளியிடாமல் தன் போக்கிற்கு விளைவுகளை உண்டாக்கும் என்பதால், அத்தகைய பயிற்சி நிலையிலேயே தேங்குபவரை "விரல் ஞானஸ்தன்" என்பதுண்டு: எழுத்துத்துறையிலும் அத்தகையவர்களை இப்படிக் குறிப்பிடலாம். இவர்கள், தற்செயல் விளைவு நேராத சமயத்தில்தான், ஒரு "விரல் ஞானஸ்தன்" சாஸ்திரீயமாகத்தான் கற்ற ஸ்வர உருப்படிகளை மட்டுமே வாசிப்பதுபோல், காது புளித்த லட்சியங்களை உண்டாக்குவதும் தத்துவச்சரடு திரிப்பதும்.


அடுத்தது, மௌனி "நடப்பியல்பு"க்குப் புறம்பான வகையாக எழுதுபவர் என்பது: ஆனால் நடப்பியல்புக்கு "இசைய" எழுதுபவர்களில் சிலர் சாதிக்க முடியாத மனநிலைப் போக்குகளை, மௌனிதான் இயல்பானதாகத் தென்படும்படி சாதிக்கிறார். ஆளில்லா வேளையில் வீடு பெருக்குபவனை வரச்சொல்லிவிட்டு, அவள் வந்ததும் அந்த இக்கட்டான சமயம் பார்த்து "மனம் மாறி" விடுகிறதாக எழுதியுள்ள ஒரு கதையுடன், மௌனியின், 'மனக்கோல'த்தை ஒப்பிட வேண்டும். நடப்பியல்பு என்ற அளவில் இயல்பானது, அந்த இக்கட்டான நிலையில் செய்யத் திட்டமிட்ட "கெட்ட" காரியத்தை நிறைவேற்றுவதுதான். மனம் 'மாறுவது', மனோதத்துவ இயல்பு தென்படும் வகையில் சித்தரிக்கப்படாத அளவில், அம்மனமாற்றம் அக்கதையின் நடப்பியல்பு அல்ல. அந்த இயல்பைச் சித்தரிக்கும் சிரமத்தைத் தவிர்த்து விட்டு, தத்துவச் சரடு திரித்தே பாத்திரத்தின் மனதை மாற்றுவது, வில்லனைக் காரால் அடித்துத் தீர்த்துவிடுவது போன்ற ஒரு சுளுவான காரியம்தான். மௌனி, 'சுளுவான' தத்துவச்சரட்டை

அனுமதிப்பதே இல்லை, பாத்திரத்தின் இயற்கையையே கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி எழுப்புகிறார். கேசவன் என்ற ('மனக்கோலம்') அப்பாத்திரம், மனம் மாறுவதற்கான காரணமும் ஏற்கனவே தென்பட ஆரம்பிக்கிறது. அவன் கௌரியை, 'ஒன்றிலும் கட்டுப்படாது, தனியே எட்டி நின்று உற்றுப்பார்க்கும்' பெண்மையாகக் காண் கையிலேயே விரும்புகிறான். பெண்மை, அவன் வாழ்வுக்கு லட்சியமாகும். அவளது கருவிழிகள் என்பனவெல்லாம், உடலுறவுக்கும் அப்பாற்றபட்ட அம்சங்கள். (ஆனால், உடலுறவையும் அவன் சரீரத்தின் தவிர்க்க முடியாத இயல்பால் நாடுகிறான் என்பதுகூட, தன்னறையில் அவளை அவன் தேடுவதில் சூசகமாக காட்டப்படுகிறது.) இருந்தும் இன்னொருவரின் மனைவி என்று (உடலளவில்?) கட்டுப்பட்டவளாக, அவள் அருவருப்பையே அளிக்கிறாள். எனவேதான், கௌரி தன்னை, அதுவும் தன் கற்பனையிலேயே பின்னிருந்து அணைத்ததாக உணர்கையில், அவன் அருவருப்படைந்து 'மனமாற்றம்' கொள்கிறான். இங்கு, கௌரியை நேரில் (நடப்பியல் உலகில்?) அவன் அறைக்குக் கொண்டு வந்து அவ்வருவருப்பை உண்டாக்காமல், அவன் கற்பனையில் இதை நிகழ்த்தியதற்காகவும், மௌனியை நடப்பியல்புக்குப் புறம்பானவர் என ஒருவர் வாதிக்கலாம். அவ்விதமானால், அவளைக் கொண்டுவரும் வகையாக நிகழ்ச்சிகளை ஏற்கெனவே எழுப்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் அதனால் அவள் உணர்வுகள் எப்படி ஆகின்றன என்று சித்தரிக்கும் பொறுப்பையும் கொணர்ந்து, சிறுகதைக்கான கூர்மையை அழிக்கநேரும். ஆனால் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி உண்மையில் மனப் போக்குகளால் ஆளப்பட்டு நிகழ்வதால், மனநிலைகளின் இயல்புக்குத் தான் முதலிடம் தரவேண்டும். அதைத் தந்து விட்ட அளவில், புற நிகழ்ச்சிகளின் உதவி அங்கு வேண்டியதில்லை. இதுதான், மௌனியின் கதைகளை மற்றையவர்களினுடைய வற்றிலிருந்து பிரித்துக்காட்டும் அம்சம். அவர் நடப்பியல்புக்குப் புறம்பானவர் அல்ல. மனப்போக்குகளின் நடப்பியல்பையே, அதுவும் பரிபூரணமாகச் சித்தரித்துவிட்டு ஒதுங்குபவர். இது அவர்சாதனை.

மௌனியின் கருத்தில், நடப்பியல் என்பது புற நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, அப்புறநிகழ்ச்சிகள் மனிதர்களோடு சம்பந்தப்பட்டதால், அவர்களின் மனப்போக்குகளை உரியமுறையில் சித்தரிக்கும் மளவுக்குத்தான், கதைகளும் நடப்பியலானவையாகும்.

புற நிகழ்ச்சிகள், நிலைமைகள் என்பவற்றைப் பற்றி, மௌனி 'கண்மூடி'த்தனமாக இருக்கவில்லை நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையும் சிக்கனப்படுத்தி இருக்கிறார் என்பதே சரி. இந்தச் சிக்கனமான எல்லைக் குள்ளேயே, அவர் வாழ்க்கையின் அகண்டத்தை அங்கங்கே சிதறி விழும் வரிகள் மூலம் எழுப்பிவிடுகிறார். இதை அவரது கவித்வம் என்றே கூறவேண்டும். இந்த அம்சத்தை, 'உயிர்வாழ்ந்த ஒவ்வொரு கணமும் ஒரு புரியாத புதிராக அமைகிறது. விடை கண்டால், புரிந்த நிகழ்ச்சியும் மறுகணம் இறந்ததாகிறது' என்று சிந்தனைப் பொருளாகவும் 'ஒன்றிலும் கட்டுப்படாது தனியே எட்டி நின்று உற்றுப் பார்ப்பதே, பெண்மையின் பயங்கரக் கருவிழிகள்தான்' என்று கவிப்பொருளாகவும், அவரது 'சுமாரான' கதைகளின் வரிசையிலுள்ள 'மனக் கோலத்'திலேயே காணலாம்.

இவற்றை உணராது, வேலைநிறுத்தம் போன்ற புற நிகழ்ச்சிகளையும் அதற்கான நிலைமைகளையும் சித்தரிக்காததுக்காக, அவர் வாழ்க்கையைப் பற்றிக் 'கண்மூடிக்' கொண்டவர் என்றதுடன், ஃபிராய்டின் வழியில் ஆராயப்படத்தக்கவர் என்றும் அவரது ரசிகர்களே கூற நேர்ந்திருக்கிறது. மேற்சொன்ன வீடுபெருக் குபவளைப்பற்றிய கதையில், கதாநாயகன் மனம்மாறு வதைக்கூடப் ஃபிராய்டின் வழியில் ஆராயலாம் என்று நாம் திருப்பிச் சொல்லலாம். சுயநினைவோடு தத்துவமும் லட்சியமும் பேசுபவர்களும், ஃபிராய்டிடம் அகப்படுபவர்கள்தான்.


மௌனி

II

மௌனியின் இலக்கிய முன்னோடிகள் என்று, தமிழில் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லி விடமுடியாது. வசன அமைப்புகளிலிருந்து கதையம்சம் வரை, வேறொருவருடனும் அடையாளம் காட்டமுடியாத தனித்தன்மையை அவர்கலை விளக்குகிறது. 'மறுமலர்ச்சி' என்ற பிரயோகத்தை (பதினாறாம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் பல கலைத்துறைகளிலும் அறிவுத்துறை களிலும் புத்துயிர்காட்டி உலகையே பாதித்த 'மறுமலர்ச்சி'யை மனதில் கொண்டு, அச்சொல்லை இங்கும் பிரயோகித்தார்களாயின், அது எவ்வளவுக்கு பரிதாபகரமான தப்பர்த்தங்களைக் காண்பிக்கும்!)

1930க்களின் இறுதியில் சில தமிழ் எழுத்தாளர்கள் உச்சரித்தபடி, அத்தகைய அவர்களது லட்சியம் எதையும் ஏற்றுக்கொண்டு, இலக்கிய மணிக்கொடி பத்திரிகைக்கு மௌனி எழுதியவரல்ல என்பதை, அவருக்கு மணிக்கொடியுடன் ஏற்பட்ட தொடர்பின் விதமே காண்பிக்கிறது. அதோடு, அக்காலத்தில் இயங்கிய 'இலக்கிய சக்திகள்' என்று குறிப்பிடப்படுபவர்கள் எவராலும்கூட, மௌனி ஆளப்படவில்லை. இந்நிலையில், 'மணிக்கொடி கோஷ்டி'யுடன் அவரையும் அடையாளம் காட்டுவது எவ்வளவு முரணானது! அவ்வப்போது போய்வந்த தொடர்பைத் தவிர, 'மௌனி'க்குச் சென்னையுடனேயே தொடர்பில்லாது இருக்க, மணிக்கொடியிலேயே நெருங்கிய தொடர்புகொண்ட புதுமைப்பித்தன்கூடத் தம்மை மணிக்கொடி கோஷ்டியினர் என்று குறிப்பிட்டால் சண்டைக்கு வந்து விடுவாராம். அப்பத்திரிகையில் எழுதியவர்களிடையே, மேதாவிலாசம் பொருந்திய எழுத்தாளர்கள் மௌனியும், புதுமைப்பித்தனும் மட்டுமே என்பது என் அபிப்ராயம். அவர்கள் அளவுக்கு மேதைகள் என்று இதுவரை, அவர்களுக்குப் பிறகும் வேறொருவரையும் குறிப்பிட முடியாது. பாரதி இலக்கியத்தின் 'வாரிசுகள்' என்ற பிரயோகத்துக்குப் புதுமைப்பித்தன் எப்படித்தம்மை ஈடுகட்டிக்கொண்டாரோ தெரியவில்லை. இதர'மணிக்கொடி - மறுமலர்ச்சி'க் காரர்களோ, இந்த "பாரதி பரம்பரை" என்ற பிரயோகத்தையும் நாணயமாக்கியிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால், மௌனி இத்தகைய முத்திரை எதையும் ஏற்கமறுப்பதோடு, பாரதிகலையின் 'வாரிசாக' மௌனி கலை பிறக்கவில்லை என்பதையும் நாமாகவே காணமுடிகிறது.

மௌனி ஒரு பெரிய படைப்பாளி என்ற அளவில், பண்டிதத் தனமானவர் அல்ல எனச் சொல்ல வேண்டியதில்லை. அவர்சொற்பிரயோகங்கள், இந்த 'பாரதி பரம்பரை'யில் வராததால் அவரைப் பண்டிதத் தனமானவரென்பது அபத்தமானது. 'போவது' என்றில்லாமல் சென்றது என்று மட்டுமல்ல, 'நகைத்தல்' என்பது போன்ற பழைய சொற்களைக்கூட அவர் உபயோகிக்கிறார். இதன்காரணம், பாரதியின் கவிதையிலுள்ள தொனியிலிருந்து மாறுபட்ட தொனியில் அவர் சிறு கதைகள் பிறப்பதாலாகும். உதாரணமாக, பின்வரும் மௌனி வசனத்தில் உள்ள 'நகைத்த' 'சென்றது' என்ற சொற்களை நீக்கி, 'சிரித்த,' 'போனது' என்ற சொற்களைப் போட்டுப் படித்துப்பார்த்தால், தொனியில் மாற்றமும் கீழிறக்கமும் தென்படக்காணலாம். "அந்த இருள் வெளியில் கலகலவென நகைத்ததென ஒரு சப்தம் கேட்க, ஒளிகொண்ட ஏதோ ஒன்று உருவாகி எட்டிய வெளியில் மிதந்து சென்றது." (மனக்கோலம்)

ஒரு உயர்ந்த மனவெழுச்சியின் வசப்பட்ட தொனிக்காகத்தான், இச்சொற்கள் பிரயோகிக்கப் படுகின்றன. ஆனால், 'மாறாட்டம்' போன்ற கீழ்தளத்து தொனியுள்ள கதைகளில், 'கொச்சை' யையும் மௌனி உரியபடி உபயோகிக் கின்றார் எனக்காணலாம்.

**படிக்கும் போதே உயர்ந்த அநுபவங்களை உண்டாக்கக்கூடிய படைப்புகளைவிட, பிச்சுப் பிடுங்கி உள்ளர்த்தம் தேடி, அதன் பின்பே 'ஆழமான' எழுத்து என்று கருதத்தக்கதாக எழுதுதலே 'இலக்கியம்' என்ற பிரமை நம்மிடையே ஊறியிருக்கிறது.**

III

மௌனிக்கு தமது கதைகளில் ஒவ்வொரு சொல்லுமே முக்கியமானது. சொற்களின் அர்த்தத்தோடு, சிலவேளைகளில், அவற்றின் சப்த அமைப்பையும்கூட அவர் கவனத்தில் ஏற்கிறார். "எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?" (அழியாச்சுடர்) என்ற வரியில், "எவற்றின்" என்ற சொல் தவறு, 'எவைகளின்' என்பதே சரி என ஒருவர் மௌனியிடம் சொன்னாராம். மௌனி, அச்சொல்லின் சப்தம் அந்த வசனத்திற்குத் தேவைப்படுகிறது என்றார். 'எவற்றின்' என்ற சொல்லின் அழுத்தமான சப்தமே, அவ்வரியிலுள்ள கேள்விக்கு அதிக வலிமையைக் கொடுக்கிறது எனக் காணலாம். தம் கதைகளில் பலவற்றை, பல தடவைகள் வேறு வேறு சொற்பிரயோகங்களுடன் திரும்பத்திரும்ப எழுதி, முக்கியமான இடங்களைச் சீராக்கும் மௌனியைப்பற்றி, 'சரி - தப்பு' பார்ப்பவர்கள் கொஞ்சம் நிதானித்து தங்கள் அபிப்ராயங்களைச் சொல்வது நல்லது.

சொற்களைப்பற்றியே இவ்வளவு அக்கறை காட்டும் மௌனி கதைகளுக்கு இடப்பட்ட சில தலைப்புகள், சில கதைகளுக்குப் பொருந்தவில்லை. 'நினைவுச் சுழல்' என்பது போன்ற படிமங்கள் உவமை உருவகங்கள் செறிந்த ஆடம்பரமான பெயர்களைவிட, 'மாறுதல்' என்பது போன்ற பெயர்கள்தான் அவர் கதைகளுக்குப் பொருந்தும். ஏனெனில், தானாக இச்சொல் ஒரு மனக்கிளர்ச்சியையும் ஏற்படுத்திவிடாமல், கதையைப் படிக்கும்போதும் படித்து முடித்த பின்னும் ஏற்படும் உணர்வினால் நிரம்புவதற்கென, வெறுமையாகக் காத்து

நிற்கிறது. "நினைவுச்சுழல்" என்பது போன்ற தலைப்புகளோ, தாமாகவே ஒரு உணர்வை எழுப்பி விடுவன. கதையைப் படிக்கும் முன்பே, இவ்வுணர்வைக் கதையிலும் எதிர்பார்த்து நாம் தயாராகி விடுகிறோம். சில வேளைகளில், இப்படி எதிர்பார்த்தது நிறைவேறாமலும் போகும். மொத்தத்தில், நாம் மௌனி கதைகளில், பெயர்களைக் கொஞ்சம் ஒதுக்கிவிட்டுத்தான் அவற்றைப் படிக்கவேண்டும் என்று சொல்லத்தோன்றுகிறது.

இதோடு, தமது கதாபாத்திரங்களின் பெயர்கள்கூட - கதையின் முக்கியமான ஓட்டத்தை மீறிச்சப்தம் போட்டு விடக்கூடாதே என்ற அக்கறையுடன் - பாத்திரங்களின் பெயர்களையும் சாமானிய மானவையாகவே உபயோகிக்கிறார். சில கதைகளில், அவசியமில்லை என்று காணும்போது, பாத்திரத்துக்குப் பெயரே இராது. பெயர் இருப்பினும் இல்லாவிடினும், பெயர்கொள்ள, பாத்திரம் உருப்பெறுவதே அதிமுக்கியம் என்பதை அவர் உணர்ந்திருப்பது, இவ்விஷயத்திலே தெரியவரும்.

IV

மௌனி, பல விஷயங்களில் பிரச்சனைக் குரியவராகியிருக்கிறார். பொதுவாக, அவர் எழுதுவதே புரியவில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்று - தமது வசனங்கள் ஏதும் புரியவில்லையா என்று மௌனி கேட்கிறார் அல்ல, புரிய மறுக்கிற சில விஷயங்களை, அங்கங்கே எளிமையான வார்த்தைகளில் மடக்கிக் கொண்டுவரவே அவர் முயல்கிறார். அவ்விடங்களிலும் ஓரிரு வசனங்கள், அதுவும் மௌனியிடத்தே புதுப்பரிச்சயம் கொள்வோருக்குப் புரியாதிருக்கலாம். மற்றப்படி, அப்படி ஒன்றும் மௌனி வசனங்கள் புரியாதவை அல்ல அப்படியானால், தமது கதை எதுவும் புரியவில்லையா என மௌனி கேட்கிறார். அப்படியும் இல்லை. ஒரு அளவுக்கு அவையும்புரிவது போல்தான் தென்படுகின்றன. ஆனால், அதற்கும் மேல் அதில் புரிந்து கொள்வதற்கு ஏதுவும் இருக்கிறதா என்று சந்தேகிக்க அவை இடம் வைக்கின்றன. உதாரணமாக, "அழியாச் சுடர்" கதையில், ஒருவன் ஒருத்தியிடம் அவளுக்காகத் தன்னால் எதையும் செய்யமுடியும் என்று சொல்கிறான். ஒன்பது வருஷங்களின்பின், பூரண வாலிபப் பருவத்தில் அவளை மீண்டும் சந்தித்தபோது, அவள் அவனை நோக்கி ஏதோ ஆக்ஞையிடுவதாக அவனுக்குத் தோன்றியது. அவள் என்ன செய்யச் சொன்னாள் என்பதே புரியாமல் அவன் மறைகிறான். இவ்வளவும் புரிகிறது.... அவ்வளவுதான் அதில் புரிந்து கொள்ள இருப்பது என்கிறார் மௌனி. இதற்குமேல், பாத்திரங்கள் ஏன் சாதாரண மானவர்களைப்போல் நடக்கவில்லை என்பது போன்ற கேள்விகளுக்கு மௌனி, பாத்திரங்களின் பைத்தியக் காரத்தனமான இயல்பை ஒத்த நடத்தையாகத்தானே அவர்களின் காரியங்கள் இருக்கும் என்கிறார். இது இடக்கான பதிலே அல்ல.

> **இக்கதைகளில் உயர்ந்தவை இவை என்று சுட்டவோ, கதைகளை 'அலசிப்பார்க்கவோ நான் முயலவில்லை. உள்ளர்த்தம் பார்த்துப் பிச்சுப்பிடுங்கு'வது, பரம்பரையாகத் தமிழ் இலக்கிய ரஷனையில் ஊறிவிட்ட ஒன்று போலும் ஒரு படைப்பு, ஏதும் 'உள்ளர்த்தம்' கொண்டிருக்க வேணும் என்றும் அதுதான் 'ஆழமான' எழுத்தாகும் என்றும் கருதிப் பழகிவிட்டோம்.**

உண்மையில், பாத்திரங்களே சாதாரண மனிதர்களாகவன்றி, மனக்கோளாறு பீடித்தவர்களாகவோ, குடிப்பவர்களாகவோ, உந்நத மானவர்களாகவோதான் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மௌனியின் கதைகள், படிக்கும்போதே உயர்வகையான மனக் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இக்கிளர்ச்சிக்கான காரணங்களைக் கதைகளில் ஆராயும்போது, அவைகள் இப்படி அசாதாரணமான பாத்திரங்களைச் சுற்றி அமைவதாக காண நேர்கிறது என்பது, மேற்படி கூற்றுக்களுக்குக் காரணமாகலாம். ஆனால் திரும்பத்திரும்பப் படிக்கிறபோது, இந்த வெளிக் காரணங்களைப் பற்றிய சிரமம் பின்தங்கி மங்கிவிடுகிறது. ஒரு உயர்ந்த மனவெழுச்சியை உண்டாக்கிவிட்டுப் பாத்திரங்கள் மங்கி மறைந்துவிடவே தோன்றின என்ற உணர்வினால் இது நேரலாம். அதற்கப்புறம், எப்போது படித்தாலும் இந்நிலையே நீடிக்கக் காண்கின்றோம். உண்மையில், மௌனி கதைகள் திரும்பத்திரும்பப்படித்து அநுபவிக்கத்தக்கவை.

அசாதாரணமான பாத்திரங்களாகச் சிருஷ்டிக் கப்பட்ட பின், அவர்களது நடத்தையே அவர்களால் நிகழ்த்தப்படும் சம்பவங்களோகூட, அவர்களைப் பொறுத்த அளவில் 'நடப்பியல்'புக்கு ஒத்தவைதான். குருவி 'ஏன் - எங்கே' என்று கத்துவதும் கல்யாணி எழுந்து நின்று கூத்தாடுவதும், கதாபாத்திரங்களைப் பொறுத்த அளவில்தான். வேறு ஆசிரியர்கள் ஆடம்பரமான பெயர்கள், வார்த்தைகள், சிக்கலான நிகழ்ச்சிகள், தத்துவச் 'சுவடு', அரைவேக்காட்டு நனவோடை யுக்தி'களால் சாதிக்க முடியாத ஒரு தரிசனத்தை, மௌனி இந்த வகையாக அசாதாரணமான பாத்திர அமைப்பு என்கிற ஒரேதந்திரத்தின் மூலம்,

பிரமிக்கத்தக்க விதத்தில் சாதிக்கிறார் என்பதே, அவரது பாத்திரங்களின் அத்தன்மைக்குப்போதிய சமாதானமாகும்.

மௌனி தமது கதைகளில், பெரும்பாலும் நிகழ்ச்சிகளினாலன்றி கவித்துவத்தினாலேயே பாத்திரங் களிடையே உறவு போன்றவற்றைக் கொண்டு வருகிறார். 'பிரக்ஞை வெளியில்' கதையிலே, கதாநாயகன் காரில் மோதுண்டு வீழ்வதுபோன்ற புற நிகழ்ச்சிகள் வரும்போது, அவை மங்கலாக்கப்பட்டு பின்னொதுக்கப்படுகின்றன. 'மனக்கோலம்' என்ற கதையில், கேசவனுக்கும் கௌரிக்கும் இடையே உள்ளக் கவர்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை மௌனி தேடவில்லை. கவித்துவம் நிரம்பிய மௌனியின் எழுத்தோட்டத்திலேயே இந்தப் பிணைப்பு, அற்புதமாக, உதறமுடியாமல் நேர்ந்துவிடுகிறது. அவள் கோலம் வரைவது, தன் மனம் சித்திரம் கொள்ள என்று கேசவன் கற்பிப்பதிலும், அவள் 'முகமே விழிகளென' இவனைப்பார்ப்பதிலுமே, மௌனி அவர்களிடையே வேண்டிய பிணைப்பைக் கொண்டு வந்துவிடுகிறார்.

'பிரக்ஞை வெளியில்' கதையில், சேகரும் சுசீலாவும் ஒருவரைப்பற்றி மற்றவர் பேசிக்கொண்டிருந்து, கிட்ட நெருங்கியதும் பேச்சை நிறுத்தி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதில், தாம் பேசியது மற்றவருக்குக் கேட்டிருக்குமோ என்ற அழுத்தத்தினால் ஏற்படும் பிணைப்பை வைத்தே, 'அறிமுக'மானவர்கள் போன்று பின்னாடி ஹோட்டலில் சந்தித்ததும் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த அளவிற்கு மௌனி கதைகளில், நிகழ்ச்சிகளின் இடத்தைக் கவித்துவமும் மனோதத்து வப்போக்குகளுமே நிரப்புகின்றன.

V

இக்கதைகளில் உயர்ந்தவை இவை என்று சுட்டவோ, கதைகளை 'அலசி'ப்பார்க்கவோ நான் முயலவில்லை. உள்ளர்த்தம் பார்த்துப் பிச்சுப்பிடுங்கு'வது, பரம் பரையாகத் தமிழ் இலக்கிய ரஷனையில் ஊறிவிட்ட ஒன்று போலும் ஒரு படைப்பு, ஏதும் 'உள்ளர்த்தம்' கொண்டிருக்கவேணும் என்றும் அதுதான் 'ஆழமான' எழுத்தாகும் என்றும் கருதிப் பழகிவிட்டோம். இதனால், மௌனியின் கதைகளைப்போல், படிக்கும் போதே உயர்ந்த அநுபவங்களை உண்டாக்கக்கூடிய படைப்புகளைவிட, பிச்சுப் பிடுங்கி உள்ளர்த்தம் தேடி, அதன் பின்பே 'ஆழமான' எழுத்து என்று கருதத்தக்கதாக எழுதுதலே 'இலக்கியம்' என்ற பிரமை நம்மிடையே ஊறியிருக்கிறது. இலக்கியம், படிக்கும்போதே அநுபவிக்கத்தான். மௌனி கதைகள் இதற்குத் தகுந்த உதாரணங்கள் என்பதோடு, அவர்கதைகளில் கள்ள அர்த்தம், தத்துவச் 'சரடு' ஏதும் கிடையாது. அங்கங்கே தெளிவுபட்டு, எட்டி உயர்ந்து செல்லும் சிந்தனைப் பொருள்கள், வேகம் கொண்டவசனங்களில் வருகின்றன. இதுதான் அவரைப்பொறுத்த அளவில் 'ஆழமானது'. அவ்விடங்களில் மௌனியின் வசனம் சிக்கலாவதும் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்டவசனங்களில் சொல்வதால் பொருளின் வேகம் குறைந்து விடும் எனக்கருதி, சொல்லவந்ததை ஒரு தரிசனமாகக் கண்ட கணத்தின் வேகத்தோடு, ஒரே வசனத்தில் சொல்ல முயன்றவைதான் அவை. உதாரணமாக, "இரவின் அந்தகார இருளைக்கான, ஒரு சிறு ஒளிப்பொறி போன்றாக முடியுமா இப்பகல் தீவட்டிகளின் ஒளிகாட்ட முயலுதல்கள்?" என்று 'மனக்கோட்டை'யில் வரும் வசனம். இதுவார்த்தை ஜாலம் அல்ல. வார்த்தை ஜாலம் என்பது பொருட்கிடை இல்லாத அபத்த வசனத்தைத்தான் குறிக்கும். மாறாக, இங்கே இது போன்ற வசனங்கள், பொருட்கிடையோடு தரிசன உணர்வும் செறிந்தவை.

தத்துவம், லட்சியம் போன்ற, கதைக்கு அப்பாற்பட்ட எதன் உதவியும் இன்றியே, மௌனியின் கதை வாசகர் மனதைச் சிறகு பெற்றதுபோல் உயர்வடைய வைக்கிறது. ஒரு காவிய இன்பத்தை அளிக்கிறது. இவ்வநுபவமே, ஆழமானதென்று சொல்லத் தக்க இலக்கிய அநுபவம்.

கதையம்சத்தை ஆழமாக்குவதாலோ, அதன் உள்ளர்த்தத்தைத் தேடிக் 'கண்டுபிடிக்கும்' சாமத்தியமும் 'கண்டு பிடித்தோம்' என்ற கர்வமும்தான் வாசகரிடை யேவளரும். இது, பண்டிதர்களிடமிருந்து இன்று சில விமர்சகர்கள் வரை பரவி, தமிழ் ரஸனையைப் பீடித்த ஒரு வியாதியாகி விட்டது. இதை மாற்றியமைத்து, மௌனியின் கதைகள் போன்ற படைப்புகளை உணரத்தக்க விதமாக ரஸனையைப் பண்படுத்துவதுதான் நாம் செய்ய இருப்பது.


தமிழில், ஆழமான கதையம்சத்தின் துணையின்றி, சாதாரணமான கதைகளிலேயே ஒரு காவிய உணர்வை, மௌனி மட்டும்தான் இன்று தருகிறார். அவரது சொற்களால் தீண்டப்பட்டதும், இயற்கைப் பொருள்களிலிருந்து, சங்கீதம், பெண்மை என்பனவரை, தம்மை மீறி வியாபகம் பெறுகின்றன. படிக்கப்படிக்க அலுக்காத உணர்வோட்டமும் இலக்கிய நயமும், இதனாலேயே மௌனிகதையில் பரந்து கிடைக்கின்றன. இந்த அளவு உந்நதமான காவியத்தன்மை, உலக இலக்கியத்திலும் அபூர்வமாகவே காணப்படுகிறது. தமிழுக்கு, இந்த வரண்ட வேளையில் இந்தப் படைப்புகள் கிடைத்தது அதிர்ஷ்டம்தான். இருந்தும், இவை தமிழுக்கு மட்டும், அதுவும் இந்த வேளைக்கு மட்டும் உரியனவல்ல: சிலவற்றின் ஜோதி, காலத்தால் குன்றாது, தேசவரம் புகளையும் மீற ஜொலிப்பது என்று தோன்றுகிறது.

...

**(முன்னுரை, மௌனிகதைகள், மௌனி, சிதம்பரம் 1967.**
**திருக்கோணமலை, மே 1967)**

# இரு கலைஞன் பற்றி..

மு.பொ.



தருமு சிவராம் எனும் கலைஞன்
தரித்த நாமங்கள் ஆயிரம்!
இவை சூரனுக்குரியவையா சுரருக்குரியவையா?
இரண்டுக்கும் உரியவை.
பிளவுபட்ட ஆளுமையின் இருவகைத் தோற்றங்கள்.
தருமு சிவராம், சிவராம், அரூப், அரூப் சிவராம்
பிரமிள் பானுச்சந்திரன் பிரமீள்
அஜித் ராம் பிரேமிள்/பிரமிள்!
இவ்வாறே கைவந்த கலைகளும் அனேகம்
சிற்பம், சித்திரம், கவிதை, கட்டுரை,
சிறுகதை, சாத்திரம்
தானே ஒரு தனிக்கூட்டம், தனி இயக்கம்.
தன்னைச் சூழ ஆயிரம் வக்கிரங்கள்,
திறமைக் கிரீடங்கள் மிதந்து திரிய
தனக்கே உரிய கவிதா ஆசனத்தில் அமர்வு.
தான் அமர்ந்திருக்கும் கவிதா ஆசனத்தில்
ஓட்டை விழுந்திருக்கிறது என்று ஒருவர்
சொல்லக்கூடாது.
தையல் போடப்பட்டிருக்கிறது என்று எவரும்
பேசக்கூடாது.
அப்படி முன்வந்து துணிந்து சொன்னவன்
தொலைந்தான்!
சொன்னவன் நக்கீரன் மாதிரி பொற்றாமரைக்
குளத்தில் பாயினும் தப்பமுடியாது!

அப்பொழுதும் தர்முவின் நெற்றிக்கண் சூடு
நின்று விடப்போவதில்லை. பலகாலந்தொடர்ந்து
பல நாம ரூபங்களில் எரிமலை மாதிரி
புகைந்து புகைந்து தீ
நாக்குகளை விசிறிக் கொண்டேயிருக்கும்!
ஒருபக்கம் திறமையின் நேர்த்தி வெளிப்பாடு
மறுபக்கம் ஒருவித மனோவியாதிக்
கிறுக்கனின் கட்டற்ற ஓட்டம்.
Eccentricitiesக்கும் Schizophrenia கீற்றுக்களுக்கும்
இடையே ஊசலாட்டம்
இவ்விரு பிளவுபட்ட ஆளுமையின் ஆப்புக்கிடையே
டி. சிவராமலிங்கம் என்னும் மனிதன் "நன்ன"ப்பட்டு
தூக்கியெறியப்படுகிறான்.

திறமைக்கும் கிறுக்குத்தனங்களுக்குமிடையே அப்படியென்ன ஒட்டுறவு?

திறமையின் உச்சவெளிப்பாடாய் கவிதைப் பொழிவு

**"கடலில் பொழியும் அமிர்தத்தாரை**
**கடவுள் ஊன்றும் செங்கோல்"**

அதேவேளை அதே கிறுக்குப் போக்கின் உச்ச வெளிப்பாட்டில்
தன் திறமையைப் பேணக் கையெறியும் அரவணைப்பை வெட்டித்தறித்தல்.
அதனால் தனிமைப்பட்டுப் போகும் அவலத்துள் ஒதுங்குதல்

**"சிறகிலிருந்து பிரிந்த இறகொன்று**
**காற்றின் தீராத பக்கங்களில்**
**ஒரு பறவையின் வாழ்வை எழுதிச்செல்கிறது"**

என்ற அவரின் கவிதையில் உள்ளோடும் சோகமும் அனாதைத்தனமும்

**அவரிலேயே கவிகிறது.**
**எவரிலும் சந்தேகத்தை உமிழ்ந்து, தனக்குள்ளேயே பதுங்கிக் கொள்ளும் போக்கு.**
**சின்ன அதிர்வுக்கும் தலையை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும் ஆமைபோல் தன் ஒதுக்கத்துள் ஜீவிதம்.**

அதனால் தானே, தன்படைப்புகளே அற்புதம் எனும் தன்மோகிப்பு! ஒருவகை Narcissistic போக்கு! அவ்வாறே தன் கிறுக்குத்தனத்தை மற்றவர்களில் ஏற்றிப்பார்க்கும் இடம்மாற்றும் மனோ வியாதித்தனம்! (Tranference Neurosis)

இவற்றையெல்லாம் அடியோடி படியவிட்டுப் பார்த்தால் மேலே தெளிந்து நிற்கும் நீர்தான், தமிழ்ப் புதுக்கவிதை மரபை படிமம் எனும் புதுத்தளத்திற்கு உயர்த்திய தர்மு.

**தமிழ் நாட்டில் ஒதுக்கப்பட்ட கலைஞர்கள் பலர் தர்முவை அண்டி சனி வளையங்களாக சுற்றி வர, "அஞ்சேல்" எனும் அவரின் அபயகரம்.**
**அதுவும் அவரின் துதிப்பாடலுக்கே!**
**இருப்பினும் அடிக்கடி சில சிற்றேடுகளுக்கு கிடைக்கும் சமிக்ஞைகள் சுவாரஸ்யமானவை.**
**சில பிழையான தகவல்களாய், அரைகுறை ஞானங்களாய் வீழ்வதுமுண்டு.**
**ஆனால் தமிழ்நாட்டுக்கு அதுவே கூடிப்போச்சு.**
**இதுவும் அவரின் மேதமைத்தனத்துள் நின்றாடும் சமிக்ஞை**
**தொடர்பாடல் என**
**மயங்கவைக்கும் தோற்றம்.**
**மொத்தத்தில் தர்மு?**
**புவியின் ஈர்ப்புக்குள் சிக்கி பெருஞ்சுடரோடு வந்துவீழ்ந்து கரிகிப்போன எரிநட்சத்திரம் எனலாமா?**

- சூத்திரர் வருகை-

## மகுடம் சந்தாவிபரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ.100.00 (தபால்செலவு உட்பட) | 06 (US $) |
| ஆண்டுச்சந்தா (தபால்செலவு உட்பட) | ரூ.500.00 | 25 (US $) |
| இரண்டாண்டு சந்தா (தபால் செலவு உட்பட) | ரூ.900.00 | 50 (US $) |
| ஆயுட்சந்தா | ரூ.20,000.00 | 500 (US $) |

சந்தாவை காசோலை மூலமாகவோ, மணி ஓடர் மூலமாகவோ அனுப்பலாம். மணி ஓடர் மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் மாற்றக்கூடியதாக வி.மைக்கல்கொலின் என்ற பெயரிற்கு அனுப்புதல் வேண்டும்.

❋ எதுவித செலவுமின்றி சந்தா அனுப்பும் வழி, தங்கள் பகுதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் **W.Michaelcollin Peoples Bank. Town Branch, Batticaloa.** சேமிப்பு கணக்கு இலக்கம் 113-2-001-0-7728743 என்ற கணக்கில் வைப்பு செய்து, வைப்பு செய்த வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

❋ ஆயுட் சந்தா செலுத்துபவர்களுக்கு "மகுடம்" பப்ளிகேஷன் பிரைவட் லிமிட்டட்டின் சகல வெளி யீடுகளும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

❋ மகுடம் விளம்பர விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர் –

எஸ். வீ. சங்கரலிங்கம்

# கனவுலகில் வாழும் நனவுலக கவிதன்....



மின்னல்

1. ககனப் பறவை
நீட்டும் அலகு

2. வான உற்சவத்தின்
வாண வேடிக்கை

3. கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை

4. முகிற்புற்று கக்கும்
நெருப்பு பாம்புகள்

5. கடலுள் வழியும்
அமிர்தத்தாரை

6. கறுப்பு உதட்டின்
வெளிச்ச உளறல்

7. கடவுள் ஊன்றும்
செங்கோல் (எது?)

8. இடிச் சொற்களின்
சுருக்கெழுத்து

('எது' என்ற கேள்வி என்னுடையது)

தர்மு அரூப் சிவராமு யார்' இவன் தமிழன் தானா? வெளிநாட்டுக்காரனா? யாரோ ஆங்கிலேயன் எழுதியதை 'வீரகேசரி' மொழிபெயர்த்து வெளியிடுகின்றதா? என்ற சந்தேகம் எனக்கும், என் நண்பனுக்கும். "உலக நவீன இலக்கியம்" என்ற கட்டுரைத் தொடர் வந்தபோது ஏற்பட்டது. சுமார் 15 வருடங்கள் அன்னியோன்னியமாக பழகி, பின்னர் பத்து வருடங்களாக தொடர்பறுத்தும் (இந்த பத்து வருடங்களில் கிடைத்தவை 'விருட்சம்' 'க.நா.சு. இலக்கியத்தடம்' மட்டுமே) அதே சந்தேகம் இன்னும் தொடர்கின்றது.

### யாரிவன்?

இரண்டாயிரம் வருட தமிழிலக்கிய வரலாறு கண்டிராத மிகப்பெரிய 'படிமக்கவிஞன்' என்று பாராட்டப் பெற்றவன். இவனுடையப் படைப்புக்களை பிரதி பண்ணியே பவிசு அடைந்த பேராசிரியர்களைப் பார்க்கும்போது இவனுடைய ஆளுமை எவ்வளவு வலுவானது என்பது தெரிகின்றது. இவனுடைய 'ராகு' அப்துல்ரகுமானின் 'சாட்சி' யாகியுள்ளது. 'ராகு'வில் வரும் 'ருஜூ'வென்ற சொல்லே 'சாட்சி' என்ற தலைப்பாக அமைந்ததை வைத்துமட்டும் சொல்லவில்லை. இரண்டு க்விதைகளையும் படித்துப் பார்த்தாலே தெரியும்.

மேலே ஒற்றைப் படையில் வரும் கண்ணிகள் பிரமிள் உடையது. இரட்டைப் படையில் வருவன அப்துல் ரகுமானுடையது. தர்முவின் சொற்சேர்க்கை, மீட்டர் (Meter) அப்படியே அப்துல்ரகுமானில் பிரதிபலிப்பது தெரியும். தன்னுடைய கல்லூரி மாணவர்களிடம் சி. மணி பற்றி மட்டுமே சிலாகித்துப் பேசும் அப்துல்ரகுமான், தர்மு சிவராமு பற்றி என்றும் ஒன்றும் சொன்னதில்லையே என்று வேதனைப் படுகிறார் அவருடைய மாணவர் ஒருவர். இன்னும் இருபதுக்கும் மேலான இடங்களைக் காட்டமுடியும் (தர்முவின் பிரதிபலிப்பு) என்று உறுதியளிக்கிறார் அந்த நண்பர்.

நல்ல இலக்கியத்தையும், சிறந்த எழுத்தாளர் களையும் எனக்கு அறிமுகப் படுத்திய தர்முவும், பிறரும் எனது இலக்கிய ஆர்வத்தையே மழுங்கவும் அடித்திருக்கின்றனர்? இவர்களுடைய பொறாமை, குரோத உணர்வு, யார் பெரியவன் என்ற போட்டி "இலக்கியம், என்ன இலக்கியம் அன்றாட வாழ்க்கையும் அதன் போராட்டமுமே மேல்" என என்னை ஒதுங்கச் செய்திருக்கின்றது.

ஜாதியில் பறையன் எனத் தெரிந்தால் 'இலக்கியப் பறையன்' என்று திட்டுவது. பிள்ளைப் பேறு அற்றவனை "நபும்சகன்" என்று திட்டுவது. இந்தியக் கலாச்சாரம் பற்றி பேசுபவனானால் 'அவன் எலக்ரிக்

லைட்டர்' வைத்திருக்கிறான் என்று குற்றம் சாட்டுவது. பெண்ணுரிமைப் பற்றி பேசுபவளா.... 'அவள் கன்னித்திரை கிழியவில்லையே' என்று எழுதுவது. பெண்ணுரிமைப் பேச கன்னித்திரை கிழிந்திருக்க வேண்டுமென்பது ஒரு க்வாளி.'.பிகேஷனா?

எனினும் இன்னும் சிலர் என்னையும் ஒரு இலக்கிய வாசகனாக அடையாளம் காண சிவராமுவுடனான தொடர்பே காரணமாகியுள்ளது. சிவராமுவின் படைப்பிற்கும், வாழ்க்கைக்கும் இடையேயான தொடர்பை தமிழ்வாசகர்கள்

**தர்மு அரூப் சிவராமு - கவிதைகள், படைப்புகள் மீதான விமர்சனக் கட்டுரை**

தெரிந்துகொள்வது மிக மிக அவசியமாகும். அதற்காக அவரது பயோகிரா.'.பியை எழுத இங்கு இடமில்லை. எனினும் சில ...

• • •

1969 அல்லது 1970 வாக்கில் 'வீரகேசரி'யில் தர்மு அரூப் சிவராமுவின் 'நவீன உலக இலக்கியம்' என்ற கட்டுரைத் தொடர் வெளிவந்த அந்நாளில்தான் நானும், என் நண்பன் இராஜ தர்மராஜாவும் சிறுகதைகள் எழுதத் தொடங்கியிருந்தோம். எங்களுடைய கற்பனையில் உருவாகியிருந்த இலக்கிய உலகிலிருந்து வேறுபட்ட ஒரு பிரமாண்டமான உலகுக்கு அழைத்துச் சென்ற சிவராமுவின் கட்டுரையில் பிரமிப்புடன் ஆழ்ந்து.. அந்த எழுத்தாளன் யார்? எங்கிருக்கிறான் என்பதை நாங்கள் விசாரிக்கத் தலைப்பட்டோம்.

இராஜ தர்மராஜாதான் முதலில் அவருடைய இடத்தை செம்பியன் செல்வன் (இலங்கை சிறுகதை எழுத்தாளர்) மூலமாக கண்டுபிடித்தான். "ஆள் ஒரு லூஸ் மாதிரி இருக்கான் ஓய்!" என்றவன் என்னையும் ஒரு நாள் அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

ஏழ்மையை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஓலைவேய்ந்த வீடு. அவருடைய தாயாரின் முகம் இதை எழுதும் இந்த கணத்திலும் என் கண் முன் நிற்கிறது. அவர்களைப் பல முறை பார்த்திருக்கிறேன் என்றாலும் என்னுடன் இரண்டொரு வார்த்தைக்கு மேல் அவர்கள் பேசியதில்லை. நானும் சிவராமுவும் பேசிக்கொண்டிருப்பதில் அவர்கள் சுவாரஸ்யம் காட்டியதில்லை. கையாளாகாத மகனுடன் (சொல்லலாமா? இந்தப் பதம் சரிதானா?) என்னவோ பேசிக்கொண்டிருக்கிறான் என்றிருப்பார்களோ என்னவோ தெரியாது. ஆளைமட்டும் காட்டிவிட்டு குறுக்கீடு செய்யாமல் தம் வேலையில் ஈடுபட்டு விடுவார்கள். அவர்கள் பால் வியாபாரம் செய்ததாக இப்போது நினைக்கத் தோன்றுகிறது.

எனக்கு 'ஆள் ஒரு மாதிரியாகத்' தெரியவில்லை. நேரம் கிடைத்த போதெல்லாம் பல சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அவரை சந்தித்தேன் என்பதற்கு 'இவன் மலை நாட்டான், தோட்டக்காட்டான், இந்தியாக்காரன்' என்ற ஏளனம் என்னிடத்தில் அவருக்கு இல்லாமையும், என் உள்ளத்தில் வேரோடிப் போயிருந்த இந்திய நாட்டுப் பற்றும், அங்குள்ள எழுத்தாளர்களைப் பற்றி அவர் மூலம் தெரிந்து கொள்ள முடிந்ததும் காரணங்களாய் இருக்கலாம்.

• • •

சிவராமுவோடு நானும் என்னுடைய கல்லூரி நண்பனும் டீக்கடையில் 'பிளெயின் டீ' குடித்துக்கொண்டிருக்கிறோம்.

தொலைவில் கோணமாமலையும், அதன் இரு பக்கமும் விரிந்த கடலும், அதன் முன்னால் நீண்ட புல்வெளியும் தெரிகின்றன. கோணமாமலையிலிருந்து வரும் தார் ரோடில் யாரோ ஒருவன் வண்டியொன்றைத் தள்ளிச் செல்லும் காட்சியில் ஆழ்ந்த சிவராமு அதை எங்களுக்கும் காட்டுகிறார்.

என் நண்பன் என்ன சொன்னான் என்பது எனக்கு தெரியவில்லை. ஒரு ஏளனச் சிரிப்பு சிவராமு விடமிருந்து. வெளிப்பட 'என்ன'? என்ற கேள்வியோடு பார்வையை அவர்பால் திருப்புகிறேன். "மல வண்டியாம் ஓய்" என்கிறார்.

அந்தக் காட்சியும், அவரது ரசனையுள்ளமும், ஏளனச்சிரிப்பில், அவர் வெளியிட்ட மனிதாபிமானமும் இன்னும் என் நினைவில் நிற்கின்றன.

• • •

ஒருநாள் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் சிலையொன்றை 'பிலாஸ்டர் ஆ.'.ப் பெரிஸில் (plaster of paris) செதுக்கி, என்னிடம் காண்பிக்க எடுத்து வந்தார் சிவராமு. நான் வாங்கிக் கொடுத்த கத்தி கீறல் விழாமல் செதுக்கும் விதத்தைச் செய்து காட்டியவர், சிலை பற்றி அவிப்பிராயம் கேட்க நான் தயங்கினேன். என் தயக்கத்தை உணர்ந்தவராய் 'சும்மா சொல்லும்' என்றார். "கோபித்துக் கொள்ளக்கூடாது, சிலையின் முகம் இறந்தவருடையதைப் போலிருக்கிறது" என்றேன். அந்நாளில் எனக்கு ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றி ஒன்றும் தெரியாதுதான். ஆனாலும் அவர் உயிரோடிருந்தார் என்பது நன்றாகத் தெரியும்.

"இதில் கோபிக்க என்ன ஓய் இருக்கிறது? நீர் சொன்னது ஒரு 'காம்ப்ளிமெண்ட்' ஓய்" என்றார்.

"நன்றியுனர்வு நாய்க்கு வேண்டியது, மனிதனுக்கல்ல" என்று இந்நாளில் வாதிடும் சிவராமுவின் மேற்படி செயல் ஒரு நன்றியுணர்வின் செயற்பாடே.

"அந்த பொடியனை உனக்கெப்படித் தெரியும்? அவனுடைய தகப்பன் ஒருமாதிரி விசர்போல... இந்த பையனும் கொஞ்சம்........" இது சிவராமு குடும்பத்தைப் பற்றி தெரிந்த ஒருவர், அவர் என்னைவிட்டு அகன்ற பின்னர் சொன்னது.

•

"கொஞ்சம் அரிசி வாங்கிக் கொண்டு வரவும்" சிவராமுவின் வாசகத்தை போஸ்ட்கார்ட்டில் பார்த்ததும், சமையலுக்குத் தேவையான பொருட்களோடு அவர் இருப்பிடம் செல்கிறேன். சுந்தர ராமசாமியும், வெங்கட் சாமிநாதனும் தலா ரூ 50/= வீதம் அனுப்பிக்

கொண்டிருந்ததை நிறுத்திவிட்டதால் இரண்டு நாட்கள் உணவுத் திண்டாட்டமாகி விட்டது. சிவராமுவுக்கு.

பக்கத்து அறையில் குடியிருந்தவரிடம் விசாரித்தேன். "சோறு வடிச்ச கஞ்சியக் கேட்டாரு கொடுத்தேன்... வேறு ஒன்றும் அவர் கேட்கல....."

● ● ●

பிரமிள் பானுச் சந்திரன் ஆளை அளவிடுவதில் கைதேர்ந்தவர். "தம்பி நீயும், நானும் ராமர், லட்சுமணன் போல வாழலாம்" என்றால், "ஓஹோ! இவன் ராமன் நான் லட்சுமணனாக தொண்டு செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறான்" என்ற உண்மையை உணரக் கூடியவர்.

தன்னிடம் பரிதாபப் பட்டு உணவளிப்பவனின் கையை முகர்ந்து "இவன் எங்கோ பிரியாணி சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறான்" என்ற மர்மத்தைக் கண்டு பிடிக்கக் கூடியவர்.

வீதியில் சென்றுகொண்டிருக்கும் பெண், பின்னால் யாரோ வருகிறானே என்று திரும்பி பார்த்து விட்டால், அவள் தன்னைக் காதலிப்பதாக அறிந்து, அவள் வீடுவரை பின்தொடர்ந்து, வீட்டு எண், வீதி, அவள் அம்மா, அப்பா பற்றி எல்லாமே அறிந்துவரக் கூடியவர். அவள் அம்மாவும் அவளுடன் செல்லுகையில் திரும்பிப் பார்த்து விட்டால் "தன் பெண்ணை மணமுடித்துக் கொடுக்க சம்மதித்து விட்டாள்" என்பதை பார்வையிலேயே அறியக்கூடியவர்.

இவ்வளவு மதிநுட்பம் நிறைந்த 'அவரிடம்' "இது என் பைத்தியக்காரத்தனம்?" என்று கேட்டுவிட்டு காதலின் மேன்மை புரியாத வெறும் சதையுணர்வு மட்டுமே நிரம்பிய நான், அவரிடம் காதலின் புனிதத்துவம் பற்றி நீண்டதொரு 'ஞானஸ்னானம்' பெற்றிருக்கிறேன்.

● ● ●

இவ்வளவு போதும் என்று நினைக்கிறேன். அவருடைய வாழ்க்கையிலிருந்து சில பகுதிகளையும், அவர் போக்கின் கூறுகளையும் இங்கு நான் கூறியிருப்பது அவரைக் கொச்சைப் படுத்துவதற்கல்ல. இக்குறைபாடுகளுக்கு மேலாக காலத்தால் அழிக்கமுடியாத அவருடைய படைப்புகள் அவரது மேதைமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்.

பிரமிள் தன்மனதை பாதித்த காதல் பற்றியும், இந்திய உலகப் பொது விஷயங்கள் பற்றியும் கவிதைகள் எழுதியுள்ளார்.

அவருடைய காதல் தோல்வியை வெளிப்படுத்திய கவிதைகளான 'கல்லூரிக் கரையோரம்' 'முதல் முகத்தின் தங்கைக்கு' ஆகியவை, கவிதையிலும் தோல்வியையேத் தழுவுகின்றன.

'கல்லூரிக் கரையோரம்' இவரது மற்றைய கவிதைகள் அளவுக்கு இறுக்கமற்று தளர்ந்து, வசவாய் மாறி, "காலி டிபன் பாக்ஸை பத்துப்போகத் தேய்க்கின்றாள். ஆயாக்கிழவி" என கவிதைக்குத் தேவையான இறுதி அதிர்வற்று காலியாகி விடுகின்றது.

முதலில் முன்னவளை (அக்காவை) காதலித்தான் கவிஞன். அவள் திருமணமாகிப் போய் விட்டாள். பின்னவள் (தங்கை) ஒருநாள் கவிஞன் இருந்த மாடியை ஏறிட்டுப்பார்க்க பிறந்ததுதான் 'முதல் முகத்தின் தங்கைக்கு' இதில் ஓரளவுக்கு வேதனை வெளிப்படுகிறதெனினும், இறுதியில்

**"விளையாடினாயெனில்**
**ஹோம குண்டங்கள் கூட**
**வெற்றுப் புகை முடிச்சாய் மண்ட**
**வேதனை மீண்டும்**
**அக்னியை உரிமை கொள்ளும்"**

என்ற சாபமிடலுடன் முடிவடைகின்றது.

இன்னும் சிறுகதைகளில் தன் மனதைப் பாதித்த விஷயங்களை எழுதியவையும் கூட சிறந்த படைப்புகளாகி விடவில்லை.

இந்திய பொது விஷயங்கள், சமயத்துவம் பற்றி மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார்.

இந்து சமயம் எத்தனையெத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்ததாய் இருந்தென்ன? மகோன்னதமான தத்துவங்களைச் சொல்லி என்ன? ரிஷிகளும், முனிவர்களும் ஏன்? இந்து மதத்தில் தோன்றிய அத்தனை மகாபுருஷர்களாலும் துடைத்து, எறிய முடியாமல், இந்து சமய அழிவுடனேயே அழியுமோ சாதிக்ககொடுமை என்று எண்ணச் செய்துள்ளது, சாதி வேறுபாடு, உயர் ஜாதி என்பவர் உயர் ஜாதிதானா?

**பிரமிளின் கேள்வி:**
**சூர்ய உவாச**
**உன் தந்தையின்**
**வேர்த்தாடி**
**நிலந்தேடி**
**சகதியைப் புணர்ந்துறிஞ்சிப்**
**பிறந்தவள் நீ...!**
**நான் 'ஓவர் ஹெட் டாங்க்' அல்ல**
**ஒளி...!**

சிந்தனையை எழுப்பும் கோபத்தோடு இது பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் வெளிப்பட்டது. பின்னர் 'கலப்பு' இன்னும் கோபமாக,

**பாப்பாத்தி நகத்தோடு**
**என் பறை நகம் மோதி**
**......................**
**......................**
**ஜாதியின்**
**கோடை மேவிப் பொழிந்தது**
**கருவூர்ப் புயல்.**

(யாரோ "பாப்பாத்தி" என்று ஒரு ஜாதியை மட்டும் குறிப்பதேன்? வேறு ஜாதிக்காரர்கள் ஜாதி பார்ப்பதில்லையா? என்று கேட்க 'பாப்பாத்தி' 'உயர் ஜாதிகாரி யாகிவிட்டாள். பறை ஜாதி மட்டும்தானா தாழ்ந்த ஜாதி? வேறு ஜாதியில்லையா? என்று கேட்டால். அது தாழ்ந்த ஜாதியாகிவிடுமா? அருப் பிரமிள்?) இங்கு 'பாப்பாத்தி' என்பதும் 'பறை ஜாதி'

என்பதும் உயர்ந்த, தாழ்ந்த ஜாதிகளின் குறியீடு மட்டுமே. எனினும் பானுச்சந்திரன் மாற்றி எழுதினார்.

**உயர் ஜாதிக்காரி**
**ஒருத்தி நகத்தோடு**
**என் பறை நகம் மோதி**
**....................**
**....................**
**இருண்டது இன்றென்**
**உதய நெருப்பு**

ஒரே பொருள் பற்றி இரண்டு வெவ்வேறு வெளிப்பாடுகள். முதலில் கோபமாக (கடைசி இரண்டு வரிகளை கொச்சைப் படுத்திப் பாருங்கள்) வெளிப்படுவது இரண்டாவதில் கொடுமையிலிருந்து விடுதலை பெறமுடியாமை, இயலாமை வேதனையாக வெளிப்பட்டுள்ளது.

பிரமிளின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்று 'கௌதம - இந்ரம்' இந்திய புராணத்தை சரியாக ஜீரணிக்காத ஒருவரால் இதை எழுதியிருக்க முடியாது. தனிக்கட்டுரை எழுதவேண்டிய அளவுக்கு இதில் விஷயமுண்டு. தர்முவின் ஆரம்ப காலங்களில் தனித் தனியாகத் துண்டுப்பட்டிருந்த படிமம் பின்னாளில் கவிதையோட்டத்தோடு செயல்படுவது அவரது முதிர்ச்சியைக் காட்டுகின்றது.

'கௌதம - இந்ரம்' மில் இந்ர தாபங்கள் - தேவதா நாசி? மாமிச மலர்கள், குருட்டொளி, கௌதமேந்ரன் போன்ற படிமங்கள் கவிதையோட்டத்தோடு அவற்றின் இடத்தை நிர்ணயித்துக் கொள்கின்றன.

காமம் கொடியது, ஆனால் புணர்ச்சி உலக சிருஷ்டிக்கு அவசியமானது. இது இன்றி உயிர்களில்லை. உலகில்லை. இது அவசியமானதா? அவசியமற்றதென ஒதுக்குவதாவென்ற களேபரத்தில் இந்திரனும் (தாபமும்) கௌதமனும் (யோகமும்) ஒன்றையொன்று சபித்துக் கொள்கின்றன. இதைத் தீர்த்து வைக்க முப்பது முக்கோடி நிசிவேளைக் குருட்டொளித் தேவர்களைக் கேட்டு பயனில்லை. பேறிவாம் சூரிய ஒளியையே கேட்க வேண்டும். அவன் உயிரளிப்பவன், உயிர் வாழ்க்கைக்கு அவசியமானவன்.

விரகதாபத்தின் குறியீடான இந்ரதாபம், ஆசையைக் காமத்தை ஒழித்த கௌதமனோடு சேர்ந்து கௌதமேந்திரனாக, அகல்யை தாவரமாக, புணர்ச்சி **உறுப்புகள் மலராக,**

**மலரிதழ்களினுள்**
**புரட்சி**
**ஆயிரம் அதிர்வெடி**
**திசையெங்கும்**
**ஒரே ஒரு மலர்**
**பூக்கும் பேரொலி....!**

பூக்கும் பேரொலி ஓங்கார ஒலி எது? சூரியனையே சிறைப்பிடிப்பது எது? திசையெங்கும் நீக்கமற ஏகமாய் நிறைந்திருக்கும் பிரம்மாதான் அது. இது அத்வைத தத்துவம்.

"ஜான் ஜெனே" போன்ற 'சுயபாலுறவு தாசியை'ப் பற்றி சிறப்பாக கட்டுரை எழுதிய அவரால் தன்னைப் பாதித்தவைப் பற்றி சிறப்பாக எழுத முடியவில்லை.

தன் தாயார் பட்ட கஷ்டங்களைப் பற்றி சொன்ன அவர், தாய்மைப் பற்றியும், பெண்ணுரிமைப் பற்றியும் எழுதவில்லை. இரண்டு நாட்கள் பட்டினி கிடந்து சோறு வடித்த கஞ்சியை வாங்கிக் குடித்தும், தன் வறுமை பற்றி, தன்னிரக்கம் பற்றி எழுதியதில்லை. அவருக்கு ஏற்பட்ட வெறுப்பைக் காட்ட படைக்கப்பட்டவை கூட அவருடைய ஆளுமைக்கு நியாயம் செய்யவில்லை.

தன்னுடைய தனிப்பட்ட கஷ்டங்களைவிட பொது விஷயங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாலேயே அவை சிறப்பாக வெளி வந்திருக் கின்றனவென்றே சொல்ல வேண்டும். 'கவிதை எழுதப் போகிறேன்' என்று என்றும் அவர் சொன்னதில்லை கட்டுரை எழுதத்தூண்டும் விஷயம் பற்றி பேசியதில்லை. இன்று பலர் கவிதை 'செய்வதை'ப் பார்க்கிறோம். திடீரென சிவராமு படைப்புடன் வந்து நிற்பார், அவரது படைப்பு தன்னிச்சையானது (Spontaneous).

சிவராமு மிகவும் வேகமாக கட்டுரை எழுதக்கூடியவர். எழுதுவதற்கு முன்னர் "நான் எழுதப் போவதில்லை, எழுதப் போவதில்லை" என்று பலமுறை சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் அதே நேரத்தில் தான் சொல்லவிருக்கும் கருத்து, மறுப்பு என்னவென்பதை விபரமாகப் பேசிக்கொண்டிருப்பார். திடீரென ஒரு நாளில் கட்டுரையுடன் வந்து நிற்பார். அவர் பேச்சில் சொன்னது அப்படியே கட்டுரையில் வந்திருக்கும். சிலர் பேசும்போது விபரமாகப் பேசுவார்கள். அதையே எழுதும்போது தடுமாற்றம் இருக்கும். மாற்றம் இருக்கும். சிவராமுவுக்கு தான் பேசியதை அப்படியே கட்டுரையாக எழுதிவிடும் ஆற்றல் உண்டு. "நான் எழுதமாட்டேன்.. எழுதமாட்டேன்" என்று சொல்லும் போதும் தான் சொல்ல வேண்டிய கருத்துபற்றி பேசும்போதும் சிந்திக்கிறார் என்று சொல்லலாம். எழுத ஆரம்பித்து விட்டால், நின்று கொண்டும்.... இரண்டு கால்களில் குந்திக் கொண்டும் எழுதியதை ஆச்சரியத்துடன் பார்த்திருக்கிறேன். சமையல் வேலையை என்னிடம் விட்டுவிட்டு வெங்கட் சாமிநாதனுக்கு ஒரு முறை அப்படித்தான் பத்து இருபது பக்கங்களுக்கு கடிதம் எழுதினார்.

வெங்கட் சாமிநாதனின் நடை காற்றாற்று வெள்ளம் போன்றது. இடையில் வரும் தடைகளை அடித்து நொருக்கித் தள்ளிவிட்டு தன்னுடைய கருத்தை நிலை நிறுத்துவது. அவரது நடை நம்மையும் அறியாமல் வேகமாக இழுத்துச் செல்லக்கூடியது. பின்னர் மீண்டும் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டிவிட்டு முடிந்துவிடுகிறது. சிவராமுவின் நடை ஒரு ஓடை நீரோட்டம். மெதுவாக, ஆனால் ஆழமாகப் பாயக்கூடியது. வாசிக்கும் போதே நிறுத்தி, நிதானித்து செல்லச்செய்கின்றது. தன்னுடைய கருத்து

மறுப்பிற்குரியது என்று தெரிந்தும், யாருக்கு மறுப்பு சொல்ல முடியும், சொன்னாலும் வேறு வகையில் மாட்டிக் கொள்வார்கள் என்ற நினைப்புடன் தன்னுடைய மறுப்புக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்வகையில் எழுதியதே 'ரொமான்டிஸ்ட்' பற்றி 'க. நா. சு. வின் இலட்சிய வித்துக்களில் எழுதியிருக்கிறாரோவென நினைக்கத்தூண்டுகிறது. வெங்கட் சாமிநாதனின் கட்டுரைகளில் உண்மை, நியாயம் இருக்கும். மறுப்பிற்குரியது என்றும் தெரிந்தும் எழுதியுள்ளார் என்று சொல்ல முடியாது. இவ்விருவரும் நன்றியுடன் தமிழ் வாசகர்களால் நினைவு கூறத்தக்கவர்கள். இவர்கள் இல்லாவிட்டால் பலரை நாம் அடையாளம் கண்டிருக்க முடியாது. பல போலிகள் நம் கண்களை மயக்கிக் கொண்டிருக்கும்.

• • •

"உயர்தரமான நுண்ணிய உணர்ச்சிகளை மென்மையாகவும், கட்டுப்பாட்டுடனும் வெளிவிடும் பண்பே "கிளாஸிஸம்" இதைப் படித்தும் டிக்சனரியிலிருந்து 'கிளாஸிஸம்' என்ற சொல்லுக்கு பொருள் தேடி எழுதியிருப்பாரோ சிவராமுவென்று நானும் 'அட்வான்ஸ் லேனர்ஸ் டிக்ஷனரி' 'ஆக்ஸ் போர்ட் டிக்ஷனரி' ஆகியவற்றில் 'மீனிங்' தேடினேன். கிடைக்கவில்லை. டிக்ஷனரியில் இல்லாத பொருளைக் கொடுக்கக் கூடிய மதிநுட்பம் நிறைந்தவர் சிவராமு என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. என்னுடைய சந்தேகம் எல்லாம் 'கிளாஸிஸம்' என்று பாராட்டப் பெறும் ஒரு உன்னத காலம் ஆங்கில இலக்கிய வரலாற்றில் இருந்ததா என்பதே.

'ரொமான்டிசம்' என்பது பற்றி பொதுஜன, வெகுஜன அபிப்ராயத்தையே கொண்டுள்ளார் என்றே தெரிகின்றது. "அன்பு.... காதல் சிறப்பு.... உணர்ச்சிக்கு அதிக இடம்" என க. நா. சு. சொல்லுவதே சரியான இடமென்றும், "மனிதனுக்கு பிற மனிதரிடம் நேயம் இருப்பது, எல்லோரும் சமம்.... எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள்... அவற்றை நிஜமாக்க கவிதை மூலம் உழைக்க வேண்டும்" என க. நா. சு. 'ரொமான்டிசம்' பற்றி சொல்வது தப்பு என்று தப்பாகச் சொல்லியுள்ளார். கிளாஸிஸம், ரொமான்டிசம் பற்றி தனித்தனியே கட்டுரை எழுதவேண்டிய அளவுக்கு விஷயம் உண்டு. இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

1660 முதல் 1745 வரையிலான காலகட்டத்தையே ஆங்கில இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கிளாஸிஸக்காலம் என வரையறுக்கிறார்கள். இதற்கு முன்னும், பின்னும் சில வருடங்களை சேர்த்துக் கொள்ளலாம். இன்னும் இதை இரண்டாவது சார்லஸ் பிரான்ஸிலிருந்து திரும்பி வந்ததுடன் (1660) ஆரம்பிக்கிறது என்றும் சொல்லலாம். 1649ல் இவருடைய தந்தை சார்லஸ்I உள்நாட்டு யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

'மன்னர் தூக்கிலிடப்பட்டது சரி' என துண்டு பிரசுரம் வெளியிட்டவர் மில்டன். இரண்டாவது சார்லஸ்ஸால் சிறையிடப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். முதலாவது சார்லஸ் தூக்கிலிடப்பட்டதோடு நேரடி சம்பந்தம் உள்ள அனைவருமே தூக்கிலிடப்பட்டனர்.

இக்காலகட்டத்தில்தான் இங்கிலாந்தில் தீவிரமாக புரட்டஸ்தாந்து சமயம் பரவியது. அத்துடனேயே அழகு பொருட்களை வெறுத்தல், அலங்காரங்களை வெறுத்தலும் பரவியது. ஏன் இயற்கைக் காட்சியை ரசிப்பது, மாதா கோவிலிலுள்ள சிற்பங்களை ரசிப்பதுகூட குற்றமாய் கருதப்பட்டது. இசை வேண்டாத ஒன்றாக ஒதுக்கப்பட்டது. இது கவிதைகளில் ஒலி நயம் ஒதுக்கப்படக்காரணமாகியது.

இதே காலத்தில் ஐரோப்பிய இலக்கியத்தில் முதன்மையடைந்திருந்த இத்தாலி, பின்னுக்குத் தள்ளப்பட்டு பிரஞ்சு இலக்கியம் தனது பாதிப்பை ஏற்படுத்தியது. அன்று பிரஞ்சு இலக்கியத்தின் முக்கிய கூறுகளாய் இருந்த தெளிவு, வேகம், அதோடு வடிவ அமைப்பில் கட்டுப்பாடு, முடிவில் சரியான தீர்மானம் ஆகியவையும் ஆங்கில இலக்கியத்தையும் பாதித்தது. இப்பாதிப்போடு அரசியல் பாதிப்பும் சேர புலமையை வெளிப்படுத்தும் சாதனமாகவும், மேல் மட்ட வர்க்கத்தினரின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் சாதனமாகவும் ஆயின படைப்புகள்.

சமய மாற்றம் படைப்பிற்கு முக்கியத் தேவையாக கற்பனையையும், அழகுணர்ச்சியையும், உத்வேகத்தையும் புறமொதுக்கச் செய்ததால் படைப்புகள் 'வரட்டு எழுத்தாயின' எளிய மக்களின் வாழ்க்கை முறை புறக்கணிக்கப்பட்டதோடு சாதாரண பொது விஷயம் கூட நேரடியாகச் சொல்லப்படாமல் சுற்றிவளைத்துச் சொல்லப்பட்டதோடு கடுஞ்சொற்களும் பிரயோகிக்கப்பட்டன.

இதற்கெல்லாம் மேலாக ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்னவெனில் இக்கால படைப்பாளிகள் அழகுணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்த சேக்ஸ்பியரையும், சூசரையும், ஸ்பென்சனையும்கூட ஒதுக்கி வைத்ததுவும், அவர்களின் பெயரைச் சொல்வதே குற்றமாகக் கருதியதுதான்.

இக்காலகட்ட ஜாம்பவான்கள்தான் ட்ரைடனும், அலெக்ஸாண்டர் போப்பும். இவர்களுடைய படைப்புகளிலும் மேற்படி குறைபாடுகள் சற்றும் குறையாமல் அப்படியே இருந்தன. மேலும், இக்கால படைப்பாளிகள் படைத்தவை அனைத்தும் அவர்களுடைய தனித்தன்மையை வெளிப்படுத்தாமல் ஒரே மாதிரி (தர்மு - அப்துல் ரகுமான்) ஆகவே இருந்தன. இதுவே கிளாஸிஸ சாதனை. ஒன்றும் புதுமலர்ச்சி ஏற்பட படைத்துவிடவில்லை.

கிளாஸிஸம் காலத்தில் உரைநடை வளர்ச்சியடைந்தது உண்மைதான். எனினும், அதுவும் அரசியல் விமர்சனம், 'சட்டையர்' என்பதற்கு மேலாக குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் இலக்கிய சாதனைகள் எதுவும் செய்துவிடவில்லை.

ரொமான்டிஸ வரலாறு பிரஞ்சு புரட்சியைத் தொடர்ந்து ஆரம்பிக்கின்றது. 'ரொமான்டிக் பீரியட்' என்பதை விட 'ரொமான்டிக் ரிவிவல்' என்ற பதத்தையே வரலாற்று ஆசிரியர்கள் உபயோகப் படுத்துகின்றனர். ஏனெனில் இயற்கைரசனை

என்பதும் அழகுணர்ச்சியைப் பாராட்டுவதும், சூசர் காலத்திலும், ஸ்பென்ஸர் காலத்திலும், ஷேக்ஸ்பியர் காலத்திலும் இருந்திருக்கின்றது. இது கிளாஸிஸ காலத்திலேயே வேண்டாத ஒன்றாக மறுக்கப்பட்டு, புலமை வெளிப்பாடும், வடிவ அமைப்புமே கவிதை, படைப்பு எனக் காட்டப்பட்டது. ரொமான்டிஸ்ட் செய்தது புணருத்தாரணமே. இதனாலேயே 'ரொமான்டிக் ரிவிவல்' என இக்காலகட்டம் பெயர் பெறுகிறது.

பிரஞ்சு புரட்சியே கவிஞர்களிடையே கற்பனை உணர்வை தட்டியெழுப்பியதோடு சுதந்திர வேட்கையையும் 'மனிதர்கள் எல்லோரும் சமம்' என்பதையும், சகோதரத்துவ உணர்வையும் ஏற்படுத்தியது. பிரஞ்சு 'புரட்சியில் நேரடியாக ஈடுபாடு கொண்டிருந்த' வேட்ஸ் வேத் (words worth) தின் படைப்புகளில் இதன் பிரதிபலிப்பு இருந்தது. (பின்னாளில் பிரஞ்சு புரட்சி ஏற்படுத்திய பின்விளைவுகளால் வெறுப்புற்றார் என்பது வேறு விஷயம்)


கிராம மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பது. அவர்களுடைய பேச்சுவழக்கையே கவிதையிலும் ரொமான்டிஸ்ட் கவிஞர்கள் கைகொண்டதோடு எளிய மக்களிடம் இருந்த உயர்ந்த பண்புகளையும் எடுத்தியம்பினர்.

கற்பனைக்கும், அழகுணர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்த ரொமான்டிஸ்ட் இயற்கையழகை ஆராதனை செய்னர், பூஜித்தனர். இயற்கையிலும் ஆன்மா இருக்கிறது என்றும், அது மனித இனத்துடன் நெருங்கி இருக்கிறது என்றும் வேட்ஸ்வர்த் நம்பினார். பிரபஞ்சத்திலுள்ள எல்லா பொருட்களுக்கும் ஒரே ஆன்மா உயிரளிக்கிறது என்றும், மனிதனை அதிலிருந்து பிரிக்க முடியாதென்று வேட்ஸ்வர்த் நம்பினார்.

நாஸ்திகத்தின் தேவை பற்றி கட்டுரை எழுதியதால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட 'ஷெல்லி' கூட இயற்கையின் சக்தியையும், அதன் உட்பொருளையும், தன்னுடைய கவிதையில் இருந்து வெளிப்படுத்தியுள்ளார்.

எளிய மக்களின் வாழ்க்கை, சொல் நடை பற்றி எழுதும் போது, பிரமிள் சொல்வது போல கட்டுப் பாடற்ற பிரவஹிப்புடன் கற்பனையும், உணர்ச்சியும் வெளிப்பட்டது என்று சொல்ல முடியும். அப்படி செய்திருந்தால் யதார்த்த பண்பு கெட்டே இருக்கும். அதே நேரத்தில் உணர்ச்சியின் உச்சஸ்தானத்தையும் தேவைப்படும் போது ரொமான்டிஸ்டுகள் அடைந் தேயுள்ளனர்.

வடிவமைப்பில் பற்பல யுக்திகளையும், கையாண்டுள்ளனர். ரொமான்டிஸ்டுகள். ஒரே பொருள் பற்றி வெவ்வேறு கவிஞர்கள் எழுதும் போது அவை தனித்தன்மை உடையனவாகவே இருந்திருக்கின்றன. ஸ்பொன்டேனிடியும், இன்டிஜிவாலிடியும் இருக்கிறது. ஏன் Entitutionக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். (இன்டியூசஸன் என்பது உள்ளுணர்வு. ஏதோ இருக்கிறது. ஏதோ நல்லதோ கெட்டதோ நடக்கப்போகிறது என்பதை உணர்த்துவது. இது 'பிரன்ஸ் ஆ.்.ப் மைன்ட' அல்ல. அது வேறு. இது வேறு. அசரீரியில் அஜித்ராம்



ப்ரேமிள் 'பிரன்ஸ் ஆ.்.ப் மைன்டை'யே இன்டியஸ னாக மயங்குகிறார்.) கிளாஸிஸ கவிதைகளைப் போல இயந்திர உற்பத்தியாக இருக்கவில்லை.

புதுக்கவிதைகளின் காலத்திற்கு முந்திய, இன்னும் பாரதிக்கும் முந்திய காலக் கவிதைகள் வெறும் புலமை வெளிப்பாடாகவே தமிழிலும் இருந்திருக்கின்றன. பாரதிக்கு முன்னால் இருந்தவன் கம்பன் என்ற கவிஞன். இவ்விருவருக்கும் இடையில் இருந்த கவிஞன் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய கவிஞன் எவனுமே இல்லை தமிழ் இலக்கிய வரலாற்றில். இருந்தவர்கள் அனைவருமே புலவர்கள்தான்.

புதுக்கவிதையில் சாதனை புரிந்துள்ள பிரமிள், சுந்தரராமசாமி, நகுலன், பிச்சமூர்த்தி இவர்களோடு இன்னும் பலரையும் ரொமான்டிஸ கவிஞர்கள் என்று பெருமையுடனேயே சொல்லலாம். ரொமான்டிக் கவிஞர்களின் சாதனை ஓரளவுக்கு புரிந்துள்ளதால்.

'ரொமான்டிஸம்' என்றால் என்னவென்றே தெரியாதவர்களுக்கே 'ரொமான்டிக் கவிஞன்' என்பது கொச்சையாகத் தெரியும். புதுக்கவிதையின் பிதாமகர்களான மேற்படி கவிஞர்களுக்கு ஆங்கில அறிவும், ரொமான்டிஸ இயக்கம் பற்றிய பரிச்சயமும் இருந்திருக்கிறது என்றே நம்ப இடமுண்டு.

இந்த ரொமான்டிஸம் "காளிதாசன் காலத்திலும், சமஸ்கிருத படைப்புகளிலும் இருந்திருக்கின்றன" என்று பிரமிள் சொல்வது சரியே. எனினும் 'ரொமான்டிக் ரிவிவல்' யின் பாதிப்பு இந்திய கவிஞர்கள், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களிடம் இல்லையென்று சொல்ல முடியாது. ரொமான்டிக் கால கவிஞர்களுக்கு முன்னர் இருந்த எந்த ஆங்கிலப் படைப்புகளும் இந்தியப் படைப்புகளைப் பாதித்ததெனத் தெரியாததால் "முதன் முதலில் ஆங்கில இலக்கியத்திலிருந்து இந்தியா பூராவிலும் பரிச்சயமான இலக்கியம் ரொமான்டிக் இலக்கியம்" என்று க. நா. சு. சொல்வதில் குறைகாண முடியவில்லை. "ருசியுணர்வு இருந்தால்தான் ஒரு படைப்பு ஜீவனுள்ளதாக இருக்கும்" அந்த ருசியுணர்வு கிளாஸிஸ கவிஞர்களிடம் இல்லை. ரொமான்டிஸ்டுகளிடமே இருந்தது. இருக்கிறது.

•••

ராஜாஜி ராஜகோபாலன் - கனடா

# குதிரை இல்லாத ராஜகுமாரன்

அந்த இரவு நேர எக்ஸ் பிரஸ்ரயில் மற்றெல்லா ரயில் களையும் போலவே வலு நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது.

அது எப்போ ஊருக்குப் போய்ச் சேரும் என்பதைப்பற்றி அக்கறை கொள்ள வேண்டியதில்லை, ஓடிக் கொண்டிருந்தாலே போதும் என்று எண்ணிக் கொண்டவர்கள்போல் பயணிகள் அத்தனைபேரும் மனிதப் பொதிகளாய் உள்ளே அடைபட்டுக் கிடந்தனர். அதன் கடைசிப் பெட்டியின் வாசலோரமாக இருந்த நடைபாதையில் பழைய பத்திரிகைகளை விரித்துவிட்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த பலபேரில் அவனும் ஒருவனாகப்படுத்திருந்தான்.

இரண்டுபேர் மட்டும் அமரக்கூடிய இருக்கையில் யன்னல் ஓரமாக ஒருக்கழித்திருந்த விஜயா ஆரம்பத்திலிருந்தே அவனைக் கவனித்துவந்தாள். அந்த ரயில் கொழும்பு-கோட்டையிலிருந்து புறப்பட்டபோது நின்றபடி பயணம் செய்துகொண்டிருந்தவர்களில் அவன் ஒருவன்தான் கடைசியில் ஓடிவந்து தொற்றிக் கொண்டான். அதனால் நடைபாதையில் நிற்பதற்குக்கூட அவனுக்கு இடம் கிடைக்காமற் போனது. சிறிது நேரத்தின்பின் கிடைத்த ஒற்றை-ஆள் இடைவெளியில் சுவரோடு சாய்ந்து நின்றுகொண்டான். ரயிலின் ஆட்டத்திற்கேற்ப அசைந்து விழாமல் நிற்பது எப்படி என்பதை ஒரு கலையாகப் பயின்றவன்போலவும் நிற்பதற்கு இந்த இடமாவது கிடைத்ததேயெனத் திருப்திப்பட்டவன் போலவும் அவன் தோன்றினான். அவனைத் தொடர்ந்து அவதானித்த சிறிது நேரத்தில் ஒரு குட்டி நித்திரை வந்து அவளை அணைத்தக்கொண்டது.

விஜயா மீண்டும் கண் விழித்தபோது கண்கள் அவனைத் தாமாகவே தேடின. "சிச் சீ, இதென்ன பழக்கம்? அவன் யாரோ முன் பின் அறிமுகமில்லாதவன், ஏன்தான் அவனைத் தேடுகிறாய்? பார்க்கப் பாவமாக இருந்தது அதனால்தான் தேடினேன். அதற்காக? பேசாமல் படுத்துக்கொள். இப்படி சீட் மூலையில் இடம் எல்லாருக்கும் கிடைத்துவிடுமா? உனக்கும் நாளைக்கு வீட்டில் அவசர வேலைகள் காத்திருக்கின்றன. நன்றாய் நித்திரைகொண்டு போனால்தானே மற்றவர்கள் பார்க்க லட்சணமாயிருப்பாய்." உண்மைதான், ஒத்துக்கொள்கிறேன். அதற்காக நிற்க ஒரு அடிகூட இடமில்லாமல் அவதிப்பட்டவனுக்குஇருக்கையில் வசதியாக இருப்பவள் இரக்கப்படுவதில் என்ன பிழை இருக்கிறது? ரயிலின் குலுக்கலில் கண்கள் அயர்ந்தபோதும் மனம் அயரவில்லையே. இன்னுமொரு முறை அவனைத் தேடுவோம். இது தான் கடைசிமுறை. இதுவரை எங்கேயாவதொரு மூலையில் இடம் பிடித்திருப்பான். ஒருமுறை மட்டும் பார்த்துவிட்டு ஒரேயடியாக நித்திரை கொள்ளவேண்டியதுதான்.



ஓவியம் - பிரமிள்

ரயிலின்வேகம் கூடக்கூட பெட்டியின் குலுக்கலும் அதிகரித்துக் கொண்டிருந்தது. அது எழுப்பிய தாளத்திற்கேற்பஇருபுறமும் ஆடியாடி நித்திரையானவர்களும், இடைக்கிடை குப்புற விழுந்து உடன் சமாளித்துக்கொண்டு தலை நிமிர்த்தியவர்களும் கூரையை நோக்கி வாயைத் திறந்தபடி உலகை மறந்தவர்களும் தலையை அடுத்தவர் தோளில்

சாய்த்துக்கொண்டவர்களும் கண்ணைத் திறந்தபடி நித்திரை செய்யும் கலையைப் பயின்றவர்களும் வாயிலிருந்து வடிவதை ஒழுங்காகப் புறம் கையால் துடைத்துக் கொண்டவர்களுமாகத் தன்னைச் சுற்றியிருந்த கூட்டத்தை. விஜயா அக்கறையுடன் அவதானித்தாள். அவளுக்கு நேர் முன்னால் இருந்த நடுத்தர வயதுத் தம்பதிகள் ஏற்கனவே ரயிலில் நித்திரைகொண்டு பழக்கப்பட்டவர்கள்போல்அவளுக்குத் தோன்றியது. மனைவி தன் மடியில் சாய்ந்திருக்க அவர் ஏதோ கை நிறையப் பூப்பந்தை வைத்திருப்பவர்போன்ற திருப்தியிலும் ஆழ்ந்த நித்திரையிலும் தன்னை மறந்திருந்தார். நடை பாதையில் கோணலும் மாணலுமாகப் படுத்திருந்தவர்கள் இருக்கைகளில் இருந்தவர்களிலும் பார்க்க உலகை மறந்து நித்திரை கொண்டிருந்தார்கள்போல் அவளுக்குத் தோன்றியது. அவனை மட்டும் கண்ணுக்கு எட்டிய திசையில் காணவில்லை. அவளுக்கு நெஞ்சில் எதுவோ அடைத்தது. போத்தலில் வார்த்துக்கொண்டுவந்த தண்ணீரில் இரு மிடறு குடித்துத் தன் கண்களையும் மனதையும் சீர்படுத்திக்கொண்டு திரும்பவும் தேடினாள். அவனை மட்டும் காணவேயில்லை. இனி எப்படி நித்திரை வரும்? ஏன் வராது, அவன் நினைவை மனதிலிருந்து அகற்றிவிட்டுச் சாய்ந்துகொள் நித்திரை தானாகவே வரும்.

அதோ அங்கே தெரிவது அவனின் நீல நிறக் காற்சட்டையல்லவா?விஜயா தனக்குப் பக்கத்தில் இருந்தவருக்கு முன்னால் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அவன்தான், அவனேதான் வாசலுக்குப் போகும் நடைபாதையில் சுருண்டு படுத்திருந்தான். கீழே விரித்திருந்த பத்திரிகைத் தாள்கள் தாறுமாறாய்ப் பரவியிருந்தன. கால்களை நீட்ட இடமில்லாததால் மடக்கியபடி அவன் படுத்திருந்தபோதும் அவன் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான் என்பதை அவனின் ஒரே ஒழுங்கில் அசையும் உடலிலிலிருந்து அறிந்து கொண்டாள். அதுதான் பார்த்துவிட்டாயே, அவனுக்குப் படுக்க ஒரு இடம் கிடைத்துவிட்டது. நல்ல நிம்மதியா கவும் நித்திரைகொள்கிறான். புண்ணியம் செய்தவன். நான் இங்கே சீட்டின் மூலையில் இடம் பிடித்தும் இரவிரவாக விழித்துக்கொண்டிருக்கிறேன். போகட்டும், எனக்குத்தான் தூக்கம் வராவிட்டாலும் தம்மை மறந்து தூங்குபவர்களைக் காணும்போது என் மனதிலும் அமைதி உண்டாகிறது.

ரயில் நடுச் சாமத்தில் அனுராதபுரத்தை அடைந்தபோது இறங்குபவர்கள் ஏற்படுத்திய சலசலப்பில் விஜயாவும் விழித்துக்கொண்டாள். கையில் கட்டிய மணிக்கூட்டைப் பார்த்தபோது மூன்று மணித்தியாலம் நன்றாய் நித்திரை கொண்டுவிட்டேனென்று தனக்குத் தானே கூறிச் சந்தோசப்பட்டுக்கொண்டாள். இன்னும் நாலு மணித்தியாலமோ அதற்குக் கூடவோ இதேபோல் பயணமாகவேண்டும். ரயிலின் இந்தத் தாலாட்டில் யாருக்குத்தான் நித்திரை வராது, இல்லையென்றால் பழக்கமில்லாத இந்தச்சூழலில் இப்படி நித்திரை கொண்டிருப்பேனா? இன்னொருமுறை இதேபோல் தொடரலாம். இருக்கையின் மூலை முன்னையிலும் பார்க்க இப்போது வசதியாக இருக்கிறது. அட கடவுளே, அவனைத் துப்பரவாக மறந்துபோனேனே. அவன் படுத்திருந்த திக்கை அவள் திரும்பிப்பார்த்தபோது நித்திரை குழப்பப்பட்டு எழும்பி நின்றவனைப் பாவம், வாசலுக்கு வெளியே அவசரம் அவசரமாக இறங்க முயற்சித்துக்கொண்டிருந்த பயணிகள் எல்லாப் பக்கமும் தள்ளியும் இழுத்தும் சென்றனர். அவர்கள் வெளியேறினதால் பெட்டியில் கணிசமான இடங்களும் வெறுமையாகிவிட்டன. அவளுக்கு முன்னாலிருந்த தம்பதிகளும் மேலேயிருந்த தமது பொதிகளை ஒவ்வொன்றாய்க் கையிலெடுத்து இறங்கிச் செல்ல முயன்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் இடத்தில் ஒன்றிலாவது அவன் வந்து இருக்கமாட்டானாவென்று அவள் மனம் ஆவல் கொண்டது. அவனும் மிக நிதானமாகப் பெட்டியின் உட்புறம் வந்து வெறுமையாய்ப்போன இருக்கைகளை நோட்டம் விட்டான். அப்போதுதான் விஜயாவைக் கண்டான்.

சேலைத் தலைப்பைத் தோள்மேலாய் இழுத்து மூடிக்கொண்டு வட்டமான கரிய விழிகளால் தனது அசைவுகளையே நோட்டம் விட்டுக்கொண்டிருந்தவளை அவன் கண்டதும் அவள் முன்னாலிருந்த வெற்றிடமும் அவனை வாவென்று அழைத்தது. அவன் ஏனோ தடுத்து நிறுத்தப்பட்டவன் போலவும் முன்பின் அறிமுகமில்லாத ஒரு அழகிய இளம் தமிழ் பெண்ணின் முன்னால் இருக்கத் தயங்கியவன்போலவும் சிறிது நேரம் ஒதுங்கி நின்றான். அவனைத் தான் இடைவிடாதுகவனிப்பதை அப்போதுதான் உணர்ந்துகொண்ட விஜயா யன்னலுக்கு வெளியே மெல்லமாய்ப் பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.

நாளை காலையானதும் அம்மா அங்கே குசினிக்குள் தலைக்குமேல் வேலையாக இருந்தாலும் அடிக்கடி வெளி வாசலையும் எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பாள். அப்பாவோ வழக்கம்போல் முற்றத்தைக் கூட்டித் துப்பரவாக்குவதற்குப் பதிலாக வெளிக் கேட்டைத் திறந்துவிட்டு றோட்டைக் கூட்டிக்கொண்டிருப்பார். அவருக்கு றோட்டில் செல்லும் எல்லா வாகனமும் யாழ்ப்பாண ஸ்டேசனிலிருந்து பருத்தித்துறைக்குப் போகும் பஸ்ஸாகவே தெரியும். இடைக்கிடை வீட்டு வாசலுக்குள் எட்டிப் பார்த்து பஸ் இன்னும் வந்தபாடில்லையென்று ஏமாற்றத்துடன் அம்மாவுக்கு அறிவித்துக்கொண்டிருப்பார். நானோ அவர்களைப்பற்றிஒரு சிறிதும் சிந்தியாமல் இந்த இளைஞன் அடுத்து என்ன செய்யப்போகிறானென்று அறிந்தால் போதும் என்ற ஆவலுடன் கண்களைச் சொருவவிடாமல் அவதானித்துக்கொண்டிருக்கிறேன். அவனுக்கும் அதுவரை சுருண்டு படுத்திருந்ததால் அலுப்பு ஏற்பட்டிருக்கலாம். யன்னலுக்கு வெளியே

திரும்பியிருந்த விஜயாவைத் தன்னோடு பயணமாகும் இன்னொரு பிரயாணியாகக் கருதியவன்போல் அவளுக்கு முன்னால் வெறுமையாயிருந்த இருக்கையில் தயக்கத்துடன் அமர்ந்துகொண்டான். இவன் முற்பிறப்பில் ஏதோ புண்ணியம் செய்திருப்பானோ? இருக்கையின் மூலையில் சாய்ந்த அடுத்த கணமே நித்திரையாகிவிட்டான்.

விஜயாவுக்கு ஏமாற்றம் மட்டுமல்ல அவமான மாகவும் போய்விட்டது. அவளொரு சாதாரண பெண்ணாக முதல் பார்வையில் தோன்றினாலும் நன்றாய்க் கவனிப்பவர்களின் கண்ணில் நறுக்கியெடுத்ததுபோன்ற முகத்துடன் அடக்கமானதொருஅழகியாகத்தானிருப்ப ாள்.அவளின் கறுப்பும் இல்லாத சிவப்பும் இல்லாத நடுத்தர நிறத்தையும் இதழ்களில் கூப்பிட்டவுடன் ஓடிவந்து உட்காரும் புன்னகையையும் கனவுகள் புதைக்கப்பட்ட கன்னக் கதுப்பையும் அவர்கள் காணத் தவறமாட்டார்கள். இவனெப்படி ஒருமுறையாவது என்னைக் கண்டுகொண்டதாய்க் காட்டி ஒரு புன்சிரிப்பைக்கூட வெளியிடாமல் ஒதுங்கியிருக்கலாம்? தன் நித்திரையின் அவசியமும் நாளைய தினத்தின் முக்கியமும் அவனை அப்படிச் செய்யவைத்திருக்கலாம். ஏய் விஜயா, இதற்கெல்லாம் முன்பு துளியும் அறிமுகமில்லாதவனை நோகலாமா? அவனுக்கு மனதில் நிம்மதி இருக்கிறது அதனால் சொல்லி வைத்ததுபோல் நித்திரைகொள்கிறான். நீ மனதில் நிம்மதி இல்லாததால் விழித்துக்கொண்டிருக்கிறாய். இதென்ன இது? ஏனிந்த அவசியமில்லாத விசாரணைக ளெல்லாம். நாளையன்றைக்கு என்னைப்பார்க்க ஒரு புதியவர் எங்கள் வீட்டுக்கு வருகிறாராம். அவர் பத்தாவது ஆளோ நூறாவது ஆளோ எவருக்கும் சரியான கணக்குத் தெரியாது. என்னவாயிருந்தாலென்ன அவர் எப்படி இருப்பாரென்றல்லவோஇப்போது நான் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். அதை விட்டு யாரோ முன்பின் தெரியாத இந்த இளைஞனைப் பற்றி யோசித்து மூளையை குழப்பிக்கொண்டிருக்கிறேனே. இது எந்த வகையில் நியாயம்? என்றாலும்இவனைக் கடைசியாக ஒருமுறையாவது பார்த்துக்கொள்வோம். அதில் அப்படியென்ன பிழை இருக்கப்போகிறது?

இவனுக்கு வயது இருபத்தேழு, இருபத்தெட்டு இருக்கலாம். இன்னும் ஒரிரு அங்குலம் கூட வளர்ந்திருந்தால் ஆறடியை எட்டியிருப்பான். றோஸ் கலந்த கறுப்பு நிற முகத்தில் படர்ந்திருந்த மீசை மேல் உதட்டை மூட முயன்றதுபோல் வழிந்திருந்தது. சிகரட் புகைத்துப் பழக்கமில்லாதவனோ, அதுதான் வாய் இப்படிச் சிவந்துபோயிருக்கிறது. மேற்சட்டை உடம்போடு கச்சிதமாகப் பொருந்தியிருந்தது. சட்டைப் பையில் ஒரு பேனாவும் சரிந்து படுத்திருந்தது. பையினூடாக ஒரு மடித்த கடதாசி துல்லியமாய்த் தெரிந்தது. ஒட்டுமொத்தமாய் யாழ்ப்பாணத்துப் படித்த இளம் ஆள், கொழும்பிலுள்ள ஏதோவோர் கந்தோர் சிறையில் என்னைப்போல் ஆயுட் தண்டனை அனுபவிக்கும் இன்றைய உத்தியோகத்தனும் நாளைய ஏழையுமாயிருக்கவேண்டும். விஜயா அவனை நித்திரைகொள்கிறான்தானே என்ற தைரியத்தில் கூர்ந்து கவனித்தாள். அட, நித்திரையிலும் சிரிக்கிறானே! தன்னை நான்பார்த்ததைக் கவனித்திருப்பானோ?. நித்திரை கொள்வதுபோல் நடிக்கிறான் போலிருக்கிறது. இவன் போன்றவர்களை நம்பக்கூடாது. இல்லையில்லை, இவன் நடிக்கவில்லை. உண்மையாய்த்தான் நித்திரை கொள்கிறான். நித்திரையிலும் ஏதோ இனிமையான நிகழ்ச்சியை நினைத்துக்கொண்டிருப்பான்,அதனால்தா ன் சிரிப்பு வந்திருக்கும். நானும் இப்படி நித்திரையில் சிரிக்கவேண்டும், அது எப்போது நடக்கப்போகிறது? நாளையன்றைக்கு என்னைப் பெண் பார்க்க வருகிறவர் இவனைப்போல இருப்பாரோ? இருந்தால் எவ்வளவு நல்லது. ஆனால் அம்மா எழுதினாளே என் வயதுக்கு மிகப் பொருத்தமான ஆள் என்று. தாய் எழுதிய கடிதத்தின் வரிகள் நினைவுக்கு வந்ததும் முன்னால் நித்திரையிலிருந்தவன் மீது வைத்திருந்த பார்வையை எடுத்து யன்னலுக்கு வெளியே எறிந்தாள். கண்ணுக்குள் எதுவும் பறக்காமலேயே நீர் கசிந்தது. அம்மா எழுதியதைப் பார்த்தால் வருகிறவருக்கு நாற்பத்தைந்து வயது இருக்கலாம். முப்பத்திரண்டு வயதான என்னைப் பார்க்க முன் இருக்கையில் இருப்பவனைப்போன்ற இளைஞனா வரப்போகிறான்? இப்போது உண்மையிலேயே கண்ணுக்குள் தூசி எதுவோ பறந்துவிட்டது. அல்லது கண்களில் அழுகை வந்து தொற்றிக்கொண்டது.

வருகிறவர் இவனைப்போல் இளம் கறுப்பாக இருந்தால் பரவாயில்லை. நான் ஓரளவுக்குச் சிவப்புத்தானே, அவர் கறுப்பாய் இருந்தால் அப்படிப் பெரிதாக எதுவும் மோசமில்லை. ஆனால் என் வயதோ இன்னும் இரண்டு வயதோ கூட இருந்தால் எல்லாம் பொருந்த இடமிருக்கிறது. நாற்பது வயதுக்கு மேலிருந்தால் தலையில் மயிரைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டிவரும், இவனுக்கிருப்பதுபோல் உசார் இல்லாமல் ஆள் சோர்ந்துபோயிருப்பார். கையில் விலையுயர்ந்த மணிக்கூடும் பளபளக்கும் உடுப்புகளும் இருந்தால் போதுமா? தொலைந்துபோன மாப்பிளைத் தோற்றத்தை எங்கே தேடி எடுக்கலாம்? அம்மா, அப்பாவுக்குப்பைத்தியம் தான்பிடித்துவிட்டதோ?

போன வருஷம் தீபாவளிக்கு ஊருக்குப்போன போதுவேறொருவன் என்னைப் பார்க்கவந்தான். லண்டனில் இருப்பவனாம். பெயர் ஏதோ சொன்னார்கள். மாப்பிளையாய் வரப்போகிறவன் மட்டும்தானே பெண் பார்க்க வரவேண்டும். அந்தப் படை பட்டாளமெல்லாம் எதற்காக அவனோடு கூட வந்ததாம்? அப்பாவுக்குப் பிடிக்கவில்லை, எனக்கும் அறவே பிடிக்கவில்லை. அம்மாவுக்குத்தான் நிறைய வேலை. கடைசியில் அவர்கள் ஒன்றுமே சொல்லாமல் போனதுதான் அம்மாவுக்குப் பெரிய மனவருத்தம். அவர்கள் போய் ஒரு கிழமையால் இதற்கு ஒழுங்கு செய்தவர்

அப்பாவைக் கண்டு நிலைவரம் சொன்னாராம். நான் அப்போது கொழும்புக்குத் திரும்பிவிட்டதால் வீட்டில் நடந்த பேச்சில் பங்கு பெறவில்லை. முடிவு எனக்குத் தெரிந்ததுதான். வயது கூடிப்போய்விட்டது. வயது ஏன் கூடிப்போனதென்றால் எனது சாதகத்தில் சனியோ செவ்வாயோ காலை மடக்கிய காரணத்தால் பார்க்க வந்தவர் ஒருவரது சாதகத்தோடும் ஒத்துவரவில்லை. இப்படியாகச் சம்பந்தம் ஒவ்வொரு முறையும் பேசமுன்னமே குழம்பிப்போய்விட்டது. இந்த மாப்பிளைகளெல்லாம் சாதகக் குறிப்பையா கலியாணம் கட்டப்போகிறார்கள். இப்படியே போனால் அடுத்த மாதமோ அடுத்த வருஷமோ என் கன்னத்தில் ஓரிரு வெள்ளை மயிர்காதோடு ரகசியம்பேசக்கூடும். அதற்கு முன் ஒரு வழி கிடைக்காமலா போய்விடும்?

நான் முந்திப் பழகிய கதிர் என்ற கதிர்காமநாதன் வலு ஸ்மார்ட்டாக இருப்பான். சிரிப்போ கொள்ளை கொள்ளும். எங்கள் கந்தோருக்கு ஒரே சமயத்தில் பட்டாளம்போல் வந்து சேர்ந்த புதியவர்களில் கதிரும் ஒருவன். அவனும் என்னைப்போல்தான் நிறம். மெலிந்த உடலும் அளவான உயரமும் அவனை எந்தவொரு இளம்பெண்ணும் இன்னொருமுறை திரும்பிப் பார்க்கத் தூண்டும். அவன் வந்த அடுத்த கிழமையே எல்லார் மத்தியிலும் அசல் ஆம்பிளை என்ற பெயரை வாங்கிக்கொண்டான். ஆனால் ஐம்பது வயதை எட்டிய துரை மட்டும் கதிரைப்பற்றி அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. வலியப் போய் இளம் பெண்களை வம்புக்கு இழுக்கும் தனக்குச் சரியான போட்டியாக வந்துவிட்டானேயென்ற வயிற்றெரிச்சல். ஆனால் கதிரின் நோக்கமெல்லாம் எக்கவுண்டனாவதுதான். பாவி, ஒரு பெண்ணுடனாவது சினேகிதம் பிடித்தானா? சரியான காரியக்காரன். அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் படிப்பையும் முடித்து எங்கேயோ குட்டி எக்கவுண்டனாகிவிட்டான். எங்களில்பலருக்குப் பலத்த ஏமாற்றம். அவன் போனபிறகுதான் சே, அவனைக் காதலித்திருக்கலாமே என்று எண்ணித் தம்மையே நொந்துகொண்டவர்கள் பலர் என்னோடும் வேலை செய்தார்கள், வெளியிலும் இருந்தார்கள். எனக்கு மட்டும் அந்த யோசனை வரவில்லை.

நானும் நினைத்திருந்தால் காதல் என்ற பெயரில் கொழும்பு கடற்கரையிலும் கோயில் திண்ணைகளிலும் மாறி மாறி அகப்பட்ட ஒருவனோடு சுற்றி என் இளமைக்காலக் கனவுகளுக்கு உருவமும் ஊட்டமும் கொடுத்திருக்கலாம். இறுதியில் எனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானஒருவன் கிடைத்திருக்கவும் கூடும். அம்மா, அப்பாவுக்கும் ஒரேயடியாய் நிம்மதி கிடைத்திருக்கும். எப்பவோ வழுக்கிச் சென்ற வாய்ப்புகளை இப்போ நினைத்துக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? நான் அப்படியான பெண்ணாக இருக்கவில்லை. அதற்காக நான் நிச்சயம் பெருமைப்படலாம்.

ரயில் ஓடிக்கொண்டிருந்தது. முன்னால் இருந்த இளைஞன் இருக்கையில் இருந்து நித்திரைகொண்டு பழக்கம் இல்லாததாலோ எதிரே ஒரு இளம் பெண் விழிகள் மினுங்கத் தன்னைக் கடைக் கண்ணால் பார்த்தபடி இருந்ததாலோ தொடர்ந்து மூலையின் சௌகரியத்தை அனுபவிக்க விரும்பாதவனாய் எழுந்து உடையைச் சரிசெய்துகொண்டு மீண்டும் உட்கார்ந்துகொண்டான். அப்போதுதான் விஜயாவுக்கும் அவனுக்குமிடையே அந்தவொரு ஆச்சரியமான இரசாயன மாற்றம் ஏற்பட்டது.

எவ்வளவு நேரத்துக்குத்தான் ஆளுக்காள் சும்மா சிரிப்பை எறிந்து பிடித்து விளையாடிக் கொண்டிருப்பது? பொழுதுபோக்காக விஜயாவும் அவனும் அரை மனத்துடன் அறிமுகம் செய்துகொண்டார்கள். அவன் தனது பெயரையும் சொல்லி அவள் பெயரையும் கேட்டு அறிந்துகொண்டான். தனக்கு அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் வேலையென்றான். விஜயா தன் வேலையைப் பற்றியும் சொன்னாள். அவனும் விருப்பத்துடன் கேட்டான். அதனால் அவளும் முந்தியே அவனோடு பழகியவள்போல் இயல்பாகப் பேசத்தொடங்கினாள்.

"எங்கை கொழும்பிலைதானே இருக்கிறியள்?"

"ஓம், ஒரு சிங்கள ஆக்களின்ரை வீடு. மிச்சம் நல்ல சனம்."

"எப்பிடி உங்கள் வேலை போகிறது?"

"வேலையும்எனக்கு விருப்பமானதுதான். கூட வேலை செய்யிற எல்லாரும் நல்ல ஆக்கள். பெரியவருக்கும் என்னை நல்லாப் பிடிக்கும்."

"உங்களை ஒருவருக்கும் பிடிக்காமல் போகாது."

"சும்மா சொல்லாதையுங்கோ."

"உண்மையாகத்தான் சொல்லுறன்."

இதைக் கேட்டதும் அவன் சிறிது நேரம் தலை குனிந்தபடி பேசாமலிருந்தான். பிறகு கேட்டான், "எப்படித் தெரியும்?"

"துவக்கத்திலையிருந்து உங்களைக் கவனிச்சுக் கொண்டுதானே இருந்தேன்." எவ்வளவு துணிவாக இதைச் சொன்னேன் என்று தன்னைத்தானே பாராட்டிக்கொண்டாள் விஜயா.

"நானும் உண்மையாகத்தான் சொல்லுறன், உங்களைக் கண்டவுடனே எப்படியாவது கதைக்க வேண்டுமென்று நினைத்தன். நல்ல வேளையா உங்களுக்கு முன்னாலை சீட் கிடைத்தது."

இப்போது இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். விரைவான இரசாயன மாற்றம்.

என்னைப்புத்திசாலிப் பெண் என்று காட்டிக் கொள்ளாவிட்டாலும் அடக்கமானவள், எல்லாரையும் மதிக்கத் தெரிந்தவள், அளவாகவும் கவனமாகவும் பேசுபவள் என்று இவன் அறிந்து எனக்கு மதிப்புத் தந்தாலே போதும், ஒரு பெண் ஒரு ஆணிடமிருந்து வேறெதை எதிர்பார்க்கிறாள்?ஆனாலும் ரயில் பயணத்தில் சந்தித்துக் கடைசியில் இறங்கியதும்

நினைவிலிருந்து ஒரேயடியாய் மறந்துபோகக்கூடிய ஆண்போல இவன் இல்லையே.

இதுவரை ரயிலில் மட்டும் தனியாக எத்தனை பயணங்கள் செய்திருப்பேன், எனக்கு முன்னாலும் பக்கத்திலும் எல்லா வயதிலும்எத்தனை ஆண்கள் பயணித்திருக்கிறார்கள்? வழியெல்லாம் சிரிக்கவைத்தே பொழுது போக்கியவர்களும், இல்லாத சகோதர வாஞ்சையை இழுத்துப் பிடித்து உறவு கொண்டாட முயன்றவர்களும், அவர்களுள் ஒரு சிலர் என் உடம்பின் வசதியாய் கிடைத்த பகுதிகளில் தெரியாத் தனமாகப் படுவதுபோல் தொட்டும் தடவியும் சுய இன்பம் அனுபவித்தவர்களும், நான் ஏமாந்த ஒரு சில கணங்களில் என் மார்பில் அழுத்தி எல்லையற்ற சுகம் கண்டவர்களும், இப்படி நிறையப்பேர் இருந்தார்கள். சிச்சீ, இவர்களெல்லாம் ஏன் மனிதர் பயணம் செய்யும் பெட்டியில் ஏறுகிறார்கள்? இவர்கள் "நாம் எல்லாரும் படித்த யாழ்ப்பாணத்தார்" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வதில் மட்டும் தம்மை உயர்த்திக் கொள்ள மறப்பதில்லை, இருட்டிலும் நெருக்கத்திலும் தமது மனதைத் தாமே அழுக்காக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டும்போது இந்த நாம் எல்லாரும் படித்த யாழ்ப்பாணத்தார் என்ற உணர்வு எங்கே போனது?

ஆனால் இவன் நல்லவன். நல்லாய்த் தெரியும், நல்லவன்போல் வேஷம் போடுபவனல்ல. பேச்சுப் போதாதபோது சிரித்துச் சமாளிக்கலாம் என எண்ணுபவன் போலவும் இல்லை. அபூர்வமாய்ச் சிரிக்கும்போதும் தலையைக் குனிந்து சிரிப்பதால் எனக்கும் மரியாதை தருகிறான் என்பது நன்றாய்த் தெரிகிறது. காலுக்கெட்டிய தூரத்திலிருந்தும் தற்செயலாகக்கூடத் தன் பாதம் என் சேலைக் கரையில்கூடப் படக்கூடாது என்பதிலும் கவனமாயிருக்கிறான். அதுநடிப்பாக இல்லாமல் அவனின் இயற்கையான குணமாகவும் இருக்கலாம்.

இவன் சொல்வதைப் பார்த்தால் இவன் சந்தித்த எல்லாருமே நல்லவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். இல்லையேல் இவன் எல்லாரையுமே நல்லவர்களாகத்தான் காண்கிறானா? எல்லாரிலும் நல்லதையே காண்பதால்தான் தானும் தன்னையறியாமல் நல்லவனாக மாறிக்கொண்டானோ?

இவன்தான் என்னைப் பெண்பார்க்க வந்திருக்கிறான் என்பதுபோலல்லவா நான் பட்டுச்சேலை சரசரக்க முன்னால் வந்து உட்கார்ந்திருக்கிறேன். என்னை இதுவரை பார்க்க வந்தவர்கள் வாசலைக் கடந்து வீட்டினுள்ளே நுழையும்போது மட்டும் தாம் ஏறிவந்த வெண்குதிரையைத் தெருவில் நிறுத்திவிட்டு வந்த ராஜகுமாரன்போல் அட்டகாசத்துடன் நடந்து கொள்வார்கள். அதற்குப்பிறகு ஒரு நிமிடத்துக்குள் தம்மை அரண்மனைச் சேவகனாக்கிக்கொள்வார்கள். தேனீரையும் குடித்து வடையும் சாப்பிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டிருக்கும்போதே சுவரில் மாட்டியிருந்த அத்தனை படங்களையும் நோக்கம் எதுவுமில்லாமல் நோட்டம் விட்டுப் பிறகு மௌனமாய் என் சேலைக் கரையைப் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்த கையோடு கண்களை மேலே தவழவிட்டு இடையில் இடறி விழுந்து கடைசியில் முகத்தை மொய்க்கும் வரையிலான ஒரு கணத்துக்குள் எப்படி அந்தப் புதியவன் என்னை உண்மையாய் அறிந்துகொள்ளப்போகிறான்? நானும் வந்தவனை நிமிர்ந்துபார்த்த ஒரு நிமிடத்தில் அவனைப்பற்றி எந்த அளவில் அறியப்போகிறேன்? சிலவேளை அறை மூலையில் என்னோடு இருந்து என்னை ஒரு மணி நேரம் இண்டர்வியூ செய்ய விரும்புவானேயன்றி நானும் அவனை அதேபோல் செய்ய ஒப்புதல் தருவானா? அது அவனுக்கு மட்டுமுள்ள உரிமையென்று அவனின் ஆட்கள் வாதாட வந்தால் எல்லா ஆயத்தங்களும் சரிந்தநிறைகுடமாகிவிடும்.

என்னைப் பெண்பார்க்க வருபவர்களில் ஒருவனாவது இவனைப்போல்இருக்கமாட்டானா? இருக்கலாம், ஆனால் இனியும் எத்தனை காலத்துக்கு அப்படி ஒருவனுக்காகக் காத்திருப்பது? என்றாலும் நாளையன்றைக்கு நூறாவதாக வரப்போகும் நாற்பத்தைந்து வயதுக்காரனிடமாவது "எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை." என்று என்னால் சொல்லமுடியுமா? நானொரு பெண், எந்த வேளையிலும் "இல்லை" என்று ஒரு ஆணின் முகத்துக்கு முன்னால் சொல்லும் உரிமை என்னிடம் இல்லை. அவன்தான் ஒரு நாளும் இல்லாத பெரு நாளாய்ச் சம்மதம் என்று சொல்லிவிட்டானென்றால் அது என் தலையில் இடி விழுந்தது போலல்லவா? அடுத்து, இந்த மாதமே எழுத்தும் கல்யாணமும் என்பார்கள், ஊரெல்லாம் கொண்டாட்டம். நான் மட்டும் அறைக்குள் அடைபட்டு அழுதுகொண்டிருப்பேன். என் அம்மா, அப்பாதான் இப்படி அறிவற்றுப்போய் அரை நூற்றாண்டைத் தொட்டுக்கொண்டிருப்பவனுக்கு என்னை "ஓம்" போடவைக்க முயன்றால் சமூகத்தில் நீதியும் சாத்திரமும் எங்கேபோய் ஒழிந்துகொண்டன? எனக்கு வேண்டிய நீதியை நானேஇனிக் கை நீட்டி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

"வீட்டில் ஏதேனும் விஷேசமோ அல்லது வழக்கமான பயணமோ?" அவன்தான் பேச்சைத் தொடர விரும்பினான்.

"அம்மாவுக்கு விஷேசம், அப்பாவுக்கு அவசியம்."

"அப்போ உங்களுக்கு?"

"பத்தோடை பதினொன்று." வெறுப்பை மறைக்கவென்று ஒரு சிரிப்பு.

"உங்களுக்குப் பிடிக்காத ஏதோ ஒன்று நடக்கப்போகிறது. அது மட்டும் விளங்குகிறது. நீங்கள் விரும்பினால் சொல்லலாம்."

விஜயா தலையைக் குனிந்தபடி அவனுக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்னாள். "என்னைப் பார்க்க நாளையன்றைக்கு நூறாவது மாப்பிளை வாறார்." அவளின் ஒவ்வொரு சொல்லிலும் அடக்க

முடியாச் சோகம் இழையோடிற்று.

அவன் என்ன சொல்வதெனத் தெரியாதவனாய் நாடியைத் தடவிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்தில், "கேட்கிறேனென்று குறை நினையாதீர்கள். உங்கள் கலியாணம் ஏன் இவ்வளவுக்கு இழுபட்டது?"

"எவரில் பிழையென்று கேட்கிறீர்களா? அப்படி வேறு எவரிலும் பிழை இல்லை. பிழை என்னில்தான் இருக்கவேணும்." இப்போதும் விஜயா முகம் நிமிர்த்தவில்லை.

அவன் அப்போது அவள் முகத்தைப் பார்க்க முற்பட்டான். இவளை இப்போதாவது முழுமையாகப் பார்க்கவேண்டும். இவளின் தோற்றத்தில் அப்படியென்ன பிழை இருக்கக்கூடும் என்பதை அறியவேண்டும். பெண்களின் குணத்திலும் பார்க்க அழகுதானே திருமணங்களில் முதலிலும் பிறகும் எப்போதும் அலசப்படுகிறது. அவன் முதன் முதலாகத் தன்னை நிமிர்ந்து பார்க்க விரும்புகிறான் என்பது விஜயாவுக்குத் தெரிந்தது. அவளும் அவனை நோக்கினாள்.

"என்னுடைய பார்வைக்கு நீங்கள் நல்ல பக்குவமான பெண்ணாகத்தான் இருக்கிறியள். நான் இதை முகத்துக்கு முன்னால் சொல்லக்கூடாது. உங்களை உங்கள் அழகையோ அடக்கத்தையோ காரணம் காட்டி இத்தனை பேர்கள் வேண்டாமென்று சொல்லிச் சென்றிருக்கமுடியாது. அது மட்டும் நிச்சயம்." என்று அவன் புன்முறுவலுடன் சொன்னான்.

"எத்தனையோ காரணங்களை என்னைப் பார்க்க வந்த எல்லாரும் சொன்னார்கள். ஒன்றும் சொல்லாமலும் போனார்கள். ஆனால் எனக்குக் காலம் வரவில்லை யென்ற ஒரே காரணத்தைச் சொல்லித்தான் அம்மா எனக்கு ஒவ்வொரு முறையும் ஆறுதல் சொல்கிறாள்."

"காலத்தைக் குறை சொல்வதால் அது கோபித்துக் கொண்டு நமக்கு எதிராக எதுவும் செய்துவிடாது. இதனால்தான் காலத்தையும் சிலவேளை கடவுளையும் குறை சொல்கிறோம்."

"நாளையன்றைக்கு மட்டும் காலம் என் பக்கம் நிற்குமென்று யார் கண்டார்கள்?"

"அதனாலை முயற்சிக்காமல் இருக்கிறதும் நியாயம் இல்லைதானே."

"ஒவ்வொரு முறையும் இப்படித்தான் சொல்லி ஏமாந்து போனோம்."

"நாளையன்றைக்கு வாறவரை உங்களுக்குப் பிடிக்கக்கூடும். அவரும் உங்களைக் கண்டு கதைத்ததும் சம்மதமென்று சொல்லக்கூடும். இதை அறியாமல் இப்போதே மனதைத் தளரவிடாதீர்கள்?"

"எனக்கு என்ன வயது இருக்குமென்று நினைக்கிறீர்கள்?" விஜயா திடீரென்று இப்படிக் கேட்டதும் அவன் உடனே என்ன சொல்வதென்று தெரியாமல் தடுமாறிப்போனான்.

"ஒரு இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு வயதிருக்கலாம். பெண்களின் வயதை அறிய நான்ஆர்வம் காட்டிறதில்லை, அது நியாயமுமில்லை." விஜயா அவனின் சிரிப்போடு கலந்துகொண்டாள்.

"நீங்கள் சொல்றதிலும் பார்க்கக் கொஞ்சம் கூட." என்றவள் சில விநாடிகள் மௌனத்தின் பின், "எனக்கு முப்பத்திரண்டு வயதாகிறது என்று சொன்னால் நம்புவீங்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, நான் நம்பமாட்டன்."

"உண்மையும் அதுதான்."

"உண்மையாய் இருந்தாலென்ன, நீங்கள் நான் முதல் சொன்ன மாதிரி இருபத்தேழு வயதுப் பெண் போலத்தான் இருக்கிறியள்."

"என் கலியாணம் தள்ளிப்போகிறதுக்கு முந்தி வேறு காரணங்கள் இருந்தன, இப்போ இந்த வயதுதான் ஒரே காரணம்," "ஆனால் இந்த வயதை அறிந்த பிறகும் நாளையன்றைக்கு உங்களைப் பார்க்க ஒருவர் வருகிறார்தானே?"

"நாப்பத்தைந்து வயதுக்காரர் என் முப்பத்திரண்டு வயதை அவ்வளவு பொருட்படுத்துவாரென்று நினைக்கிறீர்களா?"

"நாப்பத்தைந்து வயதா?" அவனின் வாயும் கண்களும் அகல விரிந்தன.

"ஓம், அரை நூற்றாண்டை எட்டப்போகிறார். என்னைப்போல ஒரு பெண் கிடைத்தால் ஒருவேளை அவர் இன்னும் இளமையாகிவிடக்கூடும்." அவள் கேலியாகச் சொன்னாளா உண்மையில் தன் மனவேதனையை இப்படி வடித்தாளா? அவளின் ஒவ்வொரு சொல்லிலும் படிந்திருந்த சோகத்தை அவனால் அவதானிக்கமுடிந்தது.

"எனக்கும் கிட்டத்தட்ட இதுபோல் ஒருமுறை நடந்தது தான். உங்கள் கதையை நீங்கள் மறைக்காமல் சொன்னதால் நானும் என் கதையைச் சொல்வதிலை பிழை இல்லை."

"உங்களுக்கும் அப்படி நடந்திருக்குமா?" விஜயா நம்பமுடியாமல்தான் கேட்டாள்.

"கேட்டால் சிரிப்பீர்கள். எனக்குப் பேசிவந்த பிள்ளைக்கு என்னிலும் பதின்மூன்று வயது குறைவு."

"சில இடங்களிலை அப்படியும் நடக்கிறதுதானே?"

"முந்தியெல்லாம்தவிர்க்கேலாமல் அப்பிடி நடந்ததென்று சொல்லுங்கள்."

"அந்தச் சம்பந்தத்துக்கு நீங்கள் சம்மதித்தீங்கள்தானே?" கடவுளே இவன் சம்மதித்திருக்கக்கூடாது.

"இல்லை, அந்தச் சின்னப் பெண் அழகான பெண்ணும் கூட. அவள் அந்த வயதில் எத்தனை கனவுகள் கண்டிருப்பாள். அவளின் வயதுக்குப் பொருத்தமான ஒருவன் நிச்சயம் கிடைப்பான் என்று சொல்லி நான் வேண்டாம் என்று மறுத்துவிட்டேன். அடுத்த வருஷமே அவள் சடங்கு விரும்பினமாதிரி நடந்துவிட்டது. இதில் சந்தோசப்பட்ட ஆக்களிலை நானும் ஒரு ஆள்."

விஜயா பதில் சொல்லச் சொற்கள் கிடைக்காமல் அவனையே ஆச்சரியத்துடன் பார்த்தாள். இந்தக் காலத்தில் இப்படியும் ஒருவன் இருக்கமுடியுமா?

ஒருவேளை இவன் முழுப் பைத்தியமோ? அசல் புத்திசாலியோ? இந்த இரண்டு பேருக்குமிடையில் அதிகம் வித்தியாசமில்லையென்று சொல்வார்களே.

தன்னிலும் பதின்மூன்று வயது குறைவான பெண்ணின் அழகையும் இளமையையும் தனக்குச் சாதகமாகக் கருதாது அவளின் கனவுக்கும் உணர்வுக்கும் மதிப்பளித்த இந்த இளைஞன் நிச்சயம் நல்லதொரு கணவனாகத்தான் வருவான். பதின்மூன்று வயது இளையவள் மீது இவனுக்கு ஏற்பட்ட இரக்க உணர்வு மூன்று வயது மூத்தவளான என்மீது ஏற்படாமல் போய்விடுமா?

ஏன் தலை குனிந்துகொண்டாய் விஜயா? நீ எதையோ நினைத்துக் கவலைப்படுவதாக இவன் நினைத்துக்கொள்ளப் போகிறான். விஜயா நிமிர்ந்து பார்த்தாள். அவன் தன் முகத்தையும் கலங்கிப்போன கண்களையும் கண்டதும் துணுக்குற்றவன்போல் தோன்றினான்.

"நான் ஏதேனும் பிழையாகச் சொல்லியிருந்தால் தயவு செய்து குறை நினைக்கவேண்டாம்."

வெளியே அழுதால்தானா அழுகை? உள்ளே அழுததையும் கண்கள் காட்டிக்கொடுத்துவிட்டனவே!

ரயில் யாழ்ப்பாணம் வந்து சேரக்காலை ஏழுமணியாகி இரவு ஓடி ஒளித்துக்கொண்டது. ரயில் பெட்டிக்குள் எங்கும் எல்லாரும் வீட்டுக்குப்போகும் அவசரத்தில் எதை வைத்தோம் எதை எடுத்தோம் என்ற அறிவில்லாமல் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் நிதானமாக எழுந்து மேலே தட்டில் வைத்த தனது சிறு பேக்கை எடுத்துக் கீழே இருக்கையில் வைத்துவிட்டு "இதுதானா உங்கள் பெட்டி?" என மேலேயிருந்த பெரிய சூட்கேசைக் காட்டிக் கேட்டான். "ஓமோம்" என்று விஜயா பதில் சொல்லவும் அதை மெல்லமாய்க் கவனமாய் இறக்கிக் கீழே வைத்தான்.

"நீங்கள் முதலிலை கீழே இறங்கி நில்லுங்கோ, நான் பின்னால் இதைத் தூக்கிக்கொண்டு வாறன்."

"ஏன் உங்களுக்கு இவ்வளவு சிரமம்?"

"எனக்கு இதில் சிரமம் ஒன்றும் இல்லை. நீங்கள் முதல் சிரமப்பட்டுத் தூக்கிக்கொண்டுவந்தீர்கள். இன்னொருமுறை சிரமப்படவேண்டாம்."

விஜயாவுக்கு இந்தப் பதில் பிடித்துக்கொண்டதால் தொங்கிக்கொண்டிருந்த சேலையை அள்ளி எடுத்துக்கொண்டு இறங்கும் ஆட்களைத் தொடர்ந்து போய் வெளியே இறங்கச் சென்றாள். அவளுக்குப் பின்னால் விஜயாவின் சூட்கேசையும் தனது பேக்கையும் இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு வாசலுக்கு வந்து தனது பேக்கை மட்டும் ப்ளாட்போமில் காத்திருந்தவளிடம் கொடுத்தான். அவள் கையை நீட்டி வாங்கியபோது அவன் மெல்லச் சிரித்ததுபோலிருந்தது. அது அவளுக்கும் சிரிப்பை அழைத்துவந்தது.

"நீங்கள் பருத்துறை பஸ்ஸில்தானே போறீங்கள்? நானும் அதைத்தான் எடுக்கவேண்டும்."

பருத்தித்துறை பஸ்ஸில் இன்றைக்கு ஏறப்போகிறவர்கள் நாங்கள் இருவர் மட்டும்தான் என்று விஜயா கற்பனை பண்ணிக்கொண்டாளாயினும் இது நல்ல ஆரம்பம் என்று தனக்குள் எண்ணி மனம் பூரித்துக்கொண்டாள்.

"எங்கட வீடு போற வழியிலைதான். நீங்களும் ஒருக்கால் என்னோடை இறங்கி வீட்டை வரவேணும். பிறகு கொஞ்ச நேரத்தாலை பழையபடி பஸ் எடுத்துப்போகலாம்." அவன் பேசாதிருந்ததைக் கண்டு அவள் மேலும் சொன்னாள். "அம்மா, அப்பாவும் உங்களைக் கண்டால் விருப்பப்படுவினம்." இதை அவள் மன்றாடிக் கேட்டாள் போலும் அவன் முகத்தில் அப்போது தோன்றி மறைந்த சிந்தனை ரேகைகள் அவன் ஆழமாய் யோசிக்கிறான் என்பதை அவளுக்கு உணர்த்தின.

"ம்ம்ம்... அதெல்லாம் எதுக்கு? இங்கை எல்லாரும் வீட்டுக்கு ஓடுறது போலத்தான் நானும் ஓடவேண்டியிருக்கிறது. எனக்காகவும் வீட்டில் காத்துக்கொண்டிருப்பார்களெல்லோ!"

"ஓமோம், எண்டாலும் ஒரு அரை மணித்தியாலம் எங்கள் வீட்டில் நிண்டால் உங்களுக்குப் பரவாயில்லைதானே?"

"இல்லை, பாருங்கோ. குறை விளங்கவேண்டாம். சந்தர்ப்பம் வந்தால் இன்னொருமுறை காணலாம். உங்கள் கலியாணக் காரியமெல்லாம் சுகமாய் முடிந்தால் திரும்பவும் கொழும்புக்குத்தானே வரப் போறீங்கள். அப்ப கண்டுகொண்டால் போச்சு." எனது கலியாணம். ஒவ்வொரு முறையும் பெண் பார்க்க ஆட்கள் வரமுந்தி மனதுக்குள் நிறைவேற்றி மகிழ்ந்த கற்பனைக் கலியாணம். அடுத்த அரை மணியில் குழம்பிப்போய்க் கண்ணீரில் முடிந்த கலியாணம். இந்த முறை மட்டும் அது ஓப்பேறிவிடும் என்று எங்கே எழுதியிருக்கிறது? நான் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டதை இவன் கவனித்திருப்பானோ?

பஸ் ஒருவாறு விஜயாவின் வீட்டு வாசலுக்குச் சற்று முன்பான தரிப்பிடத்தில் வந்து நின்றது. விஜயா முன்னே இறங்கிக்கொள்ள வாசலில் அவளின் தகப்பனார் காத்திருந்தார். பின்னே இறங்கியவனின் கையிலிருந்த சூட்கேசையும் அவர் வாங்கிக்கொண்டார். பஸ் படியில் நின்றபடியே அவளைக் கனிவுடன் பார்த்து போய் வருகிறேன் என்பதுபோல் தலையை மட்டும் அசைத்து விடை பெற்றான். பஸ்ஸும் தனது பயணத்தைத் தொடர்ந்தது. அது அடுத்த திருப்பத்தைக் கடந்து ஒரேயடியாய் மறைந்தும் விட்டது.

விஜயா வீட்டினுள்ளே செல்ல மறந்து முன் வாசல் கேட்டை கைகளால் இறுகப் பற்றியபடி தன் கண் முன்னால் மறைந்த அந்த பஸ் போன திக்கையே பார்த்து நின்றாள். இரண்டு பேர் ஒன்றாய்க் கழித்த ஒரு முழு இரவு எத்தனை உணர்வுகளைப் பேச்சாலும் கண்ணாலும் பரிமாறியிருக்கும்? "நானும் உங்களைப்போலை ஒருவரைத்தான்....." என்று பட்டும் படாமலும் இவனுக்கு என் மனதைத் திறந்திருக்கலாம்.

சிலவேளை நான் வாயால் சொல்லாமலே இந்தப் புத்திசாலி என் மனதைப் புரிந்துகொண்டிருக்கலாம். இதை அப்போதேசொல்லியிருந்தால் என்னோடு இன்னும் சில மணி நேரம் பொழுதைப் போக்கியிருப்பான், என் வீட்டுக்கு வந்துவிட்டுப்போங்கள் என்று அழைத்தபோது தயக்கத்துடனாவது ஒப்புக்கொண்டிருக்கலாம்.எல்லாம் என் பிழை. விஜயாவுக்கு வாசலின் இரும்புக் கதவில் குருதி ஒழுகும் வரையும் தலையைப் பலமாய் மோதி அழவேண்டும்போலிருந்தது.

அவன் கடைசியில் போய்விட்டான். கண்களையும் மனதையும் ஒரேயடியாய் மூடிக்கொள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். நான் சொல்லத் தயங்கியதை எப்படியோ அறிந்துஅதையும்தன் கையோடு கொண்டுபோயிருப்பான். இனியென்ன, பழையபடி நாளை இன்னொருவன், அடுத்து இன்னுமொருவன், இன்னும் எத்தனையோ நடுத்தர வயதுக்காரர்கள், மனைவியை இழந்தவர்கள் அல்லது விட்டுப் பிரிந்தவர்கள், தடி பிடித்தவர்கள், பிள்ளை குட்டிக்காரர்கள். அம்மா தொடர்ந்து கோப்பித்தூள் இடித்து, வடை சுட்டு, தன் இறுதிக்காலம்வரை எனக்காக உழைத்து, மெலிந்து ஓடாகிப்போவாள். இதையா அப்பா என் கலியாணம் என்கிறார்?வீட்டுக்குள் போவதற்கும் விருப்பமின்றிக் கலங்கிய கண்களூடாக அந்த பஸ் போன திக்கைக் கடைசியாக ஒருமுறை நோக்கினாள்.

தூரத்து முடக்கில் அவன் திரும்பி வருவது தெரிந்தது.

...



# வாழ்விடம் காட்டுங்கள்

விறுகொண்டெழுக!
விளைநிலம் விலைபோகின்றது.
தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும்
நம் தலைமுறையின் தலைவிதி
மீண்டும் ஒருமுறை
தலைகீழாய் மாற்றப்படும்

கந்தன், பண்டார, கணபதி, முகமதுக்கள்
வென்றாலும் சரி, சென்றாலும் சரி
எல்லா மட்டைகளும் ஊறிய குட்டை
பச்சையும் நீலமும் கலந்த கழிவுதான்.
சிவப்பும் மஞ்சளும் சேர்ந்தாலும் ஒன்றுதான்
செத்தாலும் ஒன்றுதான்.

வேறெதுவும் வேண்டாம் எமக்கு
மீண்டும் மீண்டும் இதையே கேட்கிறோம்.
குடியிருந்த எங்கள் இடத்தைக் காட்டுங்கள்,
குப்பி விளக்கைத் தேடி எடுப்போம்.


பாய்கள் எங்கே, தலையணை எங்கே?
பச்சிளம் குழந்தையின் பால்புட்டி எங்கே?
மாடுகள் எங்கே, மாமரம் எங்கே?
ஆடுகள் கட்டிய பட்டிகள் எங்கே?
காடுகள், களனிகள், கதிருடன் வயல்கள்,
வீடுகள், விறாந்தைகள், விறகுக் கொட்டில்கள்,
எல்லாம் தொலைந்தன எல்லையும் மறைந்தன!

வதிவிடம் காட்ட அடையாளம் வேண்டுமா?
குயில்கள் கூவிய வேம்புகள் உண்டு,
மயில்கள் ஆடிய மரநிழல் இருக்கும்,
வேலியில் நாட்டிய கிளசரி தினமும்
ஊதா நிறத்தில் கிளையாய்ப் பூக்கும்,
உடைந்த துலாவின் இடுக்கில் சொருகிய
உரிமட்டைத் தும்பும் சாம்பலும் இருக்கும்,
வேறென்ன தேவை அடையாளம் காட்ட?

எதுவும் வேண்டாம், இடமொன்றே போதும்!
தொலைத்த இருப்பைத் தூக்கி நிறுத்த
தூங்கிய நெஞ்சைத் தட்டி எழுப்ப
உடைந்த தோணியை ஒட்டி எடுத்து
கிழிந்த வலையில் நூலினைச் சொருகி
வரம்பினை உயர்த்தி வயலினை நிரப்பி
வாழ்க்கையின் அடுத்த பக்கம் புரட்ட
பிடுங்கிய இடத்தைத் திருப்பித் தாருங்கள்.

கோடரி எடுத்துக் கம்புகள் வெட்டி
குழிகள் தோண்டிக் கால்கள் நாட்டி
குறுக்காய் நெடுக்காய் கைமரம் பரவி
குருத்து வாட்டி ஓலைகள் வேய்ந்து
குடிலொன்றமைத்து குடும்பம் நடத்திக்
குருத்து மணலில் நிலாச் சோறூட்டி
குலத்தை மீண்டும் நிமித்தி எடுக்க
வாழ்விடம் காட்டுங்கள்,
எங்கள் வாழ்விடம் காட்டுங்கள்.

**களப்பூரான் - கனடா**



பிரமிளின் இளமைத் தோற்றம்



பிரமிளின் இளமைத் தோற்றம்



இராஜ தர்மராஜா

# ஒரு சுதந்திரக் கலைஞனின்

## ஏழ்மையும் – ஆளுமையும்

மு ற்காலத்தில் ஈழநாட்டில் இருந்து புலமையாளர்கள் தமிழ்நாட்டிற்குச் சென்று தமிழ் புலமையால் பெரும் பேரும், புகழும் பெற்றனர்.

தமது புலமையை தமிழ் நாட்டிலும் நிலை நிறுத்தி தமிழ் நாட்டு அறிஞர்களாலும், மக்களாலும் போற்றப்பட்டனர். அவர்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, தி. த. கனகசுந்தரம் பிள்ளை, தி. த. சரவணமுத்துப் பிள்ளை, சுவாமி விபுலானந்த அடிகளார் என அடங்குவர். பழந்தமிழ் அறிவு, தமிழ் அறிவுப் புலமை என்பவற்றில் மிகத் திறமையோடு விளங்கினர். இவர்களுள் தி. த. சரவணமுத்துப் பிள்ளை சற்று வித்தியாசமாக படைப்பு இலக்கியத்தில் ஈடுபட்டவர். இவரின் படைப்பு இலக்கியம் "மோகனாங்கி" என்ற வரலாற்று நாவலாகும்.

தி.த.சரவணமுத்துப்பிள்ளை ஈழத்தின் திருகோணமலையில் இருந்து சென்றவர் ஆவார். அவரைப் போலவே இக்காலத்தில் திருகோணமலையில் இருந்து தமிழ் நாடு சென்று படைப்பிலக்கியத்தில் பெரும் பேரும், புகழும் பெற்றவர் தர்மு சிவராம் எனும் பிரமிள் ஆவார். இக்காலத்தில் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றோர் தமிழ் இலக்கியத் துறையிலும், குறிப்பாக விமர்சனத் துறையிலும் சிறந்து விளங்கினாலும் அவர்கள் தமிழ் நாடு சென்று வாழ்ந்தது இல்லை. ஆனால் தர்மு சிவராம் 1971ம் ஆண்டுக்கு பிற்பாடு பிரான்ஸ் செல்வதாக புறப்பட்டு பிரான்ஸ் செல்ல முடியாது தமிழ் நாட்டிலேயே நிரந்தரமாக தங்கி வாழ்ந்து மடிந்தும் போனார்!.

திருகோணமலையில் 20.04.1939ல் பிறந்த தர்மு சிவராமு திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். சிலர் இவர் யாழ்ப்பாணம் வேலணையில் பிறந்தவர் எனக் கூறுவர். ஆனால் அதற்கான சான்றுகள் ஒன்றுமில்லை. ஆனால் இவரின் தாயாரின் பிறந்த ஊர் வேலணையாகும். இவரது தாயாருக்கு இரண்டு சகோதரிகள். தாயார்தான் மூத்தவர். இவரின் ஒரு சகோதரி சிங்களவர் ஒருவரை முடித்து சிங்கள ஊரிலும், மற்றவர் தமிழ் நாட்டில் உள்ள ஒருவரை முடித்து தனது மகனுடன் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். தர்மு சிவராமுவின் தகப்பன் வீட்டில் ஒரு கொட்டகை போட்டு அதில் இருந்தவாறு சுருட்டு சுற்றி விற்றுக் கொண்டிருந்தார். தர்மு சிவராமுவின் தகப்பன் இறந்து போக தர்மு சிவராம் தாயாருடன் வாழ்ந்து வந்தார். தாயார் மிகவும் கஷ்டப்பட்டே மகனை வளர்த்து வந்தார். இவர்கள் வாழ்ந்தது திருகோணமலையில்.

தர்மு சிவராம் கலை இலக்கியத்தில் நாட்டம் கொண்டிருந்ததால் வேறு தொழிலில் நாட்டமின்றி ஓவியம், சிற்பம் போன்ற நுண்தொழில்களிலேயே ஈடுபட்டார். இதனால் பெரிதும் வருமானம் இன்றி கஷ்டப்பட்டார்கள். தாயார் வளவில் கிடைக்கும் சிறிய வருமானம் மூலம் தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்.

தாயாருக்கு ஒரு பற்றுக்கோடு ஒரு மகன் மட்டும்தான். தர்மு சிவராமுவுக்கும் தாயார் மேல் பாசம். அதனால் அவர் தாயாரை விட்டு பிரிந்து வேறு தேசம் செல்ல முடியாது தாயாருக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தார். தாயாரின் மறைவின் பின்பு வீடு, காணியை விற்று விட்டு வெளிநாடு புறப்பட்டார். ஆனால் அவரின் கனவு நிறைவேறவில்லை! அவரின் வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுடன் நின்று விட்டது.

சிவராமலிங்கம் என்பதே தர்மு சிவராமுவுக்கு தாய், தந்தையார் இட்ட பெயர். ஆனால் தனது தந்தையின் பெயருடனும், தனது பெயரையும் சுருக்கி தர்மு சிவராமு என குறிப்பிட்டு வந்தார். தர்முசிவராமுவுக்கு சோதிடம், எண் சோதிடம், கைரேகை என்பவற்றுடனும், ஆன்மீகத் துறை அறிவுகளிலும் நாட்டம் இருந்தது. ஆனால் சாஸ்த்திரத்தை அவர் தொழில் ரீதியாக பாவித்தது இல்லை. தமது எண்சோதிட ஆராய்ச்சி மூலம் தனது பெயரையும் அடிக்கடி மாற்றி மாற்றி எழுதிவந்தார். அவர் தனது பெயரை பிரமிள் , பானு, அஜித்ராம், அஜித்பிரேம், பானுசந்திரன், அரூப் சிவராம் என பல பெயர்களில் மாற்றி மாற்றி எழுதி வந்துள்ளார். ஆனால் அவருக்கு தர்முசிவராம் என்ற பெயரும் பிரமிள் என்ற பெயரும் நிலைத்து விட்டது.

பாடசாலையில் படிக்கும் காலங்களிலேயே கையெழுத்து பிரதி சஞ்சிகைகளில் எழுதவும், ஓவியம் போடவும் தொடங்கி விட்டார். இங்கும் பல பெயர்களில் எழுதி உள்ளார். இவரின் பாடசாலைத் தோழர்களான டாக்டர் இராமசந்திரன், சித்தி அமரசிங்கம் ஆகியோர் இவரின் எழுத்துக்கள் பற்றி புகழ்ந்து கூறுவர். இதில் சித்தி அமரசிங்கம் "யாழ்" என்ற கையெழுத்து சஞ்சிகையை நடத்தி வந்தார். இதில் நிறைய கவிதைகளையும், கதைகளையும் தர்மு சிவராம் எழுதி வந்ததுடன் ஓவியமும் வரைந்து வந்ததாக சித்தி அமரசிங்கம் கூறுகிறார். அவற்றை தொகுப்பாக போடப்போவதாக கூறிவந்தார். ஆனால் சித்தி அமரசிங்கத்தின் மறைவுடன் அவையெல்லாம் மறைந்து விட்டன. **"யாழ்"** கையெழுத்துப் பிரதிகளும் கிடைக்கவில்லை.

*1968 அல்லது 1969ம்* ஆண்டுகளில் தான் எமக்கும் தர்மு சிவராமுவுக்கும் தொடர்பு ஏற்பட்டது. நாம் எனும் போது சங்கரலிங்கத்தையும் குறிக்கும். சங்கரலிங்கம் என்னுடன் க. பொ. த. (உயர்தரம்) விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்று வந்த ஐந்து மாணவர்களில் ஒருவன். மலையகத்தில் இருந்து கல்வி கற்க வந்தவன். அக்கால கட்டம் திருகோணமலை கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மாவட்டத்தில் ஒன்று ஆகும். க.பொ.த. உயர்தர விஞ்ஞானப்பிரிவு வகுப்புக்கள் அக்கால கட்டங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட வகுப்புகளில் மாணவர்கள் மிகவும் குறைவு. அக்காலகட்டக் கல்வி நிலைமை மிகவறிதானதாகவே காணப்பட்டது. பல மாணவர்கள் வேறு மாவட்டங்களுக்கு சென்று விடுவர். வகுப்புகள் மிகவும் சோம்பலுடனேயே நகரும். இதில் நானும்



சுந்தர ராமசாமி 1974

ஓவியம் - பிரமிள்

சங்கரலிங்கமும் இலக்கியத்தில் தீவிர நாட்டமுற்றோம். இதனால் எமக்கு வாசிப்பு பழக்கம் தீவிரமானது. இந் நிலையில் நாம் மௌனியின் சிறுகதை புத்தகத்தினை தீவிரமாக தேடிக்கொண்டிருந்தோம். ஆனால் அது கிடைப்பதாயில்லை. தீவிர முயற்சியின் பின் அது தர்முசிவராமுவிடம் இருப்பதாகவும் கேள்விப்பட்டோம். தர்மு சிவராம் என்ற பெயரையும் அப்போதுதான் கேள்விப்பட்டோம்.

யார் இந்த தர்மு சிவராம்? எமக்குக் குழப்பமாக இருந்தது. யாருக்கும் தெரியவில்லை. ஒருவாறு துப்பறிந்து தேடிக்கொண்டோம். அப்போது இலக்கியத் தேடல் எம்மிடம் மிகத் தீவிரமாக விளங்கிய காலம். வாசிப்பும் மிகத் தீவிரமாக இருந்தது. இதனால் பரீட்சையையும் கோட்டைவிட்டோம்! ஒருவாறு தர்மு சிவராமின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து விட்டோம். எமது இந்துக் கல்லூரிப் பாடசாலைக்கு பக்கத்தில் வித்தியாலயம் வீதியின் தொடக்கத்தில் உள்ள ஓலை வீடுதான் தர்மு சிவராமின் வீடு. பெரியவளவு, நீண்ட ஓலைக் கொட்டில் வீடு. பழைய சுருட்டு மால் அடங்கியது. முன் வாசல் சிறிய அறை போன்றது. சிற்றோடு வேயப்பட்டிருந்தது. பச்சைநிறக் கதவு. அதில் சிறிய எழுத்தில் “பானு” என்று இருந்தது. வீட்டில் ஏழ்மை தெரிந்தது.

ஆன்மீகத்திலும், இலக்கியத்திலும் தோய்ந்த தர்மு சிவராம் புற உலகில் அக்கறையற்று இருந்தார். அவருக்குத் தொழில் எழுத்து, இல்லை என்றால் ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைதான். ஆனால் இக்காலத்தில் அவற்றின் மூலம் சம்பாதிக்க முடியுமா? என்ன செய்ய முடியும் வேறு தொழில் நாட்டம் இல்லை. இது வீட்டில் தெரிந்தது.

மௌனி சிறுகதை புத்தகத்தை வாங்கவே முதன்முதலில் தர்முசிவராமுவிடம் சென்றோம். பழைய தட்டச்சு இயந்திரத்தில் எதையோ தட்டச்சு செய்து கொண்டிருந்தவர் நிறுத்திவிட்டு எம்மைப் பார்த்தார். பின் எம்மிடம் வந்தார்.

எமக்கு முதலில் ஒன்றுமே ஓடவில்லை. எந்தப் பெரிய ஆள்? மௌனியின் புத்தகத்திற்கு முன்னுரை எழுதுவது என்றால்? மௌனனியின் கதையே புரியவில்லை என்கிறார்கள், அந்தப் புரியாத புத்தகத்திற்கு முன்னுரை எழுதுவது என்றால்...? சிறுகதையின் திருமூலர் என்று புதுமைப் பித்தன் வேறு சுழி போட்டுள்ளார். அப்படிப்பட்ட புத்தகத்திற்கு முன்னுரை எழுதியவர் எமக்கு முன் வெறும் மேலுடன் நிற்கிறார் என்றால்.... எமக்கு மலைப்புத்தான் என்ற போதும் “மௌனி புத்தகம் வேண்டும்” என்றோம்.


உள்ளே சென்று எடுத்துக் கொண்டு வந்து தந்தார். புத்தகத்தை உற்றுப் பார்த்தோம். தடவிப் பார்த்தோம். மலைப்புத்தான். அப்போ மௌனி புத்தகத்தின் இந்தியா விலை ரூபாய் நான்கு. நாம் ஐந்தோ, பத்தோ ஏதோ சில்லறை கொடுத்த ஞாபகம். அப்புத்தகம் இப்போதும் உள்ளது. அதற்குப் பின் மௌனி சிறுகதை தொகுப்பு இரண்டோ மூன்று முறை மறுபதிப்பாக வந்து விட்டது. கடைசியாக காலச்சுவடு பதிப்பகம் திருத்திய பதிப்பாக வெளியிட்டுள்ளது. ஆனால் இவை ஒன்றிலும் தர்மு சிவராமின் முன்னுரை இடம்பெறவில்லை க. நா. சு. உட்பட மற்றையவர்களின் முன்னுரை, குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தர்முசிவராமின் முன்னுரை வேண்டுமென்றே தவிர்க்கப் பட்டுள்ளது. இது காழ்ப்புணர்வின் திட்டமிட்ட சதிச்செயல் என்றே இலக்கிய அன்பர்கள் கூறுகின்றார்கள். ஆனால் முதலில் மௌனியின் கதைகளுக்கு ஒரு முத்திரை பதித்துக் கொடுத்தவர் தர்முசிவராம்தான் என்பது மறைக்க முடியாத வரலாற்று உண்மை என்பது முக்கியமானது.

***“இன்றைய தமிழ் இலக்கிய நிலையை பற்றி விமர்சன பூர்வமாக நிர்ணயிக்கும் முதல் கட்டுரை மௌனியின் கதைக்கு சிவராம் எழுதிய முன்னுரை” என்கிறார் நகுலன். குருஷேத்திரம் 1968 மேயில் தொகுத்து வெளியிட்டவர் நகுலன். அதில் அவர் தர்மு சிவராம் எழுத்து சஞ்சிகை மூலம் நமக்குக் கிடைத்த விமர்சகர் என்கிறார்.“அவரது நடை சிந்தனைத்துடிப்பு மிக்கது. நுணுக்கமும், ஆழமும் உடையது. அவர் எழுத்து மேல் நாட்டு இலக்கியப் பரிச்சயத்தால் வளம் பெற்றது” என்கிறார்.***

***(குருஷேத்திரம் 1968 மே)***

குருஷேத்திரத்தில் தர்மு சிவராமின் கோடரி என்ற கதையும், கட்டுரையும், மௌனி கதை முன்னுரையும் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் தர்மு சிவராம் தனது பெயரை பிரேமிள்பானுசந்திரன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த குருஷேத்திரம் என்ற தொகுப்பு நூலையும் தர்மு சிவராமுவே தந்தார். மௌனி கதைப் புத்தகம் மூலம் அவருக்கும், எமக்கும் தொடர்பு வளர்ந்தது. நானும், சங்கரலிங்கமும் நேரம் கிடைக்கும்போது அவர் வீடு சென்று உரையாடுவோம். அவரும் சிலசமயம் எங்களைத் தேடி வீடு வருவார். இப்படியாக அவர் வெளிநாடு போகும் வரை நட்பும், தொடர்பும் வளர்ந்து கொண்டே இருந்தது.




துக்ககரமான செய்தியொன்று கேள்விப்பட்டு காலையில் பாடசாலை செல்லுமுன் தர்மு சிவராம் வீட்டுக்கு சென்றோம். வீடு அமைதியாக இருந்தது. வழக்கமாக அப்படித்தான் இருக்கும். என்றாலும் தாயார் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டு இருப்பார். ஏதும் சிறிய வேலைகள் செய்து கொண்டு இருப்பார். தர்முசிவராம் அமைதியாக இருந்து வாசித்துக் கொண்டிருப்பார். ஆனால், இன்று சற்று வித்தியாசமாக இருந்தது. நாம் ஓலைக்குடிலினுள் சற்று எட்டிப் பார்த்தோம். ஒரு வாங்கில் தாயாரின் உடல் வளர்த்தப்பட்டு, வெள்ளை துணியால் மூடப்பட்டு இருந்தது. பக்கத்தில் தர்மு சிவராமு அமைதியாக யோசித்துக் கொண்டு இருந்தார். "என்னைவிட்டு நீ எங்கும் போகமுடியாது. நான் இறந்தபின் கொள்ளிவைத்துவிட்டு போ" என்பதுதான் தாயின் கட்டளை. அந்த அன்புக் கட்டளையை மீறமுடியாமல் தாயாருடனேயே வாழ்ந்தார். தாய் இறந்தபின் விடியவிடிய தாயின் உடலிற்கு அருகிலேயே இருந்து கொண்டார். இரண்டுமூன்று நாட்களாக சாப்பாடும் இல்லை. தாயார் உடல் ஏலாது படுத்துவிட்டதால் இவரும் சோர்ந்துவிட்டார். தாயார் படுக்கையிலேயே இறந்துவிட்டார். எங்களைக் கண்டதும் எழுந்து வந்தார். நாங்கள் அவரின் கையை மென்மையாகப் பிடித்தோம். அவரின் கண்கள் கலங்கின.

"அம்மா போயிட்டா" என துக்கத்துடன் கூறினார். நாம் ஒன்றும் செய்யமுடியாது அமைதியாக நின்றோம். பின்பு எமது கையை மெதுவாகப் பிடித்து எம்மை பார்த்தார்.

"நானும் ஒன்றும் சாப்பிடவில்லை" என்றார்.

எமக்குப் 'பகீர்' என்றது.!

நாம் திகைத்துப் போய் நின்றோம்.

"இருங்கள்" என்று கூறி விட்டு பாடசாலைக்குப் போனோம். நண்பர்கள் சிலரிடம் இருந்து சில்லறைக் காசுகள் சில சேர்த்துக் கொண்டு பக்கத்தில் உள்ள குட்டான் சைவக் கடைக்கு சென்று இடியப்பப் பார்சல் கட்டிக்கொண்டு தர்முசிவராமிடம் சென்று கொடுத்தோம். அவர் அமைதியாக அதைப் பெற்று கிணற்றடியில் இருந்த குந்து ஒன்றில் அமர்ந்து சாப்பிட்டு விட்டு வந்தார்.

நாம் பின்பு பாடசாலை சென்று விட்டோம். அதன் பின்பு அவரின் மற்ற நண்பர்கள் வந்து தாயின் இறுதிக்கிரியைகள் எல்லாம் நடத்தி உடலை மயானம் கொண்டு சென்று தகனமும் செய்து முடித்தனர்.

அவர் 'பிரான்ஸ்' செல்ல ஆயத்தம் ஆனார். இதற்காக அவர் முன்பே பிரான்ஸ் மொழி கூட படித்துள்ளார். காணியை விற்க வெளிக்கிட்டார். அதற்கு அவருக்கு பக்கத்து வீட்டு பூசகர்களிடமிருந்து தடங்கள் வந்தது. காணிக்காக வழக்கும் நடந்தது. கடைசியில் அவருக்கும், பூசகருக்கும் அரைவாசி அரைவாசியாக தீர்ப்பானது. தனது பங்கை விற்று பிரான்ஸ் போக வெளிக்கிட்டார். முதலில் இந்தியா சென்று அங்கிருந்து பிரான்ஸ் போவதே அவர் திட்டம். பிரான்ஸ் செல்வதற்காக நண்பர்கள் மூலம் ஒரு ஏஜன்சியையும் ஒழுங்கு செய்து கொண்டார்.

இந்தியா புறப்பட ஆயத்தம் ஆனார். முதல் நாள் எங்கள் இருவருக்கும் திருகோணமலையின் முதல் தர சீனஉணவகமான A, B, C கபேயில் விருந்துக்கும் ஆயத்தம் செய்தார். அன்று மிகவும் சந்தோஷமாக இருந்தார். பகிடிகளும் விட்டார். எங்களுக்கோ மனம் இருண்டு கொண்டது. இனி எப்போ பார்ப்போம்?

"இன்று எல்லாம் புதிது. சேர்ட், ரவுசர் ம்ம்... கோவணமும் புதிது..." என்றுவிட்டு வாய் விட்டு பெரிதாக சிரித்தார். நாம் மௌனமாக இருந்தோம். பணம் இருந்தால் பார்த்தும் பாராமல் செலவழிப்பார். அடுத்த நாள் பற்றி யோசிக்கமாட்டார். செலவழிக்கும் போதும் யோசிக்கமாட்டார்.அவருக்கு லௌகீக வாழ்வு பற்றி ஒன்றுமில்லை. பற்றில்லா வாழ்க்கை - ஞான வாழ்வுதான் அவரின் வாழ்வு. ஆன்மீக விழுமியங்கள் அவரிடம் எப்படியோ குடிகொண்டுவிட்டது.

அவரது ஆன்மீக எண்ணம் சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டது எனலாம். அவரின் முதல் ஆன்மீக குரு சாது அப்பாத்துரை செட்டியார் என்றே கூறவேண்டும். இவரைப் பற்றியும் "தியானதாரா" என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

"திருகோணமலையின் ஞான புருஷரான சாது அப்பாத்துரையின் வரலாறும், வாக்கும் அவர் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் சென்ற பின்பு இந்த நூலின் வாயிலாக வெளிப்படுகின்றது." என்கிறது லயம் வெளியீடு (1989)

முதன் முதலில் 1957ம் ஆண்டளவில் சாது அப்பாத்துரையை தர்மு சிவராமு சந்தித்துப் பழகத் தொடங்கினார். சாது அப்பாத்துரை செட்டியாரிடம் இவரை சேர்ப்பித்தவர் இவரின் தாயார்தான். அப்போது இவர் பாடசாலையில் இறுதியாண்டு படித்துக் கொண்டு இருந்தார். கடலில் குளிக்கச் சென்ற இடத்தில் இவரின் கைக்கடிகாரம் தொலைந்து விட்டது. அதுவிடயம் பற்றி அறிவதற்காக தாயார் தர்முவை அங்கு கூட்டிச்சென்றார். அது முதல் தர்மு சிவராம் சாது அப்பாத்துரையின் வசமாகிவிட்டார்.

சாது அப்பாத்துரை செட்டியார் அப்போது வாணிபத்தெரு என்றழைக்கப்பட்ட மத்திய வீதியில்




வசித்தவர். இப்போதும் அவர் சமாதி அவரின் அன்பு இல்லத்தில் உள்ளது. இவர் 1964ல் சமாதியடைந்தார்.

"தர்மலிங்கம் என்பவர்தான் தர்மு சிவராம் என்ற எழுத்தாளர். இவர் சாது அப்பாத்துரை செட்டியாரின் உத்தம சீடன். இவரை "தத்துவ மேதை" என சாது அப்பாத்துரை செட்டியார் புகழாரம் சூட்டுவாராம்" என இவருடன் கல்வி கற்றவரான இ. சோமசுந்தரம் கூறுவார்.

ஓவியத்துறையினை மட்டுமே தமது எதிர் காலமாகக் கொண்டவர். எழுத்து சஞ்சிகையில் எழுதத் தொடங்கி கவிஞராகவும், சிந்தனை செறிவுமிக்க கட்டுரையாளனாகவும் திகழ்ந்த தர்முசிவராம் ஆன்மீக வாதியாகவும் மாறத் தொடங்கினார். ஒரு சமயம் இவர் யாழ்ப்பாணம் சென்று "யோகர்" சுவாமிகளையும் சந்தித்து வந்துள்ளார். ஆன்மீக உணர்வு இவருக்கு புற உலகு பற்றியோ, லௌகீக வாழ்வு பற்றியோ கவலைப்பட வைத்தது இல்லை. உணவு இன்றி நீருடன் கூட சில நாட்கள் கழித்து விடுவார். இவரின் ஆன்மீக நாட்டம் இவர் படைப்புக்களிலும் எதிரொலித்தது. இதனால் இவருக்கு ஆன்மீகக் கவிஞர் என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

இவர் சாது அப்பாத்துரை செட்டியார் மூலம் யோகர் சுவாமி பின் ஜிட்டு ஜே. கிருஷ்ணமூர்த்தி பின்பு யோகிராம் சுரத்குமார் என ஆன்மீக வாதிகளை தேடிச்சென்றார். இதனால் இவர் போலிச்சகட்டு சநாதன பழக்க வழக்கங்களை எதிர்க்கவும் துணிந்தார். இவரின் குறிக்கோள் ஞானம்தான். போலிப்பகட்டு பிடிக்காது.

எமக்கு விருந்தளித்து விட்டு அடுத்த நாளே இந்தியா புறப்பட்டு சென்று விட்டார். அதன் பின்பு நான் அவரைக் காணவில்லை. ஆனால் நண்பன் சங்கரலிங்கம் பின்பு இந்தியா - இலங்கை அதாவது ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்திய பிரஜாவுரிமை பெற்று இந்தியா சென்று தமிழ் நாட்டில் வாழ்கின்றான். அவன் தமிழ் நாடு சென்று தர்முசிவராமுடனும் சிறிது காலம் வாழ்ந்துள்ளான். பின்பு பிரிந்துவிட்டான். அவன் தமிழ் நாட்டில் தர்முசிவராமுவுக்கு இருக்கும் மதிப்பு, புகழ்பற்றி எனக்கு பக்கம் பக்கமாக எழுதினான்.

நான் பழகியது ஒரு மூன்று, நான்கு வருடம்தான் இருக்கும். ஆனால் நாம் அறிந்த விடயங்கள் பலவாகும். நீண்டு மெலிந்த மெல்லிய உருவம். சீவப்படாத கேசம். கண்களைப் பெரிதாக்கிக் காட்டும், சோடாபாட்டில் கண்ணாடி, கண்ணாடியுள் கனவில் மிதக்கும் கண்கள் மிளிரும். சதா யோசித்தபடி இருப்பார். சில சமயம் தன்னை மறந்து சிரிப்பார். உடுப்புகள் பற்றி கவலைப் படமாட்டார். சதா வாசிப்பு, சிந்தனை அதிகம் கதைக்கமாட்டார். ஆனால் பழகியவர்களுடன் கதைப்பார். அவரிடம் வயது வித்தியாசம் கிடையாது. நாம் அவரை அண்ணன் என்றே அழைத்து வந்தோம்.

அவரிடம் போதிக்கும் குணமோ, அறிவைத் திணிக்கும் குணமோ கிடையாது. விடயங்களைச் சுட்டிக் காட்டுவார். அறிவை நீயே தேடிப் பெற்றுக் கொள் என்பது போல் நடந்து கொள்வார். மற்றும்படி ஒழிவு மறைவு கிடையாது. தனக்குப் பிடிக்காவிட்டால் கதைக்கமாட்டார். அயலுடன் அவர் அதிகம் பழகியது இல்லை. அயலவர்கள் அவரை ஒரு தினுசாகவே பார்த்தனர். பொதுவாக அவரை ஒரு கிறுக்கன் என்றே கணித்தனர்.

## II

தர்முசிவராமுவுக்கு வாழ்வு தொழில் எல்லாம் கலை, இலக்கியம்தான். வேறு தொழில் தெரியாது. செய்யவும் விரும்பியதும் இல்லை. அவருக்கு தாயார் போதனை செய்து அலுத்து விட்டார். தெரிந்தவர்களை பிடித்து சிபார்சு செய்து வேலைக்கு அனுப்பியும் பார்த்தார். தாயாருக்காக அவரின் மன்றாட்டத்திற்காக இரண்டொரு நாள் வேலைக்குப் போய்ப்பார்ப்பார். மூன்றாம் நாள் விட்டெறிந்து விட்டு வந்து விடுவார். "எந்த மடையன்தான் இப்படி மேசைக்கு முன் இருந்து ரசீது எழுதுவான்" என்று அலுத்துக் கொள்வார். அவரின் சுதந்திர கலை மனதிற்கு கந்தோர் வேலை ஒத்து வராது. ஒரு சமயம் சுந்தரராமசாமி தனது புடவைக் கடையில் வந்து வேலை பார்க்கும் படிகேட்டார். இவர் "எனது ஜோதிடப்படி அந்த வேலை எல்லாம் ஒத்து வராது" என்று கூறி மறுத்து விட்டாராம். இவரின் போக்கு பாரதியாரின் போக்கு. நமக்குத் தொழில் கவிதை அல்லது பட்டினி. இதனை நம்பி எந்தப் பெண்தான் கழுத்தை நீட்டுவாள், பலன் தனிமைதான். இலங்கையில் எழுத்தை நம்பி அதுவும் தமிழ் எழுதுகோல் பிடித்து பிழைக்கமுடியுமா? வீட்டில் வறுமை. தாயார்தான் ஏதோ முயற்சி செய்து இருவரையும் பராமரித்து வந்தார். தாயாரும் போய் விட்டார்.

தர்முசிவராமுவுக்கு நல்ல கல்வியுண்டு அந்தக் காலத்து நல்ல ஆங்கிலப்படிப்பு. அவரின் ஆங்கில அறிவு அபாரமானது. இலகுவில் வேலை கிடைத்துவிடும். ஆனால் அவர் மனம் வேறு வேலை நாடாது. ஆங்கிலத்திலும் எழுதுவார். கவிதையும் புனைவார். ஆங்கிலத்தில் எழுதி ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அனுப்புவார். பிரசுரித்து விட்டு அவர்கள் சன்மானமும் அனுப்புவார்கள். ஆங்கிலத்தில் ஒரு நாவலை எழுதிவிட்டு பிரசுரத்திற்காக பதிப்பகங்களுக்கு அனுப்பி வந்தார். பிரசுரமானதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டுக்குப் போன பின் அநேகமாக தமிழிலேயே

எழுதிவந்தார்.

ஓவியமும் நன்கு வரைவார். அதே போல் சிற்பங்களும் செய்வார். ஓவியனாக வர வேண்டும் என்றே முதலில் கனவு கண்டார். ஆனால் கவிதையும், கட்டுரைகளும் பின்னால் ஆட்கொண்டு விட்டது. வீட்டில் இருக்கும் போது அவர் கீறிய பெயின்டிங்குகளும், சிற்பங்களும் வீட்டில் எங்கும் நிறைந்து கிடக்கும். ஆனால் விலை போகாது. தமிழ் நாடு போன பின்பு அவருக்கு ஓவியம் கைகொடுத்ததாக கூறினார்கள். அங்கு அவரின் ஓவியம் விலை போனதாகவும் அதன் மூலம் சிறிது வருமானம் பெற்றதாகவும் கேள்வி.

இலங்கையில் இருக்கும் போது கொழும்பில் ரேடியோ சிலோன் ஜோர்ஜ் சந்திரசேகரம் வீரகேசரியில் பிரம்மஞானி என்று எழுதும் அன்ரன் பாலசிங்கம் மற்றும் என்கௌண்டர் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் கதை எழுதி முதல்பரிசு பெற்ற எழுத்தாளர் டி. ராமநாதன். இவர் ஆங்கிலத்திலேயே எழுதி வந்தார். இவரின் மறைவின் பின்பு இவருக்கு ஒரு இரங்கல் கட்டுரை எழுதியிருந்தார் தர்மு சிவராம். இவர்களுடனும் பழகி வந்துள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்தின் பழக்கத்தால் வீரகேசரி ஞாயிறு இதழில் "உலக இலக்கியம்" என்ற தொடர் கட்டுரையை எழுதி வந்தார். பின்பு தமிழ் நாட்டுக்கு சென்ற பின்பு அன்ரன் பாலசிங்கத்தின் தொடர்பு விடுதலை புலிகளின் பத்திரிகையில் ஆசிரியர் ஒருவராக பணிபுரிய வைத்துள்ளார். ஆனால் தர்மு சிவராமின் சுதந்திரப் போக்கு நிலைத்திருக்க விடவில்லை எனலாம். விட்டு விடுதலையாகி விட்டார் போலும். கலை, இலக்கியம்தான் அவரின் உயிர் மூச்சு பாரதி, புதுமைப் பித்தன் வழியில் சுதந்திரக் கலைஞராக திரிந்தார். இலக்கியப் போக்கும், வாசிப்பும் அவருக்கு இளமையிலேயே பதிந்து விட்டது. இதனால் பாடசாலை கல்வியை கூட பூர்த்தி செய்யமுடியவில்லை!

இளமையில் கல் என்பது போல் தர்மு இளைமையிலேயே இலக்கியம் பயிலத் தொடங்கி விட்டார். பாடசாலையில் பாடங்கள் நடக்கும் போதும் கூட இவர் பின் வரிசையில் இருந்து சிலப்பதிகாரம் படித்துக் கொண்டு இருப்பாராம். பாடசாலைக் கல்வியின் இறுதி அரசாங்க பரீட்சைக்கு அதாவது அந்தக் காலத்தில் S. S. C. (சீனியர் ஸ்கூல் சேர்ட்டிபிக்கேட்) பரீட்சைக்கு இவர் போகவில்லை. முதல் நாள் பரீட்சையின் பின்பு கண்ணாடியை கல்லினால் குத்தி உடைத்து விட்டு "அம்மா கண்ணாடி உடைந்து விட்டது. நான் பரீட்சைக்குப் போகவில்லை" என தாய்க்குப் பொய் கூறிவிட்டு பரீட்சைக்கு முழுக்குப் போட்டு விட்டாராம். என சக மாணவர்கள் கூறுவார்கள்.

அதன் பின்பு முழு நேர எழுத்தும் வாசிப்பும்தான். அல்லது ஓவியம். அப்போதுதான் எழுத்து சஞ்சிகை அவருக்கு அறிமுகம் ஆகிறது. சி.சு. செல்லப்பா 1959ம் ஆண்டில் இருந்து எழுத்து சஞ்சிகையை நடத்தி வந்தார். எழுத்துவின் 13வது இதழில் இருந்து தர்மு சிவராம் எழுதத் தொடங்கினார். அச்சில் வந்த அவரின் முதல் படைப்பு "நான்" என்ற கவிதைதான். இது 1960ம் ஆண்டு ஜனவரிமாத எழுத்து ஆகும். இது ஆன்மீகம் சார்ந்த கவிதையாகும். இதற்கு முன்பு இவரின் மாணவத் தோழன் சித்தி அமரசிங்கம் நடத்தி வந்த "யாழ்" என்ற கையெழுத்துப் பிரதியில் (1955 - 1960) நிறைய கவிதைகள், கதைகள் எழுதியது உடன் ஓவியமும் வரைந்துள்ளார். ஆனால் அவை அச்சில் வரவில்லை. அவை பல பின்பு கிடைக்கவும் இல்லை. நான் கவிதையின் பின்பு "சொல்லும் நடையும்" என்ற கட்டுரை அச்சில் எழுத்தில் பிரசுரமாகிறது. இது 1960ம் ஆண்டு ஏப்ரலில் வெளிவந்தது. இவரின் இக் கட்டுரை பற்றி

"இதுமாதிரி கட்டுரை இது வரை தமிழில் வரவே இல்லை" என சி.சு.செல்லப்பா பின்னர் தீபத்தில் "எழுத்துக்கால நினைவுகள்' என்ற கட்டுரைத் தொடரில் குறிப்பிடுகின்றார். (தீபம் 1976 ஏப்ரல்)

தர்மு சிவராமின் பெரும்பாலான படைப்புகளை எல்லாம் திரட்டி அவரின் மறைவின் பின்பு தொகுப்புகளாக வெளியிட்டு வருகின்றார். அவரின் நண்பர் கால சுப்பிரமணியம்.

எழுத்துவில் (1957 - 1971) தான் ஆரம்பத்தில் அதிகம் எழுதி வந்த அவர் தர்முசிவராம் என்ற பெயரை பாவித்து வந்துள்ளார். பின்பு எழுபதுகளில் தான் "பிரமிள்" என்ற பெயரை பாவிக்கத்தொடங்கினார்.

ஒரு சமயம் இலங்கை எஸ்.பொன்னுத்துரை எழுதிய "தீ" பலமான விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது. இது பற்றி எழுத்து சஞ்சிகையில் மு. தளையசிங்கமும் எழுதியிருந்தார். தர்முசிவராமுவும் அப்போதுதான் எழுத்து சஞ்சிகையில் மும்முரமாக விமர்சனங்கள் எழுதி வந்தார். அப்போது தர்மு சிவராம் இலங்கையிலேயே வசித்து வந்தார். இவர் பார்வையிலும் தீ தப்பவில்லை. தீ நாவல் பற்றி தர்மு சிவராம் பின்வருமாறு கூறினார்.

"போலிக் கருத்தோடு பிணைக்கப்பட்டது. என்ற கூற்று ஆசிரியரின் வறட்சியான சுயதன்மையற்ற நாவல் என்று கூற வைத்தது" மேலும்.

"தீ ஒரு மோசமான படைப்பு என்பது மட்டுமல்ல கீழ்த்தர மனோ பாவம் ஒன்றின் சாக்கடை வெளியீடு. எஸ்.பொ.வின் தீ நாவலிலும் சரி, கூற்றிலும் சரி சமூகத்தின் பிரச்சனைகளை ஒரு ஆழத்துடன் சித்தரிப்பதை விட்டு, சமூகப்பிரச்சனையை சாக்கிட்டு செக்ஸை ஒரு obsession க்கு தோரணைதான் உண்டு தனது obsession க்கு சப்பைக் கட்டுகளை டி. எச். லாரன்ஸ் அல்பர்டோ மொரேலியா முதலியோரிடம் இருந்து அவர் பத்தி பத்தியாகத் திருடியவர். இதை "செய்தி" பத்திரிகையில் அம்பலப்படுத்தியவர் ஜோர்ஜ் சந்திரசேகரம்" எனக் கூறி அம்பலப்படுத்தி விடுகின்றார்.

"எஸ்.பொ. வுக்கு ஒரு போலி மவுசே இருந்தது. இப்படியான போலி இலக்கிய சூழலே இலங்கையில் நடந்தது." என மு.தளையசிங்கம் என்பவர் எஸ்.பொ. வுக்கு வக்காலத்து வாங்கிய போது தர்மு சிவராம் கூறியிருந்தார். இதனால் இவருக்கு ஈழத்திலும்

போட்டியாளர் உருவாகினர்.

எழுத்துவில் எழுதிய பிற்பாடுதான் இவருக்கு மௌனி மற்றும் தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் நட்பும், அறிமுகமும் கிடைக்கின்றது. குறிப்பாக மௌனியுடன் நெருக்கமும் ஏற்பட்டு பழகத் தொடங்கினார். அதன் விளைவே மௌனி கதைகளுக்கு வழங்கிய முன்னுரை ஆகும்.

ஆனால் தர்மு சிவராமு இவர்களுடன் பழகும் போது உண்மை எழுத்தை வைத்தே பழகினார். இவர் எழுத்தை ஒரு சமூகத்துவம் ஆகவே எண்ணி வாழ்ந்தவர். இந்த எழுத்து சமூகத்துவத்தை, எமது கலாச்சார மதிப்பீடுகள் உயர்த்துவது இல்லை. இந்த சமூகத்துவத்தை எமது பெரும்பாலான எழுத்தாளர்கள் உணருவது இல்லை. இதில் பெயர் பெற்ற எழுத்தாளர்களும் விதிவிலக்கல்ல. அவர்கள் மனதிலும் இருள் மண்டிக்கிடக்கின்றது. இதனால் தர்முசிவராம் சிலரின் எதிர்ப்புக்கும் ஆளானார்.

**தர்மு சிவராமின் எழுத்து ஒரு தவம். அதில் எந்த பக்கசார்பும் கிடையாது. தெரிந்தவர், தெரியாதவர், உறவினர், உறவினர் இல்லாதவர் என்று முகம் பார்த்து விமர்சனம் செய்வது கிடையாது. படைப்பைப்பார், பார்த்து அதன் அடி ஆழம் பார் பின்பு அதன் குறை நிறைகளை விமர்சி என்பதுதான் அவர் போக்கு இதனால் இவருக்கு எங்கிருந்தோ எல்லாம் எதிர்ப்பு வரும். அடிக்கவும் கிளம்புவார்கள். ஆனால் தர்மு சார்ந்து கொடுப்பது இல்லை. தனிமரமாக நின்றாவது உண்மையை நிலை நாட்டுவார்.**

இன்னொரு உண்மை போலி சமூகக் கௌரவங்கள் பார்க்கமாட்டார். அவற்றையும் தோலுரித்துக் காட்டி விடுவார். இவருடன் பழகியவர்களில் அநேகர் பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவர். அவர்கள் என்னதான் பெரிதாக எழுதினாலும், பிராமண சநாதன சன்மார்க்க இருள், தாம் உயர்ந்தவர் என்ற கௌரவம் மறைந்து இருந்தது. இதனை தர்மு சிவராம் சுட்டி வெளிக்காட்டிய போது எதிர்ப்பும் வந்தது. இப்படியான இவரின் நேர்மையான விமர்சனம் இவருக்கு பலரின் எதிர்ப்பைக் கொடுத்தது. அதில் சுந்தரராமசாமி, வெங்கட் சாமிநாதன் ஏன் மௌனியும் கூட ஒரு வகையில் அடக்கம்.

சுந்தரம் ராமசாமியின் "ஜே.ஜே. சில குறிப்புகள்" நாவல் வெளிவந்த பிரபலமான காலங்களில் தர்மு சிவராமு அதில் ஒன்றும் இல்லை.

"புதிய புட்டியில் பழைய புளுகு" என்று அதிரடி விமர்சனம் செய்தார்.

"நாவலின் உள்ளடக்கம் இப்படி ஒரு அரை வேக்காட்டு இரவல் என்றால் அதன் உத்திமுறை ஜான் அப்டைக் (john uptike) எழுதிய Bech A Book என்ற நாவலிலிருந்து அபேஸ் பண்ணப்பட்டிருக்கின்றது. என்பதையும் வாசித்து அறியலாம்" என போட்டுடைத்த போது சு.ரா.வின் பக்தர்களும், சு.ரா வும் தர்முசிவராமின் மீது பல அஸ்திரப் பிரயோகங்களை மேற்கொண்டனர். என்றாலும் அவர் வளைந்து கொடுக்காது மேலும் விமர்சித்தார்.

"சு. ரா. விடமோ நான் ஏற்கனவே காட்டியது போன்று உயிர், அறிவு ஆகிய சங்கதிகளை தளுக்கிக், குலுக்கிக், குழப்பியடிக்கும் சிந்தனைத் தெளிவின்மையும், அறிவார்ந்த குழப்பமும், நேர்மையற்ற இனவாத அணுகு முறையும் தான் வெளிப்படுகின்றன" என்றார்.

பிற்பாடு சு. ரா. வின் பின்னைய சிறுகதைகளையும் விமர்சனத்துக்குள்ளாக்குகின்றார். குறிப்பாக குரங்குகள் என்ற கதையின் பித்தலாட்டங்களை அதன் போலி வெளிப்பாடுகளையும் விம்ர்சித்து அம்பலப் படுத்திவிடுகின்றார்.

இதேபோல் வெங்கட்சாமிநாதனின் விமர்சனத்துக்கு பதில் கொடுத்து விடுகின்றார். வெங்கட் சாமிநாதனும் இவரும் ஆரம்பத்தில் நன்கு பழகியவர்கள் பின்பு விமர்சன ரீதியான தாக்குதலால் இவருடன் மோதுகின்றார்.

பொதுவாக இவர்களிடம் பிராமணியம் என்ற இனக் குழ பார்வை தான் ஜே.ஜே சில குறிப்புகளின் வெளிப்பாடும் என்கிறார்.

"வெங்கட் சாமிநாதன் ஒரு ஜாதி வெறிபிடித்த பாமரப் பார்ப்பனமௌடீகன் என்பது என் திட்வட்டமான கருத்து" என தர்முவராம் திட்டியதும் உண்மை.

"பார்க்கப் போனால் இந்த பாமரமூளைகள் வெங்கட் சாமிநாதன், சுந்தர ராமசாமி போன்றோருக்கு ஒரு கவர்ச்சி மதிப்பு கொடுத்து வந்தமைதான் இந்திய அறிவார்ந்த சரித்திரத்தின் சாபக்கேடாகும்" என விமர்சனாச்சிரமத்தில் கூறுகின்றனர்.

தர்மு சிவராமுவின் விமர்சனத்திற்கு பதிலாக சுந்தரராமசாமி, வெங்கட் நாதன் போன்ற பார்ப்பனீய எழுத்தாளர்கள் இலங்கையில் வாழ்ந்து மடிந்த எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் எழுத்துக்களையும் சாட்சிக்கு இழுத்தனர். இவரின் கதைகளையும் கட்டுரைகளையும் உதாரணம் காட்டினார். இவர்தான் முன்பு எழுத்து சஞ்சிகையில் எஸ். பொ.வின் தீயை உன்னத நாவல் என்று விமர்சிக்க தர்முசிவராம் தீ யின் அவலத்தை எழுத்தில் அம்பலமாக்கியவர். மு. தளையசிங்கத்தின் போதாமையை முன்பே தர்மு சிவராம் விமர்சித்து உள்ளார். இவர்கள் எல்லாருக்கும் சேர்த்து தர்மு சிவராம் பதில் சொல்லி விடுகின்றார்.

தர்மு சிவராம், கே.டானியல் உடன் மு. தளையசிங்கத்தை ஒப்பிட்டு மு. தளையசிங்கத்தின் போதாமையை உணர்த்திவிடுகின்றார்.

கே. டானியல் அவர் எழுதிய நாவல் "பஞ்சமர்" கலைப்பாங்காக அதில் ஒன்றுமில்லை. ஆனால், அதேபோல் மு. த. வின் கதைகளிலும் ஒன்றுமில்லை. இருந்தும் "பஞ்சமர்" ஹிந்துத்துவ சைவ வேளாளர் வர்ணாச்சிரம தர்மத்தின் பொட்டுக் கேடுகளை அப்பட்டமாக்குகிறது. இதற்காக கே. டானியல் கம்யூனிஸ இலக்கிய வியாதிகளின் அம்சங்களை உபயோகித்தாலும் கூட மு. த. வின் புறச்சாய்வுக்கு எதிரான மறுபுறச்சாய்வு என்ற விதத்தில் பஞ்சமரையும்,

டானியலையும் நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஆனால் பஞ்சமர்களையும், நாவலையும் மீறியது டானியலின் தைரியமான பாதாள (under ground) அரசியல் வாழ்வு! இதில் டானியலின் நேர்மையும், தைரியமும் மு.த.வின் ஸ்டாண்டில் இல்லை! என தனது மனோவியாதி மண்டலம் என்ற விமர்சனத்தில் குறிப்பிட்டு விடுகின்றார் தர்முசிவராம். இவ் விமர்சனத்தில் மு. தளையசிங்கத்தின் பகட்டுக்களையும் போலி சநாதனதர்மத்தின் பகட்டுக் களையும் விளக்கமாக எழுதியுள்ளார்.

சுந்தரராமசாமி, வெங்கட்சாமிநாதன் போன்ற பார்ப்பனீய எழுத்தாளர்களுடன் நன்கு பழகியிருந்தாலும், அவர்கள் பார்ப்பனீய வாதமும், கருத்துலக மோசடிகளும் நிறைந்த குழுவினர் என்பதை புரிந்து கொண்டவர் தர்மு சிவராம். புரிந்து கொண்டவர் மாத்திரம் அல்ல, பார்ப்பனீய கொள்கைகளால் பாதிக்கப்பட்டவரும் கூட. அதனால் தான் ஒரு கட்டத்தில் "கசடதபற" குழுவினரையும் விமர்சித்து விடுகின்றார்.

"உண்மையில் சமூக வக்கிரம் இலக்கிய சுரணையின்மை, பாமரபார்ப்பனீயம் ஆகியவற்றுக்கு வாகனமாக வெளிவந்த கசடதபற எழுத்தாளர்கள்" என தாக்கி எழுதியுள்ளார்.

இதில் இவர் பெரிதும் மதிப்பு வைத்து பழகி வந்த மௌனியும் ஒருவர் ஆகிவிட்டது தான் இவருக்கு பெரிய ஏமாற்றத்தை கொடுத்தது.

**மௌனியும் இவருக்கு பெரும் அவ மரியாதையை உண்டு பண்ணி இருக்கின்றார். ஒரு சமயம் இவரும், இன்னொரு நண்பனும் சேர்ந்து மௌனி வீடு சென்றுள்ளனர். மௌனியுடன் அளவளாவிவிட்டு மதியம் உணவருந்தியுள்ளனர். சாப்பிட்டு முடிந்ததும் இருவரும் எழுந்துள்ளனர். அப்போது மௌனி தர்மு சிவராமிடம் சாப்பிட்ட வாழை இலையை தூக்கிச் சென்று வெளியில் போடும் படி கூறியுள்ளார். மற்றவர் பிராமணர் ஆனபடியால் இலையை அப்படியே வைத்து விட்டு வெளியில் போய் கை கழுவும் படி கூறியிருக்கின்றார். இந்த ஓரவஞ்சனை தர்மு சிவராமுவுக்கு சுரீர் என மனதில் குத்திவிட்டது.**

பிராமணீயத்தின் இந்த கொடூர வேற்றுமையை தர்முவால் தாங்க முடியவில்லை. இதனை பல இடங்களில் அழுத்தி கூறியுள்ளார்.

"மௌனியுடன் ஏற்பட்ட நேர் சந்திப்புக்கள் எனக்கு ஒரு விதத்தில் உதவி இருக்கின்றன. என்றாலும் இன்னொரு விதத்தில் இலக்கியக் கலை உணர்வு என்பது மனிதப் பண்பின் பூரணத்துவத்தை காட்டும் உரைகல் ஆகிவிடமுடியாது என்பதையும் உணர்த்தியுள்ளன" என்கிறார். மேலும்,

"பூரணத்துவத்திற்கு உறுதுணையான சமத்து வப்பாவம் அவரிடம் இருந்தது இல்லை என்பதுடன் ஜாதிவெறி இதன் விளைவான தமிழ் மொழி துவேஷம் என்பவைதான் அவரிடம் வளர்ந்திருக்கின்றன. என குற்றமும் சாட்டுகின்றார். இப்படியாக அக உலக கலைஞராக காணப்பட்ட மௌனியின் போலி புற உலக வாழ்வு பற்றியும் விமர்சித்து இருக்கின்றார்.

மௌனி போன்ற பிராமணீய எழுத்தாளர்களுடன் பழகி வந்த தர்முசிவராமுவை அவரது ஒன்றுவிட்ட அண்ணன் எச்சரிக்கை செய்தும் உள்ளார். இவர் தர்மு சிவராமுவின் தாயாரின் விதவை சகோதரியின் மகனாவார். இவர் பெயர் தம்பிராசா. இவர் தமிழை முறையாகக் கற்று அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்தவர். சிதம்பரத்தில் விதவை தாயாருடன் வசித்து வந்தவர். தீவிர பிராமண எதிர்ப்பாளர். அவர் தர்முவை நோக்கி,

"நீ ரொம்பவும் தான் பிராமணர்களுடன் பழகுகிறாய் மிகவும் ஜாக்கிரதையாக அவர்களுடன் பழகு" என்று எச்சரித்து இருக்கின்றார்.

தர்முசிவராமுவை இது பாதித்தது இல்லை. ஏனெனில் இயற்கையாகவே இவர் மனம், மனிதப் பிரிவினைகளின் எல்லைகளை மீறி இருந்தமை தான். இவர் தாக்குபவர்களை தனி மனிதர்களாகத்தான் கணித்தாரே ஒழிய அவர்களின் குலம், வகுப்புகளுடன் ஈடுபடுத்தாமல் நோக்கினார். இது பற்றி அவர்.....,

"எழுத்துவில் நான் எந்த பிராமண வகுப்பினரையும் பாராட்டி விமர்சிக்கவில்லை மேலே குறிப்பிட்ட என்மனப் பின்னணியில் இந்த வேலைக்கு இடமில்லை. தனித்தனி எழுத்தாளர்களைத் தான் விமர்சித்தேன். எனக்கு ஒரு பார்வைதான்." என தனது பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

தர்முசிவராமுவுக்கு மனிதம்தான் முக்கியத்துவமாக இருந்ததேயொழிய சாதி, சமய, வகுப்பு போன்ற பேதங்கள் முக்கியமாக இருக்கவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் பெரும்பாலான பார்ப்பனீய எழுத்தாளர்களிடம் தங்கள் குலம், கோத்திரம், வகுப்பு பற்றிய பெருமை மேலோங்கி இருந்ததுடன் தங்களுக்குள் தாங்களே முதுகு சொறியும் தன்மையும் மேலோங்கி இருந்ததை தர்மு கண்டார். மற்றும் பிராமண எழுத்தாளர்களை தூக்கி வரும் வேளைகளையும் செய்தனர் இதனை.....,

"இந்தியாவின் சாபக் கேடாக மாறிய வர்ணாஸிரமம் அதன் சமூக சீரழிவு நிலையான ஜாதீயம் ஆகியவற்றின் பாற்பட்ட மனோபாவங்களே விமர்சனாஸிரமம் பண்ணுகின்றன. என்கிறார் தர்முசிவராமு. மேலும்.....,

"ஜுராஸிக் காலத்து மகா ஓணான்களுக்கு தலையில் ஒரு மூளை, வால் பகுதியை இயக்க இடுப்பின் கீழ் இன்னொரு மூளை இருந்ததாம். அதேபோல் ஜாதீயத்தின் தலையில் வர்ணாஸ்ரமதர்மம் என்று ஒரு மூளை அதன் இனவெறி என்று வாலை இயக்க இடுப்பின் கீழ் விமர்சனாசிரமம் என்ற ஒரு மூளை" என்று பிராமண எழுத்தாள விமர்சகர்களை நக்கல் அடித்து விடுகின்றார் பிரமிள்.

**தமிழ் நாட்டில் தனிமையில் வாழ்ந்து கொண்டே யாருக்கும் அஞ்சாமல், பலத்த எதிர்ப்புகள் வந்தபோதும், தனது வாசிப்பும், எழுத்தும் தவிர வேறு எந்த வேலையும் செய்யாமல், யாரோடும் சமரசம் செய்யாமல் எதிர்த்து வாழ்ந்தார். ஒருவரின்**

**அந்தஸ்தையோ, முகத்தையோ நோக்காமல் இலக்கிய ரீதியாக தன் அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தார்.**

இலக்கியம் உண்மையாக இருக்க வேண்டும். சமூகத்தை ஆழமாக நோக்க வேண்டும். மன ஆழத்தில் இருந்து வர வேண்டும் என்பார். இன்னொன்றுக்காக இன்னொன்று படைக்க முடியாது. மேல் நாட்டின் மேன்மையை கண்டு நாம் மாற முடியாது. எம் நிலத்தின் இயற்கைவளம் பண்பாட்டில் இருந்து புறப்பட வேண்டுமென்பார். அதாவது "கான மயில் ஆட கண்டிருந்த வான் கோழி போல" நாம் பிரதிமை செய்யமுடியாது.

"தமிழ் இலக்கியப் படைப்புகளில் கூடுதலாக உயிர்த்தன்மையை காண முடிவதில்லை. இதற்கான காரணங்களுள் ஒன்றாக இலக்கியப்பிடிவாதம் என்ற வியாதிகாணப்படுகிறது." என்கிறார்.

நான் அதுபோல் படைத்துள்ளேன். அந்த தத்துவத்துக்காக எழுதுகின்றேன். பின் நவீனத்துவம் மாதிரி படைக்கின்றேன் என்பது கூட இயற்கை எழுத்தை பாதிக்கின்றது. ஒரு போலிப் படைப்பை உருவாக்குகின்றது. எழுத்து என்பது உன் இயற்கையான உள்ளத்துள் இருந்து இயற்கையான நீரோடைபோல பீரிட்டு எழ வேண்டும். அதை விடுத்து இயந்திரத்தனமாக இயங்குவது இலக்கியம் அல்ல இதனை......,

"விளை நிலங்களை உணராமல் போலி பண்ணப்பட்ட மேல் நாட்டு இயக்கங்கள், ஆசிரியர்கள், சுயாதீனமான ஆர்வத்துக்கும், இயல்புக்கும் எட்டாத ஆதர்சங்கள் ஆபத்தானவை ஆர்வத்தின் உத்வேகத்தின் மூல நிலையமான தள்ளியல்பை தன்னம்பிக்கையை சிதைப்பவை, இந்த நுட்பங்கள் கூட நமது அரைகுறைகளுக்கும், சூழல் காரர்க்கும் புரியவில்லை" என்கிறார் மேலும்....,

"உத்தேசம் இல்லாமல் மிதந்து கலையைச் சமைக்க முன் வருபவர்கள் பிரச்சாரவாதிகளின் சகோதரர்களான வியாபாரிகள் பொழுது போக்காளர்கள் இவர்களே இன்று தமிழ் நாட்டில் தங்களை இலக்கியவாதிகள் என்று கருதிக் கொள்கிறார்கள்......,

"இவர்கள் எவ்வித தார்மிக பிரச்சினையையும் உணரத் திறனற்று மேனாட்டு தார்மிக புள்ளிகளிடமிருந்து தத்துவ இரவல்களைப் பெறும் கைங்கர்யத்தை சமயம் செய்கிறார்கள். எனத்தோன்றுகிறது. இவர்களது கும்பலும் சரி இன்று தமிழில் பொதுவாக எழுதப்படும் எந்த இலக்கிய உருவமும் சரி உயிரற்றது. உயிரற்றுப் போனால் என்ன குடிமுழுகிப்போய் விட்டது?" என குரூர நக்கலும் அடித்து விடுகின்றார் பிரமிள்.

தர்முசிவராமின் விமர்சனங்கள் காட்ட மானவை எந்த பக்கச் சார்பும் இல்லாதவை ஒரு அடலாடித்தனமாகவும், அந்தரடியாகவும் சுருக்கெனதைக்கும். வார்த்தைகளும் மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டவை. அவர் படைப்பைதான் பார்ப்பார். படைப்பின் ஆடி ஆழம் வரை துருவித் துருவி சென்று பார்ப்பார். யார் ஆள் என்று பார்க்கமாட்டார்.

படைப்பின் இயல்பு பார்த்தே விமர்சனம் செய்வார். அப்படிப் பார்த்தால் சுந்தரராமசாமி அவருக்கு பல உதவிகள் செய்து இருக்கின்றார். அப்படியிருந்த போதும் சுந்தர ராமசாமியை அவர் பார்க்கவில்லை. சுந்தரராமசாமியின் படைப்புக்களையும், அதன் போலித்தன்மைகளையும் தான் பார்த்தார். நிறை குறைகளை விமர்சிக்கத் தவறவில்லை. படைப்பின் உண்மையற்றதன்மைகளையும் புட்டுக்காட்டி உடைத்து விடுகின்றார். அதனால் எதிர்ப்புக்களையும் கண்டார். என்றாலும் அவர் சோர்வடைய வில்லை அதே போல் மௌனிபரம்பரை எழுத்தாளர்களையும் அவர்களின் நடை, கசடதபற இலக்கிய குழுக்களையும் விமர்ச்சித்து உள்ளார். "மௌனியின் இனவாதி மூர்க்கங்களினால் ஊட்டம் பெற்ற ஒரு புதிய தலைமுறையே சிதறலடைகிறது." என தமிழகத்தின் இலக்கிய குழுக்கள் உருப்படியாது ஒன்றும் சாதிக்க வில்லை என குற்றம் சாட்டி விடுகின்றார்.

இவரின் கட்டுரை விமர்சனம் போன்றதே இவரின் நவீன கவிதை விமர்சனங்கள் பற்றிய பல விமர்சகர்கள் விதந்து கூறியுள்ளார்கள்.

"புதுக் கவிதையைப் பற்றிய பிரமிளின் திறனாய்வு கட்டுரைகள் தமிழ் இலக்கிய விமர்சன உலகில் விஷேசமான இடத்தை பெறுகின்றன." என்கிறார் மலையாள விமர்சகர் ஸ்ரீதரன்

III

தர்மு சிவராமுவின் கவிதைகள் விஷேச குணமுடையன. இவரின் விமர்சனங்கள் போன்றே கவிதையும் வாதப் பிரதிவாதங்களை உண்டு பண்ணி விடுகின்றன. நவீன கவிதையில் இவர் ஒப்பாரும் மிக்காரும் இன்றி பவனி வருகின்றார்.

பிரமிளின் கவிதைகள் அறிவுபூர்வமான நிலையை துல்லியமாய் வெளிப்படுத்துகின்றன. உணர்ச்சி வேகத்தில் அவர் கவிதைகள் எழுதுவது இல்லை எனக் குறிப்பிடுகின்றார்கள்.

1972ம் ஆண்டு செப்டம்பர் மாத வானம் பாடி கவிதா மண்டலத்தில் இவரின் $E=Mc^2$ என்ற புகழ் மிக்க கவிதை தமிழ் இதழ்களில் வெளியானவற்றில் மிகச் சிறந்த கவிதையாக "சிற்பி"யால் தேர்ந்து எடுக்கப்பட்ட போது எல்லாரும் விழி உயர்த்தி இவரை பார்த்தார்கள். அக் காலங்களில் இவர் அரூப் சிவராம் என்றே எழுதி வந்தார்.

$E=Mc^2$ கவிதையை சிற்பி தேர்ந்தெடுத்து வெளிப்படுத்திய நேர்த்தியை சிற்பியின் எழுத்திலேயே பார்க்கலாம்.....,

"புதிய பொருள் - புதிய உத்தி சில சொல்லிப் பல உணர்த்தும் கவிதை நயம் - படிமம் பிரயோகம் - சமூகப்பிரக்ஞை கொந்தளிக்கும் கவித்துவம் இவையனைத்தின் கூட்டுப் பிரவாகமாக அரூப் சிவராமின் $E=Mc^2$ என்ற கவிதை ஓங்கி ஒலிக்கிறது.

"இதுவரை இத்தனை லாகவத்தோடு ஒரு விஞ்ஞான உண்மையை எந்த தமிழ்க் கவிதையும் சொல்ல முற்பட்டது இல்லை என்பது என் கருத்து.

அரூப்சிவராம் கலை கலைக்காகவே என்னும் மாய வளையத்தின் போலித்தனத்தில் நம்பிக்கையுள்ளவராக இருக்கலாம். எனினும் இந்தக் கவிதையில் அவர் சித்தரித்திருக்கும் உண்மை ஒரு தனி அழகோடும், மெருகோடும் உருப்பெற்று இருக்கின்றது. அதனால் ஒரு மகத்தான கவிதையாக இதனை நான் கணிக்கின்றேன்.

கவிதை என்ன விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்பதில் கருத்து வேறுபடலாம். ஆனால் மொழியில் ஆற்றல்களையும், சாத்தியங்களையும் சோதனை செய்து பார்க்கும் அற்புதக் கருவி கவிதை. அத்தகையதொரு சக்திவாய்ந்த கருவியாக உருக்கொண்ட கவிதை $E=Mc^2$ பிரபஞ்சத்தில் ஏற்படும் வேகங்களில் ஒளியின் வேகத்துக்கு மேல் ஒன்றுமில்லை என்ற இயற்கை விதி. பொருள்களின் அணுக்களில் உள்ள உட்கருவில் உறங்கிக் கிடக்கும் ஒப்பற்ற சக்தியும் பொருளும் ஒன்றே என்ற பேருண்மை - உயரம் நீளம் அகலம் ஆகியவற்றுடன் காலம். வெளி என்ற புதிய பரிமாணம் இவற்றையெல்லாம் சிந்தனை உலகுக்கு வழங்கிய ஒரு சாம்யம் (கணக்கு) ஐன்ஸ்டீனின் $E=Mc^2$ இந்த மூலம் மந்திரத்தை கவிதைப் பொருளாக எடுத்த துணிச்சல் அரூப் சிவராமுவுக்கு உண்டு.

ஒளியின் பயணத்தில் கவிதை தொடங்குகின்றது. சூரியஒளியின் பயணம் காலம் காலமாக நடக்கிறது. சூரியனை ஒற்றைக் குருட்டு வெண்விழி பரிதி என்று நெருக்கி நெசவு செய்து தரும் சொல்லாழம் சிந்தனைக்கு விருந்து.

இமாலய பிதுக்கத்தில் இருந்தபடி நைவேத்தியத்தைக் குருக்கள் திருடித் திண்றதினால் கூடாய் இளைத்து விட்ட நெஞ்சைத் தொட்டு ஒளி இங்கே பயணம் வருகிறது என்கிறான் சிவன். தடுமாறிய சிவன் இறைவன் அழிந்தாலும் அழியாத ஒளியின் இளமையை இந்த விரிகள் எழிலுறச் சித்தரிக்கின்றன.

மாமேதை ஐன்ஸ்டீன் குழந்தைகளை நேசித்த வரலாறு - அவர் இசையில் கொண்டிருந்த அளவற்ற பிரேமை அவர் இதயத்தில் பெருகிய அக்ஷர கணித நதி ஓட்டம் - இதுகாணும் நம்பி வந்த பழைய பிரபஞ்சக் கண்ணோட்ட விருக்ஷத்தை அந் நதி பெருகி அழித்த கோலம் எல்லாம் விரிகிறது கவிதை வரிகளாக.....,

**"ஒரு குழந்தை விரல் பயிற்ற**
**ஐன்ஸ்டீனின் பியானோ**
**வெளியாய்......**
**எழுந்து விரிகிறது.**
**மேசையில் அக்ஷர கணிதத்தின்**
**சங்கேத நதி**
**மனித மனத்தின்**
**மணற்கரையில்**
**தடுமாறும்**
**ஒரு பழைய பிரபஞ்ச விருக்ஷம்**
**நதி பெருகி**
**காட்டாறு**
**காலமும் வெளியும் ஒருமித்து**
**ஓடும் ஒற்றை நிழலாறு**
**ஒரு புதிய பிரபஞ்சம்.**

இந்த வரிகளில் தான் எத்தனை எத்தனை விஞ்ஞான நுட்பங்கள், எவ்வளவு அழகாக வார்க்கப்பட்டு விட்டன.

கால - வெளித் தத்துவத்தின் கண்ணாடியில் இன்று இப்பொழுது என்ற சொற்கள் அர்த்த சூன்யமாக நிழலிக்கின்றன. பல பல ஒளி ஆண்டுகளுக்கப்பால் உயிருள் இருந்து அவிந்து போன கோளங்கள் கூட தூரம், ஒளியின் வேகம் காரணமாக இன்னும் நம் கண்களுக்குத் தெரிவது வேடிக்கை தான்.....,

**நேற்று நேற்று என்று**
**இறந்த யுகங்களில்**
**என்றோ ஒரு நாள் அவிந்த**
**நக்ஷத்ர கோளங்கள்**
**ஒளி வேகத்தின்**
**மந்தகதி தரும் நிதர்சனத்தில்**
**இன்னும் இருக்கின்றன**
**காலமே வெளி!**
**இன்று கண்டது**
**நேற்றையது**
**இன்றையது நாளைக்கு**

ஒரு விஞ்ஞான அனுபவம் மிகத் தெளிவாக மெய் சிலிர்ப்போடு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பரந்த அண்டப்பெரு வெளியிலிருந்து கவிஞனின் நோக்கு அணுவின்மையத்துக்கு விரைகிறது. பிரம் மாண்டமும் பரமாணுவும் எல்லாமே சக்தியின் நடன மேடை அல்லவா? பொருள் சிதைந்தால் சக்தி, சக்தி குவிந்தால் பொருள் - இந்தப் புதிய தத்துவத்தை கூர்ந்து பார்க்கிறது கவிதை.

சக்தி = ஜடம் X ஒளிவேகம்² ($E=Mc^2$)

**அணுக்கள் குவிந்த**
**ஜடப் பொருள் யாவும்**
**சக்தியின் சலனம்**
**ஒளியின் கதியை**
**ஒளியின் கதியால்**
**பெருக்கிய வேகம்**
**ஜடத்தை புணர்ந்தால்**
**ஜடமே சக்தி!**

நம் கண்முன் பாரதியின் "காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின் மீது காளி சக்தி என்ற பெயர் கொண்ட" வியப்புக் காட்சி விரிகின்றது.

இந்த அற்புதமான உண்மை அக்ஷரகணித வடிவில் ஜடமாகிக் கிடந்த உண்மை 1945ம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகியில் சக்தியின் பிரளயமாகி வெடித்து நிரூபணம் ஆகியது. "ராபர்ட் ஓபன்ஹிமர்"என்ற அனுவிஞ்ஞானி Brighter tha thousand suns என்று கீதை மொழியில் வர்ணித்த அணுகுண்டுப் பேரொளி ஹிரோஷிமாவினன் இதயல் பளிரிட்டது. கவிஞர் கூறுகிறார்......,

**1945 ஹிரோஷிமா நாகசாகி**
**ஜடமே சக்தி**
**கண்ணற்ற**

**சூர்யப் போலிகள்**
**கெக்லித்து**
**தொடுவான் வரை சிதறும்**
**கண நேர நிழல்கள்.....,**

எண்ணற்ற மானுட உயிர்களைக் கருக்கிக் குலைத்து கதிரியக்கத்தால் தலைமுறை தலைமுறையாக அங்கஹீனர்களாக்கி ரத்தமும் கண்ணீரும் நெருப்பு நதியில் சங்கமிக்க - மாநகரம் மண்மேடாய்ச் சுடுகாடாய் பொசுங்க....., ஐன்ஸ்டீனின் சாம்யம் (கணக்கு) ஜடமே சக்தி நிருபணம் ஆகிவிட்டது. மண்டை ஓடுகள் கெக்கலிக்கின்றன.

**பசித்து**
**செத்துக் கொண்டிருக்கும்**
**சிவனின்**
**கபாலத்துக்**
**கெக்கலிப்பு**

செய்தி பறந்தது ஐன்ஸ்டீனுக்கு......., கணக்கெடுத்துப் பார்த்தோம்....... உங்கள் அக்ஷ்ர கணிதம் ஹிரோசிமா, நாகசாகியில் நிருபணம் ஆகிவிட்டது. ஐயா....,

எல்லாம் முடிந்து விட்டது. அந்த நகரங்களில்....., ஜன்ஸ்டீன் கண்களில் நீர் திரையிட்டது. **He erased Hiroshima with place of chalk** என்று வருங்காலம் சொல்லும்படி ஆக்க பூர்வமான முயற்சிகளில் அல்லாமல் - அழிவின் சந்நிதானத்தில் - ஈரமற்ற முரட்டு நெஞ்சங்களின் இருட்டு நோக்கில் ஐன்ஸ்டினின் தத்துவம் நிருபிக்கப்பட்டதால் பதறினார் ஐன்ஸ்டின். அந்த இசை பிறந்த பியானோவில் சோகத்தின் மௌனம்......, இல்லை மனித குலத்தின் வடிக்க முடியாத சோகச் சுமை.

**"இசை வெளியின் சிறகு மடிந்து**
**கருவி ஜடமாகிறது**
**பியானோவின் ஸ்ருதி மண்டலம்**
**வெறிச் சோடிக் கிடக்கிறது**
**உலகின் முரட்டு இருளில்**
**எங்கோ ஒரு குழந்தை அழுகிறது.**

ஜன்ஸ்டீனின் கண்ணீர்த்துளியில் தெறிக்கிறது பரிதி "சாதனையாகப் பிறந்த ஒரு மேதையின் சிந்தனை கண்ணீர்க்கறை படிந்த சோதனையாக முடிந்த ஒரு வரலாற்றுச் சம்பவம் அரூப் சிவராமின் கவிதையாகப் பூத்திருக்கிறது. ஒரு கணப்பார்வையாக ஒளிச் சிதறல்களோடு உருவாகியிருக்கும் இந்த விஞ்ஞானக் கவிதை தமிழுக்கு வரவேற்புக்குரிய ஒரு புதுமை. மானுடத்தின் நெடு வீதியில் நிகழ்ந்து விட்ட அந்தக் கொடுமை மற்றொருகால் நிகழ்ந்து விடக்கூடாதே என்ற எச்சரிக்கை போலக் கவிதையின் கடைசி வரிகளில் சோகம் அலைவீசுகிறது.

**வைரம் நிறுத்தது**
**போன்ற சொற்கள்**
**சொற்களின் விளிம்பில்**
**வானவில் நயங்கள்**
**உணர உணர**
**விரிகின்ற கருத்தாழம்**
**உவமைகளை உருவங்களாக்கி**
**உருவங்களைப்**
**படிமங்களாக்கும் நேர்த்தி**
**அறிவியலின் ஒளிச்சாயல்**
**வரலாற்றின் ஏடுகளை**
**ஈரமாக்கித் துளும்பும் சோகம்**
**அதற்குள் பொதிந்து**
**இழையோடும் மனிதாபிமானம்**

இவையனைத்தும் கவிதையாக உருக்கொண்ட பேரழகு ஆகிய தன்னேரில்லாச் சிறப்புக்களுக்காக 1972 செப்டம்பரில் தமிழ் இதழ்களில் வெளியாகியுள்ள கவிதைகளில் $E=Mc^2$ஐ மிகச் சிறந்த கவிதையாக தெரிவு செய்கின்றேன்" என சிற்பி முடிக்கின்றார்.

இதேபோல் பல சிறப்புமிக்க கவிதைகளை படைத்துள்ளார் பிரமிள். இவர்கவிதைகளில் ஆன்மீக ஞானம் சுடர்விட்டு பிரகாசிக்கும். அதே போல் படிமப் பிரயோகம் பொருத்தமான இடங்களில் கச்சிதமாக இடம் பெற்று இருக்கும். இவர் பிரதானமாக நவீன கவிதையின் எழுச்சிமிக்கவராகவே நோக்கப் படுகின்றார். இவர் மறைவுக்குப் பின் இவரது அனைத்து கவிதைகளும் தொகுக்கப்பட்டு பிரமிள் கவிதைகள் என வெளிவந்துள்ளது.

## IV

தர்முசிவராமு கவிதைக்காரராக குறியீடு இடப்பட்டாலும் மற்றைய துறைகளிலும் தமது கை வண்ணம் காட்டி உள்ளார். கட்டுரை, விமர்சனம், சிறுகதை, நாடகம் என அவரது படைப்புலகம் விரிகின்றது. ஆனால் கவிதை, விமர்சனம் போன்ற துறைகளில் வீரியமாக செயற்பட்ட விதத்தில் மற்றைய துறைகளில் இவரது வீரியம் எழுச்சி பெறவில்லை என்றே தெரிகின்றது என்ற போதிலும் நாடகத்திலும் இவர் கைவண்ணம் காட்டியுள்ளார்.

தர்முசிவராம் எழுதிய நாடகங்களுள் "நட்சத்திரவாசி" இவருக்குபெரும் பெயரை ஈட்டிக் கொடுத்தது. இதில் வரும் நட்சத்திரவாசி இவரையே பிரதி பண்ணுவதாக குறிப்பிடுகின்றார்கள். இந் நாடகம் பல முறை மேடை ஏற்றப்பட்டுள்ளது. முதன் முதலில் பேராதனை பல்கலைக்கழகத்தில் அதன் தமிழ்ச் சங்க பொன்விழா சிறப்பு நிகழ்வில் அப்போதைய பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க தலைவர் திருமலை நவத்தினால், பேராதனை பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பை பெற்றுக் கொண்டது. அதன் பின்பு கொழும்பில் இயங்கிய பாலேந்திராவின் அவைக் காற்று கழகத்தினால் கொழும்பில் மேடையேற்றப்பட்டு பெரும் புகழ் பெற்றது. பின்பு அவைக்காற்று கழகம் வெளிநாட்டுக்கு இடம் பெயர்ந்தபோது லண்டனிலும் மேடையேற்றப்பட்டது என அறிகிறோம். பின்பு பல இடங்களில் இந் நிகழ்வு நடந்ததாக கூறுகின்றார்கள்.

**ஐம்பத்திலெட்டு ஆண்டுகள் இந்த உலகில் வாழ்ந்த தர்முசிவராம் கலை, இலக்கியத்துக்காகவே வாழ்ந்தார் அவருக்கு வேறு தொழில்கள் தெரியாது. ஓவியம் போன்ற நுண்கலைகளிலும் ஈடுபாடு இருந்தாலும் கலை இலக்கியம் தான் அவரது முக்கிய மூச்சாக இயங்கியது. இதனால் அவருக்கு பசி, பட்டினி எல்லாம் பழக்கமானது ஆன்மீக உரம் அவருக்கு உளப்பலத்தைக் கொடுத்தது அதனால் தைரியமாக இந்த உலகத்தை எதிர் கொண்டார். எந்தப் பெரிய கொம்பனாக இருந்தாலும் சரி, சாதாரண எலும்பனாக இருந்தாலும் சரி தயவு தாட்சன்யம் பார்க்காமல் நேர்மையாக விமர்சனம் செய்தார் இதனால் தன் மீது எறியப்பட்ட அம்புகளை எல்லாம் அடித்து நொறுக்கி வீழ்த்தினார். தனி ஒருவனாக வீரயம் மிக்க படைப்பாளியாக உயர்ந்து நின்றார்.**



வெங்கட்சாமிநாதன் 1985

ஓவியம் பிரமிள்

சில சமயம் கடுமையாக பாதிக்கவும் பட்டார். மிகுந்த மனச் சோர்வுக்கு உட்பட்டு இருக்கின்றார். அந்தச் சமயங்களில் ஆன்மீகம் தான் அவரை உயிர்ப்பித்துள்ளது. ஈழத்தில் இருந்து தமிழ் நாடு போனபோது தனது நண்பர்களையே பெரிதும் நம்பியிருந்தார். ஒரு கட்டத்தில் அவர் நம்பினவர்களே தாக்குபவர்களாக மாறிவிட்டார்கள். சமரசம் என்பது இவருக்கு சரிப்பட்டுவராது. ஆனால் இவருக்கு உற்ற நண்பர்களும், புரிந்து கொண்டு உதவுபவர்களும் இருந்துள்ளார்கள்.

சிலர் இவரது விமர்சன நேர்மையை கண்டு மிகவும் நடுங்கினார்கள். இவரை ஒழித்து இல்லாது செய்து இவர் வாழ்ந்த இடத்தில் புல் கூட முளைக்காது இருக்க எண்ணினார்கள். புகழின் உச்சியில் இருந்தவர்கள் கூட இவரையும் இவரது நேர்மையான கலை உள்ளத்தையும் கண்டு தமது புகழுக்கு கேடு வந்து விடுமோ என்று எண்ணினார்கள். இவர் யாரையும் பொருட்படுத்தியதும் இல்லை: தலை வணங்கியதும் இல்லை. இவரின் தராசு சரியாகத்தான் நிறுத்து வந்தது. முள் நேர்மையாகத் தான் நிற்கும் அது யாராக இருந்தாலும் சரிதான். இலக்கியம் தான் நேர்மை.

இவருக்கு எதிரிகள் இருந்தது போல் உற்ற நண்பர்களும் இருந்தார்கள். இவரின் கலை உள்ளத்தை புரிந்து கொண்டு இவருக்கு பலவிதத்திலும் ஒத்தாசை புரிந்தார்கள் கம்பருக்கு ஒரு சடையப்பவள்ளல் போல் இவருக்கும் பல சடையப்பவள்ளல்கள் உதவி இருக்கின்றார்கள். ஈழத்தில் இருக்கும் போது இவரின் மாணவத்தோழர்கள் பலர் இவருக்கு ஒத்தாசையாக இருந்து உள்ளனர். கோபாலகிருஷணன் இவரின் பாடசாலை நாட்களில் இருந்தே உற்ற தோழராக இருந்து வந்துள்ளார். அதேபோல் கந்தசாமி என்ற நண்பரும் இவர் இந்தியா சென்ற பின்னரும் கவனித்த உற்ற தோழராக விளங்கி வந்துள்ளார்.

கோபால கிருஷ்ணனுக்காக லங்காபுரிராஜா என்ற கதையை எழுதியுள்ளார். இவர் நில அளவையாளராக தொழில் புரிந்து வந்தவர். இவர் காட்டுப்புறங்களில் தொழில் நிமித்தம் விடுதிகளை அமைத்து வேலை செய்து வந்துள்ளார். இவர் போகும் இடங்களில் எல்லாம் தர்முசிவராமுவும் சென்று கூடாரங்களில் இருந்து இயற்கையாக இயற்கை வாழ்வை ரசித்து வந்து உள்ளார். இன்னும் பல விடயங்களை இவரது மாணவர் காலதோழர் டாக்டர் இராமச்சந்திரன் கூறுவார். இவர் இந்தியா போய் வரும் போது எல்லாம் தர்முசிவராமுவை சந்தித்துவருவார்.

தமிழ் நாட்டிலும் இவரை புரிந்து கொண்டு இவருக்கு ஒத்தாசை புரிந்தவர்கள் பலருண்டு. இவரின் மேதாவிலாசத்தை கண்டு வியந்த பலர் இவரை கட்டியணைத்து உறவு பூண்டுள்ளனர். இவருடன் பழகிய கால சுப்பிரமணியம் இவரின் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் விமரிசனம் என யாவற்றையும் தேடிச் சேகரித்து தொகுப்புகளாக்கி வெளியுலகுக்கு வெளிப்படுத்தி வருகின்றார். தர்முசிவராமுவின் படைப்புகள் இன்று இவர் மூலம் இலக்கிய உலகுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

பாரதி புதுமைப்பித்தன் வழியில் தமிழ் கலை, இலக்கிய உலகில் ஒரு சுதந்திரக் கலைஞனாக உலவிவந்தார். ஏழ்மை இவருடன் ஒட்டிப்பிறந்ததாகவே இருந்தது. ஆனால் இவரது ஆளுமை இவரை சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்தது. மிகவும் சுதந்திரக் கலைஞனான இவர் 06.01.1997ம் ஆண்டு தமிழ் நாட்டின் கரடிக்குடி என்ற கிராமத்தில் மீளாத்துயிலில் ஆழ்ந்தார்.

இவர் மரணித்து விட்டாலும் இவர் படைப்புகள் இன்றும் உயிருடன் வாழ்கின்றன. குறிப்பாக இவரின் வீரயம் மிக்க விமர்சனங்கள், கவிதைகள் இன்றும் பலருக்கு எழுச்சி ஊட்டுகின்றன. இலங்கையின் திருகோணமலையில் பிறந்து வளர்ந்த இவர் தமிழ் நாட்டுக்கு இடம் பெயர்ந்து கலை இலக்கிய உலகில் மிக்க புகழ் உடன் வாழ்ந்து மரணித்தாலும் இலக்கிய உலகில் வாழ்ந்து வருகின்றார்.

...

# பிரமிளின் ஆரம்பகாலப் படைப்புகள்



பிரமிள் போன்ற ஒரு இலக்கிய மேதையின் ஆரம்பகாலப் படைப்பு முயற்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்வது, ஒரு வாசகனுக்கும் ஒரு இலக்கிய ஆய்வாளனுக்கும் - அதேபோல் இலக்கிய வரலாறு பற்றிய ஆர்வமுள்ளவனுக்கும் - சுவாரஸ்யமான விஷயமாகவே இருக்கும்: எனவே, இங்கு சில தகவல்களைத் தொகுத்துத் தருகிறேன்.

இலங்கையின் திருகோணமலையில் 20.04.1939ல் பிறந்தவர் பிரமிள். தமிழகத்து எழுத்துப் பத்திரிக்கையுடன் 1959 நவம்பர் இறுதியிலிருந்து அவர் கடிதத் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார். எழுத்துவில் அவருடைய முதல் கவிதை 'நான்' ஜனவரி 1960லும், முதல் கட்டுரையான 'சொல்லும் நடையும்',ஏப்ரல் 1960-லும் வெளிவந்துள்ளன. **இந்தக் கட்டுரை மாதிரி அதுவரை தமிழில் வரவே இல்லை என்று எழுத்து ஆசிரியர் சி.சு. செல்லப்பாவால் புகழ்ந்துரைக்கப்பட்ட சிறப்பைப் பெறுகிறது இம் முதல் கட்டுரை** (எழுத்து அனுபங்கள் என்ற தீபம் கட்டுரைத் தொடர்). இவ்வாறு தம் ஆரம்கால எழுத்துக்கள் மூலம் எல்லோருடைய கவனத்தையும் பிரமிள் ஈர்த்த போது, அவருக்கு 20 வயது நிறைந்து 21 ஆரம்பம்.

எழுத்துவில் எழுதுவதற்கு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அவர் "யாழ்" எனும் கையெழுத்துப் பத்திரிக்கையில் ஓவியம், கதை, கட்டுரை, மரபுக்கவிதை, சித்திரத்தொடர் என்று பல்வேறுவகைகளில் முயன்றுள்ளார். அவரது மிக ஆரம்பகாலப் படைப்பு முயற்சிகளுக்கு வடிகாலாக "யாழ்" பத்திரிகை விளங்கியிருக்கிறது.

தந்தையின் பெயர் கணபதிப்பிள்ளை விருட்சலிங்கம் (தர்மராஜன் தர்மலிங்கம் என்பதாகவும் இருக்கலாம்) தாயார் அன்னலட்சுமி. பிரமிளின் இயற்பெயர் சிவராமலிங்கம். ஆனால் பள்ளியில் தவறுதலாக 'ஷிவராமலிங்கம் என்றே வழங்கப்பட்டது. எனவே அவருடைய பிற்காலப் புனைபெயர்களில் சீவராம், ஜீவராம் என்ற பெயர்களைக் காணமுடிகிறது.

திருக்கோணமலையில் இராமகிருஷ்ண மிஷன் பள்ளியில், பிரமிள் தம் தொடக்கக் கல்வியை கற்றார். இரவுப் பள்ளியில் கற்றதாகவும் தெரிகிறது. ஏழ்மையின் விளைவாக உயர் கல்வி கற்க முடியவில்லை. ஓவியம் வரைவதில் நாட்டமிருந்ததால், அஞ்சல் வழியாக அமெரிக்க நாட்டு ஓவியப் பள்ளி (Wasington School of Arts)பயின்று சான்றிதழ் பட்டம் பெற்றார்.

உயர்நிலைப் பள்ளியில், பிரமிளுக்கு சீனியர் அமரசிங்கம். ஸ்கூல் பைனலுக்கு மேல் படிக்க வசதியில்லாமல் பிரமிள் நின்று விட, திருக்கோணமலை இந்து கல்லூரியில் படிப்பை தொடர்ந்தார் அமரசிங்கம். பள்ளியிலும், கல்லூரியிலும் படித்தகாலத்தில் அமரசிங்கம், "யாழ்" என்ற கையெழுத்துப் பத்திரிகையை மிக ஆர்வமுடன் நடத்தி வந்திருக்கிறார். முதலில் மாதமொரு முறையாகவும். பின்பு இருமாதமொரு முறையாகவும் வந்து படிப்படியே நின்றுவிட்டது இந்த இதழ். 1955-லிருந்து 1959 வரை இப்படி இது விட்டு விட்டு வெளிவந்திருக்கிறது. அச்சில் வரும் பத்திரிகைகளைப் போன்ற வடிவமைப்பில் மிகவும் அக்கறையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது இவ்விதழ். யாழ் இதழில் பிரமிளின் கைவண்ணம் அதிகம் என்றே சொல்ல வேண்டும். நிறைய எழுதியும், வரைந்தும் இதழை ஆக்ரமித்துள்ளார் அவர். ருட்யார்ட் கிளிங் எழுதிய கதையைக்கூட யாழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

யாழ் ஆசிரியர் அமரசிங்கம், பிற்காலத்தில் **'ஒற்றைப்பனை'** என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். (ஈழத்து இலக்கியச்சோலை, ஒளவையார் வீதி, திருக்கோணமலை, 25 ஜூலை 1974, பக் X+103, விலை: ரூ3) கலாநிதி அசண்முகதாஸின் முன்னுரையோடு வந்திருக்கும் இந்நூல், திருக்கோணமலை மாவட்ட அடிப்படையில், அங்கிருக்கும் இலக்கிய ஆக்கங்கள் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் கன்னி வெளியீடு, ந. பாலேஸ்வரி, வ.அ. இராசரெத்தினம், ஏகாம்பரம், ஸ்ரீ அபிநய சிகாமணி, சி.விஸ்வலிங்கம், வீணைவேந்தன், தா.பி. சுப்ரமணியம் மற்றும் தரும சிவராமு ஆகியோரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. தரும சிவராமுவின், 'கதவைத் தொட்ட கை' சிறுகதை (பக் 9-10) பற்றிய குறிப்பில் 1959ம் ஆண்டு திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது நாம் நடத்திய யாழ் என்ற சிறுவர் கையெழுத்துப் பிரதிக்காக, ஒரே நாளில் எழுதி முடிக்கப்பட்ட 10 கதைகளுள் ஒன்று," என்று தொகுப்பாசிரியர் குறிப்பிடுகிறார். இச்சிறுகதை எழுதப்பட்ட தேதி டிசம்பர் 1958என்றும் பதியப்பட்டுள்ளது. ஆனால், பத்து நாட்களில் பத்துக் கதைகள் என்பதே சரி என்று, இப்போது நினைவு கூர்ந்து தெரிவித்தார் பிரமிள். இவற்றுள் ஒரு நாள் எழுதாமல் விட்டு மறுநாள் இரண்டை எழுதியதும்

உண்டு. இக்கதைகளில் வர்ணனை வீர்யமும் எழுத்தோட்டமும் தாம் உள்ளன. முதிர்ச்சி இல்லை. ஆனால், சொல்கிற விஷயத்துக்கு ஏற்ற உணர்ச்சியை எழுத்தில் காணலாம்.

டிசம்பர் 1958ல் எழுதப்பட்ட இப் பத்துக் கதைகளும் யாழில் 'படிக்காதே' என்ற தலைப்பில் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒற்றைப்பனை தொகுப்பு வெளியான சமயத்தில், பிரமிள் தமிழகத்தில் இருந்ததால் தொடர்பு கொள்ள முடியாமல், அவருடைய பழைய கதையைத் தூசிதட்டி எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார்.

பிரமிளின் கவிதைகளில் நான் டாக்டர் பட்ட ஆய்வை மேற்கொண்ட சமயத்தில், 1982 வாக்கில், ஒரு இந்திய இலங்கைக் கூட்டுத் தயாரிப்புத் திரைப்படம் சம்பந்தமாக, அமரசிங்கம் அடிக்கடி சென்னை வந்துபோய்க் கொண்டிருந்தார். அப்படி வந்த ஒரு சமயத்தில், பிரமிளின் தூண்டுதலால், தான் நடத்திய யாழ் பத்திரிகையின் கைவசமிருந்த 7 இதழ்களை மட்டும் கையோடு கொண்டு வந்து எனக்குக் காட்டி உதவினார். எனவே பிரமிளின் ஆரம்பகாலப் படைப்பு முயற்சிகளைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இளைமையிலேயே பிரமிளின் படைப்புத் திறன் மலரத் தொடங்கிவிட்டது என்பதற்கான ஆரம்ப சூசகங்களை, இவ்விதழ்கள் உணர்த்தின.

இலக்கியப் பிரக்ஞை என்று எதுவும் இல்லாவிட்டாலும், ஒரு வகைத் தீவிரத் தன்மையும் படைப்பு வேகமும் அப்போதே அவரிடம் தென்பட்டிருப்பதை இவற்றில் காணமுடிந்து. யாழ் இதழில் வந்த இவருடைய சித்திரக் கதை ஒன்றின் கதைப் பகுதியை, வீரகேசரி என்ற இலங்கைத் தினசரி மறுபிரசுரமாக வெளியிட்டிருக்கிறது. தாமரை என்ற கையெழுத்துப் பத்திரிகையில் வந்த பிரமிளின் சித்திரக் கதை, எப்படியோ அப்போது தினகரன் நாளிதழ் ஆசிரியராக இருந்த க.கைலாசபதி கண்ணில்பட்டு, அவர் தம் பத்திரிகையுடன் இவரைத் தொடர்பு கொள்ளக் கேட்டு எழுதினாராம். முன்பு குன்றக் குடியாரைச் சந்திக்காதது போவே கைலாசபதியுடனும் பிரமிள் தொடர்பு கொள்ளவில்லை. இதெல்லாம் 1959 இறுதியில் எழுத்துவுக்கு அவர் எழுதுமுன் நடத்தேறியவை.

ஏன் குன்றக்குடி அடிகளாரையோ கைலாசபதியையோ அவர் சந்திக்கவில்லை என்று கேட்டதற்கு, பிரமிளின் பதில்: "ஒருவிதருசியின்மையாக இருக்கலாம். மேற்படி தொடர்புகளில், எங்கோ ஏதும் சிடுக்கு ஏற்பட இடமுண்டு என்ற முன்னுணர்வாக இருக்கலாம். குன்றக்குடியாரைப் போலவே கைலாசபதியாரும் ஒரு அடிகளார் - கம்யூனிஸ ஆச்சாரிய அடிகளார் என்று அப்போது எனக்குத் தெரியாது: தெரியாமலே நான் இந்தத் தொடர்புக்கு முன்வராமல் விட்டதில் ஏதும் முன்னுணர்வு இருக்கலாம். அல்லது என் பிறவிக்குணமான திமிர் என்று இன்னும் சிம்பிளாகச் சொல்லலாம்."

எழுத்துவில் எழுதத் தொடங்கி, குறிப்பிடத்தக்க எழுத்தாளராகத் தமிழகத்தில் பெயர் பெற்ற பின்பே, இலங்கைப் பத்திரிகைகளில் மிக அரிதாகச் சிலவற்றை எழுதியுள்ளார் பிரமிள். மத்திய தீபம், புதுமை இலக்கியம், தேனருவி, வீரகேசரி, தினகரன் போன்றவற்றில் உதிரிகளாகச் சிலவற்றை இப்படிக் காணலாம். மௌனி கதைகள் (1967), பிரமிளின் முன்னுரையுடன் வெளிவந்த சமயத்தில். மௌனி பற்றி கொழும்பு வானொலியில் ஒரு பேச்சும். அதே நிகழ்ச்சியில் க. கைலாசபதியுடன் உரையாடல் ஒன்றும் நிகழ்த்தினார் பிரமிள்.

நான் பார்க்கக் கிடைத்த யாழ் கையெழுத்துப் பத்திரிகையின் 7 இதழ்களில், பிரமிள் தொடர்பாக அறியவந்த தகவல்களை, பல்வேறு புனைபெயர்களில் அவர் எழுதியவற்றைப் பற்றி மட்டுமே இங்கே தொகுத்துத் தருகிறேன்.

யாழ் (திங்கள் இதழ்), வீணைவேந்தன் (த.அமரசிங்கன்) என்பவரால் இல 9, வீச்சுகாரத் தெரு, திருக்கோணமலையிலிருந்து கொண்டுவரப்பட்டது.

1. மூன்றாவது ஆண்டின் 3–ம் இதழ் (தந்தி: 3 நாதம்:3) பங்குனி 15, 1957 (ஏப்ரல்):

இவ்விதழில், **லஷ்மிஜோதி** என்ற புனைபெயரில் நாஸ்திகம் என்றால் என்ன? என்ற கட்டுரையை (ப.27) பிரமிள் எழுதியுள்ளார். பதினெட்டு வயதில் எழுதப்பட்ட இக்கட்டுரை. இன்றும் படித்து ரசிக்கத் தகுந்ததாய், அவரது விமர்சன உணர்வின் ஆரம்பகாலத் தீர்க்கத்தை வெளிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. இவ்விதழ் வெளிவந்த சமயத்தில், பள்ளிக்கு வருகை தந்திருந்த குன்றக்குடி அடிகளார், இக் கட்டுரையைப் படித்து, இதை எழுதிய மாணவனைப் பார்க்க வேண்டும் என்று விசாரித்திருக்கிறார். ஆனால், பிரமிள் அவரைச் சந்திப்பது பற்றி அக்கறைப்படாமல் தவிர்த்து விட்டாராம். (2008ல் நான் தொகுத்து வெளியிட்ட பாதையில்லாப் பயணம் என்ற ஆன்மீகக் கட்டுரைகள் அடங்கிய பிரமிளின் நூலில், இக்கட்டுரை முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.) **கௌரி** என்ற பெயரில் ஓவியங்களும் இவ்விதழில் பிரமிளால் வரையப்பட்டு இடம்பெற்றுள்ளன.

2. மூன்றாவது ஆண்டின் 5–ம் இதழ் (தந்தி :3 நாதம்:5) வைகாசி 15, 1957 (ஜூன்):

லஷ்மி ஜோதியின் "தூக்கனம்" சிறுகதை (ப.11). இக்கதை இவ்விதழில் முடிவு பெறவில்லை. மற்றும் கௌரியின் விஞ்ஞானிகளின் கற்பனையில் செவ்வாய் கிரகப் பிராணிகள் என்ற தலைப்பிலான சில ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. விஞ்ஞானக் கற்பனைக் கதைகளில் பிரமிளுக்குள்ள ஈடுபாட்டின் ஆரம்பத்தோற்றங்களை இவற்றில் இனம் காண முடிகிறது.

3. மூன்றாவது ஆண்டின் 8&9ம் இதழ் (வீணை: 3 நாதம் :8&9, 15 7&8 1957 (ஆகஸ்ட் - செப்டம்பர்)

லஷ்மி ஜோதியின் 'உணர்ச்சி எனும் கோயில்' கட்டுரை (ப.9) "உணர்ச்சிகளை வேண்டியபடி கட்டுப்படுத்துவதே சுதந்திம். உணர்ச்சி வசப்படுகிறாய் என்றால் நீ சுதந்திரத்தை இழக்கிறாய் என்பது, உணர்ச்சிகள்

உன்னை ஆளாவிட்டால் சுதந்திரம் இல்லை, என்று மிக ஆழமான ஒரு விஷயத்தைப் பேசுகிறது இக்கட்டுரை மற்றும் இதே புனைபெயரில் 'அம்மா' என்ற சிறுகதையும் (ப.19), இவ் இதழில் வெளிவந்துள்ளது. இறந்த தாயின் ஆவி வந்து உதவுதலே கதைக் கரு.

4. நானகாவது ஆண்டின் 2&3 ம் இதழ் (தந்தி: 4 நாதம்: 2&3) தை மாசி 1958 (பிப்ரவரி– மார்ச்):

லஷ்மி ஜோதியின் 'அறை விழுந்தது' சிறுகதை (ப.7) இவ் விதழில் இக்கதை முடிவுபெறவில்லை படியாதே: 2 என்ற குறிப்புடன் இக் கதை வெளிவந்துள்ளது. இத் திகில் கதைகள் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்று வந்துள்ளதாய்த் தெரிகிறது.

5. நான்காவது ஆண்டின் 8&9ம் இதழ் (தந்தி : 4 நாதம் : 8&9 ஆடி – ஆவணி 1958 (ஜுலை – ஆகஸ்ட்) விபுலாநந்தர் நினைவு மலர்:

இம்மலரில் பிரமிளின் பங்கு மிக அதிகம் R.Arull Chandhira Chorooper-ன் அட்டைப்படம் Gowridasaen, Chorooper,l.J Gugendiroamuthen சித்திரங்கள் Thevendraவின் சித்திரங்களும் தலைப்பு டிசைன்களும். ஒளி என்ற Thevendra's Gowriயின் தனி ஓவியம் பாரதியின் 'வேள்வித் தீ' கவிதைக்கு Chandira Chirooper சித்திரம் எதிர்பாருங்கள் என்ற ஒரு விளம் பரத்தில்: **பூம்பொற்பொடி** அளிக்கும் சித்திரசுருள் - சித்திரம்: ல.ஜோ.குகேந்திர அமுதன் - என்ற தகவல்') **பூம்பொழில் வேலவன்** பெயரில் ஒளித்தெங்கேநிற்கிறான்? கவிதை (ப22) **இலக்குமி இளங்கோவின்** இரவு மனிதன் (படிக்காதே) சிறுகதை (ப.33) இறந்த அப்பாவின் ஆவி உதவுதல்தான் கதையின் கரு. இக்கதைக்குச் சித்திரம் : **Thevendra Rsree Gowridasen.** விதவிதமான பெயர்களைச் சூட்டிக் கொள்ளும் வழக்கத்தின் ஆரம்ப மூலங்களை இவ்விதழ் பதிவு செய்துள்ளது.

6. ஐந்தாவது ஆண்டின் 1&2ம் இதழ் (?) பொங்கல் இதழ் 15.1.1959:

அட்டைப்படம்: sree chandhya Gowri Amuthen உள்ளே A.T.Ramalingam என்ற சொந்தப் பெயரில் சித்திரங்கள் 'படிக்காதே' வரிசையில் 'தீப் பந்தம்' என்ற இலக்குமி இளங்கோவின் சிறுகதை ப.5) இச்சமயத்தில்தான் பத்து நாட்களில் பத்துக் கதைகளை பிரமிள் எழுதியிருக்க வேண்டும். படிக்காதே' வரிசையில் எழுதிய கதைகளைப் போன்றே தொடர்ந்து எழுதிக் காட்டும் சவாலில் பிறந்தவை இவை. 'தீப்பந்தம்' இவ்வகையில் ஒன்று. இதற்கு முன்போ பின்போ வந்திருக்கூடியது கதவைத் தொட்ட கை (ஒற்றைப் பனை தொகுப்பில் இது மறுபிரசுரம் பெற்றது) சிறுகதை இவை இரண்டும் பிரமிளின் இன்றைய பன்முகச் சிறுகதைகளின் இரு வேறு மூலங்களை அடையாளம் காட்டுகின்றன.

7. யாழ். ஆண்டுமலர் (ஜனவரி 1960):

கடைசியாகத் தயாரிக்கப்பட்ட இவ் ஆண்டுமலர் அரைகுறையாக நிற்கிறது. (ஏதோ காரணத்தால் இதழ் வெளியாகாமலேயே நின்றுவிட்டாலும், ஆசிரியர் இவ் விதழையும் பாதுகாத்து வைத்திருக்கிறார்.) இவ்விதழுக்கு முன்பு, சில மாதங்களில் ஒழுங்காக இதழ்கள் வந்தனவா என்பதும் சந்தேகம். **இலக்குமி இளங்கோவின்** செவ்வானம் கவிதை (பிரமிள் கவிதைகள் தொகுப்பில் இதைக் காணலாம்)இக்கதை Potody யால் சித்திரப்படுத்தப்பட்டுள்ளது. இது படிக்காதே வரிசையைச் சேர்ந்த கதையாக இருக்க வேண்டும்.

இவ்விதழ்களோடு உதிரியாக பொங்கல் இதழுக்கு (15.01.1959) அடுத்த இதழான பங்குனி 1959 இதழில் வெளியான இருளிலே ஒரு குரல் (19.12.58 ல் எழுதப்பட்டது) என்ற படிக்காதே 2 வரிக் கதை ஒன்றும் பார்க்கக் கிடைத்தது. ஓம் ஸக்தி என்ற பிள்ளையார் சுழியுடன் இக்கதை தொடங்குகிறது.

பிரமிள் நூல் வரிசை (பதிப்பு : கால சுப்ரமணியம்)

1. பிரமிள் கவிதைகள்.1998(முழுத்தெகுதி). (லயம்)
2. தியானதாரா. 1989 (லயம்) /2005. (ஆகஸ்ட்)/1999, 2006. (கவிதா)
3. மார்க்ஸும் மார்க்ஸீயமும்.1999.பீட்டர் வோர்ஸ்லி. (லயம்)
4. பிரமிள் படைப்புகள்.2004 (அடையாளம்).
5. வானமற்ற வெளி: கவிதை பற்றிய கட்டுரைகள். 2004. (அடையாளம்)
6. பாதையில்லாப்பயணம்: ஆன்மீக – மறைமுக ஞானப்படைப்புக்கள். 2007 (வம்சி)
7. பிரமிள் கவிதைகள் 2007. (சிறப்புப் பதிப்பு). (அடையாளம்)
8. சிறீலங்காவின் தேசியத் தற்கொலை. 2009. (தமிழோசை)
9. யாழ் கதைகள். 2009 (லயம்)
10. காலவெளிக் கதை. 2009. (உள்ளுறை)
11. வெயிலும் நிழலும் : இலக்கிய விமர்சனக் கட்டுரைகள். 2009.
12. வரலாற்றுச் சலனங்கள் : சமுதாயவியல் கட்டுரைகள். 2009
13. எதிர்ப்புச் சுவடுகள் : பேட்டிகள் & உரையாடல்கள். 2009
14. விடுதலையும் கலாச்சாரமும் மொழிபெயர்ப்புப் படைப்புகள். 2009.
15. அறைகூவல் : இலக்கிய அரசியல் கட்டுரைகள். 2009
16. தமிழின் நவீனத்துவம் : எழுத்து கட்டுரைகள். (மறுபதிப்பு).2010.
17. பிரமிள் கடிதங்கள்.2010).

**பிரமிளின் முன்னைய வெளியீடுகள்**

**கவிதை**

1. கண்ணாடியுள்ளிருந்து
2. கைப்பிடியளவு கடல்
3. மேல்நோக்கிய பயணம்

**கதை**

4. லங்காபுரிராஜா (சிறுகதை - குறுநாவல்)
5. ஆயி (குறுநாவல்)

**நாடகம்**

6. நக்ஷத்திரவாசி... (மூன்று நாடகங்கள்)


**விமர்சனம்**

7. விமர்சன ஊழல்கள் (நன்றி : யாழ்கதைகள்) •

| | |
|---|---|
| கவிதை | |
| கட்டுரை | |
| சிறுகதை | ✓ |
| கடிதம் | |
| ஓவியம் | |

பிரமிள்

# லங்காபுரி ராஜா




இரவு பனிரெண்டுக்கு மேலாகிவிட்ட அந்த அகாலத்தில் கோபால கிருஷ்ணன் விழிப்படைந்து விட்டான். மணி 12 - 49. பெட்ரூம் லைட் வெளிச்சத்தில் 1984 இறந்து 1985 பிறந்து விட்டதை அந்த எலெக்ட்ரானிக் சுவர்க் கடிகாரம் கொள்ளிக் காந்தியுடன் பிரகடனம் செய்தது. 12க்கும் 49க்கும் நடுவே இருந்த மேல் கீழ் புள்ளிகள் இரண்டு ரத்தத் துளிகளாக மறைந்து தோன்றித் துடித்தன.

பத்மினியும் அபிராமனும், குழந்தை அபிராமன் ஐந்து வயது தாண்டுவதற்குள்ளேயே பத்மினி இரண்டாவது கர்ப்பம் சிதைந்து மறைந்து விட்டாள். இது நடந்து பதின்மூன்று வருடங்களாகிவிட்டன. அபிராமனும் மறைந்து விட்டான். ஆனால் மரணத்தினுள் அல்ல. அப்படி மறைந்திருந்தால் ஞாபகம் மட்டும் அவ்வப்போது தோன்றி பத்மினிக்காக விசும்புவது போல் விசும்பிவிட்டு அடங்கி விடும். இப்போது குவிந்திருக்கும் பிரைவேட் நில அளவைகளில் மூழ்கித் தன்னை மறந்திருப்பான், அரசாங்கத்திலிருந்து ரிடையரான சர்வேயர் கோபால கிருஷ்ணன்.

பதினேழு வயது ஆகி இராத பருவத்தில் இப்போது கண் காணாமல் போய்விட்ட அபிராமனின் மறைவு, அவனது குழந்தைப் பருவத்திலேயே ஒரு தடவை கோபாலுக்கும் பத்மினிக்கும் சகுனம் காட்டி இருக்கிறது.

அது நடந்தது சிங்களக் காட்டுப் பிரதேசமான லங்காபுரியில். நேற்று நடந்தது போன்ற வீர்யத்துடன் அந்த ஞாபகம் மோதி வந்தது. அப்போது சர்வே டெண்ட் வாசலில் கிராமத்துச் சிங்களக் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டிருந்த அபி, தன்னை ராஜா என்று சொல்லிக் கொண்டான். லங்காபுரியின் ராஜா, அந்த வனப்பிராந்தியத்தை ஆள்கிற ஓர் அபூர்வமான யானைதான் என்பது கிராமவாசிகளின் பரம்பரை நம்பிக்கை. கரும்புத் தோட்டங்களைக் கொண்ட கிராமம் அது. கரும்பினால் இழுக்கப்பட்டு வரும் யானைகள் எதுவும் கிராமவாசிகளின் மிரட்டல் டெக்னிக்கைத் தாக்குப் பிடித்து நிற்காது. லங்காபுரி ராஜாவின் விஷயம் வேறு. அது நிலை கலங்கியதில்லை. தொடுவானத்தில் உதித்தெழுந்து, அசையாமல் நிற்கிற பர்வதம் போல்அது கரும்பு வனத்தை மீறி எழுந்து தோன்றி நிற்கும். ஒரு லாரி அளவு கரும்புக்கு மேல் அது தின்றதுமில்லை அடிக்கடி கரும்பு வனத்தில் தோன்றுவதுமில்லை.

ஒரு சம்பிரதாயத்துக்காக, அல்லது உண்மையில் இது ராஜாதானா என்று பரீட்சிப்பதுக்காக, இந்தச் சமயத்தில் அதிர்வேட்டு விடுவார்கள் கிராமவாசிகள்.

வேட்டு சத்தத்தைக் கேட்டு எந்தக் கொம்பன் யானையாக இருந்தாலும் வாலைக் காட்டிக் கொண்டு திமுதிமுவென்று ஒரே ஓட்டமாக ஓடிவிடும். ராஜா என்றால், அதன் பிரமாண்டமான நீண்டு வளைந்த தந்தங்கள் வெடி வந்த திசையை நோக்க ஒரு விசாரணைக் குறிப்போடு திரும்பும். கிராமத்தார்கள் கண்டு கொள்வார்கள். பிறகு ராஜாவை பய பக்தியுடன் தரிசிக்க வந்து நிற்கும் கும்பலாகி விடுவார்கள். இவ்வளவுக்கும் அவர்கள் அதனைப் புகை உருவமாக வெகு தூரத்தில் கண்டதுமே இது ராஜாதான் என்று அடையாளம் கண்டு விடுகிற மக்கள். அதிர்வேட்டு ஒருவகையில், இந்த யானையைப் பொறுத்த அளவில், கிராமத்தையும் யானையையும் பிணைப்பதுக்கான அனுஷ்டானம் என்று தான் சொல்ல வேண்டும்.

ராஜாவை, குழந்தை அபிக்கு மூன்று தடவை பத்மினி காட்டி இருக்கிறாள். சில விசித்திர மனோ நிலைகளில் அபி இருக்கும்போது, ராஜா என்றுதான் அவன் அழைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் கைக்கு அகப்பட்டவை எடுத்து வீசப்படும். இப்போது அபியைப் பிடித்த மனோ நிலை ஏறத்தாழ இதுதான். ஆனால் இது கிராமத்தையே கலக்கி விட்டது. குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த அபி, அரைநிஜாருடன் தப்தப் என்று நடந்து, கோபாலகிருஷ்ணனின் பார்வையிலிருந்து மறைந்து விட்டான்.

“அபி எங்கே?” என்று அவன் கேட்டபோது, “ராஜா காடேறி விட்டான்.” என்றன குழந்தைகள். குழந்தைகள் இதைச் சொன்ன முதிர்ந்த தோரணையில் தானோ என்னமோ கோபால் திடுக்கிட்டான். டெண்டை விட்டு வெளியே வந்தபோது குழந்தையைக் காணோம். மற்ற குழந்தைகள் காட்டிய திசையில் தெருவைக் கடந்து, “அபி அபி” என்று குரல் கொடுத்தான். தெருவின் மறுபுறத்தில் திடீரென, புதர் அடர்ந்த காடு ஆரம்பித்து விடுகிறது. கோபாலின் குரலில் கூட்டம் கூடி நாலு புறமும் புதர்களுக்குள் ஆண்களும் பெண்களுமாகக் குழந்தையைத் தேடினார்கள். பத்மினி பேயறைந்தவளைப் போல வந்து தெருவில் நின்று கொண்டிருந்தாள். கிராமத்துத் தலைமைக் கிழவர் சார்ளிஸ் உடவத்த, “ஒருவரும் கூச்சல் போடாதீங்க.” என்று சப்தத்தை அடக்கினார். தமது குரம் மட்டும் ஒலிக்கும் அளவு நிசப்தம் தோன்றியதும், “ராஜா” என்று சுபாவமான குரலில் கூப்பிட்டார். உடனே அபியின் கீச்சுக்குரல், யானைப் பிளிறலின் ஒலியை எழுப்பிய பதில் கேட்டது. அபி, கரும்பு வனத்தை நோக்கிப் போகும் பாதை ஓரத்தில். பாதத்தில் குத்தியிருந்த முள்ளை அழாமல் உட்கார்ந்திருந்து எடுக்க முயன்று கொண்டிருந்தான்.

இது நடந்து பனிரண்டு வருஷங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் அபி மறைந்து விட்டான். ஸ்கூல் பைனல் பாஸான செய்தியை அறிந்து கொள்ளக்கூட அவன் தனது நண்பர்களையோ ஹைஸ்கூலையோ தொடர்பு கொள்ளவில்லை. அடிக்கடி தந்தைக்கும் மகனுக்குமிடையே தலைகாட்டும் இலங்கை அரசியல் பிரச்சினைதான் அவன் மறைந்த திசையைக் காட்டியது. சிங்கள ராணுவ மூர்க்கத்திலிருந்து இலங்கைத் தமிழர்களுக்கு ஆயுதமுனை மூலம் மட்டும்தான் விடுதலை கிடைக்கும் என்ற அபிராமனின் பார்வை முரட்டுக் குழந்தைப் பார்வையாகவே கோபாலுக்குத் தோன்றிற்று. அபி, சிங்களக் காட்டுக் கிராமமான லங்காபுரியைக்கூட இப்போது மறந்துவிட்டான். தாய் கொழும்பில் இறந்ததைத் தொடர்ந்து சொந்த ஊரான திருக்கோணமலைக்குத் தந்தை மாற்றலாகிவிட்ட பிறகு, அவ்வப்போது அவன் நினைவில் எழுந்த “லங்காபுரி ராஜா” இப்போது அபியின் பிரக்ஞையில் இல்லை. குழந்தைப் பருவத்தின் அந்த ஞாபகம் அபியின் மனசில் ராஜாவைப் பார்த்த அபூர்வ அனுபவமாகப் பதின்மூன்று வயதுவரை பதிந்திருந்தது. பதின்மூன்று வயது சமயத்தில் ஒரு நாள் தந்தையிடம் அபி தனது தாய் இறந்த விதத்தைப் பற்றிக் கேட்டான். அபார்ஷன் விஷயத்தை அபி நம்பவில்லை. “லங்காபுரி கிராமத்தில் அம்மா கொலை செய்யப்பட்டிருக்கிறாள்.”

அபியின் இந்த வாசகத்தில் நிலை தடுமாறிய கோபால், பத்மினியின் மரண சர்டிபிகேட் அடங்கிய பைலை உருவி மகனின் முன்னால் விட்டெறிந்து, “பாரடா உன் கண்ணாலேயே.” என்று கத்தினான்.

எத்தனை தாய்மார்கள், பெண்கள் கேவலப் படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் - என்ற பொருளில் அபி தொடுத்த அடுத்த அஸ்திரத்துக்கு கோபாலினால் பதில் தர முடியவில்லை. பதின்மூன்று வயதுப் பிஞ்சு உள்ளம், பழுக்கும் முன்பே இறுகிக் கல்லாகி விட்டிருக்கிறது.

கோபால் மகனை ஏறெடுத்துப் பார்த்தான். கிழக்கு மாகாணத்து ஸ்கூல்களினுள்ளேயே ஒரு ஸ்டாராகிக் கொண்டிருந்த புட்பால் வீரன் அபிராமனுக்கு, பதின்மூன்று வயதிலேயே உடல் பதினேழு வயது வளர்ச்சி காட்டியது. புருவங்கள் அடிக்கடி கண்களின் குழந்தைமையினை முதிரவைக்கும் அந்தரங்க அவஸ்தையில் சுருங்கின.... ரத்தினபுரியில் சிங்கள வெறியர்களால் சீரழிக்கப்பட்ட ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த சந்திரசேகரன்தான் அபியின் மிக நெருங்கிய பள்ளித்தோழன்... சந்திரசேகரனின் பிஞ்சு மனம் கண்ணெதிரிலேயே தாய் குதறப்பட்டபோது, கனியுமுன் கல்லாகிவிட்ட ஒன்று. அபியின் உள்ளத்திலும் இந்த கல் தன்மை பரவி இருக்க வேண்டும்.

பதின்மூன்று வயதிலேயே அபி ஏதோ ரகசிய சரீரப் பயிற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகக் கோபாலுக்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது. அபியின் கண்களில் பதினாறு வயதுக்குள் ஒரு தொலைதூரப் பார்வை வளர்ந்து வருவதைக் கோபால் கிலேசத்துடன் கவனித்தான். எப்போதோ, திடீரென குழந்தை அபி வாலிபனாகி விட்டிருந்தாலும் இந்தத்

தொலைதூரப் பார்வையை கோபாலினால் ஆழம் காண முடியவில்லை. ஏதோ அவசரத்தில் உடலின் குணத்தையே முடுக்கினாற்போல அபி ஒரு முழு மனித உயரத்துக்குப் பதினாறு வயதிலேயே வளர்ந்து விட்டான். ஒருநாள் ஸ்டேடியம் வரை போய் வருவதாகச் சொல்லி விட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு போன அபி திரும்பவில்லை.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயதிலக்கே, அபியின் உடைமைகளைத் தடயத்துக்காகப் பரிசோதித்துவிட்டுக் கோபாலிடம், "கோபித்துக் கொள்ளாதீர்கள் சர்வேயர் - உங்கள் குழந்தை ஏதாவது ஆக்ஸிடென்டில் எங்காவது மாட்டியிருந்தால் மட்டும் நாங்கள் சந்தோஷமாக உங்களுக்கு தகவல் தெரிவிக்கிறோம்." என்றபடி அபியின் தலையணைக்குள்ளிருந்து உருவிய சில புத்தகங்களைக் கோபாலின் முன்னால் போட்டார். அமில்கர் கப்ரால், பிரான்ஸ் பனன், நெல்ஸன் மண்டேலா – யார் இந்த எழுத்தாளர்கள்?

"நான் புத்தகப்பூச்சி அல்ல" என்றார் இன்ஸ்பெக்டர். "ஆனால் சில விஷயங்களைப் பற்றித் தகவல் தெரியும். இவர்கள் எழுத்தாளர்கள் அல்ல. ஆயுதப் புரட்சிக்காரர்கள். எங்கள் தகவலின்படி பயங்கரவாதிகள். மூவருமே ஆபிரிக்கர்கள்"

கோபால் நிமிரவில்லை. கண்கள் திடீரென எரிந்தன. கப்ராலின் தெளிவான சிரிப்பன் மீது அவனது கண்ணீர்த்துளி வீழ்ந்து, புத்தக அட்டை நனைந்தது. முதலில் தனியாக அதுவும் மப்டியில் திடீர் திடீரென சினேக பாவத்துடன் வந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஜெயதிலக்கே போகப் போகப் பொறுமை இழக்க ஆரம்பித்த குறிகள் தெரிந்தன. தன் குழந்தையைத் தேடிப் பிடித்து ஒப்படைக்க வேண்டிய போலீஸ் தன்னிடம், உன் குழந்தை இப்போது எந்த மறைவிடத்தில் இருக்கிறான் என்று கேட்காமல் கேட்கும் அறிகுறி ஆரம்பித்தது.

இரண்டொரு தடவை அகாலத்திலேயே, அதுவும் யூனிபாரத்துடன் உருவிய ரிவால்வரும் கையுமாகத் திடீர் விஜயம் செய்திருக்கிறார் ஜெயதிலக்கே. அவருக்குப் பின்னால் ஜீப் - ஆயுதம் தாங்கிய போலீஸ். "அபிராமன் எங்களைப் பொறுத்தவரை குழந்தையல்ல சர்வேயர். சார்லஸ் அன்டனி என்ற சீலனிடம் இங்கே திருக்கோணமலையில் நேரடியாகப் பயிற்சி பெற்ற முதல் வரிசைப் பயங்கரவாதி. இங்கே உங்களைத் தேடி அவன் மரணகாயம் பட்டால் மட்டும் தான் வருவான். திரியாய் போலீஸிக்கும் ஒரு கும்பலுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை நடந்திருக்கிறது. எதற்கும் இங்கே செக் பண்ணலாம் என்று வந்தோம்..."

கோபால் ஒதுங்கி நின்றான். போலீஸ் போன பிறகு வீட்டைச் சீர்படுத்த போபாலுக்கு இரண்டு நாட்கள் பிடித்தன.

இப்போது கதவு இந்த அகாலத்தில் தட்டப்பட்ட போது, இன்ஸ்பெக்டரின் விஜயம்தான் மீண்டும் நினைவுக்கு வந்தது. ஆனால் தட்டும் சப்தத்தில் ஒரு வேறுபாடு, ஒருவித திருட்டுத் தட்டல் அது. கோபாலுக்கு இது முதலில் தூக்கத்தினூடே கேட்டுத்தான் விழித்தான். விழித்த பிறகு ஏன் விழித்தோம் என்பது மறந்து விட்டது. ஆனால் மீண்டும் கதவு தட்டப்பட்ட போது தன்னை விழிக்க வைத்ததே இது தான் என்று புரிந்து விட்டது. மணி 12.49

அபியாக இருக்கக்கூடாது, அல்ல அபியாக இருக்க வேண்டும். மரணக்காயம் பட்டால் மட்டும்தான் வருவான். மனமும் உடலும் பதற எழுந்த கோபால், லைட்டைப் போடாமல், முன் கதவைத் திறந்தான். அபி அல்ல என்றதில் ஒரு ஆழ்ந்த வேதனையும் அதே சமயத்தில் நிம்மதியும் பிறந்தன. இது யார்?

இருளினுள் சற்றே உயரக் குறைவான ஒரு உருவத்தின் தீவிரமான கண்கள் மட்டுந்தான் கோபாலுக்குத் தெரிந்தன.

"யார்? என்ன வேணும்," என்று தமிழில் கோபால் கேட்டவுடனேயே உருவம் விசித்திரமாகச் சிரித்தது.

"அதே கோபால் மஹாத்மியா, அதே குரல். உங்களுக்கு என் புது வருடவாழ்த்துக்கள்".

கோபால் லைட்டைப் போட்டான். அங்கே கையில் பையுடன் நின்று கொண்டிருந்தார், லங்காபுரிக் கிராமத்தின் தலைமைக் கிழவரான சார்லிஸ் உடவத்த. பன்னிரண்டு, பதின்மூன்று 'வருடங்களுக்குப் பிறகு லங்காபுரியின் திவலை ஒன்றை கோபால் மீண்டும் சந்திக்கிறான், "உள்ளே வாங்க"

உடவத்த கோபாலை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "அபிராம ராஜா எங்கே?" என்றார். கோபால் "முதலில் சிரமபரிகாரம் செய்யுங்கள். இங்கே எங்கே வந்தீர்கள்? சேருவாவிலைக்கா?"

"அதற்கும் தான். ஆனால் எனக்கு இந்த சேருவாவில ஒரு பெரிய ஸ்தலமல்ல. இதெல்லாம் தமிழனுடைய இடத்தை சிங்களவன் பிடிக்கிற தந்திரம். நான் புத்தகயாவுக்குப் போய் வந்தவன்." என்றார் உடவத்த, சிங்களத்தையும் தமிழையும் கலந்து. பிறகு தமிழிலேயே, "உங்களையும் அபியையும் பார்க்கிறதுக்குத்தான் முக்கியமாக நான் வந்தது. அவன் எங்கே?" என்றார்.

கோபால் அவரை உட்கார உபசரித்து, அந்த வேளையினுள் தன்னைச் சுதாரித்து, "அபியை படிக்கிறதுக்கு மெட்ராஸ் அனுப்பி விட்டேன்." என்றான்.

"நல்ல வேலை செய்தீர்கள். இங்கே ஸ்ரீலங்கா தூள் தூளாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் அவனோடு போயிருந்திருக்கலாம். இதெல்லாம் நடக்கப் போவது எனக்கு முந்தியே தெரியும்". என்றவர் கோபாலைக் குறிப்பாகப் பார்த்தார், "லங்காபுரிராஜா விஷயம் தெரியுமல்லவா? அதில் தான் எல்லா சகுனமும் அடங்கியிருந்திருக்கிறது."

"ஒன்றும் புரியவில்லை" என்றான் கோபால், "இந்த வருஷப் பிறப்பு, இதற்கு முந்தியது, இரண்டுக்குமே ஊரடங்குச் சட்டம்" "பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே இங்கே வந்தீர்களா? விலாசம் எப்படிக் கிடைத்தது."
"உங்களிடம் முந்தி வேலை செய்தானே பியதாஸ. அவன் இப்போது என் மருமகன். நாளனியை லவ் பண்ணிக் கல்யாணமாகி ஏழு வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. நாளனி குழந்தைக்கு பத்மினி என்று பெயர் வைத்திருக்கிறாள். விலாசம் எப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களே!

சார்ளிஸ் உடவத்த, கோபால் பரிமாறிய பிஸ்கட்டைக் கடித்தார். "உலகம் அழியட்டும். ஆனால் நீங்களும் நானும் ஒருவரையொருவர் தொட்டுக் கொண்டு லங்காபுரி ராஜாவின் முன்னால் நின்றிருக்கிறோம். உங்களுக்கு ராஜா மகாபரிநிர்வாணமானது தெரியாதா?

சாதாரண பாஷையில் சொன்னால், லங்காபுரி ராஜா என்ற யானை செத்துப் போய்விட்டது என்பது தான் செய்தி. ஆனால் புத்த பிரானுக்கும் அவரைப் போன்று அர்ஹத் நிலை அமைந்தவர்களுக்கும் தான் மரணம் மகாபரிநிர்வாணமாகும்."

கோபால் கையில் எடுத்த பானத்தை மேஜையில் வைத்தான். "அவ்வளவு வயதா ராஜாவுக்கு?"
"வயதா அந்த யானை இன்னும் ஐநூறு வருஷம் இருக்கும். அவ்வளவு உக்கிரமான பலம் அதுக்கு. நாலைந்து நாட்களாக, தூங்காமல் ஒரு கானகமளவுக்கு நூறு இருநூறு மரங்களை அது பிடுங்கி எறிந்து விட்டுத்தான் மறைந்திருக்கிறது."

"ஏன் அதற்கு ஏதும் பைத்தியம் பிடித்திருந்ததா?" சார்ளிஸ் உடவந்த ஒரு கணம் கோபாலைக் கோபத்துடன் பார்த்து விட்டு உடனே வாய்விட்டுச் சிரித்தார். "மஹாத்மியா, நான் உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். அது யானை அல்ல. மனிதனைவிடப் பெரிய மனிதன். அதற்கு எப்படிப் பைத்தியம் பிடிக்கும்? நடந்ததைக் கேளுங்கள். அப்போதுதான் ஸ்ரீலங்கா இன்றைக்கு ஏன் இப்படித் தூள் தூளாகிக் கொண்டிருக்கிறது என்று புரியும்."

சார்ளிஸ் உடவத்த நிறுத்தித் தொடர்ந்தார். "இப்போது தமிழர்கள் மேல் சிங்கள ராணுவத்தை அவிழ்த்து விட்டிருக்கிறானே லலித் அதுலத் முதலி? அவனுடைய ஒன்று விட்ட அண்ணா சிரில் திஸ்ஸ நாயக்க. இந்தச்சிரில், யானைகளைப் பிடிக்கும் அரசாங்கக் காண்டிராக்ட் ஒன்றை வாங்கி கொண்டு லங்காபுரிக் கிராமத்துக்கு வந்து கூடாரம் போட்டான். இதெல்லாம் நியூஸில் வரவில்லை."

"நாங்கள் கிராமத்தார்கள் சிரிலிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம் - இங்கே யானை பிடிக்காதீர்கள். ராஜா அதை அனுமதிக்க மாட்டான் என்று சொல்ல வேண்டிய மாதிரி எல்லாம் சொன்னோம். கிராமத்தில் பாதிப் பேர் ஊரைவிட்டே குடிபோகத்துவங்கி விட்டார்கள்.

"சிரில் திஸ்ஸநாயக்க அசைந்து கொடுக்கவில்லை. ஒரு தடவை மேஜைக்கு அடியிலிருந்து பெரிய ரைபிள் ஒன்றை எடுத்து எனக்கு குறிவைத்து 'இடத்தைக் காலி பண்ணடா கிழவா' என்று மரியாதை இல்லாமல் கத்தினான். "சீ, மனிதனாடா நீ," என்று நான் பதிலுக்குக் கத்திவிட்டு நாளனியிடமும் பியதாஸ விடமும் போய் அவர்களைக் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்தேன். ஆனால் நான் மட்டும் போகவில்லை. என்னைப் போல சிலர் லங்காபுரியிலேயே இருந்து விட்டோம்.

இதற்குள் யானை பிடிக்கிறவர்கள் ஆயிரக் கணக்கில் ரூபாய் போட்டு, பிரம்மாண்ட மரங்களை மெஷினால் வெட்டினார்கள். பிறகு காட்டுக்குள் மரங்களை வளைவான வரிசைகளில் நட்டு யானைகள் உள்ளே போனால் வெளியே வர முடியாதபடி கூடுகளை உண்டாக்கினார்கள். எங்களால் என்ன செய்ய முடியும்? லங்காபுரிக் கிராமத்தவர்களிடம் யானை பிடிக்கிறவர்களின் ஆதிக்கம் வேறு. ராஜாவைப் பற்றி நாங்கள் சொன்ன போது, கரும்புத் தோட்டங்களை வெட்டியாக நின்று தின்று விட்டுப் போகும் மிருகம் தானே, அதைப் பிடித்து விடுவோம், பிறகு நீங்கள் ஒரு கவலையும் இல்லாமல் கரும்புப் பயிர் போடலாம் என்றார்கள் சிரிலின் ரைபிள் எப்பேர்ப்பட்டது என்று புளுகினார்கள்.

"தட்டு வாத்தியங்கள் ஒரு மாசத்துக்குள்ளேயே ஒலிக்க ஆரம்பித்து விட்டன. யானைக் கூட்டத்தை போப்பம் பிடித்து, குறிப்பான இடங்களில் டமாரக் காரர்களை நிறுத்தி அடிக்க வைத்தார்கள். மற்றவர்கள் புதர்களுக்குள் வரிசையாக நின்று கூக்குரல் கொடுத்து யானைகளை விரட்டினார்கள் சிரிலின் திட்டப்படி யானைகள் ஓடிப்போய்க் கூட்டுக்குள் நின்று கொண்டன. உள்ளே போனால் வெளியேவர முடியாத வளைவுகள் உள்ள பிரமாண்டமான கூடு அது. அப்படியே யானைகளைப் பட்டினி போட்டு அடக்கி, பிறகு உணவு கொடுத்து வசக்கும் முறை இது என்று யானை பிடிப்பவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஆனால் யானைக் கூட்டத்தில் "
"லங்காபுரி ராஜா"இல்லை. இது கிராமத்தவர் களுக்குத்தான் தெரியும்.

"அன்று இரவு யானைகள் பிளிற ஆரம்பித்தன. சுமார் அரைமணிநேர பிளிறலுக்குப் பிறகு ஒரு திடீர் நிசப்தம். யானை பிடிக்க வந்தவர்களுக்கு இந்த நிசப்தம் ஏன் என்று புரியவில்லை. அவர்கள் கணக்குப்படி யானைகள் களைக்கிறவரை நாட்கணக்காகப் பிளிறிக் கொண்டிருக்க வேண்டும். நடுஇரவு யானைக் கூட்டிற்கு காவலிருந்தவர்கள் 'வாள் வாள்' என்று அடிபட்ட நாய்கள் மாதிரி கத்திக் கொண்டு ஓடி வந்தார்கள். ஒரு பிரம்மாண்டமான யானை, இரண்டு யானை உயரத்துக்கு ஒரு யானை, கூட்டு வளைவுகளின்

மரங்களை வெளியே நின்று பிடுங்கி எறிவதாக அவர்கள் உளறியதிலிருந்து தெரிந்தது.

"வெகுதூரத்தில் வனாந்தரத்துக்குள், ஒரு பர்வத சொரூபம் பற்களைக் கோபத்தில் நறநறவென்று கடிக்கும் சப்தம் - மரங்கள் முறிக்கப்படும் சப்தம் அது. நானும் காட்டுக்குப் பழகினவர்களுமாக குறுக்கு வழி பிடித்துப் போய்ப்பார்த்தோம்.

"இருளுக்குள் இருளாக ராஜா, யானைக் கூட்டை உடைக்கிறான். கூட்டின் மத்திய பாகத்தை அடைய நான்கு வளைவுகளையாவது உடைக்க வேண்டும். ஒவ்வொரு மரமும் பிரம்மாண்டமான யந்திரங்களினால் தள்ளி நட்டப்பட்ட மரம். நாங்கள் பார்த்த போது ஏற்கனவே இரண்டு யானைகளின் அகலத்துக்கு முதல் வளைவு உடைக்கப்பட்டு விட்டது. அப்போது இரவு மூன்று மணி. காற்றில் ராஜாவின் கோபம் புயலடிக்கிறது. இதில் நாங்கள் பயந்து கிராமத்துக்கு ஓடி வந்து விட்டோம்.

"முதலில் சிரில் திஸ்ஸநாயக்க இது பற்றிக் கவலைப்படவில்லை. ஒரு வளைவை உடைத்து உள்ளே போனாலும், யானை உள்ளேயே அகப்படும்படியாக இரு புறமும் அடித்த மரவேலி வளைவு வழியே மையக் கூட்டுக்குப் போய்விடும் என்பது அவன் கணக்கு. அவனுடைய பழைய அனுபவம் அப்படி.

"நாட்கள் இரண்டாகிவிட்டன. மரம் முறிகிற சப்தம் நின்று விட்டது. பயத்தில் எவருமே கானகத்துக்குள் போய் என்ன நடக்கிறது என்று வேவுபார்க்கவில்லை. இப்போது யானைகள் மீண்டும் பிளிற ஆரம்பித்தன. சிரில், பெரிய யானை அகப்பட்டு விட்டது என்று சொல்லி, உடைந்திருந்த அடைப்பை மூடுவதற்கு மீண்டும் மெஷின்களை ஏவினான். அங்கும் இங்கும் தாறுமாறாக வீசப்பட்டிருந்த பிரம்மாண்டமான முழு மரங்களை மெஷின் ஒன்று தூக்க ஆரம்பித்த வேளை. பகல் பதினொன்று ஜீப்புக்கு வெளியே நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். எங்கோ மர அடர்த்திக்குள் ஒளிந்திருந்த ராஜா குபீரென்று வெளிப்பட்டு மெஷினை நோக்கி ஓடி வந்தான் சிரில் ஓடிப்போய் ஜீப்பில் ஏறிக் கொண்டான். ராஜாவின் தலை, வரும்போதே தாழ்ந்து, கொம்புகள் டாங்கி போன்ற வடிவத்திலிருந்த ஒரு மெஷினின் சங்கிலிச்சக்கரங்களிடையே பாய்ந்தன. ஒரு வீடளவு பெரிய ஜெர்மன் மெஷின். அதை ராஜா ஒரே எற்றில் பக்கவாட்டாகத் தூக்கினான். மெஷின் விகாரமாக அர்த்தமில்லாதபடி உறுமிக்கொண்டு மல்லாந்தது. ராஜாகுறி வைத்த மாதிரி சிரில் திஸ்ஸ நாயக்கவை நோக்கி திரும்பினான். சிரிலினால் ஜீப்பை ஸ்டார்ட் பண்ண முடியவில்லை. பக்கத்திலிருந்த ரைபிளை எடுத்துக் கொண்டு ஜீப்பை விட்டுக் குதித்து ஓடினான். கூட்டை உடைப்பதை ராஜா ஏன் பாதியில் நிறுத்தினான் என்பதை அப்போதுதான் நாங்கள் புரிந்து கொண்டோம். ராஜாவின் நோக்கம் கூட்டுக்குக் காரணமானவர்களையே அழிப்பதுதான்.

தன்னைக் குறிவைத்துவிட்டது யானை என்று கண்டு கொண்டான் சிரில். நிலத்தில் ஒரு மத்த கஜத்துக்குக் குறிவைத்து இரண்டு தடவை வில்லை அழுத்தினான். ரைபிள் கல் பிளந்தது போல் வெடித்து ஒலித்தது. ராஜாவின் நெற்றியில் பட்டென இரண்டு சிவப்புத் திலகங்கள். உடனே சிரில் ரைபிளை நிமிர்த்தி எழுந்தான். அவனுடைய ரைபிளும் ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்ட மெஷின்தான், கால் மைல தூரத்துக்குப் பறந்து தாக்கக் கூடியது அதன் புல்லட், டெலஸ்கோப் பூட்டி குறி வைக்கிற தூரதிருஷ்டிப்படை அது. இதனால்தான், யானையின் மூளைக்குள் குண்டுகள் பாய்ந்து விட்டன என்று சிரில் திஸ்ஸநாயக்க எழுந்து நின்றான். இந்நேரம் யானை முழுங்கால் மடிந்து சரிந்து விழுந்திருக்க வேண்டும். ஆனால் இது யானையல்ல என்பதை மடையன் சிரில் உணரவில்லை. ராஜா மூளையினுள் பாய்ந்த புல்லட்டுகளுடன் முந்திய வேகம் தணியாமல் இரண்டு எட்டில் சிரிலை அணுகி விட்டான். சிரிலின் கையும் காலும் விறைத்து விட்டன. அவன் வாய் மட்டும் வீல் என்று பயப்பிராந்தியில் அலறியது. மறுவிநாடி, துவம்சம். சிரில்திஸ்ஸநாயக்கவை ஒரு வாரம் கழித்து இரண்டு பிளாஸ்டிக் வாளிகளில் அள்ளிக் கொண்டு போனார்கள் சொந்தக்காரர்கள்.

"சிரிலை துவம்சம் செய்த ராஜா அதே வேகத்தில் திரும்பினான் கூட்டை நோக்கி. பதுங்கிப் பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு மயிர்க் கூச்ச மிட்டது. ராஜா மீண்டும் கூட்டை மரம் மரமாகப் பெயர்த்தெறிய ஆரம்பித்தான். ஒவ்வொரு மரமும் இரண்டு மூன்று நிமிஷங்கள் ராஜாவின் தாக்குதலுக்குத் தாக்குப் பிடித்துத்தான் சரிந்தது. மத்த கஜத்துத் திலகங்களிலிருந்து கிளைகள் விட்டு ரத்தம் இறங்கியபடி இருக்க ராஜாவின் போர் தொடர்ந்தது. பார்த்துக்கொண்டே இருந்த எங்களுக்குத்தான் பசியும் தாகமும். யானை பிடிக்கவந்தவர்கள் பறந்து விட்டார்கள். எஞ்சியது நானும் லங்காபுரிக்காரர்களும் தான். மாலைக் கருக்கலில் நாங்கள் கிராமத்துக்குத் திரும்பி விட்டோம். இரவு முழுவதும் மரங்கள் முறிகிற கோரமான ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. காலை எழுந்ததும், ரொட்டி வாழைப்பழம் என்று எதையோ அவசரமாக விழுங்கிவிட்டு மீண்டும் போய் ராஜாவின் சளைக்காத யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இப்போது அதன் நெற்றி பூராவும் ஒரே ரத்தப்படலம். ஒரு கொம்பின் நுனி பிளந்து விட்டிருந்தது. கொம்புகள் வாயினுள் பொருந்திய இடத்தில் கருமையான ரத்தம். நான் கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்து விட்டேன்.


"அன்று மாலைவரை நான் தண்ணீர் கூடக் குடிக்காமல் அங்கேயே கிடந்திருக்கிறேன். ஆனால் நேரம் போனது தெரியவில்லை. ராஜா நேரே கூட்டின் உள்வளைவுக்குப் போய் விட்டிருந்ததால் அவனைப் பார்க்க முடியவில்லை. கிராமத்துக்குத் திரும்பி

விட்டோம்.

"அன்றிரவு ராஜா பிளிறிய சப்தத்தில் விழித்துக் கொண்டேன். என கபாலத்தின் உள்ளிருந்து இரண்டு கொம்புகள் தலையை தகர்ப்பது போன்ற பயங்கர வலி, பிளிறல் ஏதோ பிரமை என்று நினைத்து நெற்றியில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு தூங்க முயன்றேன். உடம்பு ஜிவ்வென்று கொதித்து நடுங்க ஆரம்பித்தது. ஜுரம். நாளனியும் இல்லை. ஒரு விதமாக நானே கஷாயம் பண்ணிக் குடித்துவிட்டுப்படுத்தேன். அன்று 1982ம் ஆண்டு முடிந்து 1983துவங்குகிறது. பிளிறல் கேட்ட சமயம் சரியாகப் பனிரெண்டு மணி என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

என் சுவர்க் கடிகாரம் அதே சமயம் பனிரெண்டு அடித்துக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு நடுவே, இரண்டு வருஷங்களுக்கு நடுவே இரண்டு சகாப்தங்களுக்கு நடுவே பிளந்த காலமற்ற இடைவெளி அது. ராஜாவின் பிளிறல் அந்த வெற்று வெளியுள் ஓடி மறைந்து விட்டது.

"மறுநாள் நான் தட்டு தடுமாறி நடந்து போய் யானைக் கூட்டைப் பார்த்தேன். கொம்பன்களும் பெண்யானைகளும் குட்டிகளுமாகக் கூட்டுக்கு வெளியே அநாதரவாய் நின்று சிதறிக் கொண்டிருந்தன. காற்று ஹோவென்று ஓலமிட்டு அழுது கொண்டிருந்தன. நான் மர அடர்த்திகளுக்குள் மாறி நடந்து போய் உடைபட்ட கூட்டின் வாசலுக்கு எதிரே நின்று பார்த்தேன். நான்கு வேலிகளும் சீராக ஒரே வரிசையில் உடைக்கப்பட்டு இருந்தன. உள்ளே அடைபட்டிருந்த யானைக் கூட்டம் வெளியேறி நிற்கிறது. ஆனால் அமைப்பின் இருட்டுக்குள் ஆகாயத்தை நோக்கி உட்கார்ந்தபடி கிடந்தது ராஜாவின் உடல். வலது கொம்பு சிதறி உடைந்திருந்தது. கொம்புகள் தலை முழுவதும் ஒரே உதிர படலங்கள் என் உடலும் ஒரேயடியாகப் பலமிழந்து விழுந்து விட்டது. கிராமத்துப் பயல்கள் பிரக்ஞையில்லாமல் கிடந்த என்னை தூக்கிக் கொண்டு வந்திராவிட்டால் அப்போதே நிம்மதியாகச் செத்திருப்பேன். பிறகு இந்தப் புதிய பயங்கர சகாப்தம். 1983ன் ஜுலை. கொழும்புத் தமிழர்களை சிரில் மத்தியூ, காமினி திஸ்ஸநாயக்க இரண்டு பேரின் ரௌடிப் படைகள் சின்னா பின்னமாய்க் குதறியதுக்கு நான் சாட்சியாக இருந்திருக்கிறேன். நான் அப்போது கொழும்பில் இருக்க வேண்டும் ராக்ஷஸர்களை நேரே பார்க்க வேண்டும் என்று எனக்கு விதி. புத்தகயாவுக்குப் போய் தரிசனம் பண்ணிய கண்கள் மூலம் நிஷ்டூரத்தின் முழு வடிவமும் காணப்பட வேண்டும். இதுதான் தெய்வத்தின் தர்க்கம்." குரல் சிதறாமல் பேசி வந்த உடவத்தவின் முகம் எப்போதோ சிதறிவிட்டிருந்தது. கண்களில் கண்ணீர் பெருக் கெடுத்து கரடு முரடான பாறைகளின் மேடு பள்ளங்களைப் போன்ற முகச்சதை மடிப்புகளில் ஏறி இறங்கி வழிந்தது. கோபால் நெற்றியை எவ்வளவு சுருக்கி அடக்க முயன்றும்



**லங்காபுரிராஜா கதையில் வரும்**
**கோபாலகிருஷ்ணன், மனைவி பத்மினி, மகள் அபிராமகௌரி**

அவனால் கூட கண்ணீரை அடக்க முடியவில்லை. தன் முன் சிதறிய முகத்தைப் பக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தவன், "அபிராமராஜாவை, நான் மெட்ராஸுக்கு அனுப்பவில்லை. உண்மையில் அவன்...." என்று ஆரம்பித்தான்.

உடவத்த குறுக்கிட்டு, "எனக்கு இந்த வாசற் கதவைத் தட்டு முன்பே அது தெரியும்," என்றார். கைகள் முகத்தைத் துடைத்தன. "என் கண்ணீர் லங்காபுரி ராஜாவுக்காக மட்டுமல்ல. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் எங்களை ஒவ்வொருவராகப் போலீஸ் விசாரித்துத்தான் அனுப்பியது. உங்கள் விலாசத்தை நான் சொன்னதும் எனக்கு மட்டும் ராஜ மரியாதை நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஜீப்பில் கொண்டு போய் நான் சொன்னதையெல்லாம் பதிந்து கொண்டார்கள். ஒரு இன்ஸ்பெக்டர் என்னிடம் அபிராம ராஜாவைப் பற்றிச் சுற்றி வளைத்துச் சொல்லி விட்டு, உங்களிடம் அவனைப் பற்றி உளவு கண்டு பிடிக்க முயற்சிக்கும்படிக் கூறித்தான் இங்கே ஜீப்பில் கொண்டு வந்து விட்டார்கள். இதற்குதான் "சிங்களயா மோடயா" என்று நாங்களே சொல்கிறோம். என்னையே உங்களிடம் வேவு பார்க்க அனுப்பியிருக்கிறார்கள். நான் ஒன்றுதான் உங்களுக்குச் சொல்ல இருக்கிறது. லங்காபுரி ராஜாவின் கதையை நான் எனக்குத் தெரிந்தவர்களை எல்லாம் தேடி பிடித்து நேரில் சொல்கிற யாத்திரையில் இருக்கிறேன். **அபிராமன் லங்காபுரியில் பிறந்தவன். அவனுடைய யாத்திரையும் ராஜாவின் தர்மத்துக்கு அப்பாற்பட்டதல்ல.**

•••


**பிரமிள் பெற்ற விருதுகள்**


**நியூயோர்க் விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருதயும் கும்பகோணம் சிலிக்குயில் அமைப்பு புதுமைப்பித்தன் வீறு என்ற விருதையும் வழங்கி கௌரவித்தது.**

-பேராசிரியர் செ.யோகராசா-

# தமிழ்ப் புனைகதை வரலாற்றில் - பிரமிள் -







தமிழ் நாட்டின் கணிப்பிற்குரிய முற்பட்ட தலைமுறை சார்ந்த ஈழத்து எழுத்தாளர்களான எஸ்.பொ, மு.தளையசிங்கம் வரிசையிலே அடங்குகின்ற மற்றொரு எழுத்தாளராக பிரமிள் விளங்குகின்றார். எனினும் முதலிருவரும் ஈழத்தில் அறியப்பட்டளவிற்கு பிரமிள் அறியப்படவில்லை என்பது துரதிஷ்டகரமானதே. அவர் ஈழத்து எழுத் தாளரல்லர், தமிழ்நாட்டு எழுத்தாளர் என்று கருதி ஒதுக்குவோருள்ளனர். அன்றி, அறியப்பட்டோர் மத்தியிலும் சிறந்த படிமக் கவிஞர். விமர்சகர் என்ற அளவிலேயே அவர் கவனத்திற் குரியவராக விருந்தாரேயன்றி முக்கியமான புனைகதை எழுத்தாளர் என்று அறியப்பட்டிருந்தாரல்லர் என்பதே உண்மை.

ஏறத்தாழ 40 சிறுகதைகளும் 03 குறுநாவல்களும் பிரேமிளால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் 27 சிறுகதைகள், எழுத்து, படிமம், லயம் கணையாழி, ஞானரதம், தினமணிக்கதிர், மீறல், கனவு முதலான தமிழ் நாட்டு இதழ்களிலும் 13 கதைகள் யாழ் என்ற ஈழத்துக் கையெழுத்துச் சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளன. மேற்கூறியப் பிரமிளின் படைப்புக்களை வசதிகருதி பின்வருமாறு வகுத்துப் பார்ப்பது பொருத்தமானது:

i. முக்கிய கவனிப்பிற்குரியதான தமிழ் நாட்டுச்சூழலில் எழுந்த படைப்புக்கள்
ii. 'ஈழத்துச்' சூழலில் எழுந்த படைப்புக்கள்
iii. ஜனரஞ்சகமான படைப்புக்கள்
iv. 'யாழ்' கதைகள்

பிரமிள் ஈழத்தைக் களமாகக் கொண்டு அதுவும் (ஆயுதப்) பேராட்டச் சூழலைக் களமாகக் கொண்டு எழுதியிருக்கிறாரென்பது ஈழத்தவர் பலருமறியாத தொன்று இத்தகைய படைப்புகளிலொன்றான **"அங்குலீமாலா"** சீலன் என்ற போராளி பற்றியது. விமான விபத்திலிருந்து தப்பிய சீலன் விமானத்திருத்த வேலைகளின் போது பயணிகள் தங்குமிடத்திலிருந்த வேலையிலே தன்னுடன் பயணித்த (தனது ஊரான திருகோணமலையிலே முன்னர் வசித்த) சீலா என்ற வெள்ளைக்காரக் கிழவியை சந்திக்கின்றான் இவ் இருவருக்குமிடையிலான உரையாடலே கதைப் பின்புலமாகும் கிழவியின் மகனின் பெயர் **"அங்குலீமாலா"** என்பது. பிரமிளைக் குறிக்கும் குறியீடு அதுவாகும். இதில் வரும் குழந்தைப்பருவ நிகழ்வுகள் பலவும் பிரமிளின் உண்மை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை.

மற்றொரு சிறுகதையான **'கோடரி'** தமது ஊரிலுள்ள அரச மரங்களைத் தறிக்கும் ஊர் மனிதரது செயல்கள் பற்றியது. அதன் விளைவுகள் பற்றியும் அதனை விட சமூக உருவாக்க வரலாற்றுப் பின்புலத்திலே மனித நடத்தைகளை விமர்சிப்பதுபற்றியுமாக அக்கதை நகர்கின்றது.

**'ஆலா'** என்ற சிறுகதை உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது அதாவது ஈழத்தில் வாழ்ந்த விபரீதக் கவிஞரொருவரது உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டு கட்டப்பட்ட நையாண்டிக் கதையாகிறது. **'காடன் கண்டது"** என்ற சிறுகதை ஒரு குறவனின் பார்வையில் ஆதிகதை சொல்லல் முறையிலே உருவாகியுள்ளது. பணம் ஒன்றை மையமாகக் கொண்டு குறவரின் ஊரவரது செயற்பாடுகள் பற்றி, தத்ரூபமான பேச்சு மொழியுடன் விவரிப்பது உண்மையிலே பிரமிளைப் பொறுத்தளவில் ஈழத்துப் பின்னனியில் கதை நடந்தாலும் அதுமறைக்கப்பட்டு தமிழ்நாட்டுச் சூழலில் எழுதப்பட்டுள்ளது. (தி.ஜானகிராமன் கணையாழி ஆசிரியராக இருந்த வேளையில் அதில் பிரசுரமானது) மேற்கூறிய வகைப்பாட்டினுள் அடங்கும்.

ஏனைய சிறுகதைகளுள் சில தமிழ்நாட்டுச் சூழலைக் களமாகக் கொண்டவை. பிரமிளின் அனுபவங்கள், கேட்டறிந்தவை, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் குறிப்பிட்ட சில சிறுகதைகளின் வாசிப்பினூடாகப் பெற்ற தாக்கத்தைக் கொண்டும் எழுந்தவை. மேற்கூறிய வகைக் கதைகளுள் ஒன்றான **"சாமுண்டி"** சென்னைத் தெருவில் திடீரென்று பார்த்த ஒரு நிகழ்வின் பாதிப்பில் உருவாகியது. அதாவது சாக்கடை அடைப்பை நீக்கிவிட்டு தலையில் இருந்து மலம் உடல் முழுவதும் வழிய எழுந்து வந்த ஒரு துப்பரவுத் தொழிலாளியைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து பிறந்தது.

**'கிசு கிசு'** என்ற சிறுகதை சென்னையில் ஏராளமான உதவி இயக்குனரிடமிருந்து தானறிந்தவற்றை வைத்துக்கொண்டு எழுந்தது. துரை என்கிற கவிஞர் வித்தியாசங்கரின் சில அனுபவங்களும் இதில் வருகின்றன. ஒரு இலக்கியப் பத்திரிகைக் குழுவையும் பெண்ணிய எழுத்தாளர் ஒரு வரையும் நையாண்டியாகச் சித்தரிக்கும் கதையாகவுள்ளது. **'பாறை'. மௌனியின் 'சாயலில் பிறந்த சிருஷ்டி' என்ற சிறுகதையில் வருகின்ற பாத்திரங்களை வேறு நிலையில் வைத்து எழுதிப் பார்த்த கதையே 'சதுரச் சிறகு' ஆகும். இவ் இருவர் சிறுகதைகளும் தத்தம் அளவில் சிறப்புடையன என்பதே கவனத்திற்குரியது.**

**'லங்காபுரி' என்ற சிறுகதை மனித அடிப்படைப் பிரச்சினையொன்றுடன் வசிப்பிட - உரிமைப்பிரச்சினை தொடர்புபட்டது. உடும்பைக் குறியீடாக கொண்டு எழுந்தது. (பிரமிள், சர்வேகேம்ப் ஒன்றில் தங்கியிருந்த போது உண்மையாக நடந்த உடும்பு நிகழ்ச்சியே அச்சிறுகதையின் ஊற்றாகியது) 'பிஷாடனன்' என்ற படைப்பு கதை வடிவிலிருந்தாலும் அடிப்படையில் (இருவருக்கிடையில் நடக்கும்) விவாதக்கட்டுரையாக வெளிப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. நீலம்** (நீலோத்பலம்) என்ற சிறுகதையும் குறியீட்டுப் பாணியிலானதே. அதாவது, தண்ணீருக்குள் மட்டும் மலரும் நீலோத்பலம் பற்றிய தகவலை அடிப்படையாகக் கொண்டு ரசவாதக் குறியீடுகளின் அடிப்படையில் கலைஞர் ஒருவரிடம் ஏற்படும் மனமாற்றத்தை வெளிப்படுத்துகிறது இக்கதை. சொல்லாமற் சொல்லப்படுவன இக் கதையில் அதிகமுள்ளன.

கோபுல்ஸ்ரீ என்ற எழுத்தாளரது அபூர்வ நிகழ்ச்சிகள் கொண்ட ஒரு கதையின் தாக்கத்தினால் எழுந்த கதையே **"கருடனூர் ரிப்போட்"** ஊரின் தாதா ஒருவனோடும் அவனிடம் வட்டிவாங்கிய ஒரு பெண்ணோடும் தொடர்புபட்ட இச்சிறுகதை பிரமிளின் கற்பனையாற்றலுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டா கவுள்ளது. வட்டிதராததமையால் அப்பெண்ணின் தாலியைப் பறித்துச் சென்ற அந்ததாதா அவன் வீட்டின் முன்னால் லொறியிலே அடிபட்டுச் சாகின்றான். அவன் பையிலிருந்த தாலியும் வெளியே வாசலில் கிடந்தது என்பதே கோபுல்ஸ்ரீயின் கதை. கருடனூர் என்ற ஊரைக்கற்பித்து, கருடபுராணத்தை உருவாக்கி யோகி ராம்சுரத் குமாரையும் கொண்டுவந்து தனது கதையை உருவாக்கியுள்ளார் பிரமிள். பொலிஸ்காரன் மூலம் சொல்லப்படும் இக்கதையின் பாத்திரச் சித்தரிப்புக்களும் குறிப்பிடத்தக்கவை எ+டு சாதுவான பூசகர் அரசியல் தலைவர்கள்போல் பகுத்தறிவுவாதம் பேசும் ஒரு அடாவடிக்காரன்)

**'குதிரை மலைநிகழ்ச்சி, "அசரீரி"** ஆகிய இரு சிறுகதைகளும் விஞ்ஞானப் புனைகதைப் பாணியைச் சார்ந்தவை என்ற விதத்தில் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அசரீரி தனித்துவமான சுயமரபுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதும் சமூகப்பிரச்சினையோடு விஞ்ஞானத் தீர்வு இசைந்திப்பதும் இதன் சிறப்பம்சங்களாகின்றன.

முதற் சிறுகதையான **சந்திப்பு** (எழுத்து 1966) பரீசை எடுக்க தனது ஊருக்கு வந்து பரீட்சை முடிந்து பின்பு நண்பனுக்காக காத்திருந்த சூழலில் ஒருவனுக்கு எழுகின்ற பழைய நினைவுகள் அடிச் சரடாகக் கொண்டது. அத்தகு நினைவுகளினொன்றாக மரணச் சடங்கு சார்ந்த சிதைமூட்டலில் ஈடுபட்ட நிகழ்வும் அதனையொட்டி எழுகின்ற மன உணர்வுகளினதும் - மனித நடத்தைகள் மனித உணவுகள், மனித வாழ்க்கை பற்றிய மன உணர்வுகளினதும் - வெளிப்பாடாக சந்திப்பு உருவாகியுள்ளது. முதற் சிறுகதையானாலும் அதிக பாராட்டிற்குள்ளாகியிருந்தது. புதுடில்லி பதிப்பகத்திற்காக, க.நா.சு தமிழில் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து அதிலே **"சந்திப்பு"** சிறுகதையையும் சேர்த்திருந்த போது, அத்தொகுப்பினுள்ள சிறுகதைகளுள் சந்திப்பே சிறந்த கதையென்று, இந்தியன் எக்ஸ்பிரஸ் (புதுடில்லிப்பதிப்பு) மதிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

மேற்கூறியவாறான கணிப்பிற்குரிய ஈழத்துச் சிறுகதைகளையும் தமிழ் நாட்டைப் பகைப்புலமாகக் கொண்ட சிறுகதைகளையும் எழுதியவரான பிரமிள் ஜனரஞ்சமான சிறுகதைகளையும் எழுதியிருக்கிறாரென்பது வியப்பிற்குரிய விடயமெனினும் அவ்வாறு எழுதும் ஏனைய சில எழுத்தாளர்கள் போன்று அவர் தன்னை இழக்கவில்லை என்பதும் அவ்வாறான கதைகளுடாகவும் ஆரோக்கியமான முறையிலே எழுத முடியுமென்பதுமே கவனிக்கப்பட வேண்டியவை. இவ்வாறான பத்துக் கதைகள் பிரமிளால் எழுதப் பட்டுள்ளன பத்தும் பத்துவேறு நோக்கும் போக்கு கொண்டுள்ளவை.

மேற்கூறிய வகைக்கதைகளுளொன்றான **'மெஹரா'** உணர்ச்சி மிகுந்த மறக்க முடியாத நெஞ்சைப் பிணைக்கின்றதொரு காதல் கதையாகவுள்ளது. மெஹரா இடம்பெயர்ந்து சென்று தமிழ்நாட்டில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழரது குடும்பத்தைச் சேர்ந்தவள். இச் சிறுகதையில் இடம்பெறும் ஈழத்துப் பேச்சுத் தமிழ் சுவைபயப்பதாக வெளிப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஈழத்து இனப்பிரச்சினையை கதையின் முடிவிலே மிக இயல்பாக, மிகச் செறிவாக பிரமிள் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு பாராட்டிற்குரியது.

**'பாண்டிப் பஜாரைக் கலக்கியவன்'** உண்மை நிகழ்ச்சி சார்ந்த நகைச்சுவைக் கதை. நினைக்குந்தோறும் சிரிப்பை எழுப்பக் கூடியது. ஒரு சிற்பியின் வாழ்க்கை நிகழ்ச்சியோடு தொடர்புபட்டது. 'ஒரு கூழாங்கல்லின் கதை.' **'கல்லெறிந்த கை'** காதல் சார்ந்தது. ஆண்டி பரதேசிக் குடும்பங்களில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அதாவது காதல் விவகாரம் தொடர்பாக ஊர் மீது கல்லெறியும் காதலியொருத்தியின் செயலும் விளைவும் பற்றியது. பொதுப்பத்திரிகையிலும் ஆரோக்கியமான கதை எழுதமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவுள்ளது. **"நடிகைமகள்"** நடிகையின் மகளும் நடிப்பதில் வல்லவலாயிருப்பாள் என்ற எதிர்பார்ப்பு பொய்யானது என்பதை வெகுதத்ரூபமான முறையில் காட்டுகிறது இது. **'டைமண்ட்கிங்'** துப்பறியும்

கதையாக அமைந்துள்ளது. ஷெர்லக் ஹோம்ஸ் பாணியில் வெளிப்பட்டுள்ளது. (இவ்வகைப்பாட்டினுள் தொகுப்பாளர் அடக்கியுள்ள வேறிரு யாழ் கதைகள் வகைப்பாட்டினுள் வைத்து நோக்கப்பட வேண்டியவை.

**'யாழ்கதைகள்'** என்ற பிரமிளின் சிறுகதைகளை வகைப்படுத்தி நோக்குவது அவசியமான தன்றெனினும் அவரது ஆரம்பகாலக் கதைகள் என்ற விதத்தில் பொருத்தப்பாடுடையதே. பிரமிள், திருகோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் ஸ்கூல் ஃபைனல் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வெளிவந்த கையெழுத்து இதழே 'யாழ்' இதில் பிரமிளின் ஆரம்பகால கவிதை, கட்டுரை, ஓவியம், கதை என்பன அதிகளவு வெளிந்துள்ளன. அவை வெளிவந்தமையால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இவ்வாறான கதைகளுள் 13 கதைகள் இப்போது கிடைத்துள்ளன. இக்கதைகள் முதிர்ந்த பிற்கால எழுத்தாளனொருவனின் ஆரம்பகால எழுத்தாண்மையை **ஓரளவு வெளிப்படுத்துகின்ற பயிற்சிக்களமாக அமைந்திருக்கின்றன**

இளைமையின் விடலைத்தனமும் பிள்ளைப் பிராயப் பயமும் அதற்கான சூழ்நிலைக் காரணங்களும் இவற்றினூடே வெளிப்படுகின்றன. இந்த 13 கதைகளிலும் இவரது சிறுகதைகளின் இருவேறு போக்குகள் வெளிப்படுகின்றன. கதவைத் தொட்டகை (நிழல்) தீப்பந்தம் ஆகியன இவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகின்றன. கதவைத் தொட்டகை உள்ளார்த்த விபரீத உணர்வை சுவையான கதை வடிவில் கூறுவதையும் 'தீப்பந்தம்' பிரமிளின் கிண்டல் கலந்த விமர்சனப்பார்வையின் ஆரம்பத்தையும் வெளிப்படுத்துகின்றன.

பிரமிளின் குறுநாவல்கள் என்ற விதத்திலே **"லங்காபுரி ராஜா" "ஆயி" பிரஸன்னம்** ஆகிய மூன்று படைப்புகள் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும்.

**லங்காபுரி ராஜா** குறுநாவல் ஈழத்தின் விடுதலைப் போராட்டம் சார்ந்து உருவானது. கோபால் என்ற விடுதலைப் போராளி பற்றியது. விடுதலைப் போராட்டத்தின் குறியீடாகவுள்ள ராஜா என்ற யானை ஆழமாகப் பதியக் கூடியதாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது இக்குறுநாவலுக்கு கோபால் கானகக் கிராமங்களில் வாழ்ந்த அனுபவங்களும் இயற்கையை நேசிப்பதான கோபாலின் இயல்பும் நாவலுக்கு வளம் சேர்க்கின்றன. அவனது கானக அனுபவங்கள் அவனது மரணத்திற்கு பின் புதிய ஒரு பரிமாணத்தைப் பெற்றுள்ளன. நாவலை மேலும் உயரத்திற்கு இட்டுச் செல்கின்றன. 'ஆயி' என்ற குறுநாவல் ஆயி (அல்லது மாயி) என்று கன்யாகுமரி, சேலம் மாவட்டங்களில் வழங்கும் அம்மன் பற்றிய உண்மைச் சம்பவங்களை சடங்குகளை அடிப்படையாகக் கொண்டது. ஆதி நிலையும் நவீனத்துவமும் கலந்துறவாடும் விதத்தில் எழுதப்பட்டன இக் குறுநாவலின் கதை முறைமை சிறப்பானவை மொழியின் எல்லைகள் தாண்டியும் முனிகழ்ந்தவற்றை சொல்கின்ற முறையும் சிறப்பானவை பல்வேறு வித்தியாசமான பாத்திரங்கள்) (உம்: கடைக்காரன் மாணிக்கம், மதராஸிலிருந்துவந்த தம்பி குமாரவேள், சிறிசுகள், சுப்புறுமணி) இவர்கள் கூடும் சங்கப் பலகை, பிரமபுத்திரா நதியிலிருந்து வந்த ஆயயிலை கல்லும், கணிதார்த்த பிரக்ஞையுடன் இயங்கும் குமரவேள் (இவன் பார்வையிலிருந்தே நாவலின் விரிவும் ஆழமும் வருகிறது) என்றவாறு குறு நாவல் பரந்ததளத்தில் இயங்குவதும் கவனிப்பிற்குரியது அடிப்படையில் பிரமிள் கூறியது போன்று இந் நாவல் மெட்டாபிஸிக்கல் நியலிசம் சார்ந்ததாகவுள்ளது.

**"பிரஸன்னம்"** என்ற குறுநாவல் முற்றிலும் வித்தியாசமான தடத்தில் செல்கிறது. சுந்தரராமசாமியின் ஜே.ஜே சில குறிப்புகள் நாவலை ஏலவே கடுமையான விமர்சனத்திற்குட்படுத்தியிருந்த பிரமிள் அந்நாவல் எப்படி எழுதியிருக்க வேண்டுமென்று காட்டுவதாக இக்குறுநாவலின் முதல்பகுதியை முதலில் எழுதினார். பின்னர் அதனைத் தொடர்ந்து எழுதியவை சமூகவிமர்சனமாகப் பரிணமித்துள்ளன, ஆன்மீகத்தளம் வரை சென்றுள்ளன. 'ஆயி' போன்று இக்குறு நாவலிலும் பின்நவீனத்துவ உத்திகளும் வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இது வரை கூறப்பட்ட அனைத்தையும் மனங்கொண்டு பிரமிள் சிறுகதை. குறுநாவல் உள்ளிட்ட படைப்பிலக்கியத் துறையில் சாதித்தவை யாவை என்று அவதானிப்பது அவசியமானது. இவ்விதத்தில் பின்வருபவை நினைவு கூறப்பட வேண்டியனவாகிறன.

i. பிரமிளும் பெரும்பாலான எழுத்தாளர்கள் போன்று தனது நேரடியான, கண்ட அனுபவம் சார்ந்தவை கேட்டவை, கேட்டறிந்தவை உண்மையான சம்பவங்கள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட புனைகதைகளை எழுதியுள்ளார். ஆயினும் அவை அத்தகைய ஊற்றுக்களுள் பெரும்பாலானவை முக்கிய சமூகப் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டன அல்ல. அவ்வாறு தொடர்பட்டனவும் சரி ஒரேவழி தொடர்புபடாதனவும் சரி அவருக்குரிய தனித்துவப் பார்வைகளுடன் அனுபவக் கூறுகளுடன் விமர்சன வீச்சுடன் அழமான நோக்குடன் வெளிப்பட்டுள்ளன என்பதே கவனிக்கப்பட வேண்டியது.

ii. பிற எழுத்தாளாது படைப்புகளும் அவரது புன்கதைகளுக்கு ஊற்றாக இருந்துள்ளமை புதுமையானது. எனினும் அவ் எழுத்தானது அப்படைப்புகளிக்கும் இவரது படைப்புகளுக்குமிடையில் எவ்வித தொடர்பு மற்றவை.


iii. நகைச்சுவை, அங்கதம், துப்பறியும் பாணி, விஞ்ஞான **புனைவு அம்சங்களை முதன்மைப் படுத்தும் கதைகளும்** தனித்துவ நோக்குடன் கூறப்பட்டுள்ளன.

iv. ஜனரஞ்சகக் கதைகள், சிறிய அளவிலான கதைகள் முதலானவைகூட ஆரோக்கியமான முறையில் பிரமிளால் எழுதப்பட்டுள்ளன.

v. இவரது கதைகள் அசோகமித்திரன், சா.கந்தசாமி, திலீப்குமார், முதலான தமிழ் நாட்டின் முக்கிய எழுத்தாளர்கள் சிலரால் தளிப்பட்ட காரணங்களினால் அவர்களது தேர்ந்த கதைத் தொகுப்பில் இடம் பெறாது விட்டிருப்பினும் தி. ஜானகிராமன் க.நா. சுப்பிரமணியம் சங்கரநாராயணன், விட்டல்ராவ் முதலான எழுத்தாளர்களால் பாராட்டப்பட்டதாக அல்லது அவர்களது தொகுப்பில் சேகரிக்கப்பட்டனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

vi. நரிக்குறவன், பரதேசி, தாதா, தோட்டி முதலான விளிம்புநிலை பாத்திரங்களுக்கு முதன்மை கொடுத்து சில சிறுகதைகளும் எழுதப்பட்டுள்ளன.

(பிரமிளின் கடித இலக்கியம் அதிகம் வெளிவராத நிலையில் அவர் தமிழகத்தில் இருந்த வேளை அவரது நெருங்கிய நண்பரும் பாடசாலை காலத்தவருமான வைத்தியகலாநிதி S.P. ராமச்சந்திரா அவர்களுக்கு எழுதிய பல கடிதங்கள் கிடைக்கப்பெற்றன. அவரது படைப்புக்களைப் போலவே புரிதலும், புரியாமையும், கிண்டலும் கலந்த நடை அது. மாதிரிக்கு அவரது கடிதம் ஒன்று - ஆசிரியர்)



DR. RAMACHANDRA
RAMCLINIC
57, MAIN STREET
TRINCOMALEE
SRI LANKA


V.A. PREMELL
41, I street
Kamarajapuram
Nungambakkam
Madras 600034

Dhoolt-Vishnus
Agni Ram Pramil

T. V. A. PRAMIL.
60-B. THIRD VIDI AMMAN KOIL STREET
Thiruvanmiyur, Madras-600 041
5/6th Midnight
December 1989

My dear Sandirka,
All my affairs are in a frog state: I haven't applied for the pass-port. This is because I am yet to receive the le[tter] I asked from you. Just your letter on letter-head-stationary will do. Mention [my] name as T.V.A. Pramil. (I am brea[king] away from my bank-name Ram T. [Pram] because the friend in the bank who ha[d] me open the account does not want [the] bank book to be used for my pass[port]


VIKRAM GUPTHAN PRAMEEL
விக்ரம் குப்தன் பிரமீள்
S.A ARNOLIS = 26.


My dear Sandirka,

N.B. I: Particulars for my BC.
FATHER: GANAPATHIPILLAI DHARMALINGA[M]
MOTHER: ANNALAKSHMI DHARMALINGA[M]
Child's NAME: VRUKSHCIWRAM AJIT PREMI[L]
BIRTH DATE: 20, APRIL, 1939
(This is the name I can use for the because V.A. Premell is the name for bank acc here.)
N.B. II Ref to Amara Singhan (...) letter overleaf). Help him to ...
YOTHI AMARA SINGHA
T. AMARA SINGHAN

அன்புள்ள சந்திர்ராம்

விக்ரம் குப்தன் பிரமீள்
திருவீதியம்மன் கோயில் தெரு
திருவான்மியூர், சென்னை 600041
15.10.1989

நேற்று ஜே.கி. வீடியோ முடிந்ததும் கந்தசுவாமியைத் தேடிப்போனேன் - உங்கள் ஏரோகிராமில் அவர் 14 அன்று வருவதாயிருந்ததை முன்வைத்து இது. போனபோது அப்போதுதான் வந்திறங்கியதாக சொன்னார். கூட வந்திருந்த சுபசிங்கே ஆராச்சிகே அல்னோலிஸ் விஷயம்: உங்கள் பார்வையில் இது தப்பியது எப்படி? S.A ARNOLIS -26 கிட்னீயில் கல்லை எடுக்க வேண்டிய சர்ஜன்கள் கிட்னீயையே எடுத்து மசாலா பண்ணி இருக்கிறார்கள். மக்கு+ வெகுளி, முரடும் கூட என நினைக்கிறேன். பிறப்பு 11ந்தேதி கூட்டு எண்4. உயிர்தப்பியது இரண்டு பெரிய 'A; எழுத்துக்களாலும், கூட்டு எண் 4க்கு Arnolis 22 வருவதாலும் என நினைக்கிறேன். வேறு, ஜாதக பலன்களும் கூட இருக்கலாம். எப்படியும் பிறப்பு பெயர் எண் ஆகியவை ஜாதகத்தை பிரதிபலிக்கும் என்று சொல்லவேண்டும். மாற்றம் A.ARNOLIS. உங்கள் ஏரோகிராமுக்கு உடனேயே பதில் போட்டிருந்தேன். கிடைத்திருக்கும்.

பிறப்புப்பத்திரப் பிரச்சினையை நீங்கள் சொல்வதுபோல் தீர்க்க முடியாது. எண்ணிடம் உள்ள ஏதும் பத்திரத்தை Xerox பண்ணி அனுப்பச் சொல்கிறீர்கள் பத்திரம் ஏதும் ஒன்று இருந்தால் இங்கே பாஸ்போர்ட் பிரச்சினை இல்லை. பத்திரத்துக்காக ஒருசமயம் கிறிஸ்துவ ஞானஸ்நானம் பெற நினைத்து ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்துவ பாதிரி மாணவ நண்பரைக் கேட்ட போது கத்தோலிக்கத்தில் கட்டுப்பாடு அதிகம் புரொட்டஸ்தாந்திகளைப் பாருங்கள் என்றார். எரிச்சலில் அந்த ஐடியாவையே விட்டுவிட்டேன். ஒரு பத்திரமும் கிடையாது எனவே எனது பிறப்புப் பத்திரம் பெறும் பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

இத்தகைய பத்திரங்கள், பெயர், கணிதம் ஆகியவற்றின் அதிபதி மூன்றாமிடத்துக்காரன் எனக்கு (மேஷத்துக்கு) மிதுனம், அதிபதி, புதன், மீனத்தில் நீச்சம். ஆனால் கூடவே உச்சமாய் சுக்ரனும் ஆட்சியாய் குருவும் உள்ளதால் இரட்டை நீசபங்கம். பத்திரம் என்ற வெளிப்புற அளவில் பிரச்சனை. ஆனால் புதனால் குறிக்கப்படும் நியுமராலஜி இத்யாதியில்.....

கெட்டவர்கள் நட்சத்திரம் மாறி இருந்தால் விபரீத ராஜயோகம். புதன் (3,6) சனி (சரராசிக்கு பாதகமான 11ன் அதிபன்) – சனியின் நட்சத்திரத்தில் புதன், புதனின் நட்சத்திரத்தில் சனி. எனவே எண்ஜோதிடம் முதலியவை சம்பந்தமாக எனக்கு ஏதோ பெரிய வருவாய் வந்தாக வேண்டும். விபரீதம் என்றால் எதிர்பாரா வழி,

எப்படி இருப்பினும், அமெரிக்காவுக்கு போக முடிந்தால் ஒரு எளிமையான விஷயத்தின் மூலம் திடீர் பணம் பண்ணும் திட்டம் இந்த மாத ஆரம்பத்தில் பிறந்திருக்கிறது. இதற்கு தனியாக சில ஏற்பாடுகள் வேண்டும். அமெரிக்க பத்திரிகை போன்ற மீடியாக்களில் ஒரு அறிவிப்பு செய்ய வேண்டும். ஒரு கேள்வியை "உண்மையில் இயேசு சிலுவையிலறையப்பட்டபோது மணிக்கட்டின் Ulna க்களிடையேதான் ஆணிகள் சென்றன. ஆனால் மரபாக உள்ளங்கைகளில் ஆணிக்காயங்கள் காட்டப்படுகிறது. ஏன்? "இந்தப் பிரச்சனையை நான் Occult துறையின் அத்திவாரங்களைத் தேடிச்சென்ற போது அதன் வழியில் தீர்த்துவைத்திருந்தேன். சரியானபடி

விளம்பரம் செய்து கேள்வியை எழுப்பி, பதிலுடன் ஒரு டாலர் (போதுமா?) அனுப்பும்படி கேட்கலாம். சரியான பதிலுக்கு செலவுபோக சேர்ந்த பணத்தைக் கொடுத்துவிடுவது இதுவே திட்டம். ஆனால் எவராலும் இதற்குப் பதில் தர முடியாது. இதற்கு ஒரே உண்மையான பதில்தான் உண்டு. விளக்கங்கள் பதில்களாகாது ...Inter Pretations பதில்களாகாது. "பலிக்குறி" என்பார்கள் அதற்கு ஏன் உள்ளங்கை?
உங்களுக்கு கேள்வியைக் குறித்து எழுதி இருப்பதுக்கு ஒரு காரணம் உண்டு. அமெரிக்காவிலிருந்து என்னை அழைக்க விருப்பதாக குறிப்பிட்ட அன்பருக்கு கேள்வியைக் குறிப்பிடாமலே என்னிடம் உள்ள திட்டத்தின் இதர அம்சங்களை எழுதி உள்ளேன் எனக்கென்னமோ இந்த அன்பர் - பெயர் R.Kabaliswaran ஒரு literal minded Person ஆக இருப்பாரோ என்று அவருடைய தமிழ் கடிதத்தைப் பார்த்ததும் தோன்றுகிறது. மரபுத்தமிழில் எழுதி உள்ளார். என்னை அவர் எப்படி வாசிக்கிறாரோ புரியவில்லை. எனவே அவரது ஒத்துழைப்பில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதனால்தான் இதை உங்களுக்கு அனுப்புகிறேன்.

உங்கள் அமெரிக்க யூத நண்பர் அங்கே உங்களை உபசரித்தவர் - தொடர்பு இன்னும் உங்களுக்கு உண்டா? Mention to him my work on relation TamilNombers to Tarota Cards அவரால் இந்த Venture ற்கு ஏற்பாடு செய்து தர முடியுமா? சேரும் பணத்தில் ஒரு Non Profit Organization ஆரம்பிக்கலாம். ரொம்பவும் செயல் திறன் உள்ளவர்களின் ஒத்துழைப்புடனேயே இதை நிறைவேற்ற முடியும். தேவைகள் 1. விலாசம்: ஆபீஸ் போன்றிருப்பது நலம் 2. நாளாந்தம் சேரும் பணத்தை எண்ணி பாங்கில் போடும் வசதி 3. பதில்களை நான்தான் படிக்க வேண்டும். ஆனால் பதில் சுருக்கமாக இருக்கவேண்டியதால் எனக்கு பிரச்சினை இல்லை. ஒரு glance எனக்கு போதும் 4. எல்லா பதில்களையும் File பண்ணும் வசதி – எதும் ஏய்ப்பிலிருந்து நம்மை பாதுகாப்பதற்கு இது அவசியம். இன்னும் வேறு பிரச்சனைகள் என்னென்ன என்று பார்க்கவேண்டும்.
சரியானபடி விளம்பரம் செய்தால் ஒரு டாலருக்கு மேலேயே Entrance fee வைத்தால் எவ்வளவு பணத்தையும் எதிர்பார்க்கலாம். இதனால் பணம் N.P.Oக்காக ஆவதே சிறப்பு.
இந்த என் திட்டத்தின் காரணங்கள் 1.எருமைச்சாணியை Ford foundationக்கு ஏற்றுமதிசெய்வது போல் "இங்கே தெருக்கூத்தை வளர்க்க" என்று சொல்லி அங்கிருந்து 15 லட்சம் ரூபாய்களை ஓ.முத்துசாமியும் அவரது சகாக்களும் வாங்கி வைத்திருக்கிறார்கள். 2 பழைய கிலுகிலுப்பைப் பாணிக் கவிதைகளை எழுதும் அடியார் என்பவருக்கு லண்டன் தமிழ்ச் சங்கமோ ஏதோ ஒரு லட்சம் பரிசு கொடுத்திருக்கிறது. (முஸ்லீமுக்கு முஸ்லீம் சங்கம் கொடுத்த பரிசு என்கிறார்கள்) 3. கருணாநிதி எழுதிய அபத்தக்களஞ்சியக் கதை (சாண்டில்யன் பாணி அதைவிட மோசம்) ஒரு லட்ச ரூபாய் பரிசு பெற்றிருக்கிறது. இந்த மண்டலத்தில் என் நிலையை நீங்களே ஒப்பீடு செய்து பாருங்கள். எனது திட்டத்தை யோகி ராம்சுரத்குமாருக்கு எழுதிவிட்டேன். எதிர்வரும் ஞாயிறு அவரை தியானதாராவுடன் போய்ப்பார்ப்பேன்..
கந்தசாமி உங்கள் கடிதமும், குமரன் இரண்டும், அப்பாத்துரை குறிப்புகளும் கொடுத்தார். குறிப்புகளில் ஒன்றுதான் உதைக்கிறது. Mrs. ..வயது ஐந்து அதிகம் மகளார் சும்மா guess பண்ணி இருக்கிறார் - இதில் மட்டும். அடுத்து நான் மகாசமாதிபூரம் என்று எழுதியுள்ளேன் மாசிமகம் திருத்தம் ஆனால் மறுபதிப்புடன் இது பார்க்கலாம். குறிப்புகளுக்கு நன்றி.

குமரன் பத்திரிகை ரொம்பவும் கிச்சுக்கிச்சு விஷேசமாக சோவியத், செஞ்சீனா, போலந்து, ஜெர்மானியர் ஊடல் பற்றி தரப்படும் பதில் - எதிரொலி – அடா! செஞ்சீனாவிலிருந்து வெளியேறிய Lizhin என்ற Nuclear physicist மார்க்ஸீயத்தை புதைக்க வேண்டும் என்றும் அது வெளியே கிடந்து நாறுகிறது என்றும் சொல்கிறார். நாற்றம் சில வேளை எங்களூர் குமரன்களின் குசுவாகவும் வெளிப்படுகிறது. சிலவேலை Laughing gas ஆகவும் மாறி கிச்சுக் கிச்சு மூட்டுகிறது. குமரனை எனக்கு அனுப்பியதிற்கு ஏதும் விஷேச காரணம் உண்டா?
மேற்கு நாடுகளுடன் வைக்கும் பொருளாதார சம்பந்தத்தில் மேற்கு கிழக்கைச் சுரண்டுவதாக பிரமை கொள்ளும் பார்வை மீண்டும் குமரனில். இது அடிமுட்டாள்தனமான கூற்று, பர்மா, வெளித்தொடர்பு முழுவதையும் துண்டித்ததின் விளைவாக பொருளாதார நிர்மூலம் அடைந்திருக்கிறது. சோவியத் உதவியுடன் இரும்புத்திரை மார்க் கெட்டை மட்டும் ஏற்கும் நிலைக்கு ஆளானதால் கியூபா ஓட்டாண்டியாகி இப்போது வாஸிங்டன் வைட்ஹவுஸ் வாசலில் ஒரு தாடிவாலாவை நிறுத்தி வைத்திருக்கிறது "பிரஸி டெண்ட்ஜயா இருக்காங்களா" என்றுகேட்டபடி நிற்கிறார் டாக்டர் காஸ்ரோ"

டபுள் டாக்டர் சிவசேகரம் என்ன சொல்கிறார்? இவ்விடத்தில் - பெஞ்ஜமின்பிராங்லின் சொன்னது ஞாபகம் வருகிறது "படிக்காத முட்டாள்களை விட படித்த முட்டாள்களினால்தான் ஆபத்து அதிகம்" நவீன கல்விமுறையும் பரீட்சை முறையும் முட்டாள்களை படித்தவர்களாக்கியிருப்பதைக் கவனியுங்கள். இந்த கல்விப்பரீட்சை முறையின் வியாபகமும் உலகின் பாரதூரமான பிரச்சினைப் பெருக்கங்களும் ஒன்றுடன் ஒன்று உறவு கொண்டவை என்று கருத இடமுண்டு.
தமிழின் நவீனத்துவ கட்டுரைகளை நீங்கள் போடும் செலவுக்கு இங்கே என் புத்தங்களை போடலாம். இது தான் செய்ய வேண்டியது. என் விஷயங்களுக்கு என் பெயர் பிரமீள் என்று மட்டும் இருக்கவேண்டும். லங்காபுரி ராஜா (அது என்ன லங்காபுரிக் காட்டுராஜா"? இதை "காட்டு ரோஜா" வாக்காமல் விட்டீர்களே அதற்கு நமஸ்காரம். பிரதிகள் அனுப்பலாம் டபுளாக பணம் வாங்கிக் கொள்ளுங்கள் Autopsy விஷயம் என்னிடம் இருந்தால் உங்களிடம் ஏன் கேட்கிறேன்? அதை நினைவிலிருந்து எழுதி உடனே அனுப்புங்கள். என் ஞாபகத்தில் உள்ளத்தையும் கலந்து எழுதி பிறகு முடிவு செய்யலாம். அது ஒரு Rarepiece ஜோதி (பெயரில் இது சாதாரணமானவர்களின் வாழ்வை Scandalous ஆக்கக் கூடியது) விலாசத்துக்கு நன்றி. அவருக்கு எழுதுகிறேன்! வேறென்ன அன்புடன்

**விக்ரம் குப்தன் பிரமீள்.**

-க.சட்டநாதன் -



ஓவியம் - பிரமிள்

# கலங்கல்

"அம்மா பாவம்....அவள் படுகிற சீரழிவெல்லாம் உனக்காகத்தான் ராசா....!" மகன் சுதனிடம்தான் சுபோதினி கதைத்தாள். கதைக்கும் போது 'இது கொஞ்சம் உண்மை, கொஞ்சம் பொய்...' என்பது அவளுக்கே தெரிந்திருந்தது. அவளே ஏற்றுக் கொண்ட அந்த வாழ்க்கைக்கு சீரழிவு அது இதென்று பூச்சுப்பூசுவது அவளுக்குச் சற்றுக் கூச்சமாக இருந்தது.

அவளது மடியில் தலைசாய்த்து, அவளை பார்த்தபடி கிடந்த சுதனுக்கு அவள் கூறியது எதுவும் பிடிபடவில்லை, சற்றுப் பூடகமாக இருந்தது. எவ்வளவு திடமாக இருந்தாலும் ஓரோர் சமயம் அவள் உடைந்து போய்க் கலங்கவே செய்தாள்.

அம்மாவின் கண்களில் நீர்!

பதட்டத்துடன் எழுந்தவன், தனது கரங்களால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டான். 'அம்மாவுக்கு இப்படி ஒரு அழகு எப்படி வந்தது.....? எல்லாமே அவளுக்கு அம்மம்மா வழிவந்த சொத்தா....? அவளது அச்சுத்தப்பாத வார்ப்பா இவள்...!,'

அம்மாவுக்கு எல்லாமே பூப்போல இருந்தன. அவளது கைகள், நுனி விரல்கள், குவிந்தவாய், பட்டு உதடுகள், அவற்றின் வெங்காயச்சருகு நிறம், படிகப்பற்கள், கூரிய கண்கள், நேரிய மூக்கு, மெது மெது உடல் என்று எல்லாமே.... முப்பது வயதில் அவளுக்கு இப்படி ஒரு வடிவா...!'

அந்த ஆட்கொல்லி அழகை மீறிய ஒரு பிசங்கல் அவளது உடலில் தெரிந்தது. அது...அது எதனால்..?

மடியிலிருந்து எழுந்த சுதன், அம்மாவை இறுக்கமாக அணைத்தபடி சொன்னான்: "நான்.... நான் இருக்கேக்கை உனக்கு என்ன பயம்...? உன்னை நான் நல்ல வடிவாப் பார்ப்பன்."

"இந்தச் சுமையைப் பச்சைப் பிஞ்சான உன்னாலை இழுத்துப்பறிக்கேலுமா...? உன்ரை அப்பா இருக்கேக்கை, கடனை உடனைப்பட்டு ஏதோ எங்கடை சீவியம் நழுவல் தொழுவலாய் நடந்தது. ஆனால், இப்ப அவர் போன பின்னால, எல்லாமே தலைகீழாப் போச்சு ராசா...? செல்வம் மாமாவாலதான் இப்ப எங்கட சீவியம் நடக்குது. நீபடிச்சு ஆளானால் தான் இனி எல்லாம் எங்களுக்கு...."

"இந்தப் படிப்பை விட்டிட்டு, எங்கையாவது வேலைக்குப்போனால், ஏதாவது கையில கிடைக்கும். கால் வயிறு அரை வயிறெண்டாலும் கழுவ அது எங்களுக்குப் போதும். உந்தச் செல்வம் மாமாட்டை, உதவி அது இதெண்டு அலைய வேணுமா என்ன...?"

"ஓம் செல்லம்... பிறத்தியாரிட்டை கையேந்திறதெல்லாம் ஒரு பிழைப்பா...? அதுக்கு எத்தனை அநுசரிப்புகளும் விட்டுக் கொடுப்புகளும் தேவைப்படுகுது...."

'அநுசரிப்பா இல்ல அநுசரணையா...?'

அவளுக்கு லேசாகச் சிரிப்பு வந்து விடுகிறது. உதட்டைசுழித்துச் சிரித்துக் கொண்டாள்.

'செல்வத்தின் நிழல் பரந்து படர இடந்தந்தது சரியா இல்ல தப்பா...? அட அதென்ன மாதிரி ரட்சிப்பு...! பாலுணர்வின் உள் இழைகளையும் ஓர விளிம்புகளையும் உடைத்துக் காட்டியவன் அவனல்லவா...!

குழம்பியவள், சிறுநடுக்கத்துடன் சுதனை அணைத்துக்

கொண்டாள். அவனது நெற்றியிலும் கண்களிலும் மாறிமாறிமுத்தமிட்டாள். சிலிர்த்த சுதன், சிறு சிரிப்புடன் அவளையே பார்த்தான். அம்மா ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இப்படித்தான் அவள் தீடீர் திடீரெனத் தன்னை மறந்து விடுகிறாள்.

"இந்த மனிசன் ஏன் எங்களை இடைநடுவில் விட்டிட்டுப் போனது. எல்லாமே இப்ப நடந்தது போல இருக்கு. இரண்டு வருஷம் போனதே தெரியேல்லை. அப்ப சுதன் ஐஞ்சாம் வகுப்பு. படிப்பு முக்கியம் அது தான் பிள்ளையைக் காப்பாத்தும். நம்மாலை ஆனதை நாம் செய்யவேணும்...." எண்டு நாளும் பொழுதும் புலம்பின அந்த சீவனுக்கு என்ன மாராயம் வந்ததோ தெரியேல்லை... வேலை முடிஞ்சு, கடையில் இருந்து வந்த மனிசன், ஹோலுக்கை வந்ததும் நெஞ்சுநோகுதெண்டவர், சரிஞ்சு விழுந்து எழும்பாமலே போயிட்டார்.

'இரத்த அழுத்தம்... ஹைப்ளட் பிறெசர்......'. பஸ்ற் அற்றாக். விழுந்தடிச்சு யாழ் கிளினிக்குக்குப் போயும் பலனில்லாமல் போச்சு. டொக்டர் வைகுந்தன் ஆள் முடிஞ்சு போனதை உறுதிப்படுத்தினார்.'

"என்னம்மா யோசனை....? உன்ரை முகத்தில சிரிப்பையே காணேல்லை..... எத்தின நாளாய் இப்படி..."

"எல்லாம் உன்ரை அப்பரைப் பற்றித்தான்...!"

"யோசனை வந்திட்டா எல்லாத்தையும் மறந்திடுற... முகம் கழுவீற்றுவாறன் தேத்தண்ணி போட்டுத்தா..."

"ம்" கூறியவள், மீளவும் ஏதோ சிந்தனையில் மிதந்தாள்.

'செய்தி கேட்ட உடனை ஓடிவந்தது செல்வம் தான். இவற்றை கடை முதலாளி சோமற்றை தலைச்சன். சோமரால எதுவும் இப்ப முடியாத தாலை, பொடியன் தான் எல்லாத்தையும் கவனிக்கிறான். பட்டணத்தில இரண்டு துணிக்கடை: இரண்டிலும் நல்ல வியாபாரம். மின்சார நிலைய வீதியில தான் கடையள் இருக்கு'

"தேத்தண்ணி ஊத்தியாச்சா....?

"எல்லாம் போட்டாச்சு... குசினியில இருக்கு, போய் எடுத்துக்குடி..."

சாவீட்டுச் செலவு மட்டுமல்ல... வீட்டுச் செலவு, தம்பி சுதன்ரை படிப்புச் செலவு எண்டு எல்லாத்தையும் செல்வம் தான் கவனித்துக் கொள்ளிறான். இதெல்லாம் வேண்டாமே எண்டு மனசு அடிச்சுக் கொண்டாலும் அது தன்பாட்டுக்கு நடக்குது. தடங்கல் ஏதும் சொல்லமுடியேல்லை... எல்லாமே மனசும் உடலும் சம்பந்தப்பட்ட விஷயமாய்ப் போச்சு...'

"என்ன சாப்பாடு..."

"விமலன்ரை கடையில பாணும் பட்டரும் வாங்கு...."

"சரி...."

"சாப்பிட்டிட்டு பள்ளிக்கு வெளிக்கிடு..."

"உங்களுக்கு என்னம்மா வந்திட்டது.... இன்டைக்கு ஞாயிற்றுக் கிழமை. பள்ளிக்கூடம் இருக்கா...? விசர்.....!"

வியப்புடன் கூறிய சுதன், அவளுக்குக் கிட்டவாக வந்து, அவளது காதோடு ஏதோ குசுகுசுத்தான்.

'ஆறுமாத காலமாக நடக்கிற கூத்து இது. இதை.... இந்தக் கூத்தை.... சுதன் அறிஞ்சிருப்பானா....? என்ரை பிள்ளைக்கு முன்னால எனக்கு இந்தத் தலைக்குனிவா...? ஆசைப்பட்டு மடியில கட்டின கதையா எல்லா இது இருக்குது.'

அவளது கள்ளப்பட்ட மனசு புரண்டு புரண்டு துடித்தது.

**அ**ன்று ஏதோ விரதநாள் வெள்ளிக் கிழமையா...? கார்த்திகையா? தோய்ந்து நீர் சொட்டச் சொட்டத் தலைமுடியை அலட்சியமாக அள்ளிச் சொருகியபடி, முன் கூடத்துக்கு வந்த சுபோதினிக்கு, செல்வம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் படி ஏறிவரும் போது, எடுத்து வைத்த ஒவ்வொருகாலடியும் மிக அழுத்தமாக ஒலித்தது. அந்தஒலி அவளுக்கு முன்பின் உணராத ஒரு பரவசத்தையும் திகிலையும் ஒரு சேரத்தந்தது.

'இது ஏன்...'? எனத் தன்னைத்தானே அவள் கேட்டுக் கொண்டாள்.

சாவீட்டுச் சந்தடியிலும் அதன் பின்னான செலவு, அந்திரெட்டி என்று எதிலுமே செல்வத்தைக் கண்டு கொள்ளாத அவள் - அன்று அவனை மிக நெருக்கத்தில் பார்த்தாள். அந்தப்பர்வை கூட, நேர்ப்பார்வை அல்ல - கள்ளத்தனமான ஓரப்பார்வைதான்.

'ஆள்இளந்தாரி.. என்னைவிட ஒரு ஐஞ்சாறு வயசாவது இளமையாயிருப்பான் போல..... பொலிகாளை மாதிரி ஒரு புருஷத்தனம் அகன்ற மயிர் அடர்ந்த மார்பு. நீண்ட, சற்று உள்வளைந்தகைகள், வெட்கம் கெட்டதனமாக மனதளவில் மாய்ந்து போய் நின்றவள் பார்த்துக் கோட்டாள்.

"என்ன.... என்ன விஷயமாய் வந்தது" என்று

"இந்த மாசக் காசு தரயில்ல.... அதுதான்...!"

"மூர்த்திமாமாட்டை கொடுத்திருக்கலாம்.....அது... அதுதான வழக்கம்"

"இல்ல.... உங்களைப் பார்க்க வேணும்... பார்த்து உங்களோடை கதைக்க வேணும் போல இருந்தது அது தான்.."

"பார்ப்பதா... பார்த்துப் பேசுவதா... இந்த அறுதலியிட்ட அப்படி என்ன இருக்குது....?"

பட்சமாக அவனைப் பார்த்த போதும் விரக்தியாகச் சிரித்தாள்.

"அப்படிச் சொல்லக் கூடாது லட்சுமி தேவி மாதிரி இருக்கிற உங்களைப் போய் ஆராவது அப்படிச் சொல்லேலுமா...!"

"இது பொய்...புளுகு...." முனகியவள் - அந்தத் திடகாத்திரமான ஆகிருதியை மீளவும் கண் அகலித்துப் பார்த்தாள்.'

அவள் அருகாக நகர்ந்த செல்வம் தனது சட்டை பையில் இருந்து, கத்தையாகப் பணத்தை எடுத்து அவளது கைகளில் திணித்தான்.

அந்த நெருக்கத்தில் அவனது மூச்சுக்காற்று அவளை அளைந்து விலகியது. 'சீ... இதென்ன...' என்று முகச் சுழிப்புடன் குலுங்கியவள், அடுத்த கணம் தனது மனதைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

ஆனாலும் அவளது கண்கள் பனித்துவிடுகின்றன. இது.... இதெல்லாம் இயல்பான உணர்வா..? அல்லது பாவனையா....படினமா....? அவளுக்கே அவளது நிலை புரிந்து கொள்ளமுடியாத ஒன்றாக இருந்தது. அந்த வேளையில், அவனது கசங்கிய தோற்றம் கூட அவனுக்கு - முகையுடைந்து புஷ்பித்த புதுமலர் போலத் தோன்றியது. திடீரென உணர்ச்சிவசப்பட்டவன் அவளைப் பற்றியே அதிகம் நினைத்துக் கொண்டான்:

'இந்த 'அப்சரஸ்' உடன் வாழ ஏன் அரசனுக்குக் கொடுத்து வைக்கேல்லை. இந்தச் செல்வத்தை, இவளது பூரித்த பரிமள விகசிப்பை ஆண்டு அனுபவிக்கிற பிராப்தம் ஏன்...ஏன் அவனுக்கு இல்லாமல் போனது. சுடரும் இந்தப் பேரழகு ஆளப்படாமல் குப்பையில் மணித்திரளாய் கொட்டிக்கிடக்கலாமா...?'

உணர்ச்சிகளோடு சமரிடமுடியாது தவித்த அவன் தன்னை மறந்தவனாய் அவளை நெங்கி, அவளது கன்னத்தில் படிந்து பளபளக்கும் நீர்த்திவலைகளை துடைத்தான். அதற்கு அவளிடம் இருந்து எது விதமான எதிர்வினையும் இல்லை என்பதைக் கண்டு கொண்டு, சற்றுத்துணிச்சலடைந்தவனாக அவளது பஞ்சு போன்ற நுனி விரல்களை ஸ்பரிசித்தான்.

அவனது அந்தத் துணிச்சல் அவளுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் கூச்சத்தையும் ஒரு சேரத்தந்தது.

" இவள் என்ன பெரிசா.... கையேந்திறவள் தானே எண்ட துணிச்சல் தானா வந்திட்டுது போல...."

இதுவும் பசப்பலா....? அவளது உள் மன உளைச்சல் சிரிப்பாய் உதிர்ந்தது.

"இல்ல...அப்படி இல்ல.... உதவிசெய்யிறதாலை இதை, இந்தச் சலுகையை நான் எடுக்கேல்லை. இயல்பா வந்திட்ட ஒருவிருப்பம் அவ்வளவுதான்!"

"......................."

மௌனம் சடைப்புக் கொள்ள, அவள் எதைப் பேசுவது எதை விடுவது என்று தெரியாமல் தவித்தாள். அந்த அழுத்தங்களில் இருந்து விடு பட அடுப்படிப்பக்கமாக நகர்ந்தாள். அவனுக்குத் தேநீர்தந்து உபசரித்தாள்.

"என்னத் தொடுற ஆசை ஏன் உனக்கு வந்தது. இது இது கலங்கல் நீரில...... சதுப்பு நிலத்தில....... காலை விட்ட கதையாய் எல்லா போயிடும். ஊர் மதிக்காது, உறவுகளும் மதிக்கமாட்டினம், புதுப்பெட்டை ஒருத்தியை பார் பார்த்து சடங்கு முடி..... அந்தச் சபலமெல்லாம் தன்னாலை காணாமல் போயிடும்...."

"இது...... இது சபலமில்லை. உண்மையான பிரியம். மனது சம்பந்தப்பட்ட விஷயம். பிடிச்சதை அடையிறதில் தவறில்லை. சந்தோஷம் தரும் இது ஒரு தவம் மாதிரி....! பாவமாகக் கூடப் பார்க்கேல்லை. ஆழ்ந்த அன்புக்கு பாவம் அது இது எண்டு எதும் இல்லை"

"இது கொஞ்சம் அதிகமா... உனக்குத் தெரியேல்லையா.....?

"இல்ல...... அதோடை நான் ஒண்டும் அவசரப்படேல்லை. யோசிக்க நேரம்தாறன்.... நிதானமா யோசிச்சு நல்ல முடிவாச் சொல்லுங்க.... உங்கடை விருப்பமில்லாமல் எதுவும் நடக்காது."

அவன் சாதுரியமாகப் பேசுவது போலவே அவளுக்குத் தோன்றியது. அவனது பேச்சில் இருந்த தெளிவும் தீர்க்கமும் அவளுக்குப் பிடித்திருந்தது.

அவன் மெல்லிய சிரிப்புடன் படி இறங்கி நடந்தான். அவன் விடைபெற்றுப் போன பின்னரும் அவள் அவனையே நினைத்தபடி இருந்தாள். அந்த நினைவும் அதனடியான சுகமும் அப்பொழுது அவளுக்கு மிகவும் தேவையாக இருந்தது.

இப்பொழுதெல்லாம் கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று தடவையாவது சுபோதினியைப் பார்ப்பதற்கு அவன் வந்து போகிறான். அவன் அவளைச் சந்திக்கும் அந்தச் சமயங்களில் அவளது சுகநலம் பற்றி விசாரிப்பதும், அவளது மகன் சுதனது படிப்புபற்றிக் கேட்பதுமாக அவனது காலம் கரைகிறது.

அவளுடன் பேசுவது மட்டுமே அவனுக்குப் போதுமானதாக இருந்தது. அவளை நெருங்கி ஸ்பரிசிப்பதையோ அல்லது தழுவுவதையோ, சமயம் கிடைத்தால் அவளுடன் முயங்குவதையோ அவன் தவிர்த்துவந்தான். இது விஷயத்தில் அவசரம் எதுவும் வேண்டாம் நிதானமாக நடந்து கொண்டாலே போதுமென்றிருந்தது அவனுக்கு.

ஆனால் சுபோதினியின் மனோநிலை அவனது மன நிலைக்கு எதிரிடையாகவே இருந்தது.

'பிரியமிருந்தால் சொல்லலாமே..! தொட்டுப் பார்க்கலாமே..! ஒரு கனிவான முத்தங் கூடவா தரக்கூடாது...'

தேன்பிலிற்றும் நினைவுகள் அவளுக்கு. அதே சமயம்: 'செல்வத்தை நம்பலாமா....., அவனது வார்த்தைகள் பொய் கலந்தவை அல்ல, சத்தியமானவையாகவே தெரிகின்றன.... அவனது கண்களில் இருந்து பரவி வரும் ஒளி கூட நிரம்பிய உண்மையை உமிழ்வதாகவே தெரிகிறது.' நினைவுகளில் நனைந்த சுபோதினிக்கு அவனது இசைவும் ரட்சிப்பும் சாரலுடனான மழைப் பொழிவாகவே வந்து சேர்ந்தது.

அன்று முன் இரவு நேரம். சுதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். முற்றத்துக்கு வந்த சுபோதினி ஸ்தம்பித்து நின்றாள். முன்னால் உயிர்ச்சுடராய் செல்வம்! அந்த நேரத்தில் அவனை அவள் அங்கு எதிர்பார்வில்லை. ஒருவித வேகத்துடன் அவளை நெருங்கி வந்த அவன், அவளை ஆரத்தழுவினான்.

நா உலர உடல் பதறியவள் "என்ன....என்ன இது".... என்று விலகி நின்றாள்.

"எதிர் பாராதவேளை எதிர்பாராதவை" என்று சிரித்தபடி கூறியவன். அவளை இழுத்து வைத்து முத்தமிட்டான் பூவருடலாய் ஆரம்பித்த முத்தம் சற்று அழுத்தம் பெற்ற போது அவள் பரவசம் கொண்டு தழுதழுத்த குரலில் ஏதோ சொல்லி முனகினாள்.

பக்கத்தில் இருந்த வாழைப்புதர்வரை சரசரவென இருவரும் இழுபட்டார்கள். பின்இரவு வரை அவர்கள் இருவரும் அங்கேயே இருந்தார்கள்.

தடைபட்ட காமத்தின் விச்சையும் விரியத்தையும் அவளிடம் அவன் அன்று கண்டான். ஓர் உண்மையான ஆண் மகனின் அன்பையும் அரவணைப்பையும் இசைவையும் கண்டு கொண்ட அவள் அவனிடத்தில் தன்னை முழுமையாகத்தந்தாள்.

கல்வியின் உச்சத்தைத் தொட்டதும் துடிதுடித்தவள் "இது..... இது இறைவனைத் தொடும் புள்ளி.... பிரணவ ஸ்திதியின் பேரதிர்வு" என்று வீறிட்டாள்.

"இறைவனா.... பிரணவமா..... ? என்ன உளறல் இது. எனக்கு ஒண்டும் விளங்கேல்லை. ஆனால் ஒண்டு மட்டும் தெளிவாத்தெரியுது: அது....அது உனது ஆழமான அன்பும் அமுத உடலும் அதன் பிரபையும் தான். உனக்குப் பின்னால் பைத்தியம் மாதிரி நான் அலையிறதுக்கு இவை.... இவை மட்டும்தான் காரணம்."

அவளை அவன் ஒருமையில் விழித்தது அவளுக்குப் பிடித்திருந்தது. அவர்களது அந்த அதிரச இணைவு அன்று பின் இரவுவரை நீடித்தது. சுவைததும்பக் கிறங்கிக் கிடந்த அவ்விருவரும் அதிகாலையில் உசாரானார்கள். ஆடைகளைச் சரிசெய்து கொண்டு அவள் எழுந்த போது, அவனும் எழுந்து, அவளிடம் விடை பெற்றுக் கொண்டான்.

அன்று விடைபெற்றுக் கொள்வதற்கு முன்னதாக அவ்விருவரும் பின் இரவு நேரங்களில் - சுதன் உறங்கிய பின்னர் அவளது வீட்டில் சந்தித்துக் கொள்வதென தீர்மானித்துக் கொண்டார்கள். அதற்கு அமைவாக அவளது வீட்டுக் கதவு, இரவு வேளைகளில் எப்பொழுதும் திறந்தபடியே கிடந்தது.

தொடர்ந்து வந்த இரவுகளில் அவர்களிடையேயான அந்தத் திறப்பும் திளைப்பும் கட்டற்றுக்கரை புரண்டது ஏதோ முற்றிலும் உண்மையானதுதான்.

•••

"**அம்மா....!** செல்வம் மாமா மாதிரி ஆரோ மேற்கு ஜன்னல் ஓரமாய் - நடுச்சாமத்தில் - நிண்டமாதிரி இருந்தது. எழுந்து ஜன்னல் பக்கம் போனன் ஆளைக் காணேல்லை. பின்பக்கமாப் போய்ப் பார்த்தன், கதவு திறந்திருந்தது" இரண்டு கிழமைக்கு முன்னர், சுதன் சுபோதினியிடம் காதோடு காதாகச் சொன்னது இவைதான். திருக்கிட்டுப் போன சுபோதினி: 'இதுமட்டுமா.... இன்னும்.... இன்னும் எத்தனையே நடந்தே..... நடந்த எல்லாவற்றையும் இவன் பார்த்திருப்பானோ? பார்த்து....!'

சீலை நழுவிய தான வெக்கம் திடீரென அவளில் வந்து அப்பிக் கொண்டது.
இப்பொழுதெல்லாம் சுதனது பார்வை என்றுமில்லாத விதத்தில். கூர்மை கொண்டுவிட்டது போலவும் அவளது மனதின் உள் இரகசியங்கள் அனைத்தையும் துளாவித்துளாவி அறிந்து கொள்ளத் துடிப்பது போலவும் அதற்காக அவளைக் குடைந்து குதறி எடுத்து விடுவது போலவும் இருந்தது.
அவனது அந்தச் செயல் அவளுக்கு அப்பொழுது மிகுந்த மிரட்சியைத் தந்தது. அவனை நேருக்குநேர் பார்ப்பதற்கும் கதைப்பதற்கும் கூடத் திராணி ஏதும் அற்றவளாய் அவள் மனச்சோர்வுடன் தவித்தாள்.

ஒரு சமயம் அவன், அவளைப் பார்த்துச்சற்றுக் குரலுயர்த்திச் சொன்னான்.
"உந்த ஊத்தைச் செல்வத்தின்ரை சங்காத்தமே இனி எங்களுக்கு வேண்டாம். அவன் இஞ்சை ... நம்ம வீட்டுப்பக்கம் வரக்கூடாது. வந்தால் நான் முகம் பார்த்துக் கதைக்கமாட்டன். அவனை என்ரை செருப்பாலதான் ஆலாத்தி எடுப்பன்"

ஏகவசனத்தில் அவனைச் சுதன் தூற்றியவிதமும் அவனது குரலில் அப்பொழுது இருந்த குரோதமும் அவளை அதிகம் நெருடியது. அதே சமயம் அவனது நடத்தை, சுபாவம் எல்லாம் அவளது கணவன் அரசனை அவளுக்கு ஞாபகப்படுத்தியது.

என்ரை மனிசன் நல்லமாதிரித்தான். என்னையும் என்ரை பிள்ளையையும் வயிறு காயவிடாமல் பார்த்துக் கொண்டவர். ஆனால் சடங்கு செய்த இரண்டொரு வருஷத்தில என்னைத் தொட்டுப் பார்க்கிற எண்ணத்தையே விட்டிட்டார். இதுக்கு அவற்றை நோஞ்சான்தனமான உடம்பும் தொடர்பிணியும் காரணமாய் இருந்திருக்குமோ....? வெக்கத்தை விட்டுச் சொல்லிற தெண்டால் அவரோட நான் அனுபவிச்சதெல்லாம் பச்சைத் தண்ணித்தனமான ரசபேதம் ஏதுமில்லாத செக்ஸ்தான்!'

இருந்தாலும், அவரிட்டை ஆம்பிளை எண்ட மிடுக்கு மட்டும் குறையாமல் இருந்தது. எந்த ஒரு இளந்தாரியும் வீட்டுப்பக்கம் தலைகாட்டேலாது. தலைகாட்டினால் சந்தேகமான ஒரு பார்வை - அவனோடு நான் சோரம் போயிடுவனோ எண்ட பதட்டம் பதகளிப்பு எண்டு எல்லாமே அவரிட்ட வந்திடும்.'
'இந்தமாதிரி என்ரை பிள்ளை வந்திடக்கூடாது. ஆனால் அவனது முரட்டுத்தனமும் அதிகார மிடுக்கும் அச்சொட்டாக அவரிட்ட இருந்தது போலத்தான் இருக்குது.

'என்ரை அரசனோடு பார்க்கையில் இவன் இந்தச் செல்வம் எவ்வளவு வித்தியாசமானவன். ஒரு ஆணின் தன்முனைப்போ, கர்வமோ, ஆணுக்கே உரித்தான - பெண்சார்ந்த ஐயுறவுகளோ இல்லாமல் நடந்து கொள்கிறானே. கையடக்கமானவள், உடைமைப்பட்ட ஜென்மம் என்று என்னை கருதாத இவன், ஒரு அசல் ஆம்பிளை! இது.... இதெல்லாம் தான் இவனை உச்சத்துக்கு உயர்த்தி வைத்திருக்கிறதோ...!இது மட்டுமா.....

வாழ்வில் அனுபவித்திராத ஒரு பகுதியை பட்டெனத் திறந்துகாட்டி மலரச்சியடைய வைத்தவன்

இவன்.....இவன் மட்டும்தானே...'
இவனை.... இவனைப் பற்றியெல்லாமா என் பிள்ளைக்குக் கூறமுடியும். அல்லது விளக்கம் தரமுடியும்...!

மனம்குமைந்து பரிதவித்தவள், தீர்மானமான முடிவுகளை நோக்கி நகர்ந்தாள்.
செல்வத்தை ஒரு முறையேனும் சந்திக்க வேணும் சந்தித்துக் கதைக்கவேணும் என்ற ஆவலில் அவனுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு, அவனை இறுதியாகச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டாள். அதற்கு அமைவாக சுதன் பாடசாலைக்குப் போன பின்னர் - வாழைத் தோட்ட பக்கமாகச் செல்வம் வந்தான். வாழைப்புதர்களின் மறைவில், அடர்ந்த இருளில் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

அவன் அருகாக வந்தவள் அவனை அன்புடன் நிமிர்ந்து பார்த்தாள். அவனைப் பார்த்தவுடன், அவன் மீது கொண்ட பரிவும் அத்துடன் அவனது துணிவும் அதனடியான நடத்தைகளும் மீளவும் அவளது ஞாபகத்துக்கு வந்தன.
சற்றுப் பெருமித உணர்வுடன் அவனைப் பார்த்து அவள் சொன்னாள்:

"செல்வம் இந்தச் சனங்கள் எத்தனை கால்கட்டுக்களையும், தடைகளையும் போட்டு எங்களை எதையும் செய்யவிடாமல், தடுத்தபடி இருக்குதுகள். இதையெல்லாம் - கொஞ்சமும் வளைஞ்சு கொடுக்காமல் நிண்டு என்னால மீறமுடிஞ்சிருக்குது. நீ தந்த தெம்புதான் இதைச் சாத்தியமாக்கியிருக்குது. என்னைப் பொறுத்தவரையில, எங்கட இந்த உறவு துணிச்சலானது மட்டுமில்ல, கொஞ்சம் வீம்பானதும் கூடத்தான். நாங்கள் விரும்பாத - சனங்கள் கட்டுப்படுத்தின இந்த விஷயங்களை நம்ம காலடியில் கிடத்திப் பார்க்கிறதில கொஞ்சம் சந்தோஷம் இருக்கு... நாம தெரிஞ்சே செய்கிற இந்த மீறல்கள் எனக்குப்பிடிச்சிருக்கு"
"............................
"என்ன மௌனம்"
"தூர்த்தை, அவிசாரி எண்டபெயர் நிலைச்சிடுமே எண்ட பயம் கூட இல்லாத எனக்கு, மகன் சுதன்ரை ஞாபகம் வாறபோதுதான் நம்ம இந்த உறவு தந்த பெருமையும் பெருமிதமும் சரிஞ்சு தரைமட்டமாகி விடுவது தெரிகிறது."

கலக்கமுற்றுத் தவித்தவள், தொடர்ந்து கதைத்தாள்:

"ஆருக்கு இல்லையெண்டாலும் என்ரை பிள்ளைக்காக இதை இதையொல்லாம் நான் விட்டிட வேணும்...... முழுசாவிட்டிட விரும்பிறன்."
இறுகிக் கிடந்த அவளது முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பி செல்வம் கேட்டான்:
"அப்ப.... அப்ப இது ஒருவகையில விட்டுக்கொடுப்பும் அனுசரிப்புமா?....... இல்லைச் சரணாகதியா...,"
"ஏன் சரணாகதி அது இதெண்டு பெரியவார்த்தைகளைக் கொட்டிற.... எது.... சரி... எது பிழை எண்டு பார்க்கிற, தீர்மானிக்கிற விஷயமிது.

நாம இருவரும் வாழ்ந்த வாழ்க்கையை கொச்சையாப் பார்க்க எனக்குத் தெரியாது. ஆனால், எல்லாத்தையுமே போதும் போதும் என்ற அளவுக்குப் பாத்தாச்சு.... இதுக்கு மேலயும் ஏதும் வேணுமா?" நீ இதை விளங்கிக் கொள்ள வேணும். விளங்கிக் கொண்டால் போதும்."

"சரி..சரி நீங்க கதைக்கிறதெல்லாம் நல்லா விளங்குது", அழுத்தமாகப் பதில் தந்தவன் தொடர்ந்து பேசினான்.

"உங்க கதையைப் பார்த்தா எங்களுக்கு இடையில எல்லாமே முடிஞ்சுபோன மாதிரி இருக்கு. இந்த வாழ்க்கை இதன் சோபிதங்கள் நாம இணைந்து பெற்ற அனுபவங்கள் என்று எல்லாமே ஒரு முடிவுக்கு வந்துபோல இருக்கு.."

"ஓம்ஓம்.....நீ சொல்லிறது முற்றிலும் சரி.... அரைகுறையா லோலப்பட்டுக் கிடந்த என்னை, என்ரை வாழ்க்கையை முழுமைப் படுத்தியவன் நீதான். நன்றி செல்வம் எல்லாத்துக்கும் நன்றி.... இன்னொரு விஷயம்: மாதாமாதம் நீ தாற காசு கூட இனி எங்களுக்கு வேண்டாம். எங்களுக்கெண்டு ஒரு வழி இல்லாமலா போயிடும்..... இறைவன் ஏதாவது வழிவிடுவான்...."
"சுதன் - தன்ரை படிப்பைக் குழப்பாமல் - சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மூர்த்தி மாமான்ரை பார்ம ஸியில சேர்ந்து வேலை செய்யப் போறான் நானும் சரஸ்வதியில வசதிக்கட்டணத்தில் படிப்பிக்கப் போறன். வாழைத்தோட்டத்தையும் திருத்திற எண்ணமிருக்கு..."

நெருங்கி வந்த செல்வம் - இறுகிக்கிடந்த அவளது முகத்தைக் கைகளில் ஏந்தினான். அப்பொழுது அவளது கண்களில் இருந்த தீட்சண்யமான பார்வை அவனை நிலை குலையவைத்தது. அத்துடன் அவளது தீர்மானமான முடிவை உணர்த்துவதாயும் இருந்தது. உணர்ச்சி வசப்பட்டவன் திடீரென அவளிடம் இருந்து விலகி, விடை பெற்றுக் கொண்டான்.

அவன் விடைபெற்று, தூரத்தில் ஒரு கரும்புள்ளி போலப் போவதையே பார்த்தபடி நின்றவள் மிகுந்த துயரத்துடன்,அவனது நினைவுகள் தோய, தன்வழி நடந்து, வீட்டுப்பக்கமாகப் போனாள். அவளது நடையில் அளவிட முடியாத தளர்ச்சியிருந்தது. காலம் இந்தத் தளர்ச்சியையும் துயரத்தையும் போக்கும் என அவள் முழுமையாக நம்பினாள்.

***

மூ.பொ

# கூடுவிட்டுக் கூடு பாய்தல்



ஓவியம் - பிரமிள்

புகுந்தன கால்கள் வேறொருவர் செருப்புள்.
இடறின எதுவோ,
ஆயினும் போகிற அவசரம்
உணர்வின் அருட்டலை உதறியவாறு
பஸ்ஸில் ஏறிற்று
பஸ் ஓடிக்கொண்டிருந்தது,
"ஓய் பொன்னரே!"
யாரோ என்னை அழைப்பது கேட்டது
யாரது? யாரது?
பின்னால் முன்னால் எவருமே இல்லை!
பஸ் ஓடிக்கொண்டிருந்தது
மீண்டும் அதே குரல்
"ஓய் பொன்னரே!"
யாரது? யாரது?
கீழே இருந்தே அக்குரல் வந்தது!
ஓ, இப்போ புரிந்தது.
கீழே இருந்தென் செருப்புகளே பேசின!
"சரி, சொல்லப்பா என்ன விஷயம் எதற்காய் அழைக்கிறாய்?"
"நீ கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கிறீர் என்பது தெரியுமா?"
என் சோடிச் செருப்புக்கள் கேட்டன.
"என்ன சொல்கிறீர்?"
"இன்னுமா புரியவில்லை நான் வேறொருவர் செருப்பு!
எனக்குள் எப்படி உன்கால்கள் புகுந்தன?"
உச்சியில் அறைந்தாற்போல் எல்லாம் புரிந்தன.
இதுவும் ஒரு கூடுவிட்டுக் கூடு பாய்தல்தான்!
இதுகாலவரை நீ சேகரித்த நல்லதோ கெட்டதோ
இதுகாலவரை செருப்புக்குரியவர் சேகரித்த நல்லதோ கெட்டதோ
ஓர் கணப்பொழுதில் இடம் மாறிக் கொண்டன!
"எவருடைய சேகரம் வலுவுடையதோ
அது இவர்களில் விடியலாம்.
அதன் விளைவுகளை எதிர் கொள்ள
இவர்கள் தயாராகட்டும்.," செருப்பு கூறிற்று

அந்தக் கவிதையைப் படித்ததும் செந்திலுக்கு அவன்பாட்டி கூறிய எத்தனையோ கதைகள் அவன் முன் எழுந்தாடின. அத்தோடு அவன் வாசித்தவை வேறு மூக்கை நுழைத்தன.

கூடுவிட்டுக் கூடு பாய்தல்! அதில் எத்தனை ரகங்கள்!

ஒருவனுக்குள் இன்னொருவன் தன் எண்ணங்களை - அது நல்லதாகவும் இருக்கலாம் கெட்டதாகவும் இருக்கலாம் - திணித்துவிடுதல்

என்பதும் கூடுவிட்டுக் கூடு பாய்தல்தான். நல்ல எண்ணங்களாயின் திணிக்கப்பட்டவனுக்கு நல்லது நடக்கும். கெட்டதாயின் கெட்டது நடக்கும்.
சில உளவியலாளர்கள் மனோவசியம் (hypnotize) பண்ணுவதும் கூடுவிட்டுக் கூடுபாய்தலின் ஒரு ரகந்தான் ஆனால் அது ஆழமற்றது, மேலோட்டமானது. அதனால் மனோவசியம் பண்ணப்பட்டவன் தனக்குள் திணிக்கப்பட்டதில் என்றும் நிலையாக இருப்பதில்லை, மாறிவிடக் கூடும்.

மூன்றாவது, இரவில் தூங்கும்போது சிலரின் சூக்கும உடல் ஸ்தூல உடலைவிட்டு வெளியே சஞ்சரிக்கும் போது, வேறொருவரின் சூக்கும உடல் அதற்குள் புகவாய்ப்புண்டு. ஆனால் இது ஒரு கடினமான செயற்பாடு. எப்பொழுதும் ஒருவரின் சூக்கும உடல் அதன் ஸ்தூல உடலைவிட்டு வெளியேறும் போது அது கண்ணுக்குப் புலனாகாத ஒரு வெள்ளி நாடாவால் பிணிக்கப்பட்டே இருக்கும். ஆகவே அதற்குச் சின்ன நெருக்கடி ஏற்படும் போதும் அது தன்னைச் சுதாரித்துக் கொண்டு தன் சொந்த ஸ்தூல உடலுக்குள் புகுந்து தற்காத்துக்கொள்ளும். இதை மீறி அதை வெளியேற்றி வேறொருவனின் சூக்கும உடல் அதற்குள் புகவேண்டுமானால் அது ஒரு ஆற்றல் பெற்ற சித்தனால்தான் செய்ய முடியும். இதுதான் கூடுவிட்டு கூடுபாய்தல் proper என்று சொல்லலாம்.
செந்தில் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

இவ்வாறான சிந்தனைகளின் போது அவனது விஞ்ஞான அறிவு வந்து அவனது தோளில் கைபோட்டவாறு சிரிக்கும். ஆனால் அதற்கு எடுபட்ட காலம் போய்விட்டது. அதை உறுதிப்படுத்துவது போலவே அவன் சிரிப்பு இருந்தது.

நமது ஸ்தூல உடம்புக்குள் அதே போன்று இன்னொர் உடம்பு - சூக்கும உடம்பு - இருப்பதாக பாட்டி சொன்னதை அவன் ஆரம்பத்தில் நம்பவில்லை. ஆனால் ஆழ்நிலை உளவியலாளர்கள் (Parapsychologist) இது பற்றிய ஆய்வில் ஈடுபட்டு, ஓர் எலியைப் பிடித்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாக சாக வைத்தபோது, அதன் உடலைவிட்டு எலிவடிவினதான இன்னொரு உடம்பு வெண்ணிறவடிவில் வெளியேறுவதை நுண்கருவிகளால் கண்டு வியந்தனர்.

செந்திலுக்கு இப்பிரபஞ்சமே அற்புதமாக வரிந்து கொண்டிருந்தது. கண்ணுக்குத் தெரியாத சிற்றுயிர்களுக்கும் கண்ணுக்கு அடங்காத பேருயிர்களுக்கும் சூக்கும உடம்பு வேறு! இல்லை, உயிர்களுக்கு மட்டுமல்ல, இந்தப்பிரபஞ்சம் உட்பட்ட எல்லா சடப்பொருட்களுக்கும் இன்னொர் சூக்கும உடம்பு இருப்பதாக ஞானிகள் கூறுயுள்ளனர். இவற்றின் திணிவில் கும்பகமாகி உருண்டுகொண்டிருக்கும் பிரபஞ்சம்.........
செந்தில் மீண்டும் சிரித்தான்
அவனை ஆனந்தம் அள்ளிற்று

இவன் அம்மாவின் ஒரே மகன். ஆனால் இவன் பிறந்ததுமே அவன் அம்மா இறந்துபோனார். இவனை வளர்த்த பாட்டி இவனைத் "தாயைத்தின்னி" என்று இடைக்கிடை பகிடி பண்ணுவாள். அதனால் செந்தில் பாட்டியைத்தான் "அம்மா" என்று அழைப்பான். பாட்டியினால் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த அவன்முன் அவள் கூறிய கதைகள் பல ஒன்றோடுடொன்று மோதிச் சிலுர்த்தன. பாட்டி சிறுமியாக இருந்தபோது அவள், தான் யாழ்ப்பாண கடையிற் சுவாமியால் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று அடிக்கடி சொல்லுவாள். கடையிற்சுவாமி பற்றி அவள் கூறிய கதைகளால் செந்திலின் சிறுபராயம் நிரம்பியிருந்தது. அவன் அவற்றை வாயவிழக் கேட்டுக்கொண்டிருந்ததும் இன்று போல். அவன் நினைவில் எழுந்தது.

பாட்டி தான் ஆறு அல்லது ஏழுவயதுச் சிறுமியாக இருந்தபோது ஏற்பட்ட அனுபவத்தை ஒருநாள் விபரித்தாள், அது ஒரு பூர்வீகப் புதையல். அவள் வீட்டுக்கு கடையிற் சுவாமியும் அவரது சீடர்கூட்டமும் வருவது வழக்கம். அவர் அங்கு வரும்போது அவள் தலையில் கை வைத்து ஆசீர்வதிப்பதும் அவளோடு செல்லங்கொட்டுவதும் அவரது இன்னொரு வழக்கம். சுவாமி அங்கு வரும் சமயங்களில் அவருக்கும் அவர் சீடர்களுக்கும் சாப்பாடு தடபுடலாகத் தயாராகும். இவளது தாயார் சாப்பாடு தயாரானதும் சுவாமியாருக்கு சொல்லும்படி மகளை ஏவுவாள். அவள் சொன்னதும் சுவாமியார் வந்து எல்லாக்கறிகளையும் சோற்றையும் ஒரு பாத்திரத்துக்குள்போட்டு குழையல் செய்வார். பின்னர் ஒவ்வொருவரையும் கைகளை நீட்டும்படி கூறி அவற்றில் ஒரு குழையல் இடுவார். வீட்டில் உள்ளவர்களையும் உள்ளடக்கி தன்னோடு வரும் ஆறு அல்லது ஏழு சீடர்களையும் சேர்த்து இது இனிதே நடைபெறும். ஈற்றில் எஞ்சிய ஒரு பிடியை சுவாமியார் தன் வாய்க்குள் போட்டுக் கொள்வார். அதன்பின்னர் அவர் கையைப்பார்த்தால் சோற்றின் ஒரு பருக்கையைக் கூடத் தொடாத கைபோல் சுத்தமாய் பளிரிடும்!

இன்னொரு நினைவுப்பொறி அவன் முன் பறந்தது. பாட்டி இன்னொரு கதையைச் சொன்னாள்

ஒரு நாள் சாமியாரும் சீடர்களும் சாப்பாடு முடிந்து கோடிப்புறமாய் இருந்த விறாந்தையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இவன் பாட்டி துருதுருத்த வயதுச் சிறுமி. கோடிவிறாந்தையில்

அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று நோட்டம் விடும் ஆவலில் அப்பக்கம் போயிருக்கிறாள். சுவாமியாரை அவள் கண்கள் தேடியபோது அங்கே அவர் கால் வேறு கைவேறு தலைவேறாய் கிடப்பதை கண்டாள். அந்தக்காட்சியைக் கண்டாளோ இல்லையோ "அம்மா" என்று பெரிதாகக் கத்திய குரல் கூட வெளி வராத பீதியால் அறையுண்டவளாய் தாயாரிடம் ஓடினாள்.

தாயாரிடம் அவள் கண்டதை விக்கி விக்கி வார்த்தை வராது சொன்னபோது தாயார் தனக்குள் முகிழ்த்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, "பொல்லாத சாமியார் அவர், அவர்களைக் கேட்காமல் அங்கபோகக் கூடாது தெரியுமா? உன்னைப்பயமுறுத்தத்தான் அவர் அப்படிச் செய்திருக்கவேணும்" என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

இதைப்பாட்டி சொல்லக் கேட்ட செந்தில் "அம்மா, நீ உண்மையாகவே சுவாமியார் கால்வேறு கைவேறு தலை வேறாய்க் கிடந்ததைக் கண்டாயா?" என்று கேட்டான்.

"நான் ஏன் பொய்சொல்லிறன்?" என்றவள் "உண்மையாகவே அவர் அப்படித்தான் கிடந்தார்" என்று கூறிவிட்டு நெஞ்சில் கைகூப்பி அவரை நினைத்தாள் போலும். கண்களில் கண்ணீர் மல்கிற்று

ஆரம்பத்தில் அவன் பாட்டி இந்தக் கதைகளைச் சொன்னபோது அவன் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தான்.

இடையில் புகுந்த விஞ்ஞானப் பட்டப்படிப்பு, ஆசிரியப்பதவி, பாட்டியின் கதைகளைத் தூரத்தள்ளி வைத்தன. ஆரம்பத்தில் அவன் பாட்டி இந்தக் கர்மம் கடவுள் பாவம் புண்ணியம் பற்றிய கண்ணுக்குத்தெரியாத விஷயங்கள் பற்றி கதைத்தபோது அவன் மனம் ஊசலாடியது உண்மை. நம்புவதா? நம்பாமல் விடுவதா? என்ற ஊசலாட்டம். கண்ணுக்குத்தெரியும் விடயங்களே ஆளுக்காள் வேறுபட்டுக்காட்சி தந்து நழுவிக்கொண்டோடும் போது, பாட்டி சொல்லும் நிருபணத்துக்கு அப்பால்பட்ட விடயங்களுக்கு ஆதாரம் என்ன என்று அவன் ஒருநாள் தனக்குள் வாதிட்டுக் கொண்டிருந்த போது, அங்கே அவனுக்கு தேநீர் கொண்டு வந்த பாட்டி "எல்லாத்துக்கும் அதன் அதன் போக்கில் அதற்குரிய வழியுண்டு, மோனை" என்றாள் திடீரென்று.

அந்த அதிர்ச்சியைத்தாங்க முடியாது அவன் தொண்டை மிறடு மேலும் கீழும் ஏறி இறங்கிற்று. எவ்வாறு பாட்டியம்மா என் நினைவுகளுக்குள் புகுந்து வருகிறார்.?

இதன் பிறகு மீண்டும் அவன் பாட்டியின் காலடியில். இப்போ பாட்டி சொல்வதையும் இலகுவில் ஒதுக்கி விட முடியாதென்ற தீர்மானம் பூர்வீகப் புதையலாக உள்ளிருந்து இனிக்கும்.

அந்தப் பூர்வீக புதையலைத்தேடி அவன் இடைக்கிடை இறங்குவதில் ஓர் இன்பம்.

முன்னொரு நாள் அவன் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது பாட்டி சமையலறையில் அலுவலாய் இருந்தாள்.

இவனுக்குப் பசித்தது. அதற்கேற்றவாறு சாப்பாட்டு மேசையில் வெள்ளித்தட்டில் மூடப்பட்டிருந்த மோதகங்கள் அவன் கண்களில் பட்டன. மூடப்பட்டிருந்த தட்டை அவன் எடுத்த போது அது தவறுண்டு கீழே விழுந்து "கிர் கிர்" என்று சுழன்றது. அதையும் பொருட்படுத்தாது அவன் மோதகம் ஒன்றை எடுத்து வாய்க்குள் கொண்டு போனபோது வேகமாக வந்த பாட்டியம்மா அதைத்தட்டிவிட்டாள். அவன் திகைத்துப்போய் அவளைப்பார்த்தபோது "உன்னை ஆரு எடுத்து அதைச் தின்னச் சொன்னது?" என்றவள் "அதைச் சாப்பிட முன்னர் என்னைக் கேட்டிருக்க வேணும்" என்றாள் கடுந்தொனியில்.

"ஏனம்மா?" என்றான் பணிவாக

"இது எங்கே இருந்து வந்ததென்று உனக்குத் தெரியுமா?"

"ஓ தெரியுமே முன் வீட்டு அன்ரிதான் அனுப்பி இருப்பா, இல்லையா?"

"இந்த அன்ரியும் அங்கிளும் செய்த அநியாயத்தை கேள்விப்பட்டாயா?"

"இல்லை அம்மா என்ன செய்தவை?"

"அவங்கட முன் காணியில கொட்டில் போட்டிருந்த அகதிகளை குடியெழுப்பி கலைச்சுப் போட்டினம். பாவம் அதுகள் றோட்டு றோட்டா அலைஞ்சு திரியுதுகள், பெருங்கர்மம்"

"ஏனம்மா அப்படிச் செய்தவை?"

"இப்ப வேறு ஆக்களிட்ட காசு வாங்கி கொண்டு கொட்டில் போட இடங்குடுத்திருக்கினம் அவைக்கென்ன காசு வாங்கிறதும் வட்டிக்கு குடுக்கிறதும் தானே வேலை. இந்த காலத்தில் இப்படிச் செய்கிறதெல்லாம் பெருங்கர்மம் இந்தக்கர்மியளிட்ட இருந்து வாற எதையும் சாப்பிடக்கூடாது. அவங்களின் கர்மம் எங்களைத் தான் அதிகம் பாதிக்கும்"

"ஏன் அப்படி?"

"யாரிடம் நல்லது கெட்டது பற்றிய உணர்வும் தெளிவும் அதிகமாக இருக்கோ அவர்கள்தான் இந்த கெட்டவர்களின் சகவாசத்தை தவிர்த்து கொள்ளவேணும். இல்லையெண்டா அவர்கள் தான் பெரிதாக பாதிக்கப்படுவர் அதனால் கவனமாக இருக்க வேணும். பெரிய வீடுகளிலும் பணக்கார

வீடுகளிலும் சாப்பிடுவதை விட ஏழை எளியதுகளிடம் சாப்பிடுவதிலும் பழகுவதிலும் எந்த விக்கினமும் இல்லை” என்று கூறியவள் “அந்த மோதகங்களை எடுத்து நாய்க்கு போடு” என்றாள்.
“நம்ப நாய் பாவம் அம்மா. அதுக்கு மட்டும் கர்மம் பிடிக்காதோ?” என்று பகிடியாகக் கேட்டுவிட்டு சிரித்தான் செந்தில்
“பகிடியை விட்டிட்டு நீ அதை எடுத்து நாய்க்கு போடு! அது சாப்பிட்டாவது முன்வீட்டு அன்ரியின் கர்மம் கொஞ்சமாவது குறையட்டும்” என்று கூறிய பாட்டி, அவன் செய்யும் வரை காத்திராது மோதகங்களை எடுத்து நாய்க்கு போட்டாள். இடையில் எங்கிருந்தோ வந்த காகங்களும் சிலவற்றை கோலிக் கொண்டு பறந்தன.

•••

செந்தில்முன் இன்னுஞ் சில நினைவுகள் மிதந்தன. அவன் முன்னர் சில பணக்கார வீடுகளுக்கு ரியுஷன் சொல்லிக் கொடுக்கப் போன போது அங்கே நிலவிய இருண்ட மனங்களின் இறுக்கம் அவனை மூச்சு விட முடியாதபடி ஓட ஓடத் துரத்தியதால் அவன் அதன் பின் அங்கே போவதையே நிறுத்தியிருக்கிறான். சில சிறிய இடங்களுக்கு போன போது அங்கே காற்றோட்டம் குறைவாக இருந்தாலும் திறந்திருந்த மன வெளியால் அவன் ஆனந்தப்பட்டிருக்கிறான்.

இதனோடு இன்னொரு வேடிக்கையும் நடந்தது. இவனைப் போல் இவன் நண்பன் சிவாவும் ரியூஷன் சொல்லிக் கொடுக்கப் போய்தான் மாலினி ரீச்சரோடு தன்னை இணைத்துக்கொண்டான். ரீச்சரின் தங்கைக்கு பாடம் செல்லி கொடுக்கப்போய் ரீச்சரையே தன் ஆளுகைக்கு உட்படுத்தினான். அது காதல் நாடகமாக அரங்கேறியது. ஆனால் ஈற்றில் .......

செந்திலுக்கு தன் நண்பன் சிவா செய்த வேலையை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவன் பாட்டியம்மா சிவாவோடு இவன் பழகுவதை எப்பொழுதும் அதிருப்தியோடு பார்த்தது அவனுக்கு நினைவு வந்தது. பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தவனை தட்டியெழுப்புவது போல் “என்ன மோனே யோசிசெண்டு இருக்கிற?” என்று கேட்டுக் கொண்டே அவன் பாட்டியம்மா அன்பு ததும்ப முன்னே வந்தாள்.
திடீரென அவன் பாட்டி கேட்ட கேள்வி அவனை பழம் நினைவுகளிலிருந்து விடுவித்து கீழே இழுத்து வந்தது. அவன் பதிலளிக்காது விழிகளாலேயே “என்னம்மா” என்பதுபோல் பார்த்தான்.
“என்ன மெய்மறந்த யோசனை, ஏதேனும் பிரச்சினையா?” என்று கேட்டாள் பாட்டி

அவளுக்கு அவன் எதையும் மூடிமறைப்பதில்லை.
“இல்ல அம்மா, இவன் சிவாவை நினைக்கத்தான் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வருகுது” என்றான் செந்தில்

“நீ அவனைப்பற்றி என்னிடம் எதுவும் சொல்லாத அவனோடு படிப்பிச்ச பிள்ளையை ஏமாற்றி கெடுத்துப்போட்டு கைவிட்டுப்போனவன் தானே, அவன்? அவன் ஒரு மகாகர்மி” பாட்டியம்மா ஆவேசமாக கதைத்தாள்.

“இல்லை அம்மா, அவன் என்ர நண்பன். கொஞ்சம் முயற்சித்தால் திருத்தலாம் என்று நினைக்கிறன்”
“அவனை உன்ர நண்பன் என்று சொல்லாத. அவனை உன்னால் திருத்த முடியாது.”
“இல்ல அம்மா, இப்ப அவன்ர போக்கில ஒரு மாற்றம் தெரியுது. அதுதான் அவனை மாற்றலாம் என்று நினைக்கிறேன்.
“அவனில் என்ன மாற்றம் தெரியுது?”
“இந்தியாவில் இருந்து கொழும்புக்கு வந்திருக்கிற ஆரோ ஒரு சாமியாரிடம் இவன் தீட்சை எடுக்கப் போறானாம். அவன்தான் எனக்கு போனில் சென்னான்.

செந்திலின் பாட்டியம்மா பெரிதாகச் சிரித்தாள். சிரித்து விட்டு “தான் செய்த அநியாயத்தை மறைக்க இப்ப அவன் சாமி வேசம் போடுறான்” என்றாள் கோபமாக
“இல்ல அம்மா” - செந்தில் இழுத்தான்

“நீ போசாதே என்ர சொல்லுக்கே மதிப்பு கொடுக்காதவன் நீ சொல்லியா கேட்கப்போகிறான்? நீ அவனுக்காகப் போராடி அவன் கர்மங்களை உள்வாங்கி நோயில் விழாதே” பாட்டி ஒரு நாளும் இல்லாத அழுத்தத்தோடு கதைத்தது அவனைக்கட்டிப்போட்டது.

ஆனாலும் அவன் மனம் அடங்காது அவனுக்குள் புரண்டு புரண்டு அசௌகரியப்பட்டது.

இன்று எத்தனைபேர் எத்தனையோ அநியாயங்களை யெல்லாம் செய்து போட்டு பெரிய கனவான்கள் மாதிரி திரிகிறாங்கள். இவங்களை யெல்லாம் யார் கேட்கிறார்?. எத்தனையோ அப்பா விச்சனங்களையெல்லாம் கொன்று புதைத்துவிட்டு நீதியும் மனிதபிமானமும் கதைக்கும் அரசியல் பிரமுகர் எத்தனைபேர்! இதையார் கேட்கிறார்கள்?
இந்த யோசனைகளால் அவன்மனம் மல்லுக்கட்டி அதிர்ந்தது.

திடீரென அவன் அம்மா சிரித்துவிட்டுப் பதில் சென்னாள்

“எப்பவும் நாங்க எங்களால் முடியக் கூடிய வட்டங்களுக்குள் தான் தலையிட வேணும். இதை அறியாது அதற்கப்பால் சென்று அனைவரையும்

திருத்துவதற்கு நாம் என்ன அவதார புருசர்களா?" என்று உச்சியில் அடித்தாற் போல் கூறி விட்டு மீண்டும் பொக்கவாய் தெரிய சிரித்தாள்.

செந்திலின் தொண்டை வரண்டு போவது போலிருந்தது. என்றாலும் அவன் தனக்குள் எழுந்த கேள்வியை வெளிக்கொணர்ந்தான்.

"அப்படி யென்றால் சிவாவை மீட்டெடுக்க வழியில்லையா?'

"மீட்டெடுக்க வேண்டுமானால் அவன் ஏமாற்றிய அந்த பெண்ணை கைப்பிடிக்கச் சொல்லு" பாட்டி தெளிவாகச் சொன்னாள்.

"சரி அவனைக் கேட்டுப்பார்க்கிறேன்" என்று கூறிய செந்தில் அவனோடு கதைக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தான்.

இப்போ செந்திலின் நினைவில் சிவா கொழும்பில் யாரிடமோ தீட்சை எடுக்கப் போவதாகச் சொன்னது சுழன்று சுழன்று வந்தது. இந்தச் சுழலில் அகப்பட்ட அவன் மனம் பழைய பூர்வீக நினைவுச் சுழலில் அள்ளுப்பட்டது. அப்போது அவனுக்கு பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதிருக்கும். அவன் இன்னும் ஊரில்தான் படித்துக்கொண்டிருந்தான். அன்று அவனது வகுப்பு மாணவர்களுக்கு சைவத்தீட்சை கொடுக்கப்படும் நிகழ்வுப்பற்றி பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. ஊரில் உள்ள சிவன் கோவிலுக்கு இதற்கென குருப்பட்டம் பெற்ற பிராமணக்குருக்கள் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். செந்திலின் பாட்டி அவனை தீட்சை எடுக்க அனுமதிக்கவில்லை. வகுப்பாசிரியர் வந்து அவரிடம் விளக்கங்கேட்டார்.

"ஏன் செந்திலை தீட்சை எடுக்க விடாது தடுக்கிறீர்கள்?" - ஆசிரியர் கேட்டார்."

"தீட்சை கொடுக்க வந்திருக்கும் பிராமணர் குருப்பட்டம் தரித்தவராக இருக்கலாம். ஆனால் இவர் ஆசாபாசங்களைத் துறந்த ஒருவரல்ல, நம்மைப் போல சாதாரண, மனிதர். இவர் தீட்சை கொடுத்தால் தன்னுடைய கர்மங்களைத்தான் இந்த இளசுகளில் தொற்றவைப்பார். இது எதிர்காலத்தில் பிள்ளைகளை பாதிக்கும்....." என்று பதிலளித்தாள் அவள்.

"இல்லை அம்மா இது நாவலர் பெருமானால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சைவத்தீட்சை முறையம்மா" ஆசிரியர் விளக்கினார்.

"எனக்குத் தெரியும் வாத்தியார். ஆனால் நாவலர் பெருமான்வந்தால் கூட அவரிடம் தீட்சை எடுக்க அனுமதிக்க மாட்டேன். காரணம் அவரும் எங்களைப்போல் ஆசாபாசங்களுக்கு உட்பட்ட சமயாசாரியார்தான்' என்று கூறியவள் இளநகை தவழ மீண்டும் கூறினாள்.

"ஒருவேளை நாவலர் பெருமானோடு வாதிட்ட வள்ளலார் வந்திருந்தால் என்ர மகன்மட்டுமல்ல நானும் சேர்ந்து தீட்சை எடுத்திருப்பேன்.!" என்றாரோ இல்லையோ ஆசிரியரின் உடல் அதிர்ந்தது. எங்கிருந்தோ வார்த்தைகளால் விளக்க முடியாத உண்மையொன்று வெளிப்பதுபோல் பட்டது. ஆசிரியர் அங்கிருந்து அகன்றார்.

"என்ன செந்தில் சிவாவோடு கதைத்தாயா?" என்ற பாட்டியின் கேள்வி அவனை நினைவுகளில் இருந்து மீட்டெடுத்தது.

பாட்டி சமையல் முடிந்து காகங்களுக்கு சோறுபோட்டுக் கொண்டே செந்திலிடமும் கேள்விகேட்டாள்.

"ஓம் கதைத்தனான். அவன் ஆசிரிய பதவியை விட்டிட்டு no-pay லீவில் வெளிநாடு போக போறானாம். நான் கேட்டது சம்பந்தமாக வெளிநாடு போய் ஆறுதலாக யோசித்து சொல்வதாக சொன்னான்"

"தீட்சை எடுக்கப்போவதாகச் சொன்னானே அதுக்கு என்ன நடந்ததாம்?"

"அது பற்றி ஒன்றும் அவன் சொல்லவில்லை"

"நான் சொன்னது இப்போதாவது விளங்குதா? இவங்கள் ஒவ்வொரு நேரத்துக்கு ஒன்று கதைக்கும் ஏமாற்றுப் பேர்வழிகள். இவங்களை நம்பாதே"

அப்போது அம்மா பெரியதட்டில் முற்றத்தில் வைத்த சோற்றை காகங்கள், வந்து ஒன்றோடொன்று மோதி கோலிச் கோலிச் சாப்பிட்டன. சில பறந்துபறந்தும் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து விழுந்தும் சாப்பிட்டன.

இதைப்பார்த்ததும் திடீரென வன்னியில் வாழ்ந்த மக்கள் போர்க்காலத்தில் பட்டபாடு செந்திலின் நினைவில் விரிந்தது. அவர்கள் ஒரு பருக்கை சோற்றுக்காகவும் ஒரு குவளை தண்ணீருக்காகவும் பட்டபாடு... குண்டுவீசுக்கும், துவக்குச் சூட்டுக்கும் எரிகுண்டு வீச்சுகளுக்கும் மத்தியில் ஓடி ஒளிந்தும் பதுங்கு குழியில் பதுங்கியும் அவர்கள் சிந்திய இரத்தமும் சதையும் ..........அவன் கண்கள் கலங்கிக் கொண்டுவந்தன.

அப்போது அவன் அருகே நின்ற அவன் பாட்டி, "செந்தில் நீ மாற்றம் எடுத்துக்கொண்டுபோய் வன்னியில் உள்ள பிள்ளைகளுக்கு படிப்பித்தால் என்ன?" என்று கேட்டாள் திடீரென்று.

அதைக் கேட்டதும் அவன் உடம்பு சில்லிட்டுப் புல்லரித்தது. இப்படித்தான் இருந்தாற்போல் ஒவ்வொருவரதும் நினைவுத்தடங்களை பின்பற்றி அவள் உள்நுழைவது மிக நுணுக்கமாக இடம் பெறும். அதை விளங்கிக்கொள்ளாதவர்களை அவள் அப்படியே விட்டுவிடுவாள். யாராவது அவள் சொல்வதில் அர்த்தம் கண்டு பின் தொடர்ந்தால் பாக்கியவான்கள்.

"ஓமம்மா நீங்கள் சொல்வதைத்தான் நானும்

செய்யவேணும் என்று எப்பவோ தீர்மானித்து விட்டேன்.'' என்று கூறிய செந்தில் "நேற்று ஒரு நண்பன் எனக்கு ஃபோன் பண்ணினான் அம்மா. அவன் வன்னிக்கு போனவாரம்தான் போனதாகவும் அங்கே ஒரு நண்பன் வீட்டில் தங்கினதாகவும் அது யுத்தம் நடந்த பகுதிக்கு அருகே இருந்த இடமாம். அன்றிரவு அவனுக்கு நித்திரை கொள்ளவே முடியாமல் போய்விட்டதாம்....''

"ஏன்?'' பாட்டி கேட்டாள்

"இரவிரவாக அங்கே சனங்கள் கூக்குரல் போடுவதும் திடீர்த்திடீரென வீரீட்டு அலறுவதும் குளறுவதும் திகு திகு வென ஓடும் காலடி ஓசைகளும் கேட்டுக்கொண்டே இருந்ததாம். இறந்துபோன சனங்களும் போராளிகளும் அவனிடம் வந்து ஏதேதோ முறையிடுவது போலவும் கெஞ்சுவது போலவும் அன்றிரவு முழுக்க அவன் பயத்தால் தூங்கவே இல்லையாம்'' செந்தில் கூறினான்.

"ஏன் நீ பயப்படுகிறயா?'' என்று கேட்ட, செந்திலின் பாட்டி "இது எல்லாருக்கும் நடக்கு மென்று. சொல்லிவிட முடியாது. ஒரு சிலரின் மன அமைப்பு அப்படி'' என்றாள் பாட்டி

"எனக்கொரு பயமும் இல்லை, அம்மா. இதற்கு முன்னரும் இப்படிச் சிலர் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் நான் கவலைப்படுவதெல்லாம் இத்தனை மக்களின் அநியாயச் சாவும் அவர்கள் அனுபவித்த அவலமும் துன்பமும் அவர்கள் ஆவிகளாய் அந்தரித்து அலைவதில்தான் முடிய வேணுமா?'' என்றான் செந்தில்.

"இல்லை'' பாட்டி பதில் சொன்னாள். "இந்தத்தடுமாற்றம் கொஞ்சக் காலம் மட்டுந்தான். அதன் பிறகு அவர்களுக்குள் புதைந்து போய் இருந்த லட்சியம், ஆசைகள் எல்லாம் மெல்ல மெல்ல விழித்துக்கொள்ளும். அவைகளை அடைய முடியாமல் தடுத்தவர்கள் மேல் அவை ஒன்று திரண்டு பழிவாங்கப் பாயும்'' என்று கூறிவிட்டு பாட்டி, "புரியுதா?'' என்பது போல பார்த்தாள்.

"இதுவும் ஒருவகை கூடுவிட்டுக் கூடுபாய்தல் தான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட செந்தில் "அம்மா, இதைத்தான் ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டென்று விஞ்ஞானி நியூட்டன் சொன்னான்.'' என்றான் பாட்டியைப்பார்த்து

"இதைத்தான் நாங்களும் 'வினை விதைப்பதும் வினை அறுப்பதும்'' என்று சொல்லிக்கொண்ருக்கிறோம், இல்லையா?'' என்றாள் கிழவி

"உண்மை'' என்றான் செந்தில்

****



ஓவியம் - பிரமிள்

அன்றிரவு படுக்கைக்கு போன செந்தில் வெகுநேரம் வரை நித்திரையின்றி உழன்று கொண்டிருந்தான். வெகுநேரத்துக்குப்பின் தூக்கத்தில் ஆழ்ந்த போது அவன் ஒரு கனவு கண்டான்.

அது கனவா? இல்லை, இதுவேறு வகையானது. அவன் முன்னே நண்பன் சிவா நின்று கொண்டிருந்தான். அவன் தனது ஸ்தூல உடலைவிட்டு சூக்கும உடலில் (Astral body) நின்று கொண்டிருப்பது போல செந்திலுக்குத் தெரிந்தது.

"என்ன?'' என்பது போல செந்தில் அவனைப் பார்த்தான். அவன் அதற்குபதிலாக "என்னை மன்னித்து விடு செந்தில், நான் பெரிய பிழை செய்து விட்டேன், என்னை மன்னித்து'' விடு என்று அழாக்குறையாக அவன் முன்னே நின்று இறஞ்சினான்.

"என்ன சிவா சொல்கிறாய்? என்ன சிவா சொல்கிறாய்?'' என்று செந்தில் அவனைப்பார்த்துக் கேட்டபோது அவன் முன்னே நின்ற சிவாவின் சூக்கும உடல் பதில் சொல்லாது மெல்ல மெல்ல மறைந்து போயிற்று.

காலையில் படுக்கையை விட்டு செந்தில் எழுந்ததுதான் தாமதம் பாட்டியிடம் சென்று தான் கண்ட கனவு பற்றிச் சொன்னான். உண்மையில் சிவா தனது சூக்கும உடலில் தான் வந்தான் என்றும் கூறினான். பாட்டியின் முகம் சிறிது இறுகிற்று.


"கனவின் அர்த்தத்தை என்னிடம் கேட்காதே நீயே தெரிந்து கொள்!'' என்று சொன்னாள் கிழவி

உடனே செந்தில் சிவாவின் கைபேசிக்கு ஃபோன் பண்ணினான்.

"Switched off'' என்று பதில் வந்தது.

...

# எனது படைப்புக்களை யாரும் அங்கீகரிக்கத் தேவையில்லை



பிரமிளின் ஆன்மீகக்குரு அப்பாத்துரை செட்டியார் அவர்களின் களிமண்சிலை உருவம் பிரமின் செய்தது.

பிரமிளின் பள்ளித் தோழரான அமரர் சித்தி அமரசிங்கம் மூலம் 1990களில் திருகோணமலையில் என்னால் வெளியிடப்பட்ட "தாகம்" சஞ்சிகைக்காக பெறப்பட்ட நேர்காணல் இது. உதிரிகளாக கேட்கப்பட்ட சில கேள்விகள் தொகுக்கப்பட்டு முழுவடிவம் பெற்றுள்ளது. தவிர்க்கமுடியாத காரணத்தால் இது தாகத்தில் பிரசுரமாக வில்லை. இதுவரை எதிலும் பிரசுரமாகாத இந்த நேர்காணலை மகுடம் பிரமிள் சிறப்பிதழில் தருவதில் மகிழ்வடைகின்றோம்

\- ஆசிரியர்

**நீங்கள் கவிஞரா? கதைசொல்லியா? விமர்சகரா? ஓவியரா? உண்மையில் நீங்கள் யார்?**

எல்லாமும் தான். நான் கியூபிச ஆளுமை. ஓவியம் கைப்பழக்கத்தில் வந்தது. மற்றெல்லாம் வாசிப்பு! வாசிப்பு! வாசிப்பினால் வந்தது. ஓவியம் வரையத்தெரியாதவனெல்லாம் நல்ல கவிஞனாகவோ நல்லகதை சொல்லியாகவோ நல்ல விமர்சகனாகவே இருக்கமுடியாது. எல்லாம் ஒன்றுடனொன்று இனைந்த வலைப்பின்னல். இது என்னைப் போல் அனுபவம் கிட்டிய மாந்தர்க்கே புரியும். முதலில் நானொரு ஓவியனாகத்தான் அறிமுகமானேன். சிறிலங்காவில் எனது ஓவியக் கண்காட்சி கூட ஓரிருமுறை நடந்திருக்கிறது. நான் யாரென்ற தேடலில் ஓவியம் வரைவதுங்கூட ஓரங்கம்தான். இன்னொரு விதத்தில் சொல்வதானால் எனது மனநிறைவுக்கும் மகிழ்ந்திருத்தலுக்காகவும் இப்போதுங் கூட அபூர்வமாக ஓவியம் வரைவதில் மூழ்கிவிடுகிறேன். என்னிடமுள்ள ஓவியனை வளர்த்தெடுக்க நான் எந்தவொரு முயற்சியும் செய்ததில்லை அதற்கு அவசியமுமில்லையென்றே கருதுகிறேன். ஏனென்றால் என்னிடமுள்ள ஓவியன் இறந்து போவதையே நான் விரும்புகிறேன். அவன் இறக்கும் போது என்னை மகிழ்ச்சியுறச் செய்கிறான்.

**2. நீங்கள் உங்களுக்கென ஒரு வேலையைத் தேடிக்கொள்ளாதது ஏன்?**

வாசிப்பதும் எழுதுவதும் ஒரு வேலையாக உமக்குத் தோன்றவில்லையா? என்னய்யா இது சுத்த அபத்தமாக இருக்கிறது. வாசிப்பையும்



எழுத்தையும் தவிர வேறெந்த வேலையும் இதுவரை நான் செய்ததில்லை. என் தகுதிக்கும் தராதரத்துக்கும் குறைவானவர்கள் முன்பாக கைகட்டிச் சமரசம் செய்து கொள்வதையும் நான் விரும்புவதில்லை. இது கொம்பன் யானை மரங்களை முறித்தும் பெயர்த்தும் முன்னேறிச் செல்வது இதைப் படுகுழியில் வீழ்த்தி பாரம் சுமப்பதற்கு பழக்கியெடுக்கமுடியாது.

**3. நீங்கள் உங்களைப்பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமா? சரி குறித்துக் கொள். நான் ஒரு பிரகஸ்பதி. எனக்குத் தெரிந்தவையெதுவும் தமிழில் மற்றவர் எவருக்கும் தெரியாது. என்னை விட அறிவு ஜீவியான மற்றொரு கவிஞன் தமிழில் இன்றில்லை. ஒருநாளின் 24 மணிநேரமும் எனக்கு ஒரு கவிஞனின் வாழ்க்கை யாகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனக்குப் பட்டதை முகத்துக்கு நேரே சொல்லி விடுவேன். முன்நிற்பது பூதமா, சாமியா? என்றெல்லாம் நான்பார்ப் பதில்லை எனக்கு யாரும் கொம்பன் கிடையாது.

**4. என்னது? தமிழில் உங்களை விட அறிவு ஜீவியான மற்றொருகவிஞன் இல்லையென்றா சொல்கிறீர்கள்?**

இதிலென்ன சந்தேகம்? சரி ஒரு பந்தயம் வைக்கலாமா? இப்போ நகுலன், கிகுலன், பிச்சமூர்த்தி, கிச்சமூர்த்தி, பசுவய்யா, கிசுவய்யா இப்பிடியாக எல்லா மகாகவிகளினுடைய கவிதை களையும் அநாமதேயமாகக்கொண்டுவா. பிரேமிளுடைய கவிதையையும் அநாம தேயமாக்கி அந்தக் கவிதைகளோடு சேர்த்துவிட்டு ஒரு தேர்ந்த வாசகனைக் கூப்பிட்டு ஐயா! இதில் இன்ன இன்னாருடைய கவிதைகள் எழுதியவர் பெயர் குறிப்பிடாமல் உமக்குத்தரப்பட்டுள்ளது. இந்தக் கவிதைகள் இன்ன இன்னாருடையதென உம்மால் சரியாக அடையாளங்கான இயலுமா எனக்கேட்போம். அவன் பிரேமிளுடைய கவிதையை மட்டும் சரியாக அடையாளங்காணுவான். மற்றக்கவிதைகளைச் சரியாக அடையாளங்காணமுடியாமல் திணறுவான். இப்போது புரிகிறதா பிரேமிள் எப்படிப்பட்ட கவிஞன் என்பது உமக்கு.

**5. வெங்கட்சாமிநாதன் ஒரு மாபெரும் விமர்சகர் என்பது மெய்தானே?**

அவர் மெய் மாபெரும்மெய். அந்தவகையில் மெய்தான். மற்றதெல்லாம் பொய். உனக்கொரு பக்குவம் சொல்லவா நடமாடல் என்றால் நடந்து ஆடுதல் என்றும் தொடர்பாடல் என்றால் தொடர்ந்து பாடுதல் என்றும் பொருள் விரித்துக்கூறும் வகையறாதான் இந்த வெங்கட்சாமிநாதன். அவர்செய்யும் விமர்சனம் ஆழமானதுமல்ல. நேர்மையானதுமல்ல. எப்போதும் முற்சார்போடுதான் நடந்துகொள்ளும்பேர்வழி. எனக்குத் தெரிந்த ஒரு நண்பர். சில நல்லகவிதைகளும் எழுதியிருக்கிறார். அவர் ஒருநாள் அழாதகுறையாக வந்து வெங்கட்சாமிநாதன் என்னுடைய கவிதைகளைக் குப்பையென்று சொல்லிவிட்டார் என ஒப்பாரிவைத்தார். அதைக்கேட்டு நான் விழுந்து விழுந்து சிரித்துவிட்டேன். அவர் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுகிறாயா? எனக்கேட்டார். ஐயா! கவிஞரே! வெங்கட்சாமிநாதன் உமது கவிதையைக் குப்பையென்று சொன்னால் நீவிர் குதூகலிக்கவல்லவா வேண்டும்.? ஏன் ஒப்பாரி வைக்கிறீர்? அந்தப்பிரகிருதிக்குக் கவிதையென்றால் சுத்த சூனியம் என்ற இரகசியம் உமக்குத்தெரியாதா? என்று கேட்டேன். அந்த நண்பர் அழுத குழந்தை சிரித்ததுபோல் சிரித்தார். வெங்கட்சாமிநாதன் விதந்து கூறும்படைப்புகள் மேலோட்டமானவைதான்.

**6. நீங்கள் ஏன் இன்னமும் திருமணம் செய்து கொள்ளவில்லை?**

திருமணம் செய்து கொள்ளாதது தண்டனைக் குரியகுற்றமா? எனக்குத்திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனத் தோன்றவில்லை. அதனால் செய்து கொள்ளவில்லை. அவ்வளவுதான். 24 மணிநேரமும் கலைபயில்பவனுக்கு கலவிக்கு ஏது பொழுது? திருமணம் என்பது வலிந்து ஏற்கும் சுமை. அந்தச்சுமை எழுத்தின் வேர்ஜினிற்றியை அகற்றிவிடும். திருமணமானவன் எழுத்தில் எனதளவுச் வேர்ஜினிற்றி இருந்தால் காட்டு. இந்தப்பிரேமிள் சிகைசிரைப்பான். நீ இந்தக் கேள்வியின் மூலம் எதிர்பார்ப்பது என்னவென்பதை நன்கறிவேன்.


**7. வாழ்க்கையை ஓர் எளிய சூத்திரமாக்கித் தருவீர்களா?**

ஓ! பிரமாதமாப்பண்ணலாமே! முதலில் மாதாந்தச் செலவைத் திட்டமிட்டு அந்தச் செலவுக்கு வருமானத்தைத்திட்டமிடு. அதற்கேற்ப செயலாற்று

அவ்வளவுதான். வாசிக்கும் எழுதும் பழக்கமிருந்தால் எதற்காகவும் அதைவிட்டுக்கொடுத்து விடாதே. வாசிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் உன் வழமையான நடைமுறைகளையும் அடியோடு மாற்றிக் கொள்ளத்தயாராக இரு! என்ன புரியவில்லையா?

சரி எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குகிறேன். என்னை எடுத்துக்கொள். நான் வாசிப்பதற்கும் எழுதுவதற்குமாக என்வாழ்க்கைமுறையை முற்றிலும் மாற்றிக் கொண்டேன். இதற்காகச் சோறு சமைக்காமல் அரிசியையும் மரக்கறிகளையும் சப்பித்தின்னப்பழகிக் கொண்டேன். இதனால் சமையலுக்காக விரயமாகும் நேரத்தில் எவ்வளவோ வாசிக்கமுடிகிறது. அதிகமாக எழுதவும் முடிகிறது. அடுத்தது திருமணம் செய்து கொள்ளலாகாது. திருமணமும் அதற்குப் பின்பான நிகழ்வுகளும் வாசிப்பையும் எழுத்தையும் விழுங்கி ஏப்பமிட்டுவிடும். சற்றே விளக்கமாகச் சொல்கிறேன். திருமணம் செய்தால் குழந்தைபிறக்கும் அதற்குமுன் பிரசவவலியெடுக்கும் கணத்திலிருந்து குழந்தை பள்ளிக்குச் செல்லத்தயாராகும்வரை உனக்கென்று நேரமிருக்காது. இதெல்லாமொரு விவகாரமா? சிரிப்பிற்கிடமாக இருக்கிறது. என்ன நிகழ்ந்தாலும் என்னால் நேரமொதுக்கி வாசிக்கவும் எழுதவும் முடியுமென்று நீ கருதலாம். அது சாத்தியப் படுவதாகவும் அமையலாம். ஆனால் அந்த வாசிப்பிற்கும் எழுத்திற்கும் வீரியமிருக்காது. அந்தவாசிப்பிலும் எழுத்திலும் உன்னைப்பற்றியதேடல் நிகழாது. சாதனை நிகழ்த்தவும் முடியாது.

திருமணம் செய்த கணத்திலிருந்து உனது இயங்குதிசையை மூன்றாமாள் தீர்மானிக்கிறான். மூன்றாமாள் யாரென்றால் உன்னைச் சூழ்ந்திருக்கும் சமூகம். திருமணம் செய்து கொள்கிறாய். இரண்டு மூன்று வருடங்களாகக் குழந்தை பிறக்கவில்லை உடனே இந்தமூன்றாமாள் உனது படுக்கையறைக்குள் மூக்கை நுழைத்து நீ ஒழுங்காகக் கலவி செய்கிறாயா? எனக்கண்காணிப்பான். இரண்டுமூன்று வருடம் ஏன்? நீ திருமணம் செய்து கொண்டதிலிருந்தே சிலவேளை இந்த மூன்றாமாள் உனது கலவியின் ஒழுங்குமுறை பற்றி நேரடியாக உன்னிடம் விசாரிக்கத்தொடங்கிவிடுவதுமுண்டு. இது மட்டுமல்ல உன்வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் இந்த மூன்றாமாள் தீர்மானிக்கிறவனாகவும் நீ அவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனாகவும் மாறி விடுவாய். எந்தத் தருணத்திலும் மூன்றாமாளை உள்நுழைய அனுமதிக்காத வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். சரி திருமணம் செய்து கொள்ளவில்லை. காமம் பீறிடுகிறது மாற்றுவழியென்ன? என்ற கேள்வி உனக்குத்தோன்றியிருக்கும் என்னைப்போல் காமத்தை அடக்கியாளும் பக்குவநிலைக்கு வந்துவிடு. அதுமுடியாதா? கரபோகம் செய்து காமத்தைத்தணி. அதுவும் முடியவில்லையா?



உன்னைப்போலவே காமம் பீறிடும் ஒருத்தியைத் தேடிக்கண்டுபிடித்து வைத்துக்கொள். அவள் பணமும் கேட்கமாட்டாள். உன் செயற்பாடுகளுக்குத் தடையாகவும் இருக்கமாட்டாள். திரவநிலை இன்பம் கைக்கிட்டும். ஆனால் அப்படியொருத்தி கிடைப்பாளா? என்பதுதான் கேள்விக்கிடமானது. கடைசிவரை தனியளாகவே வாழப்பார். இறந்தபின் கொள்ளியிடுவது யாரெனத்துயரங்கொள்ளாதே. இறப்புடன் உன் அத்தியாயம் நிறைவுக்கு வந்துவிடும். யாராவது உனக்குக் கொள்ளியிட்டேயாகவேண்டும். அதுதான்நியதி. வாழ்க்கையின் எளியசூத்திரம்

**8. கேள்வி: $E=Mc^2$ போன்றவேறு ஏதாவது முயற்சி?**

$e^x$ குறித்து ஓர் எத்தனிப்புள்ளது. பார்க்கலாம். இதெல்லாம் தற்செயலாக நிகழ்ந்து விடுவதில்லை. என்னைத்தேடும் முயற்சியின் அதிசயமான இன்னொரு கிளை. செல்லச் செல்லப்படர்ந்து கொண்டேயிருக்கும் முடிவில்லை.

**9. அறிவியல்ரீதியான ஓர் அணுகுமுறையில் தொடர்ந்தியங்கும் உங்களுக்கு சோதிடத்தின் மீதான தீவிர ஈடுபாடு அபத்தமாகத்தோன்ற வில்லையா?**

நன்றே கேட்டீர் சோதிடம் அறிவியல் இல்லை யென்று எந்த வடிகட்டியமுட்டாள் உம் காதில் சொல்லிவைத்தான். இந்தப் பிரேமிள் என்னமூக்குச்சாத்திரம் பார்ப்பவனா? அல்லது கிளிஜோசியக்காரனா? கணிஞன் ஆருடன் தம்பி! கணிஞன் ஆருடன் சோதிடம் ஒருவகைக்கணிதம் என்பது உனக்குத்தெரியுமா? அது இந்த மஞ்சட் காமாலைக் கண்ணர்களுக்குத் தெரியாது. இந்தக்கணிஞன் ஆருடன் செய்திருக்கும் அதிசய மொன்றை உனக்குக் காட்டுகிறேன். எந்தவகையிலும் நீ பரிசோதித்துப் பார். இந்தக் கணிப்புப் பொய்யென்று நீ ஆதாரபூர்வமாகக் காட்டினால் சோதிடத்தின் பக்கமே இந்தப் பிரேமிள் கால்வைக்கமாட்டான் போதுமா

**10. நக்ஷத்ர வாஸியைத் திரைப் படமாக்கினால் அதில் ரஜினிகாந்தையும், ஸ்ரீப்ரியாவையும் நடிக்கவைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்களே?**

தமிழ்சினிமாவுக்குக் கிடைத்த அருங்கொடைதான் இந்த ரஜினிகாந்த். சிரிப்பையும் கோபத்தையும் சமகணத்தில் வெளிப்படுத்தக்கூடிய அதுவும் இயல்பாக வெளிப்படுத்தக் கூடிய ஒரு நடிகனை இன்றைக்கு உன்னால் காட்டமுடியுமா? ஏன் நடிகர் திலகம் சிவாஜி இல்லையா? என்று கேட்பாய் சிவாஜியின் நடிப்பு ஸ்ரீயோரைப்பானது. ஒவ் வொன்றுக்கும் ஒவ்வொரு போர்மியூலாவைச் சிவாஜி வைத்திருக்கிறார். ஒரு கிறியேற்றிவ்வான நடிப்பை அவரிடம் எதிர்பார்க்க முடியாது. தமிழ் சினிமாவிலுள்ள அநேகமான நடிகர்களின் கதையும் இதேதான். ஆனால் ரஜினிகாந்தே மட்டும் விதிவிலக்கு ஸ்ரீரியேரைப்பான நடிப்பு அவரிடமில்லை. முற்று முழுதாகக் கிறியேற்றிவ்வான நடிப்புத்தான். மற்றது ஸ்ரீப்ரியா இதுவரை வந்துபோன நடிகைகளி லெல்லாம் மார்பழகியென்றால் அவள்தான். பிறமொழி நடிகைகள் கூட இவளது மார்பழகிற்கு தோற்றுவிடுவர். இன்னொரு பிளஸ்பொயின்ற காமத்தைத்தேக்கிய கண்கள். மற்றது அந்தத்தடித்த அதரங்கள். ரஜினிக்குச் சளைக்காத கிறியேற்றிவ்வான நடிப்பு. இதெல்லாம்தான் நான் அவ்விதம் சொல்லி வைத்ததற்குக் காரணமாயிருக்கலாம். வேறொன்றும் இப்போது தோன்றவில்லை. ஏன் நக்ஷத்ரவாஸியை படமாக்கவேண்டுமென்று கூட இப்போது எனக்குத் தோன்றவில்லை.

**11. மனந்திறந்து சொல்லுங்கள் சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் ஓர் உலகத்தரமான புதினந்தானே?**

திறந்து சொல்வதற்கு மனம் என்ன தைலப்பெட்டியா? அதென்ன உலகத்தரம்? சுத்த அபத்தமாக இருக்கே. எல்லோரும் உலகத்திலிருந்து கொண்டு தானே எழுதுகிறோம். செவ்வாயில் இருந்து கொண்டா எழுதுகிறோம்? உலகத்திலிருந்து கொண்டு எழுதினால் அதை உலகத்தரமானதென்றுதானே சொல்ல வேண்டும். செவ்வாயிலிருந்து கொண்டு எழுதினால் அதைச் செவ்வாய்த்தரமான தென்றுதான் சொல்ல வேண்டும். இதிலென்ன குழப்பம்? வேறென்ன கேட்டீர்? ஜே.ஜே சில குறிப்புகள் பற்றியா? நீர் கேட்டபடியே மனந்திறந்து சொல்கிறேன். ஜே.ஜே சில குறிப்புகள் முழுக்க பீடிகை. வெறும்பீடிகை இதற்கு மேல் மனந்திறந்து சொல்வதற்கேதுமில்லை.

**12. நீங்கள் காஞ்சிப்பெரியவரை அளவிக்கு மீறிப் புகழ்வதாகத் தோன்றவில்லை?**

உமது கேள்வியில் ஒரு சிறு மாற்றம் செய்ய அனுமதிப்பீரா? நீங்கள் யோகிராம்சரத்குமாரையும் காஞ்சிப்பெரியவரையும் அளவுக்கு மீறிப்புகழ்வதாகத் தோன்றவில்லையா? எனவும் கேட்டிருக்கலாம்.சரி அதிருக்கட்டும். காஞ்சிப் பெரியவரை நான் அளவுக்கு மீறிப் புகழ்கிறேனா? அப்படியெனக்குக் கனவிலும் கூட தோன்றியதில்லைராசா! நீ காஞ்சிப்பெரியவரைப் பின் தொடர்ந்து பார்த்திருக்கிறாயா? அவர் பட்டு மெத்தைகளிலோ திண்டுகளிலோ சாய்ந்து கிடந்து தரிசனந்தருவதைக் கண்டிருக்கிறாயா, அவர் கீற்றுக் கொட்டகைக்குள் தான் உட்கார்ந்திருக்கிறார். யாத்திரையென்று கிளம்பிவிட்டால் தங்குமிடவசதி செய்யப்படாத இடங்களில் எங்காவது மாட்டுத் தொழுவத்தில் போய்த் தங்கியிருப்பார். ஓடும் பொன்னும் ஒக்கவே காஞ்சிப் பெரியவருக்குப் பலரும் அஞ்சுகின்றார். நான் புகழ்வதாக நீ சொல்வதும் இந்தப்பக்குவ நிலையைத்தான் யோகிராம் சுரத்குமார். இன்னொருவகை. சிகரெட் பிடிக்கிற நவீனயோகி. தனக்கு முன்னால் நின்று ஒரேயொருவரைக் காட்டுவதென்றால் இது இவரேதான். உன்னுடலில் ஒரு சிறு பிறழ்விருந்தாலும் அதனை உடனடியாகவே கண்டுபிடித்து உன்னிடம் கேட்கக்கூடிய அற்புதம் அவரிடம் இருக்கிறது. இந்த நுண்ணுணர்வு மரபைக் கடந்தது இன்னொரு வகையில் சொல்தென்றால் அதுதான் மனிநேயம். இதற்கு மேலும் சொல்வதற்கு வேறொன்றுமில்லை.


**13. தமது படைப்புகளை குறித்த சிலர் அங்கீகரிக்க வேண்டுமென ஒருவர் எதிர்பார்ப்பதைத்தவறென்றா சொல்கிறீர்கள்?**


தவறில்லை ராசா! அபத்தம் முழு அபத்தம்!! எப்படியென்றால் நீ மணந்து கொண்டபெண்ணை இன்னொருவனுடன் உனது படுக்கையறைக்குள்ளேயே சாந்திமுகூர்த்தத்திற்கு அனுப்பிவிட்டுக் கதவை மூடிக் கொட்டக் கொட்ட முழித்திருந்து அந்தநபர் வியர்வையொழுகக் கதவைத் திறந்து வெளியே வரும் போது “என் பெருமதிப்பிற்குரியவரே ..... சௌகர்யமாக இருந்ததா?” எனக்கேட்கும் போது அவர் ‘கட்டிலை மாற்ற வேண்டும்’ எனச் சொல்லிவிட்டு வியர்வையைத் துடைத்துவிட்டுச் செல்வதற்கு ஒப்பானதுதான் உனது படைப்புக்களைக் குறித்த சிலர் அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்ப்பதும். நீ மணந்து கொண்ட பெண்ணுக்கு உன்னுடன் தான் சாந்தி முகூர்த்தம் நடந்தாகவேண்டும். இன்னொரு வருடன் நடக்க நீ காவலிருந்தால் உன்னைவேறு மாதிரித்தான் அழைக்கவேண்டிவரும். ஏனென்றால் என்னுடைய படைப்புக்களை யாரும் அங்கீகரிக்கத் தேவையில்லை. அதனை ஏற்கனவே இந்த பிரமிள் அங்கீகரித்துவிட்டான்.


- கர்ணன் ...

| | |
|---|---|
| கவிதை | |
| கட்டுரை | |
| சிறுகதை | |
| கடிதம் | |
| ஓவியம் | ✓ |

# ஓவியங்கள்









வீணைவேந்தன் த.அமரசிங்கம் அவர்களை ஆசிரியராக கொண்டு திருகோணமலையில் இருந்து இருமாத கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்த "யாழ்" இதழின் ஓவியங்களை தர்முசிவராமு பலபுனை பெயர்களில் வரைந்துள்ளார்.

15.05.1957ல் வெளிவந்த யாழின் 5வது இதழில் "செவ்வாய்" என்ற கட்டுரையின் தொடராக அவர் தனது கற்பனையில் செவ்வாய் கிரக வாசிகள் தொடர்பாக வரைந்த ஓவியங்கள் இவை

- ஆசிரியர்.







பிரமிளின் கைவண்ணத்தில் அவரது ஆன்மீக குருவான அப்பாத்துரை செட்டியாரும் அவரது துணைவியார் தங்கப்பொண்னும்

- ஆசிரியர்.

# பிரமிளின் கைவண்ணத்தில் படைப்பாளிகள்



மௌனி



வெங்கட் சாமிநாதன்



கவிஞர் தேவ தேவன்



காலசுப்ரமணியம்



விஷ்ணு நாகராஜன் - 1988



சுந்தர ராமசாமி - 1974



கு.ப.ராஜகோபாலன்

### கனடாவில் "மகுடம்" வாசகர் வட்டம்


கனடாவில் மகுடம் இதழை விநியோகிப்பதிலும், சந்தாதாரர்களை இணைத்துக் கொள்வதிலும் கடந்த பல மாதங்களாக ஈடுபட்டு வரும் நண்பரும், கவிஞருமான தங்கா கோபால சிங்கம் அவர்கள் இதுவரை இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மகுடம், சந்தாதாரர்களை இணைத்துள்ளார்.

கனடாவில் "மகுடம்" வாசகர் வட்டம" ஒன்றினை அமைக்கும் முயற்சிலும், "மகுடம் கனடிய சிறப்பிதழினை" வெளிக்கொணர்வதிலும் தீவிராக இறங்கி இருக்கும் அவருடன் கனடா வாழ் படைப்பாளிகளையும், இலக்கிய நண்பர்களையும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- ஆசிரியர்.


கனடாவில் மகுடம் இதழ்களைப் பெறவும், தொடர்புகளுக்கும்
**திரு. தங்கா கோபாலசிங்கம் போன் : 416-931-9440**

## திருகோணமலையில் அமைந்துள்ள பிரமிளின் ஆன்மீகக்குரு சாது அப்பாதுரை செட்டியாரின் சமாதி



தமிழ்நாட்டின் சீரழிந்த சில அடிப் படைகளுக்கு இணங்கிப்போகும் தன்மையை சிருஷ்டிப்புத்துறையும், அத்துறை சார்ந்தவர்களும் பெற்றுள்ளனர். இவர்களுடன் இணங்கிப் போயிருந்தால் இன்று தருமுசிவராம் என்ற மனிதன் புகழின் உச்சியில் எல்லோருக்கும் மேலாய் நின்றிருக்கலாம். ஆனால் இந்த இணங்கிப் போகும் தன்மையில் இருந்து விலகி 'சுயம்' கொண்ட படைப்பாளனாக இருக்கும் தர்மோ ஜீவராம் பிரமிள் பற்றி இலக்கிய ரசிகர்களும், வாசகர்களும் ஏன் ஈழத்தின் இலக்கிய வாதிகளும் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும். பிரமிள் பானுச்சந்திரனின் "கண்ணாடிக்குள்ளிருந்து கவிதைகள் முப்பத்தெட்டு" கவிதைத் தொகுதியில் 'About the Poet' என்ற தலைப்பில் வெங்கட்சாமிநாதன் எழுதிய அறிமுகக்குறிப்பை சிலபதிவுகளுக்காக ஆங்கிலத்தில் அப்படியே தருகின்றேன்.

(ஆசிரியர்).



## Piramil Bhanochchundhren



Was born in 1939. He started life as a painter. The French Alliance at Kandy, Ceylon. exhibited his works in October 1971.

When he started writing in 1960. C.S.Chellappa's EZHUTTHU, the first of the little reviews in Tamil with an austere curriculum, carried his literary articles and poems. Since then he has been involved in the making and unmaking of literary values and reputations in Tamil writing. The New Poetry Movement which started in EZHUTTHU saw him as a poet with a dense and deep imagination and striking originality. So far, he is the most out standing and only the images t post in Tamil. In recent years, his images-am has grown to evolve a wider poetic spectrum of metaphysics, mysticisms, science and a deep social concern. Since 1960 he has been writing poems and literary articles in Tamil for EZHUTTHU, NADAI, KACHATATHAPARA, GNANARATHAM, CHEITHI, VIRAKESARI and THINAKARAN. His Works in English have appeared in THOUGHT, QUEST CENTURY and AVENUES. The anthologies, PUDUKKURALHAL and KURUKSHETRAM include some of this poems and essays. He is one writer in Tamil whose talents and interests are many-sided. The nature of his conceptual imagination requiring quite a few other media for expression has resulted in extending the frontiers of the literary medium whenever he chose to express himself in that medium.

He has just finished writing a novel, THE SCRWL in English. NAKSHTRAVASI a Tamil play by him will appear in AQ in one of its forthcoming issues. At the moment he is working out his conception for a Film MAHALI for A. Padmanabhan (Pattu) a film-maker in Malayalam.

His potentialities and accomplishments thus far mark him out all too conspicuously, leaving all his contemporaries in Tamil a long way behind him.

# நான்

ஆரீன்றாள் என்னை?
பாரீன்று பாரிடத்தே
ஊரீன்று உயிர்க்குலத்தின்
வேரீன்று வெறும் வெளியில்
ஒன்றுமற்ற பாழ் நிறைத்து
உருளுகின்ற கோளமெலாம்
அன்று பெற்று விட்டவளென்
தாய்!


வீடெதுவோ எந்தனுக்கு?
ஆடும் அரன் தீ விழியால்
மூடியெரித் துயிரறுத்த
காடு ஒத்துப் பேய்களன்றி
ஆருமற்ற சூனியமாய்
தளமற்ற பெருவெளியாய்
கூரையற்று நிற்பது உன்
இல்!


யாரோ நான்? – ஓ! ஓ!
யாரோ நான் என்றதற்கு
குரல்மண்டிப் போனதென்ன?
தேறாத சிந்தனையும்
மூளாது விட்டதென்ன?
மறந்த பதில் தேடியின்னும்
இருள் முனகும் பாதையிலே
பிறந்திறந்து ஓடுவதோ
நான்?

–தர்மு சிவராமு
1960



தமிழ்நாடு - வேலூர்
கரடிக்குடியில் உள்ள
பிரமிளின் கல்லறை...



படங்கள் : பேரா. காலசுப்ரமணியம்

ISSN-2279-1906

Wanasinghe Printers, Batticaloa. 065 222 7170 (wp1302)